328

T.N.L.C. Debates

Official Report

1983

Vol. CC

No. 1, 2

D
V;8.11, 3.'N83
N83.200.1-2
1H3186

328

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
5 செப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

[ISSUED 27—12—1983

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

OFFICIAL REPORT

FRIDAY 22nd APRIL 1983

Volume CC (No. 1)

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

Legislative Council Department
Fort St. George, Madras-600 009.

Price *Rs.* 2.75 *Paise*]

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

பொருளடக்கம்

22—4—1983

	பக்கங்கள்
தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் ..	i-/
தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்	vii
தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப் படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்	ix-xi
. வினாக்கள்—விடைகள்	1—18
2. ஒத்தி வைப்புத் தீர்மானம்—	
கீழ்ப்பாக்கம் குடிநீர்த் தொட்டியில் பிணம் கைப்பற்றப்பட்டது குறித்து	19—22
3. அறிவிப்புகள்—	
(1) ஆளுநரிடமிருந்து செய்தி	22
(2) பேரவையிலிருந்து செய்தி	22
4. கவன ஈர்ப்பு—	
(1) மலிவு விலையில் வெள்ளைத் தாள் கிடைக்காததால் பாடக் குறிப்பேடுகள் தயாரிப்போரும், மாணவர்களும் அவதிப்படுவது குறித்து	23—25
(2) அரக்கோணத்தில் கடுமையான குடிநீர் தட்டுப்பாடு குறித்து	25—26

D 2 C 28—i

5. 1974—75 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையின் மீது விவாதம் .. 27—28

6. அரசின் சட்ட முன்வடிவுகள்—

(1) தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 32/1983) 28—29

(2) தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1983.) 29—115

7. தகவல் கோரல்—

கிருஷ்ணா நீரை சென்னைக்குக் கொண்டு வருவது பற்றி 44

8. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள். 116

143186
சென்னை-600 009

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU

THIRU SUNDARLAL KHURANA.

Members of the Council of Ministers.

1. The Honourable Thiru M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. The Honourable Dr. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Finance, Planning. Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. The Honourable Thiru S. RAMACHANDRAN, Minister in-charge of Electricity, Iron and Steel Control.

4. The Honourable Thiru K. A. KRISHNASAMY, Minister in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The Honourable Thiru S. D. SOMASUNDARAM, Minister in-charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. The Honourable Thiru R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. The Honourable Thiru C. ARANGANAYAGAM, Minister in-charge of Education including Technical Education and Official Language.

8. The Honourable Thiru K. KALIMUTHU, Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. The Honourable Thiru C. PONNAIYAN, Minister in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt, Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. The Honourable Thiru P. KOLANDAIVELU, Minister in-charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. The Honourable Thiru S. RAGAVANANDAM, Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. The Honourable Dr. H. V. HANDE, Minister in-charge of Health.

13. The Honourable Thiru K. RAJA MOHAMED, Minister in-charge of Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. The Honourable Thiru S. MUTHUSAMY, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. The Honourable Thiru S. THIRUNAVUKKARASU, Minister in-charge of Large Scale Industries, Mines, Textiles, and Minerals.

16. The Honourable Thiru S. N. RAJENDRAN, Minister in-charge of Public Works, Khadi, Prohibition excluding grant of liquor permits and Passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. The Honourable Thiru M. VIJAYASARATHI, Minister in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. The Honourable Thirumathi GOMATHI SRINIVASAN, Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

தமிழ் நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சுந்தர்லால் குரானா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்மந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு திட்டம், சர்க்கரைப் பாகுக் கழிவு மற்றும் தொல் பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

நிதி, திட்டம், சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

மின்சாரம் மற்றும் இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலைய துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி மற்றும் கைத்தறி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம் மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ் நாடு குடி நீர் - வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. க. இராசா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், மற்றும் வக்ப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

பெருந்தொழில்கள், சுரங்கமும் - கனி வளமும், மற்றும் நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. சோ. நி. இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

கதர், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு பொதுப்பணித் துறை மற்றும் பொதுப் பணித்துறை அலுவல்கள் சம்பந்தமாக.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

ஆதி திராவிடர் நலம், எழுது பொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலை வாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

மிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்

டாக்டர் ம. பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

புலவர் புலமைப்பித்தன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. க. இராமமூர்த்தி
2. திரு. சி. இராமலிங்கம்
3. திரு. பா. ரா. தாமஸ்
4. திரு. ஜே. எம். மியாகான்

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.,

சார்புச் செயலாளர்

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.,

விவாதப் பதிப்பாளர்

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜீ.எல்., பி.எல்.,

தலைமை நிருபர்

திரு.ச. சுவாமிநாதன்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பட்டியல்.

தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். (1)	தொகுதி. (2)
1 அருணாசலம், திரு. க. ..	நியமனம்.
2 ஆறுமுகம், திரு. சோ. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
3 ஆற்காடு வீராசாமி, திரு. நா. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
4 ஆனந்தம், திரு. வி.வி.வி.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
5 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
6 இராசா முகமது, திரு. கா. (நீர்ப் பாசனத் துறை அமைச்சர்). ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
7 இராதா, திரு. எஸ். ஆர்.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
8 இராமமூர்த்தி, திரு. க.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
9 இராமலிங்கம், திரு. சி.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
10 கண்ணப்பன், திரு. காடு வெட்டி. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
11 சங்கரலிங்கம், திரு. ம. எம். ஏ. ..	திருநெல்வேலி—கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி.
12 சந்தோஷம், திரு. த. எம். ஏ. பி. எல்.	தமிழ்நாடு தெற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி.
13 சனார்த்தனம், டாக்டர் இரா. ..	தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி.
14 சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு தலைவர்). ..	நியமனம்.
15 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி.	நியமனம்.
16 சீத்தாபதி, திரு. ஆர். டி.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.

தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
17 சுவாமிநாதன், திரு. ஜி. பி. பார்ம்.	தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி.
18 தாமஸ், திரு. பா. ரா. ..	மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி.
19 தாமோதரன், திரு. ஏ. ஆர். ..	தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி.
20 தாரா செரியன், திருமதி.	நியமனம்.
21 தாஸ், திரு. ஏ. ஜே. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
22 துரைசாமி, திரு. ஓ. எஸ்.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
23 நல்லசிவன், திரு. ஆ. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
24 நீலநாராயணன், திரு. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
25 ஜேப்பியார், திரு. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
26 புலவர் புலமைப்பித்தன், (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்)	நியமனம்.
27 மந்தாகினி கிருஷ்ண மூர்த்தி, திருமதி.	நியமனம்.
28 மாணிக்கம், திரு. ப. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
29 மியாகான், திரு. ஜே. எம்.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
30 மீனாட்சிசுந்தரம், திரு. க.	தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி.
31 முத்து, திரு. எஸ். ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
32 முத்துசாமி, திரு. செ. ..	சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி.
33 முத்தையா செட்டியார், டாக்டர் எம். ஏ.	நியமனம்.

தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
34 முனுசாமி, திரு. பி. ..	நியமனம்.
35 லீலாவதி செல்வி, ஆ. ..	சென்னை செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதி.
36 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. ..	வடஆற்காடு-தென்ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி.
37 வசந்த பை, திரு. ஜி. ..	சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி.
38 வள்ளிமுத்து, திரு. ஈ. வெ. அ.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
39 வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்).	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
40 வெங்கடேசன், திரு. ஈ. எஸ்.	நியமனம்.
41 ஹண்டே, டாக்டர் எச். வி.	சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி.
42 வெற்றிடம் ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
43 ஷை	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
44 ஷை	ஷை
45 ஷை	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
46 ஷை	ஷை
47 ஷை	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
48 ஷை	ஷை
49 ஷை	சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
50 ஷை	செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி.

தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும்.		தொகுதி.
	(1)	(2)
51	வெற்றிடம்	கோயம்புத்தூர் நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
52	ஷை	ஷை
53	ஷை	மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
54	ஷை	ஷை
55	ஷை	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
56	ஷை	ஷை
57	ஷை	வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
58	ஷை	ஷை
59	ஷை	தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
60	ஷை	ஷை
61	ஷை	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
62	ஷை	ஷை
63	ஷை	கன்னியாகுமரி உள்ளாட மன்றத் தொகுதி.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1983, ஏப்ரல் 22.

சித்திரை 9, ருத்ரோத்காரி—திருவள்ளுவராண்டு 2014.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1 வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Provident Fund Deposits of Teachers in Post-Offices.

*305. *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that the Provident Fund Deposits of teachers of Aided Schools in Post-Offices, earn low rate of interest; and

(*b*) if so, the action proposed to be taken for getting a higher rate of interest?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) தபால் நிலையங்களில் சேமிக்கப்படும் ஆசிரியர் வருங்கால வைப்பு நிதிக்கு 5.5 சதவிகிதம் வட்டி மட்டுமே தற்போது அளிக்கப்படுகின்றது.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, வெகு காலமாகவே ஆசிரியர் பெருமக்கள் இவ்வாறு மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் வருங்கால வைப்பு நிதியில் வைத்து பெரும் இழப்புக்கு ஆளாகின்றார்கள். அதுபற்றி அடிக்கடி முறையீடுகள் கொடுத்திருக்கிறார்கள். அந்த முறையீடுகளின் அடிப்படையிலே இதை மாற்றி தேசிய வங்கியிலே 15 விழுக்காடு, 14 விழுக்காடு என்ற அளவிலே நன்மை பெறக்கூடிய அளவிலே அமைக்க வேண்டும். அவ்வாறு முடியவில்லை என்றால், அரசே அதற்கு என்று ஒரு நலத் திட்டத்தை வகுத்து அந்தத் தொகையை பள்ளிகள், கல்லூரிகள் கட்டுவது, தொழில் கூடங்கள் கட்டுவதற்குக் கூட ஒரு மூலதனமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இத்தகைய திட்டங்களுக்கு எல்.ஐ.சி.யிலேயிருந்து கடன் பெற்று கட்டடங்கள்

கட்ட வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு ஏதாவது ஒரு நல்ல திட்டத்தை வகுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை தனியார் பள்ளி ஆசிரியர்கள் சம்பந்தப்பட்டது. அரசுப் பள்ளி ஆசிரியர்களிடமிருந்து பெறுகின்ற பணம் பொது வருங்கால வைப்பு நிதி விதிகளுக்கு ஏற்ப அரசுக் கணக்கில் சேர்த்து வைக்கப்படுகிறது. அதற்கு அரசு தற்போது 25 ஆயிரம் ரூபாய் வரையில் 8 சதவிகிதம் வட்டியும், ரூ. 25 ஆயிரத்திற்கு மேல் 7.5 சதவிகிதம் வட்டியும் தருகிறது. இதுகூட கிடைக்காத நிலையில்தான் அந்தத் தனியார் பள்ளி ஆசிரியர்கள் இருந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே அவர்களுடைய அந்த சேமிப்புப் பணத்தை அரசுக் கணக்கிலே வைத்துக்கொண்டால், அரசுப் பள்ளிகளில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்குக் கிடைக்கின்ற சலுகைகள் அவர்களுக்கும் கிடைக்கும் என்று அரசு கருதுகிறது. அந்த வகையிலேதான் அரசு பரிசீலித்துக் கொண்டு வருகிறது.

திரு. பா. ரா. தாமஸ்: அந்த வகையிலே உடனுக்குடன் இதை அமுல் படுத்தி உடனுக்குடன் ஆசிரியர்கள் நன்மை பெறும் திட்டத்தை உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதை விரைவு படுத்த வேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, சேமநல வைப்பு நிதித் தொகை என்பது தமிழகம் முழுவதும் இப்போது எவ்வளவு இருக்கிறது என்ற கணக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடம் இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர்கள் அமைச்சர் அவர்களிடம் இருக்கின்ற தகவல்களுக்கு ஏற்ப அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து கேள்வி கேட்க வேண்டும்.

Selection Grade Scale on Percentage Basis.

*306. Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that Selection Grade scale was awarded on the basis of percentage from 1st January 1971 to all the categories of teachers; and

(*b*) if so, the number of teachers under different categories, who have not been awarded such scale of pay as on 1st July 1980 in the Districts of Madurai and Ramanathapuram?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம். 1—1—1971ல் உயர்நிலை மற்றும் ஆரம்ப நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் கீழ்க்கண்ட வகையான ஆசிரியர்களுக்கு 10 சதவீத அடிப்படையில் தேர்வுநிலை அளிக்கப்பட்டது—

1. பட்டதாரி ஆசிரியர்கள்.
2. முதல் நிலை/தமிழ்/மலையாளம்/தெலுங்கு/உருது ஆசிரியர்கள்.
3. இடைநிலை ஆசிரியர்கள்
4. இரண்டாம் நிலை தமிழ்/தெலுங்கு/மலையாளம்/உருது ஆசிரியர்கள்.
5. தையல் ஆசிரியர்
6. மரவேலை ஆசிரியர்.
7. நெசவாசிரியர்.
8. இசை ஆசிரியர்
9. உடற்பயிற்சி ஆசிரியர் கிரேடு 2
10. இளநிலை ஆசிரியர் (Higher Grade Teachers)

(இ) 1—7—1980-ல் மேலே குறிப்பிட்டுள்ள 10 வகையான ஆசிரியர்களில் 1—7—1980-ல் தேர்வுநிலை வழங்கப்படாத ஆசிரியர்கள், மதுரை, இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்களில் எங்கும் இல்லை என பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவித்துள்ளார்.

Physical Education Directors in Higher Secondary Schools.

*307. Q.—Thiru K. MEENAKSHISUNDARAM (on behalf of Thiru G. Swaminathan): Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that G.O. Ms. No. 1591, Education, dated 24th August 1979 relating to the Physical Education Directors in Higher Secondary Schools, has not been implemented during the last one year by the Director of School Education, who has suggested certain higher qualifications for filling up posts in Higher Secondary Schools; and

(b) the action proposed to be taken by the Government in the matter?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (இ) அரசு ஆணை 1,591, கல்வி, நாள் 24—8—1979-ல் மேல்நிலைப் பள்ளிகளில் அமர்த்தும் பொருட்டு, பள்ளிகளிலுள்ள 400 உடற்பயிற்சி ஆசிரியர்கள் உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் மேல்நிலைப் பள்ளி உடற்பயிற்சி இயக்குநர் பதவிகளாக ரூ. 600—1,050 என்ற சம்பள விகிதத்தில் உயர்த்தப்பட்டு அவர்களது கல்வித் தகுதி பி.ஏ., பி.எஸ்சி. பி.காம் மற்றும் உடற்பயிற்சிக் கல்வியில் பட்டமும் அல்லது அதற்கு சமமான பட்டயங்கள் என்று நிர்ணயிக்கப்பட்டது. உயர் நிலைப் பள்ளியில் பணியாற்றும் அதே தகுதிகளைப் பெற்ற உடற்பயிற்சி இயக்குநர்களுக்கு ரூ. 450—800 என்று சம்பள விகிதம் உள்ளதால் ஏற்படும் சிக்கல்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து உயர்ந்த சம்பள விகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ள மேல்நிலைப் பள்ளி உடற்பயிற்சி இயக்குநர்களுக்கு பட்டப் படிப்போடு எம்.பி.எட். பயிற்சிப் பட்டமும் கல்வித் தகுதிகளாக நிர்ணயம் செய்யலாமென்று பரிந்துரையை ஏற்று 30—8—1980 அன்று அரசு ஆணை வெளியிட்டுள்ளது. அதன்பின் அப்பதவிகளை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ்: முதலாவது இந்தப் பரிந்துரையானது பி.ஏ., பி.பி.எட். பட்டம் பெற்ற ஆசிரியர்கள் பெருமக்களுக்குத் தான் ரூ. 600 என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அதே காரணங்களால் மாற்றியமைக்கப்பட்டு அது பி.ஏ., எம்.பி.எட். ஆசிரியர்களுக்குத் திருத்தி அமைக்கப்பட்டது. அது முறையாகாது. ஏனென்றால் ஏற்கனவே முதுகலைப் பட்டம் பெற்ற அனைத்து ஆசிரியப் பெருமக்களும் மேல் நிலைப் பள்ளிகளிலே ரூ. 675 என்ற அடிப்படை ஊதியத்தை வாங்குகின்றார்கள். உடற்பயிற்சிக் கல்விக்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கும்போது, அண்மையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், யூ.ஜி.சி. ஸ்கேலை கல்லூரியிலே பணியாற்றக்கூடிய உடற்

பயிற்சி ஆசிரியர்களுக்கும் விஸ்தரித்திருக்கிறார்கள். அதற்கு நாங்கள்கூட நன்றி தெரிவித்திருக்கிறோம். அந்த அடிப்படையிலேயே இவர்களுக்கும் அடிப்படை ஊதியத்தை மாற்றி ரூ. 600 என்பதை பி.ஏ.பி.பி.எட். பட்டம் பெற்றவர்களுக்கும் ரூ. 675 வரை மேற்படுத்திக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட யோசனை இல்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, பி. ஏ. பி. பி. எட். படித்து உடற்பயிற்சி கல்வி இயக்குநராக எம். பி. எட். தகுதி பெற்றிருந்தால் நலம், அந்தத் தகுதி தேவை என்ற கருத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். எம். பி. எட்.-ஐ அவர்கள் பயில்வதற்கு 6 மாத காலம் பயிற்சிக்குச் செல்லவேண்டியிருக்கிறது. அப்படிச் செல்கின்ற போதுகூட, கோடைக்காலத்திலேதான் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இருந்தாலும், இரண்டு ஆண்டுகளிலே 3 மாதம் 3 மாதமாகப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. அவர்கள் அப்படி 64 நாட்கள் பணியில்லாக் கோடைக் காலத்திலேயே செல்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த 64 நாட்களையும் அவர்கள் பணிக்காலமாகக் கருதி, அந்தப் பயிற்சிக்குச் செல்வதற்குரிய வாய்ப்பினை அரசு தந்தால், அவர்கள் எம். பி. எட். தேர்விலே எளிதாகவும், விரைவிலும் தேர்வதற்குரிய வாய்ப்பு ஏற்படும். அந்த வாய்ப்பை அரசு கொடுக்குமா? இன்டக்டட் டீச்சர்ஸ் 10 மாதகாலம் பயிற்சி பெற ஏற்பாடு செய்திருப்பதைப்போல, அரசு கருணையுடன் பரிசீலித்து இவர்களுக்கும் அப்படிச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

Seethalakshmi Ramaswamy College, Tiruchirappalli.

*308. Q.—Dr. T. R. JANARTHANAM (on behalf of Thiru G. Swaminathan): Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that some Assistant Professors, who were promoted during December, 1979, in Seethalakshmi Ramaswamy College, Tiruchirappalli, have been deprived of their promotion after a lapse of eleven months; and

(b) if so, the action proposed to be taken by the Government in the matter?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இச்செயற்குறிப்பு ஏற்கப்பட்டு அரசாணை எண் 277, கல்வி, நாள் 4—2—1983-ல் இறுதி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தருமக்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளி தீ விபத்து.

* 309. வினா—**டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1980 நவம்பரில் தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடிக்கு அருகில் தருமக்கோட்டையில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியின் சில வகுப்பறைகளுக்கு தீ வைக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) தீ வைத்தது யார் என்று கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுப்பதற்காகக் காவல்துறையினரால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சேதம் அடைந்த கூரைக் கொட்டகைகளை ரூ 10,000 செலவில் மீண்டும் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, நம்முடைய அரசுப் பள்ளிகளை கீற்றுக் கொட்டகைகளில் இல்லாத வகையில் மாற்றியமைக்க முடியுமா? ஏனென்றால் அரசுப் பள்ளி என்றால், பள்ளிகளுக்கே ஆதர்சங்கள் அவைகள் என்ற நல்ல நிலையில் இருக்க வேண்டும். பார்த்தாலே நல்ல தோற்றம் இருக்கின்ற அடிப்படையிலே நம்முடைய அரசுப் பள்ளிகள் இருக்கவேண்டும். அப்படி கீற்றுக்கொட்டகைகளில் இல்லாமல் இருக்கின்ற நிலையை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, போதுமான நிதி வசதிகள் இருந்தால், செய்யலாம். நிதி வசதி இல்லாத குறையினால் தான் பல்வேறு இடங்களிலே இதுபோன்று கீத்துக்கொட்டகைகளில் இருந்து கொண்டிருக்கின்றன. கொஞ்சம் கொஞ்சமாக அந்தக் கீற்றுக் கொட்டகைகளுக்குப் பதிலாக கட்டிடங்கள் கட்ட ஏற்பாடு செய்யலாம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி என்னுடைய தொகுதி. அதிலே நடைபெற்றிருக்கின்ற அந்தத் தீ விபத்து குறித்து உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து, கீத்துக்கொட்டகைகள் கட்ட ஏற்பாடு செய்ததற்கு நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அங்கு எரிந்த பகுதியிலே எந்த அளவுக்கு வகுப்புகள் இருந்தனவோ அந்த அளவுக்குரிய கொட்டகைகளாக இப்போது அமைக்கவில்லை என்று அங்கே இருப்பவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். எந்த அளவுக்குச் சேதம் அடைந்ததோ, எந்த அளவுக்கு வகுப்புகள் முன்பு இருந்தனவோ அந்த அளவுக்கு வகுப்புகள் இருக்கக் கூடிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கூரைக் கொட்டகைகளை அப்படியே மீண்டும் அமைக்கத்தான் 10,000 ரூபாய்க்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். வேறுவிதமாக இருந்தால், அரசு அதைப் பரிசீலிக்கும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவரவர்களே, குளுமையான சூழ்நிலைக்குக் கீத்துக் கொட்டகைகள் நல்லது என்றாலும், வெப்பம் அதிகமாக உள்ள நேரத்தில் தீப்பிடிக்காமல் இருக்க, ஒரு விதமான எண்ணெயை அதன்மீது தூவினால் தீப் பற்றாது என்று சொன்னார்கள். அப்படி அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, வெய்யில் காலம் வந்தவுடன் இருக்கிற கொட்டகைகள் எல்லாம் தீப் பிடித்து விடும் என்பதல்ல. யாரோ தீ வைத்தார்கள் என்ற சந்தேகம் இருக்கிறது. இது போன்ற குற்றங்களை எந்த நிலையிலும், யார் வேண்டுமானாலும் செய்யலாம். தவறு செய்தவர்களைக் கண்டுபிடித்து, தக்க நடவடிக்கை எடுப்பதன் மூலமாகத்தான் இது போன்ற தீ வைப்புகள் ஏற்படாமல் இருக்கமுடியும். எனவே மற்ற நடவடிக்கைகள் தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, பள்ளிக்கூடங்களுடைய கட்டிடங்களுக்கான நிதி உதவி பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். எல். ஐ. சி. மூலமாகவும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும் இதற்கான உதவிகளை அரசு பெறலாம் என்ற கருத்தை மேலவையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்

தார்கள். அதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்கள். இந்த முயற்சி இப்போது எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கல்விக்காகச் செலவு செய்கிற தொகையை முதலீடாகக் கருத வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோம். மத்திய அரசின் நிலையிலே அது ஏற்றுக் கொள்ளப்படாததாலும், அவர்கள் பரிந்துரை செய்தால்தான், எல்.ஐ.சி. அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே குறைந்த வட்டி விகிதத்திலே உதவி கிடைக்கும் என்பதாலும், மத்திய அரசை சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் வலியுறுத்திக் கொண்டு வருகிறோம்.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பாடங்கள்.

* 310. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பாக) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், எத்தனை மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பாடங்கள் கற்றுத் தரப்படுகின்றன ?

(இ) 1980-81-ல் செய்முறைப் பயிற்சிக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை என்று, அம்மாவட்டத்தில் உள்ள, ஏதாவது மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களிடமிருந்தோ அல்லது அவர்களுடைய பெற்றோர்களிடமிருந்தோ முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 60 மேல்நிலைப் பள்ள்ளிகளில் தொழிற் பாகங்கள் கற்றுத்தரப்படுகின்றன.

(இ) ஆம். கோட்டார், டி. வி. டி. மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மட்டும் செய்முறைப்பயிற்சி பெறுவதின் இடர்பாடுகள் குறித்து கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து தகவல் பெறப்பட்டது.

(உ) இதுகுறித்து தொழிற் கல்வி இயக்குநருக்குத் தெரிவிக்கப்பட்டு, நாகர்கோவில் அரசு பாலிடெக்னிக் முதல்வருக்கு அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளிகளிலே பல தொழிற் பாடங்களைக் கற்றுத் தருவது நல்ல வேலை வாய்ப்பை மாணவர்களுக்கு உருவாக்கியிருக்கிறது. ஏரோநாட்டிக்ஸ் இன்ஜினியரிங், எல்க்ட்ரானிக்ஸ், நேவல் சம்பந்தமான தொழிற் கல்வியோடு சமையற் கலையைச் சொல்லிக் கொடுத்தால், வெளி நாடுகளில்கூட அவர்களுக்கு வேலை வாய்ப்பு இடைக்கும். எனவே அது போன்ற தொழிற் கல்விக்கு அரசு ஊக்கம் அளிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, 11, 12ஆம் வகுப்புகளிலே, அந்த 2 ஆண்டுகளிலே ஆங்கிலம், தமிழ் அல்லது வேறு பாடங்கள் போக மீதி இருக்கும் காலத்தில் ஒரு தொழிற் பாடத்தை நடத்த வேண்டுமென்று விரும்புகிறோம். என்னென்ன தொழில்கள் உபயோகமான தொழில்களோ அவற்றைச் சொல்லித் தர விரும்புகிறது. அதற்கான யோசனை எந்தத் தரப்பிலிருந்து வந்தாலும் நிச்சயமாக அவை பரிசிலிக்கப் படும். முடிந்த இடங்களில் அவை கொண்டுவரப்படும்.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவரவர்களே, மேல் நிலைப் பள்ளிகளிலே ஆரம்பிக்கப்பட்ட தொழிற் பாட போதனைக்கு ஏற்ற கருவிகள், இயந்திரங்கள் வழங்கப்பட வேண்டுமென்று மானியம் வரையறுக்கிறோமே, அந்த முறையில் அந்தப் பள்ளிகள் மானியத்தைப் பெறவில்லையா? அரசுப் பள்ளியாக இருந்தால், நாம் கொடுக்கவில்லையா? ஏன் பாலிடெக்னிக்குக்குப் போக வேண்டும் ? பள்ளியிலே இருந்தால் மாணவர்கள் பெரிதும் பயன் அடைவார்களே. அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் வழி செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பள்ளிகளிலே போதுமான வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நாம் நினைப்போமானால், அந்த அளவுக்குப் பண வசதி போதாது. தொழிற் கல்வியை நம்மால் தர முடியாது. இது நிதி ஆதாரத்தைப் பொறுத்து இருக்கும் நிலைமையாகும். அதுமட்டுமல்லாமல், தொழிற் பாடங்களைப் பற்றிப் பேசும்போது, இதுசம்பந்தமான அறிஞர் பெரு மக்கள் தொழில் செய்யும் இடத்தில் மாணவர்கள் அந்தப் பயிற்சியைப் பெறுவதுதான் நல்லது, பள்ளிக் கூடங்களில் அந்த இயந்திரங்களை வைத்துச் சொல்லித்தருவது நல்லதல்ல என்றும் உற்பத்தி செய்யும் இடங்களில் தொழில் பயிற்சி சம்பந்தமான அனுபவ அறிவை அவர்கள் பெற வேண்டுமென்றும் சொல்கிறார்கள். எனவே பக்கத்திலே உள்ள தொழிற்சாலைகளிலே இத்தகைய பயிற்சியைப்

பெறுவது நல்லதென்று சொல்லி, அதை சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களுக்குக் கூறிக் கொண்டிருக்கிறோம். கோட்டாரிலே அதுபோன்ற வசதி இல்லாததால், அந்த மாணவர்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதால், பக்கத்தில் உள்ள பாலிடெக்னிக்கில் உள்ள இயந்திரங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று யோசனை சொல்லியிருக்கிறோம்.

பேருந்துகளில் திருக்குறள்.

*311. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழகத்தில் தேசியமயமாக்கப்பட்ட அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், திருக்குறள் வாசகங்கள் எழுதப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன?

(உ) அனைத்து அரசுப் பேருந்துகளிலும் மீண்டும் 'திருக்குறளை' எழுதிட அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ), (இ) மற்றும் (உ) அரசின் ஆணைப்படி, போக்குவரத்துக் கழகங்களில் உள்ள 8114 பேருந்துகளில் 6948 பேருந்துகளில் திருக்குறள் எழுதப்பட்டுள்ளது. மீதமுள்ள 1166 பேருந்துகளிலும் திருக்குறள் எழுத அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, ஒரே திருக்குறளைப் பல வண்டிகளிலே எழுதுவதைவிட, எழுதப்படாமல் இருக்கும் திருக்குறளைத் தேர்ந்தெடுத்து, பொது மக்களுக்குப் பொருந்தக் கூடியனவாக, மற்றவர்களுக்குப் பொருந்தக் கூடியனவாக உள்ளவற்றைத் தேர்ந்தெடுத்து, அவற்றை எழுத அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : காமத்துப் பால் தவிர.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நம்முடைய மாநிலத்திலே 8000-க்கு மேற்பட்ட பேருந்துகள் இருக்கின்றன என்பதை உறுப்பினரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே ஒரே திருக்குறளை இரண்டு பேருந்துகளில் எழுதும் நிலைமை இருக்கிறது. இதற்காக நாம் பேருந்துகளைக் குறைக்க முடியாது.

திரு. சி. இராமலிங்கம் : தலைவரவர்களே, தமிழ் நாட்டிலிருந்து கேரளா, கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களுக்குப் பேருந்துகள் போகின்றன. அந்தப் பேருந்துகளில் திருக்குறள் தமிழிலே இருக்கிறது. அதை மாற்றி, அந்தந்த மாநில மொழியிலே, வாசகம் கெடாமல், எழுதும் உத்தேசம் அரசுக்குண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : உத்தேசமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவரவர்களே, அனைத்துக் குறள்களும் ஏற்க வேண்டிய குறள்களே, எனவே திங்கள் ஒரு முறை, இருக்கிற குறளை மாற்றி, வேறு குறளை எழுதினால், மக்கள் புதிய கருத்துக்களை அறிந்து, தங்கள் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியுமே, அதே முறையில் அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருப்பதுபோல், நிரந்தரமாக அவர்கள் ஒரே வண்டியில் வந்து போவதில்லை. மாறி மாறி வருகிறார்கள். எனவே அவர்கள் மாறி மாறி குறளைப் படித்து வருகிறார்கள்.

THIRU G. VASANTHA PAI : Sir, besides writing the Thirukkurals inside the buses, people should also be told how to practise the principles laid down in those Thirukkurals. Therefore, instructions on bringing the Thirukkurals into practice should also be written inside the buses so that the Thirukkurals may be effectively practised by persons who are using these conveyances. Will the Hon. Minister also consider doing this?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அதைச் செய்வதற்கு அங்கே இடம் இல்லாததால்தான், திருக்குறளை மட்டும் எழுதுவதோடு நிறுத்தியிருக்கிறோம்.

Thiru G. VASANTHA PAI: At least in the bus-stands, this can be done. Even now, we find in the bus-stands notice-boards on how to stand in the queue, how overlapping in the queue should be avoided, etc. Beneath such boards, these Thirukkurals and also instructions on practising them could be written.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அதற்கான சாத்தியக்கூறு இருக்குமா என்பது சந்தேகத்திற்கு உரியதாக இருக்கிறது.

[1983 எப்ரல் 22

திரு. பா. ரா. தாமஸ் : தலைவரவர்களே, பிற மொழிகளில் எழுதா விட்டாலும், ஆங்கிலம், ரோமன் லெட்டர்ஸ் என்று வைத்து அதில் மொழி பெயர்ப்பாக்கி, திருக்குறளை எழுதலாம் அல்லவா ? அந்த முறையைப் பின்பற்ற அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அப்படிப்பட்ட சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டு போனால், இதைப் பார்ப்பவர்கள், தமிழைத் தெரிந்து கொண்டு படிக்கவேண்டுமென்ற உணர்வு உள்ளவர்கள் கூட தமிழைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற உணர்வு இல்லாமல், கருத்துக் களை மட்டும் தெரிந்துகொண்டு போய்விடுவார்கள். ஆகவே அதை மாற்றா மல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

விபத்துக்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை.

* 312. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழகத்தில் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்கட்கு 1-4-1981 முதல் 31-3-1982 முடிய வழங்கப்பட்ட 'நஷ்ட ஈட்டுத்தொகை' போக்குவரத்துக்கழகம் வாரியாக மொத்தம் எவ்வளவு ?

(இ) இது போன்ற விபத்துக்களைக் களைய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) மற்றும் (இ) இது குறித்த விவர அறிக்கை சபையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, விவர அறிக்கையில் விபத்தினுடைய எண்ணிக்கை, அதற்கான காரணங்கள், நடவடிக்கைகள் எல்லாம் விரிவாகத் தரப்பட்டிருக்கின்றன. அதற்காக அமைச்சரவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சில நடத்துனர்கள் குடித்துவிட்டு வண்டியை ஓட்டுகிறார்கள். சிலர் அரசு குறிப்பிட்ட இடங்களில் இல்லாமல் அவர்கள் நினைக்கக்கூடிய இடங்களிலே வண்டியை நிறுத்திவிட்டு, நீண்ட நேரம் சொந்த அலுவலைக் கவனித்துவிட்டு, அந்த நேரத்தை அட்ஜஸ்ட்

@117-118 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1983 எப்ரல் 22]

செய்ய வேண்டுமென்று வேகமாக வருகிறார்கள். மேலும் ஓட்டுநருக்குப் பக்கத்தில் உள்ள இருக்கையில் நடத்துனர் தூங்கிக்கொண்டு வருகிறார். இது எல்லாம்கூட விபத்துக்கு உரிய காரணங்களாக அமையுமே, இவற்றை நீக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவரவர்களே, நடத்துனர் குடித்துவிட்டு ஓட்டுகிறார் என்பதல்ல. ஓட்டுனர் குடித்துவிட்டு ஓட்டுகிறார் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். ஆனால் போக்குவரத்துக் கழகத்தில் அப்படி இருக்கிறதா என்பது நிச்சயமாக நாம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது.

(முற்பகல் 9-50)

ஆனால் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், அப்படி இருக்கிறதா என்பதை நிச்சயமாக நான் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறேன். ஒருவேளை எங்கேயாவது தவறு நடந்தால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தான் அரசினுடைய நோக்கம். அந்தவகையில் யாராவது ஈடுபட்டால் அவர்கள் மீது தயக்கம் காட்டாமல் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அதுபற்றித் தெரிந்தால், மேலவை கூட வேண்டு மென்று கூட எதிர்பாராமல் அவ்வப்போது எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க அது உறு துணையாக இருக்கும். அதில் இருக்கிற அதிகாரிகளும் அவ்வப்போது கண்காணித்துக்கொண்டிருக்கிறார்கள். ஓட்டுநர் அருகில் நடத்துனர் உட் கார்ந்துகொண்டு தூங்கிக்கொண்டிருப்பதாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். இது குறித்து மீண்டும் நாங்கள் அனுப்பி இப்படிப்பட்ட சூழ் நிலைகள் வருங்காலத்தில் இருக்கக்கூடாது என்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பெரும்பாலும் இரவு நேரங்களில் வண்டிகளைப் பொறுத்தவரையில், லாரிகளைப் பொறுத்தவரையில், எதிரே வருகின்ற வண்டிகளுக்காக வேண்டி லைட்டை 'டிம்' செய்வதில்லை. ஒரு வண்டி வந்துகொண்டிருக்கும்போது, எதிரே வண்டி வருகின்ற வண்டி இரவு நேரங் களில் லைட்டை 'டிம்' செய்ய வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. என்றாலும் கூட லாரிகளைப் பொறுத்தமட்டில், அவர்கள் லைட்டை 'டிம்' செய்யாமல் சென்று கொண்டிருக்கிறார்கள். இரண்டாவதாக லாரிகளில் சரக்குகளை ஏற்றும்போது, பக்கவாட்டில் அதிகமாக ஏற்றுகிறார்கள். அதோடு கூட டேஞ்சர் லைட்டைக்கூட பொருத்தாமல் லாரிகள் ஓட்டுகிறார்கள். இதனால்

நெருக்கமாகச் செல்லும்போது, பக்கவாட்டில் செல்லும்போது, பஸ்ஸை ஓட்டுபவர்களுக்கு அதுகுறித்து பிறகு தான் தெரிய வருகிறது. அதன் காரணமாக விபத்து ஏற்படுகிறது. வேலூருக்குப் பக்கத்தில் இப்படிப்பட்ட ஒரு விபத்திலே நானே சிக்கினேன். ஆனால் அப்போது பேருந்தை ஓட்டியவரின் சாமர்த்தியத்தினால் நான் தப்பினேன். இப்படி எல்லாம் சட்டம் இருந்தும் கூட, சட்டத்தைப் புறக்கணித்துச் செல்கிறார்கள். இப்போது இப்படிப்பட்டவர்களை எல்லாம் அரசு கண்காணித்துக்கொண்டிருந்தாலும் கூட, மேலும் நல்லமுறையில் வருங்காலத்தில் கண்காணித்து எந்த வகையில் எல்லாம் இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினரை விபத்திலிருந்து காப்பாற்றிய ஓட்டுநருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோல் சூழ்நிலை ஏற்படாமலிருப்பதற்காக, விபத்துக்கள் ஏற்படாமல் இருப்பதற்காக ஏற்கெனவே லாரிகளில் இவ்வளவு பொருள்களைத் தான் ஏற்றலாம், இவ்வளவு பொருள்களைத் தான் பக்கவாட்டில் ஏற்றலாம், இவ்வளவு உயரத்துக்குத்தான் பொருள்கள் ஏற்றப்பட வேண்டும், மொத்த அளவு இவ்வளவு தான் இருக்கலாம் என்றெல்லாம் வரையறையை ஏற்படுத்தி, அதைக் குறித்துக் கொடுத்திருக்கிறோம். இதை மீறினால் காவல் துறையினர், போக்குவரத்துத் துறை அதிகாரிகள் இவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற குறிப்புகள் நாங்கள் மேலும் இது குறித்து துரிதமாக நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற குறிப் பின்படி, ஓராண்டு காலத்தில் ஏற்பட்டுள்ள விபத்துக்களுக்காக நஷ்ட ஈட்டுத் தொகை என்கிற வகையில் போக்குவரத்துக் கழகங்கள் 1 கோடியே 28 இலட்சம் ரூபாய்க்கும் மேல் வழங்கியிருக்கின்றன. இதையெல்லாம் பார்க்கின்றபோது, இப்படி விபத்து ஏற்படும்போது, எப்படி விமானத்தில் போகிறவர்களுக்கு இன்சூரன்ஸ் செய்யப்படுகிறதோ அதுபோல பேருந்தில் பயணம் செய்பவர்களைப் பொறுத்தமட்டில் கூட இன்சூரன்ஸ் செய்கிற திட்டத்தை இந்த அரசு அமுலுக்குக் கொண்டு வந்தால் விபத்தில் இறந்தாலும் கூட, குடும்பத்தை இன்சூரன்ஸ் காப்பாற்றும் என்கிற நம்பிக்கை ஏற்படும் அல்லவா ? இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து பதிலறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேருந்துகளில் பயணம் செய்வதன் காரணமாக இறக்றார்கள் என்பதைவிட பாதையில் நடந்து சென்று கொண்டிருப்பவர்கள் பெரும்பாலானவர்கள் விபத்திற்குக் காரணமாக இறக்கிறார்கள் என்பது தான் உண்மை. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன திட்டத்தைப் பொறுத்தவரையில், யோசிக்க வேண்டியிருக்கிறது. இதுபற்றி ஆராய்ந்து முடிவெடுக்கலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : பாதையில் நடந்து சென்று கொண்டிருக்கிறவர்கள் விபத்தின் காரணமாக இறக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு இன்சூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வருகின்ற உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர்கள் தனித் தனியாக யோசனை செய்து பார்த்து, இத்தகைய இன்சூரன்ஸ் திட்டங்களில் சேர்வது நல்லது. (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பாதையில் போகிறவர்கள் பஸ்ஸில் அல்லது லாரியில் அடிபட்டு இருந்தால், அவர்களுக்காக என்று இன்சூரன்ஸ இல்லை. ஆனால் அவர்களுக்கு அரசு ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கான ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலே விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்கள் என்று எடுத்துக்கொண்டால், நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை ஓட்டுகின்ற ஓட்டுநர்களின் தவறுகளினால் மட்டும் ஏற்பட்டவை அல்ல, வேறு வாகனங்களினால் ஏற்படுகின்ற விபத்துக்களும் இதிலே அடங்கியிருக்கின்றன என்று நான் கருதுகிறேன். பொதுவாக வேகக் கட்டுப்பாடு கருவிகள் பொருத்தப்படுகின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மட்டும் வேகக் கட்டுப்பாடு கருவியை வைத்துக்கொண்டு லாரிகளிலும், தனியார் பேருந்துகளிலும் இதனைப் பொருத்துவதுபற்றி எந்தவித ஒரு நிபந்தனையையோ, கட்டுப்பாட்டையோ அரசு விதிக்கவில்லை என்று நான் நினைக்கிறேன். இப்படிப்பட்ட நிலையில் நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலுள்ள பேருந்து

[1983 ஏப்ரல் 2

களில் மட்டும் இந்தக் கருவியைப் பொருத்திக்கொண்டு வண்டிகளை ஓட்டும்போது, மற்றவர்கள் இந்தக் கருவியைப் பொருத்தாமலே ஓட்டுவதன் காரணமாக நம்முடைய பேருந்துகள் சரியான நேரத்தில், விரைவாகப் போக வேண்டிய இடங்களுக்குச் செல்ல முடியவில்லை. இதனால் பயணம் செய்கின்ற பயணிகளின் எண்ணிக்கை கூட குறைகிற வாய்ப்பிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா வாகனங்களிலும் இந்த வேகக் கட்டுப்பாடு கருவியைப் பொருத்த கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தனியார் வண்டிகளுக்கும் வேண்டும் என்று சொல்லி முடியுங்கள்.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், ஓட்டுநர்கள் ஓட்டிச் செல்கின்ற வாகனங்கள் பழுதடைந்து, சரியான நிலையில் இல்லாமல் இருக்கின்றன. அவர்களிடம் இப்படிப்பட்ட நேரத்தில் திடீரென்று வண்டியை எடுக்கச் சொல்கிறார்கள். மேலும் டயர்கள் கூட ரீட்ரட் டயர்களாக இருக்கின்றன.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இவ்வளவு நேரம் ஒரு கேள்வியைக் கேட்கிறார்களே. அரசாங்க நிறுவனத்தில் உள்ளதை தனியாருக்கும் பொருந்தும்படி செய்ய வேண்டும் என்று சொல்லி முடியுங்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இப்படிப்பட்ட, பழுதடைந்திருக்கின்ற இயந்திரங்களையுடைய வண்டிகளை ஓட்டுவதைத் தவிர்க்கின்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நாங்கள் ஏற்கெனவே தனியார் துறையிலே ஓடுகின்ற கனரக வண்டிகளும் இந்த வேகக் கட்டுப்பாடு கருவியைப் பொருத்த வேண்டுமென்று உத்தரவைப் போட்டோம். ஆனால் அவர்கள் அதை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கிவிட்டார்கள். ஆனால் விரைவில் இறுதியாக ஒரு முடிவு ஏற்படுமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். பேருந்துகள் சரிவரப் பராமரிக்கப்படாத காரணத்தால் தான், இயந்திரங்கள் பழுதடைந்திருக்கிற வாகனங்களை

1983 ஏப்ரல் 22]

ஓட்டுவதால் தான், விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று இங்கே சொன்னார்கள். ஓரிரு இடங்களில் மட்டும் தான் அந்த வகையில் நடந்திருக்கலாம். ஆனால் பெரும்பாலான விபத்துக்கள் வேகம் காரணமாகவும், சரியாகப் போக்குவரத்து விதிகளைக் கடைப் பிடிக்காத காரணத்தாலும், பாதையில் நடக்கிறவர்களாலும் ஏற்படுகின்றன. வாகனப் பராமரிப்பு சரியாக இல்லாததால் விபத்து ஏற்படுகின்றது என்று உறுப்பினர் சொல்வது சரியல்ல. அப்படி என்றால் ஒருவர்கூட ரோட்டில் போகிறவர்கள் திரும்பிப் போக முடியாத நிலை இருந்திருக்க வேண்டும். ஆனால் வாகனங்களை நாங்கள் நல்ல முறையில், சிறப்பான முறையில் பராமரித்துக்கொண்டு தான் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Thiru J. M. MIAKHAN: Sir, an hon. Member was mentioning about the head-lights fitted to these vehicles. If polarised lights are fitted to these vehicles, the eyes of the driver of the vehicle coming on the opposite side will not be hurt. In some of the Western countries like France, the fitting of polarised lights to vehicles is a must. Every car, truck or lorry should have only polarised lights. In those lights, the light-beams will travel in parallel lines but they will not hurt the eyes. Therefore, such a practice can be introduced in our State also.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. அப்படி இருக்குமானால், அதுபற்றி யோசிக்கலாம். ஆனால் ஏற்கெனவே நம்முடைய போக்குவரத்துத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள், எதிர்த்தாற்போல் வண்டி வந்தால், தானாகவே அணைந்து கொள்கிற மாதிரி வழிமுறை உள்ள ஒரு முறையைக் கண்டுபிடித்தார்கள். ஆனால் அது வெற்றிகரமாகச் செயல்பட முடியவில்லை. அது தானாகவே 'டிம்' ஆகும் என்று நாம் நம்பிக்கொண்டிருக்கும்போது தானாகவே அது 'டிம்' ஆகவில்லையென்றால், நிலைமை என்னவாகும் என்பதால், அந்த வழிமுறை கைவிடப்பட்டிருக்கிறது. ஆனால் மீண்டும் அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

THIRU J. M. MIAKHAN: In our country itself, there are a few cars which are fitted with such polarised lights. Those lights are pale blue or blue in colour.

திரு. ஜி. சுவாமிநாதன் : வண்டிகள் போகிறபோது லைட் ஆட்டோமேட்டிக்காக 'டிம்' ஆவதற்கேற்ற வகையில் சரியான இயந்திரம் இப்போது இல்லை என்கிற கருத்துப்பட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். ஆனால் இப்போது அந்தமாதிரி ஒரு முறை கண்டு பிடிக்கப்பட்டு அது மார்க்கெட்டுக்குக் கூட வந்திருக்கிறது. இந்தப் புதிய முறையைப் பற்றி நான் போக்குவரத்துத் துறைச் செயலாளருக்கு எழுதி தெரிவித்திருக்கிறேன். விலையும் அதிகமில்லை. இந்த நிலையில் இதைப் பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நம்முடைய போக்குவரத்துத் துறை அதிகாரிகள் தான் அதைக் கண்டு பிடித்தார்கள். ஆனால் அதிலுள்ள நிலைமை என்னவென்றால், ஏதாவது ஒரு பழுது ஏற்பட்டுவிட்டால், அது 'டிம்' ஆகுமா இல்லையா என்பதுபற்றி வண்டியை ஓட்டுபவருக்குத் தெரியாது. எதிர்த்தாற்போல் வருகிற வண்டிகளுக்குத்தான் அதுபற்றித் தெரியவரும். ஆனால் வண்டியை ஓட்டுகின்ற ஓட்டுநர் அது சரியாகத்தான் இயங்கிக் கொண்டிருக்கும் என்று நினைத்துக்கொண்டு வண்டியை ஓட்டுவார். இந்த மாதிரி குறை இதில் இருப்பதால் தான், தற்காலிகமாக இதை நிறுத்தி வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற முறை வெற்றிகரமாக இருக்குமென்றால், அதனை வண்டிகளில் பொருத்த எங்களுக்குத் தயக்கமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : விஞ்ஞான ரீதியில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கும் கண் சிமிட்டி விளக்கு சில வேளைகளில் சரியாகக் கண் சிமிட்டவில்லையென்றால் ஆபத்துதான். அதுபோல் பாதி விளக்கைக் கறுப்பு அடிக்க வேண்டுமென்கிற விதி கட்டாயப்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பாதி விளக்கை கறுப்பு அடிக்க வேண்டுமென்று இல்லையென்றாலும் கூட, நடுவில் வட்டம் போன்ற ஒன்றை கறுப்படிக்க வேண்டுமென்று இருக்கிறது. இன்றைக்கு அதுகூட போதாது என்கிற நிலைமையில், வேறு முறைகளைக் கையாள வேண்டிய நிலைமைக்கு ஆளாகியிருக்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கீழ்ப்பாக்கம் குடிநீர்த் தொட்டியில் பிணம் கைப்பற்றப்பட்டது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் சென்னை கீழ்ப்பாக்கம் குடிநீர்த் தொட்டியில் போலீ சாரால் எலும்புக் கூடாக பிணம் ஒன்று கைப்பற்றப்பட்டது குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார். இது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவரவர்களே, சென்னை கீழ்ப்பாக்கத்திலே, நீர்த் தொட்டியிலே, தண்ணீர் வருகின்ற குழாய் இருக்கின்ற பகுதியிலே ஒரு பிண மூட்டை கண்டெடுக்கப்பட்டதாகவும், அந்தப் பிண மூட்டை அதிலே சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னாலே போடப் பட்ட காரணத்தால் அதிலே சதைப் பகுதி இல்லாமல் எலும்புக் கூடாக அது காட்சியளித்ததாகவும், சட்டைத் துணிகள் எல்லாம் கூட அந்த மூட்டையிலே இருந்ததாகவும் செய்திகள் வந்துள்ளன. பெரியசாமி என்ற ஒரு சாராய

(முற்பகல் 10—00)

வியாபாரி, ராஜமங்கலத்தைச் சேர்ந்த அவருடைய பணியாள் ஐயாசாமி துரை பிப்ரவரி மாதம் 2ஆம் தேதி கொலை செய்யப்பட்டதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் தந்திருப்பதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. பிப்ரவரி 2-ல் செய்யப்பட்ட கொலை, அதற்குப் பின்பு அந்தக் குழாயில் பிணம் போடப் பட்ட நிகழ்ச்சியை இதுவரையில் கண்டுபிடிக்காமல் இருந்து, அதைக் கைப் பற்ற முயற்சி எடுக்காததால், அந்தக் குழாயில் பிணம் அழுகி மக்களுக்கு அந்தத் தண்ணீர் விநியோகிக்கப்படக் கூடிய சூழ்நிலை இருந்திருக்கிறது. அப்படி ஏற்பட்டிருந்தால் அதனால் மக்களுக்கு எவ்வளவு தொல்லை என்பதை தாங்கள் நன்றாக அறிவீர்கள். நேற்று மாலையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் என்னிடத்தில் பேசுகிறபோது இந்த நீரில் குளித்தால் உடலில் தொல்லைகள் ஏற்பட்டு, இந்த அவைக்கே வர முடியாமல், வேறு இடத்திற்கு இரண்டு மாதம் போய் தங்கினேன் என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு குடிநீர்ப் பிரச்சினையில், இப்படிப்பட்ட நிலை இருக்கிறதென்று புகார் வந்த பிறகும்கூட, ஒரு பிணத்தைப் போட்டதாகச் சரியான புகார் தந்து அந்த அடிப்படையில் போலீஸில் கேஸ் பதிவு செய்து அவர்களைக் கைது செய்த பின்னாலும், இந்தப் புகார் உண்மைதானா என்று ஆய்வு செய்து, அந்தப் பிணத்தை நீக்காமல் இருந்தது எவ்வளவு பெரிய

தவறு, எவ்வளவு மக்களுக்குக் கேடு விளைவிப்பது என்று தாங்கள் நன்றாக உணர்வீர்கள். அந்தச் செய்தி பத்திரிகையில் வந்த பிறகு, அதற்கு அரசு மறுப்புச் செய்தி வெளியிட்டது. அதில், அந்தக் குழாய் இரண்டு மாத காலமாகவே மூடப்பட்டுவிட்டது மட்டுமல்ல, அது மேலே மூடி உள்ள குழாய் ஆகும், அதிலே அந்த மூட்டையைப் போட்டிருக்க முடியாது என்று அறிக்கை வந்திருக்கிறது. அதிலே தண்ணீர் கசிவு இருந்ததால், பிணம் அழுகியிருக் கலாம் என்றும் அது சொல்கிறது. புழலேரியில் போட்ட பிண மூட்டை ஏதோ ஒரு வழியாக உள்ளே வந்திருக்க வேண்டும். உள்ளே வருவதற்கு வழி இல்லாமல் அடைக்கப்பட்டு விட்டது என்று அறிக்கை சொல்கிறது. அப்படியானால் நீர் இருக்கக்கூடிய, நீர்க் கசிவு இருக்கிற இடத்தில் போடப் பட்ட மூட்டை உள்ளே சிக்கியிருக்கும்பொழுது நீர் ஓடிக்கொண்டிருந் திருக்கிறது, என்றுதான் பொருள். ஏனென்றால் வேறு வழியாக நீர் விநியோகம் செய்யப்பட்டது என்று மறுப்பு அறிக்கையில் இல்லை. அதிலே உள்ள நிலைமை போலீசார் காலத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதே. அதே நேரத்தில் குடிநீர் வாரியத்தைச் சேர்ந்தவர்கள் உரிய நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுக்கவில்லை. இந்தச் செய்தி வெளியில் வந்த பின்பு, இப்போது, இரண்டு மாதத்திற்கு முன்பே அந்தக் குழாய் மூடப் பட்டுவிட்டது என்று மறுப்புச் செய்தி சொல்வது தவறானது. அதாவது அரசாங்கத்திற்கு அவப்பெயர் ஏற்பட்டுவிடக்கூடாது என்று மறுப்புச் செய்தியாக உடனடியாகத் தரப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையை, இந்த குடிநீர்ப் பிரச்சினையை, மக்கள் பிரச்சினையை, சுகாதாரப் பிரச் சினையை, கேடு விளைவிக்கிற பிரச்சினையைக் கவனிக்காமல் ரொம்பவும் மெத்தனமாக அரசு இருந்திருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியம் அப்படி இருந்திருக்கிறது. காவல் துறை இருக்கிறது. இவ்வளவு இருந்தும் இந்தச் சூழ்நிலை. ஆகவே இவற்றைப்பற்றி விரிவாக விவாதித்து, அந்தத் துறையினர் இனிமேலாவது இப்படி இருக்காமல் செவ்வனே செயல்பட வாய்ப்பு ஏற்படுத்து வதற்கு உரிய நடவடிக்கைகளை உருவாக்க, இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று, தலைவர் அவர்களே, தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்த அரசே மெத்தனமாக இருக் கிறது என்ற அளவுக்கு குற்றச்சாட்டைச் சொல்லியாகிவிட்டது. இனிமேல் விவாதத்திற்கு என்ன இருக்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய குடிநீர் பிரச்சினை சம்பந்தமாக நான் சென்னை பெருநகர் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரி களுடன் தொடர்பு கொண்டதில் கீழ்க்கண்ட தகவல் கிடைத்துள்ளது.

புழலேரியிலிருந்து கீழ்ப்பாக்கத்திற்கு சுத்திகரிக்கப்படாத தண்ணீர் கொண்டுவர இரண்டு கால்வாய்கள் (Closed Conduits) உள்ளன. இந்த இரண்டு மூடு கால்வாய்களில் ஒன்றுதான் உபயோகத்தில் உள்ளது. மற்றொன்று 28—11—1982 முதல் உபயோகத்தில் இல்லை. 17—2—1983 அன்று வில்லிவாக்கம் காவல் துறை ஆய்வாளர் (Inspector of Police) ஒரு கொலை சம்பந்தமாக பிணத்தைத் தேடுவதற்கு மூடுகால்வாயில் தண்ணீர் விடுவதை நிறுத்தும்படி கேட்டுக் கொண்டார்கள். நடவடிக்கையே எடுக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். இயங்கிக் கொண்டிருந்த மூடு கால்வாயில் தண்ணீரைக் குறைத்து விட்டு, சோதனை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. ஒரு கால்வாயில் தண்ணீர் இல்லை. அது இயங்காது. மற்றொன்றில்தான் தண்ணீர் குறைக்கப்பட்டது. இதன் காரணமாக ஒரு சில பகுதிகளில் தண்ணீர் வாராமல் போய்விடும் என்று கம்ப்ளெயின்ட் வருமென்ற காரணத்தால், தண்ணீரைக் குறைத்துவிட்டு, சோதனை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. பின்னர் 24—2—1983-ல் விரைவில் பணியை முடிக்கும்படி போலீசுக்குக் கடிதம் எழுதப்பட்டது. விரைவில் செய்ய வேண்டும் என்று எழுதினோம். காவல் துறையினர் தேடிய பிறகு, 8—3—1983 அன்று எந்தப் பிணமும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்கள். போலீஸ் தேடியது. போலீஸ் தேடவேயில்லை என்று இங்கே சொன்னார்கள். அவர்கள் 8—3—1983 அன்று எழுதிய கடிதத்தின் வாசகம் பின்வருமாறு :

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதுகிறபோது, சில அமைச்சர்களிடமிருந்து பதில் வருகிறது. உதாரணத்திற்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களுக்குக் கடிதம் எழுதும்போது, பதில் வருகிறது. ஆனால் சில துறைகளிலிருந்து பதிலே வருவதில்லை. நாங்கள் கொடுக்கும் விண்ணப்பத்திற்கு, யாருக்கு எழுத வேண்டுமோ அவர்களுக்கு மாத்திரம் எழுதிவிட்டு, எங்களுக்குப் பதில் இல்லாமல் இருக்கிறது. மேலும் சாதாரண நிலையில் உள்ளவர்கள் கையெழுத்துப் போட்டு கடிதங்களை அனுப்புகிறார்கள். 10 கடிதங்கள் எழுதினால், 8 கடிதங்களுக்கு பதில் வராமல் இருக்கிறது. அப்படி பல அமைச்சர்களின் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இந்த நிலையில் நாங்கள் எப்படி பரிந்துரை செய்வது,

எப்படி கான்ஸ்டிடிவன்சியில் உள்ளவர்களை அணுகுவது என்ற சங்கடம் ஏற்படுகிறது. இதனை மாண்புமிகு உறுப்பினர் திரு முத்துசாமி அவர்களுடன் சேர்ந்து நானும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாற்றுத் தலைவர் அவர்களே, முதல் கட்டத்தில் அதிகாரிகள் பதில் அனுப்புகிறார்கள். "உங்களுடைய கடிதம் கிடைக்கப் பெற்றது, நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்" என்று உடனடியாக ரிப்ளை அனுப்பப்படுகிறது. நடவடிக்கை எடுத்த பிறகு, இறுதியாக ஒரு கடிதத்தை அனுப்புகிறோம்.

திரு. செ. முத்துசாமி : இருக்கும் முறைகளைப்பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் நடைமுறையிலே இருக்கும் குறைகளைச் சொல்லுகிறேன். முறைகள் என்பது வேறு, நடைமுறை என்பது வேறாக இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர்களிடமிருந்து பதில் அனுப்ப வேண்டுமென்று நினைத்தால், செய்துவிட முடியும். அதைப் பற்றி அதிகமாகப் பேச வேண்டாம். அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டேன்.

அடுத்து, ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டால், ° விண்ணப்பமோ மேல் முறையீடோ செய்யப்பட்டால், எத்தனை ஆண்டுகளில் அதனை முடிக்க வேண்டுமென்ற வரையறை இல்லாமல் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பென்ஷன் பற்றியோ, ப்ரமோஷன் பற்றியோ, அல்லது வேறு எதுவானாலும் பற்றி விண்ணப்பித்து, ஆண்டுக் கணக்காக கல்வித் துறையில் அப்படியே இருக்கிறது, இன்னும் சில துறைகளில் அப்படிப்பட்ட நிலை இருக்கிறதென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதற்கான கால வரையறை செய்ய வேண்டும். செக்கரட்டரியோ, டைரக்டரோ எல்லாவற்றையும் செய்துவிட முடியாது. எனவே கால வரையறை செய்துவிட்டால், அதற்குள் கோப்புக்களை முடிக்க முயற்சிகள் மேற்கொள்வார்கள். இப்போது 'கூடுமான விரைவில்' என்று சொல்லுகிறார்கள். சில நேரங்களில் 'விரைவாக' என்று பதில் வருகிறது. அதற்குக் காலவரையறை கிடையாது. மீண்டும் கேட்டும்போது, 'கூடுமான விரைவில்' என்று சொல்லுகிறார்கள். அதை முடிக்க எவ்வளவு காலம் என்பதில்லை. அதற்கான வரையறையை உண்டாக்க வேண்டும். இந்த அரசாங்கத்தை நம்பி, சில காரியங்களைச் செய்ய வேண்டுமென்று யார் விண்ணப்பிக்கிறார்களோ அவர்களுக்கு நியாயத்தை வழங்க ஒரு நல்ல ஏற்பாடு வேண்டும். முதலமைச்சரவர்களின்

துறைகள் தீர்க்கும் செல்லுக்கு எழுதினால் உடனடியாக பதில் வருகிறது. அதை நான் பாராட்டுகிறேன். அங்கேயிருந்து சம்பந்தப்பட்ட இலாக்காவிற்கு அனுப்புகிறார்கள். ஆனால் அங்கேயிருந்து பதில்கள் வருவதில்லை. கடிதம் கிடைத்தது என்று பதில் வருகிறது, அதைப் பாராட்டுகிறேன். அதற்குப் பிறகு அந்தக் கடிதம் என்னவாயிற்று என்பதற்குப் பதில் இல்லை. 1 ஆண்டுகளுக்கு முன்பு கடிதம் கிடைத்தது என்று பதில் வந்தது. அதற்குப் பின்னால் அந்தப் பிரச்சினை என்னவாயிற்று என்பதற்கு பதில் இல்லை. இதனால் நாங்கள் எங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்ற முடியாமல் இருக்கிறது. அந்த முறையில் நிர்வாக இயந்திரம் இருக்கிறதென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழக அரசு இதைச் சீர்திருத்திவிடுமென்ற முழுமையான நம்பிக்கையில் இந்தப் பிரச்சினையை வைக்கிறேன். தனிப்பட்ட முறையில் யாரையும் குறை சொல்லவில்லை. இந்த ஆட்சிக் காலத்திலேயே இந்த நிலைமைகளைச் சீர்திருத்தி அமையுங்கள், அப்போது மக்களுக்கு நன்மைகள் போய்ச் சேரும், உங்கள் காலத்தில் செய்யப்பட்டது, விரைவாக நடைமுறைப்படுத்தப்பட்டது என்று பாராட்டு வந்து சேரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் மணியடித்தார்)

இரண்டு பிரச்சினைகளை மட்டும் சொல்லி, முடித்துக்கொள்கிறேன். அரசு ஆணையிடுகிறது, சலுகைகளைத் தருகிறது. கீழே உள்ளவர்களுக்கு அந்த ஆணையை அமுலாக்க விருப்பமில்லை என்றால், 'விளக்கம் கேட்கிறேன்' என்று சொல்லி, மேலே அனுப்பிவிடுகிறார்கள். அரசு ஆணையிலே தெளிவாகச் சொல்லியிருந்தும், அவர்கள் விளக்கம் கேட்டு அனுப்புவதற்குக் காரணம், சலுகைகளைக் கொடுக்கக்கூடாது என்பதால்தான். இதனால் பல விஷயங்கள் ஆண்டுக் கணக்கில் தேங்கி இருக்கின்றன. தவறு செய்யும் போது, கோர்ட்டிலே 'ஸ்டிரிக்சர்' கொடுப்பதுபோல, 'ஏன் தவறு செய்தாய்?' என்று கேட்டு, இவர்களைக் கண்டிக்கும் நிலைமை இல்லாததால், அவர்கள் கொடுக்க வேண்டாமென்று நினைக்கும்போது, விளக்கம் என்ற பெயரில் மேலே அனுப்பிவிடுகிறார்கள். அதையும் கொஞ்சம் சீர்திருத்திவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு சில நேரங்களில் விளக்கம் கேட்கிறது. தலைமைச் செயலகத்திலிருந்து இயக்குநரைக் கேட்கிறார்கள். இயக்குநர் முதன்மைக் கல்வி அலுவலரைக் கேட்கிறார், முதன்மைக் கல்வி அலுவலர் மாவட்டக் கல்வி அலுவலரைக் கேட்கிறார். மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்துதான் பதில் வர வேண்டுமென்பது தெரியும். எனவே இயக்குநருக்கு ஒரு நகல்

அனுப்பிவிட்டு, இன்னொரு நகலை மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பினால், அங்கேயிருந்து பதில் விரைவில் வர சவுகரியமாக இருக்கும். பைல்கள் அதிகமாகப் பெருக்கப்படுகிறதே தவிர, வேறல்ல. எனவே நிர்வாக நடைமுறையை சரிப்படுத்த வேண்டும். அந்தக் காலத்தில் ஏற்பட்ட நடைமுறையை வைத்துக்கொண்டு எவ்வளவு காலத்திற்கு நாம் தடுமாறுவது? நிதித் துறை சாங்ஷன் செய்துவிடுகிறது. இருந்தும் ஒவ்வொரு முறையும் நிதித் துறைக்குக் கோப்பு வர வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதனால் பைல்கள் பெருகுகின்றன. காலம் அதிகமாகிறது. இதனால் பிரச்சினைகள் தீராமல் இருக்கின்றன. இதையும் சரிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு சின்னப் பிரச்சினைக்கும் பி. மற்றும் ஏ.ஆர். துறை, நிதித் துறை என்று சென்று கொண்டிருக்கும் நிலைமைக்கு மாற்றத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எழுதுகின்ற தபால்களுக்கு மிகச் சரியான பதில் தர வேண்டுமென்றும், அந்தப் பதிலைத் தரும்போது, முடிவுகளை விரைந்து எடுக்கும் முயற்சிகளிலே சரியான உத்தரவுகளை இட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். பஞ்சப்படி இன்னும் தரப்படாமல் இருக்கிறது. அதற்கும் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே சமயத்தில் 10,000 ரூபாய் ஓய்வு பெறும்போது கொடுக்க வழி வகை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் சாப்பிட முடியாமல் இருக்கிறது. சாப்பிட்டால் வயிற்று வலி எல்லாம் வருகிறது. இதை முதல்வரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அங்கே சாப்பிடுகின்றதைவிட பெரிய தண்டனை எதுவும் இல்லை என்ற அளவுக்கு நிலைமை இருக்கிறதென்ற பரிதாபத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சென்னையிலே நல்ல ஓட்டல்கள் இல்லையா? வேறு இடங்களிலே நல்ல முறையிலே இருக்கின்றன. ஆனால் இந்த விடுதியில் சாப்பிட்டுவிட்டு வந்தால், வயிற்றுப் பிரச்சினை ஏற்படுகிறது. எத்தனை நாட்களுக்கு சென்னையிலே உட்கார்ந்துகொண்டு இந்த நிலையில் பணியாற்ற முடியும்? இதை எண்ணிப் பார்த்து, இந்தப் பரிதாபகரமான நிலையைப் போக்க வேண்டும். அது எங்களுடைய வயிற்றைக் கெடுத்து, சுகாதாரக் கேட்டை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இங்கே சுகாதார அமைச்சரவர்கள் இருக்கிறார்கள், தயவுசெய்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை

(முற்பகல் 10-50)

அமைச்சர் அவர்கள் அங்கே வந்து பார்க்க வேண்டும், அங்கே உண்டு பார்க்க வேண்டும், அதனுடைய விளைவு அப்போது தான் தெரிய வரும். கட்டாயம் மருந்து சாப்பிடக் கூடிய அளவுக்கு அந்த உணவு ஊறு உண்டுபண்ணும்.

அடுத்து, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும், மேலவை உறுப்பினர்களுக்கும் ஒரு டைப்பிஸ்டையும், ஒரு அலுவலகத்தையும் அவசியம் தர வேண்டும். சட்டசபை மண்டபத்தைக் கட்டுவதற்கான ஒரு நல்ல திட்டத்தை இப்போது இந்த அரசு வைத்துக்கொண்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த உறுப்பினராக இருந்தாலும், அவர்களுக்கு என்று தனியாக ஒரு அறை இருக்குமென்றால், தனியாக ஒரு கட்டிடம் கட்டப்படுமானால், அங்கே வந்து உட்கார்ந்து பணியாற்ற வாய்ப்பாக இருக்கும். இன்றைக்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்கு, பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு எல்லாம் தனியாக அலுவலகங்கள் இருக்கின்றன. அதுபோல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு அலுவலகம் கட்டித்தரக் கூடாதா? பொதுவாக அப்படி ஒரு அலுவலகம் இருக்கட்டும். யார் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தாலும், அவர்கள் அங்கே வந்து உட்கார்ந்து மக்கள் பணி செய்யட்டும். அவர்களுக்கு ஒரு டைப்பிஸ்ட் தர வேண்டும். அவர்களுக்குத் தரக்கூடிய தட்டச்சு இயந்திரம் அரசாங்கத்தின் சொத்தாகவே இருக்கட்டும். அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே செய்யட்டும். மக்கள் பிரதிநிதிகள் தங்களை பிரதிநிதி ஆக்கிய மக்களுக்கு இதன் மூலம் சேவை செய்வதற்கு ஒரு அரிய வாய்ப்பை உண்டாக்கித் தர வேண்டும். அதன் மூலம் நல்ல முறையில், சிறப்பாக நாங்கள் எங்கள் பணிகளைச் செய்ய முடியும். இதை இந்த ஆட்சிக் காலத்திலேயே எங்களுக்குச் செய்து தர வேண்டும். இந்த பெசிலிட்டிசை எங்களுக்குச் செய்து தருவதன் மூலம் மக்களுக்கு வருகின்ற பிரச்சினைகளை நாங்கள் உடனுக்குடன் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து மக்களுக்கு உதவும் வகையிலும் அரசுக்கு அதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க உதவி செய்பவர்களாவோம் என்கின்ற வகையிலும் நான் இங்கே சொல்லியுள்ள அனைத்து நல்ல ஆலோசனைகளையும் ஏற்று செயல்பட வேண்டுமென்று சொல்லி முடிக்கிறேன்.

7. தகவல் கோரல்.

கிருஷ்ணா நீரை சென்னைக்குக் கொண்டுவருவது பற்றி.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாற்றுத் தலைவர் அவர்களே, on a point of clarification. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையிலே ஆந்திராவுக்குச் சென்று கிருஷ்ணா நீர் சென்னைக்கு வரக் கூடிய ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்து வந்திருக்கிறார்கள். அதற்காக எங்களுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்கள் அங்கு சென்று என்ன பேசி வந்திருக்கிறார்கள் என்பதை சட்டமன்றப் பேரவையில் பேரவை உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார்கள். ஆனால் மேலவை உறுப்பினர்களுக்கு அந்தச் செய்தியைத் தெரிவிக்கவில்லை. ஆகவே, அதுகுறித்து தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவையிலே என்னென்ன நடந்தது என்பதை நான் அறிக்கையாக வைக்கவில்லை. வைக்க இருக்கிறோம். அப்போது நிச்சயமாக மேலவையிலுள்ள உறுப்பினர்களுக்கும் தெரிகின்ற வகையிலே அந்த அறிக்கை வைக்கப்படும்.

6. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1983)—தொடர்ச்சி.

* THIRU A. R. DAMODARAN : Mr. Vice-Chairman, Sir, the Hon. the Finance Minister must be a happy man today for having announced the Budget on 5th of March and we are now giving him the very small sum of Rs. 2,052 crores to play around with in the next year. I have no doubt he will come with a heavy supplementary demand as he came last year. I would only like to say that we are very happy that he has been with us in this House and he has been listening to the debates and has taken care to answer many of the points that we raised during the Budget discussion.

I would also like to congratulate the Hon. the Chief Minister on having reached an accord on the sharing of the Krishna Waters. While I realise that this is a long-term project and may take anywhere between 7 and 9 years to mature, may I also plead with the Hon. the Chief Minister that irrespective of 5 thousand or 10 thousand million cubic feet of water that we are likely to get

from the Krishna, he should constantly endeavour to tap other water sources within the State of Tamil Nadu to supply water to Madras Metropolitan area. The population of Madras today is about 3.2 to 3.4 million. I have not yet gone through the census of 1981. In a decade there will be an increase of 25 per cent as against the State average of 17 per cent because the urban agglomeration is increasing at the rate of 25 per cent to 30 per cent. Krishna water will not suffice for Madras City. We require more water. The Hon. the Chief Minister had mentioned about the Kattalai Scheme. Members of the Opposition have suggested and, in fact, I had myself suggested in 1974 that out of the 40 or 45 thousand gallons of water that was being pumped out in Neyveli everyday, a portion could be utilised for supply to Madras City. Because planning for water is a long-term project, we must have at least two or three schemes for bringing water to the metropolitan area of Madras. I would request the Hon. the Chief Minister to see that in any future water-supply scheme, we have separate lines for drinking water and separate lines for water for industrial use. At a time of drought, we should be able to cut off the industrial water-supply, if necessary. It is a drastic step. But, if it is necessary, we should be able to do that and we should be able to supply potable water at least to the metropolitan area which is expected to touch a population of about 5 million by the year 2000 A.D.

Secondly, there is a provision of Rs. 80 crores for Civil Supplies. I am happy that, after the suggestions that were made, the Hon. the Minister for Civil Supplies has appointed councils of consumers to act as vigilance committees for fair price shops. He has also introduced the colour-card system in Madras City. From what we have observed, it seems to be working well. But, it rests on one basic premise and that is that adequate stocks will be given to the fair price shops to distribute on the dates that are mentioned.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

I do not know whether the Hon. Minister will be able to fulfil these responsibilities because, in the mofussil, we find that in many of the fair price shops, managed either by the Civil Supplies Corporation or even by co-operatives, the stock of rice is not sufficient and unfortunately, distribution is not taking place on family cards as envisaged by the Government of Tamil Nadu. I want to mention

[Thiru A. R. Damodaran] [1983 ஏப்ரல் 22

this because I think reports are being given to the Hon. the Chief Minister that everything is fair and lovely as far as the distribution system is concerned. It is not my intention to find fault with the Government. But, I wish to assure the Hon. the Chief Minister that, as he has inspected in Madras City, we have also inspected in the mofussil. If we want the distribution system to work, it must be supervised by local consumer councils and not by Vigilance Inspectors or other Government officers. I would request the Hon. the Minister for Civil Supplies to continue with this experiment. I believe that the Collector of Madurai has now appointed consumer councils for all the fair price shops. This is a very good system. I think that each of these committees consists of three women and four or five men. This is the only way by which we can supervise the distribution system.

I would also make another request because it seems to have been accepted as a matter of policy. In fact, I remember that even as early as 1978 I made a representation to the Hon. the Chief Minister that Tamil Nadu should not have fair price shops managed only by Government departments or even by co-operatives and that we should also include, in smaller villages, the small grocery merchants who may be able to distribute the commodities under licence. This would cut down enormously the subsidy that the Government are at present giving to the Civil Supplies Corporation. Apart from the metropolitan areas and the urban areas where high purchasing centres are involved, in the villages, the Government will not be able to manage with these Government shops because already union-formation is taking place. They will demand Rs. 400 a month or Rs. 500 a month. The rental for the shop will come to Rs. 200. I request the Hon. the Chief Minister not to burden himself with all this expenditure. We have already touched the one-million mark in the number of persons in Government employment in Tamil Nadu. The Hon. the Chief Minister should be proud because Tamil Nadu now is the second largest State as far as the number of Government employees is concerned. Every sixth person is a civil servant in Tamil Nadu now and I am only worried because if we go on increasing the number of Government servants, we will not have anybody to stand for election. This is one difficulty that is likely to crop up. I would suggest that the idea of having consumer councils may be pursued by the Government everywhere and in all these centres, we must appoint these consumer councils.

1983 ஏப்ரல் 22] [Thiru A. R. Damodaran]

Number three is my topic to which I referred in my Budget speech. Of course, only yesterday I learnt that the Entry Tax Bill had been introduced in the Assembly. Introduction is not bad; if it is introduced and kept like that, we would be very happy. But I do not know whether it will be kept like that, because the Hon. the Chief Minister is a Demon in collecting finances—I will accept he has done it very well ver the past six years. This Entry Tax, I will deal with when the Bill comes. I would only say that enormous powers have been taken to notify different areas, to notify different rates, etc. This is an indirect tax on the consumer. While I realise that for many welfare schemes, money is required, I would still plead with the Hon. the Chief Minister to reconsider. When we met him with the members of the Chambers of Commerce, he gave a very patient hearing and said that he would fix a date when he would have further consultation with the Chambers of Commerce. Although the Bill might have been introduced, I hope it will not be passed in this session. I may be hoping against hpe because one never knows what will happen. I hope that even though the Bill is introduced, in view of the fact that there is drought, we may have it postponed by three months and during that time, the Hon. the Chief Minister may invite the Madras City Consultative Council, Madurai Chamber, Salem and Ramanathapuram Chambers, because the businessmen are very much exercised over this. I have been going round these Centres and they are very much worried. One may ask: "What does it matter to the businessmen who are going to pass it on to the consumers?" There are many aspects which the businessmen would like to explain to the Government. I would request the Government to give an opportunity to various Chambers of Commerce to make their due representation before the Government finalise the Bill. In Bombay City, for example—I can quote it in full when the Bill comes—the octroi is only 0.5 per cent for petroleum products. If I mention only about petroleum products, it is not with the intention of seeing that this product should be left out. I mention it only as an illustration to point out that octroi should be so marginal that there is no diversion of trade. Various

(முற்பகல் 11-00)

problems are likely to come up. We would like an opportunity to be given, Sir. The only request that I would make is—because it is all that I can make in this House—that an opportunity be given to the Chambers of Commerce and the business interests to

[Thiru A. R. Damodaran] [1983 ஏப்ரல் 22

meet the Hon. the Finance Minister, the Hon. the Revenue Minister and the Hon. the Chief Minister and to represent to them the difficulties that they are likely to experience.

Sir, I am now coming to the last point. After we adjourn on the 26th or the 27th of April, seven Members of the Legislative Council will be retiring. Since, in accordance with the usual practice, we may not meet before September or October, we will have no opportunity to bid farewell to the seven Members who will be retiring. These seven Members were elected from the Assembly. I just wanted to mention, Mr. Deputy Chairman, that we must at least bid farewell to the few Members who will be leaving us. No doubt, they will be elected from the Assembly. But, I would request that an opportunity be afforded to the Members of the Council to bid these seven Members farewell. The other three Members, who are nominated Members, are also retiring. I would like to take this opportunity to convey to the Hon. the Chief Minister a request made by the Chambers of Commerce, in view of the fact that members of industry and commerce are not represented at all in this Council. The hon. Member Thiru G. Swaminathan and I myself do not represent business or industry. We represent the Graduates of our districts. Incidentally and accidentally, we may represent business interests. Therefore, I would make a fervent appeal to the Hon. the Chief Minister. While I realise the considerable pressures that are liable to operate on him regarding nominations, I would plead with him to give at least one representation to some Chamber of Commerce or some trade body, so that the voice of the business community may also be heard when we consider taxation measures.

Thank you, Sir.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீது ஒருசில கருத்துக் களைச் சொல்ல வாய்ப்பு தந்தமைக்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் குறிப்பின் மீது நீண்ட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை என்ற காரணத்தால், மிகச் சுருக்கமாக நான் சிலவற்றைச் சொல்ல விழைகிறேன். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அருமைப் பெரியவர் திரு. வசந்த பை அவர்கள் இங்கே சில குறிப்புகளைச் சொன்னார்கள். அதுபற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன்.

1983 ஏப்ரல் 22] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

இந்த, அரசு தமிழ் நாட்டுடைய அரசு . தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட அரசு. தமிழை வளர்க்கக் கடமைப்பட்ட அரசு. அந்த வகையில் தமிழை வளர்ப்பதற்காகவே பல்வேறு நல்ல காரியங்களை ஆற்றி வருகிற அரசாகும். தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடங்கியிருக்கிறது. செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலியை வெளியிட நடவடிக்கை எடுத்துள்ள அரசு. இதனால் எல்லாம் அனைத்துத் தமிழர்களுக்கும், அனைத்து அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் கட்சி வேறுபாடு இல்லாமல் எல்லாத் தலைவர்களும், தமிழ் நாட்டு மக்களும் பாராட்டுவது, அவர்கள் தொடர்ந்து அந்தப் பணியைச் செய்ய ஊக்குவிக்க நம்மால் இயன்றதைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த வகையில் இந்த அரசு இன்றைக்கு சில வேற்று மொழிச் சொற்களையெல்லாம் தமிழ் மொழியில் மாற்றுகிற பணியைச் சிறப்பாகச் செய்கிறது. அப்படிச் செய்வது மட்டு மல்லாமல், அரசு அதைச் செய்வதற்கு அந்தந்தப் பகுதி மக்களும் தங்களது வற்புறுத்தலைத் தெரிவிக்கிறார்கள். இதை இப்படிச் செய்தால் நலமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். மக்களுக்காக உள்ள அரசு, மக்கள் கருத்தை ஏற்றுச் செயல்படுகிற வகையில், மாயூரம் என்ற ஊரை மயிலாடுதுறை என்று மாற்றியது. அது மாற்றப்பட வேண்டிய ஒன்று. அது பாராட்டப்பட வேண்டிய ஒன்று. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தபை. அவர்கள் குறிப்பிட்ட போது, நேற்றைய தினம் மீனாட்சிசுந்தரம் கேட்ட கேள்விக்கு வருவாய்த் துறை அமைச்சர் பதில் சொல்கிறபோது, பெயரை மாற்றி, ஸ்ரீரங்கம் என்பதை திருவரங்கம் என்றும், வேதாரண்யத்தை திரு மறைக்காடு என்றெல்லாம் பெயரை மாற்றுகிறார்களே, அதைச் செய்ய வேண்டியது அவசியம்தானா என்று கேட்டு, அப்படி செய்யக் கூடாது என்கிற மாதிரி சில கருத்துக்களைச் சொன்னார்கள்.

நான் சொல்ல விரும்புவது எல்லாம், நம் நாட்டில், தமிழ் நாட்டில், தமிழ் வாழ வேண்டும், தமிழை வளர்க்க வேண்டும் என்று சொல்வதற்குக் கூட உரிமை இல்லையா ? தமிழ்தான் இருக்க வேண்டும் என்று தமிழ் நாட்டில் சொல்ல உரிமை இல்லையா ? எங்களுக்குத் தமிழ் வேண்டும் என்று சொன்னால், மற்ற மொழிகளைத் தூக்கியெறிய வேண்டுமென்று பொருளா? நமது குழந்தையை நமது சொந்த மொழியில் கொஞ்ச உரிமை இல்லையா ? ஆகவே வேற்று மொழியை அங்கிருந்து அகற்ற முயல வேண்டுமென்று சொன்னால், அதை தவறு என்றா சொல்வது? அதற்கு அவர் உதாரணம் கொடுக்கிறபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயரிலிருந்து, அனைவருடைய பெயரையும் சொல்லி, அதையெல்லாம் சமஸ்

கிருதத்திலிருந்து தமிழில் மாற்றவில்லையே என்று கேட்டார்கள். அப்படி அவர்கள் கேட்டபோது, எதிரில் மாண்புமிகு முதலமைச்சர் இல்லை. பக்கத்தில் நமது நிதியமைச்சர் அவர்கள் இருந்தார்களே, அவர்களைப் பார்க்க அவர் தவறிவிட்டார் என்றே கருதுகிறேன். நாராயணசாமியாக இருந்தவர்தான் நெடுஞ்செழியனாகி இருக்கிறார். ராமையாவாக இருந்தவர் தான் அன்பழகனாகி இருக்கிறார். மதியழகன் மற்றொரு பெயரிலிருந்து தான் மாறியிருக்கிறார். இங்கே மேலவைத் துணைத் தலைவர் அவர்களின் இயற்பெயர் கூட வேறு. புலமைப்பித்தன் என்று பெயரை மாற்றியிருக் கிறார். ஆகவே தனி நபருடைய பெயரை மாற்ற வேண்டுமென்று சொல்வது, அவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. ஓரளவுக்கு வளர்ந்த பிறகு, புகழ் பெற்ற பிறகு அவர்களைப் பார்த்து ஏன் அப்படிப் பெயரை மாற்றவில்லை என்றால் சரியில்லை . . . .

தனிப்பட்டவர்கள் பெயரை மாற்றுவது என்பது அவர்கள் வளர்ந்து, புகழ் பெற்று, அந்தப் பெயரைச் சொன்னால்தான் தெரியும் என்ற நிலைமைக்கு வந்ததற்குப் பிறகு, அந்த அடிப்படையில் இப்போது மாற்ற வேண்டாம் என்ற கருத்து இருக்கலாம். அதில் பொருள் இருக்கிறது. தமிழை வளர்க்க வேண்டுமென்ற முறையில், தமிழ் மீது உள்ள ஆர்வத்தின் காரணமாகச் செய்திருக்கிறார்கள். ஆனால் தனிப்பட்ட ஒருவருடைய பெயரை மாற்றுவது என்பது அவர் 100 ஆண்டுக் காலம் வாழலாம். ஆனால் ஒரு ஊருடைய பெயரை மாற்றுவது என்பது காலம் காலமாக நிலவிநிலைத்து நிற்கக் கூடிய அந்தப் பணியைச் செய்யக் கூடியது. அதைக் குறை சொல்வது போல், மாற்றுவது தவறு என்று சொல்வதைப் போல், உறுப்பினர் சொல்லியதை என்னாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே அவர்களுடைய ஆலோசனையை ஏற்று அரசு அப்படி எதுவும் செய்வதற்கு முயலாது என்று நம்புகிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் பேசும்போது, சமஸ்கிருதத்துடைய புலமையை, இலக்கியத்தைப் பற்றி இங்கே பேசினார்கள். அதைப்பற்றிய பிரச்சினையே எழவில்லை. ஒரு ஊருடைய பெயர், இந்தியா முழுவதும் தெரிந்திருக்கக் கூடியதாகும். அந்தப் பெயர்கள், அந்தந்த மாநிலத்திற்கும் பிரதேசத்திற்கும் மொழிக்கும் தக்கவாறு மாறுகின்றன. அதைப்போல சில நல்ல முடிவுகளை தமிழக அரசு செய்திருக்கிறது. அது அவரை எந்த விதத்தில் பாதிக்கிறது என்று

தெரியவில்லை. சமஸ்கிருத மொழியையோ, தத்துவத்தையோ, மருத்து வத்தையோ அது பாதிக்கவில்லை. தமிழக அரசு எந்த ஒரு நல்ல கொள்கையையும் விட்டு விடக்கூடாது. அரசு எடுத்திருப்பது நல்ல கொள்கை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அந்த அடிப்படையில் சமஸ் கிருதம் பாதிக்கப்பட வில்லை என்ற என் கருத்தை, இந்த நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீது தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பேச வந்த பொருளே வேறு. ஏற்கெனவே சிலர் அப்படிப் பேசிவிட்ட காரணத்தால், அதுவும் நான் பேசிய பிறகு என் பேச்சை வைத்து அவர்கள் பேசியதால், நான் சொல்ல வேண்டிய அவசியத் திற்கு ஆளானேன். நிச்சயமாக இந்த அரசு தமிழை வளர்க்கிற, தமிழ்ப் பண்பாட்டை, தமிழ்க் கலாச்சாரத்தை வளர்க்கிற பணியைச் சிறப்பாகச் செய்யும் என்று நம்புகிறேன். அதில் எந்த விதமான நம்பிக்கைக் குறைவும் கிடையாது. பொதுவாக நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் போது, சில கோரிக்கைகளை வைப்பது வழக்கமாகும்.

(முற்பகல் 11-10)

நான் நிதிநிலை அறிக்கையின்மீது பேசும்போது, அதில் "ஆசிரியர்-அரசு ஊழியர் நலன்" என்ற தலைப்பு இல்லாமல் இருக்கிறதே என்று கேட்டபோது, மற்ற மற்ற துறைகளுக்கு இப்போது தொகைகளை ஒதுக்கி உடனடியாகச் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது, ஆசிரியர்-அரசு ஊழியர்கள் நலன் என்ற தலைப்பில் அவ்வப்போது நிலைமைக்கு ஏற்ப நிதியை ஒதுக்கிச் செய்து கொண்டிருக்கிறோம்; அவர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறைதான் செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை. அவ்வப்போது செய்வோம் என்ற நல்லெண்ணத்தை வெளியிட்டார்கள். அதைப் போலவே அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கான அகவிலைப் படி. உயர்வைத் தாருங்கள் என்று கேட்ட போதும், அதுவும் மத்திய அரசு தன்னுடைய ஊழியர்களுக்கு வழங்கியிருக்கிறது என்று சொன்னபோதும், மத்திய அரசு வழங்கட்டும், அதற்குப் பின்னாலே நாங்களும் அதை வழங்குவோம் என்ற கருத்தை வெளியிட்டார்கள். மத்திய அரசு 1—9—1982லிருந்தும் 1—12—1982 லிருந்தும் இரண்டு அகவிலைப்படி உயர்வுகளை அறிவித்துள்ளது. இது அரசுக்கும் தெரியும் என்றுதான் கருதுகிறேன். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், எப்போதும் 4, 5 மாதங்கள் கழித்துத்தான் அகவிலைப் படி உயர்வைக் கொடுப்பது என்பது வழக்கமாகிவிட்டது எப்படியும் வழங்கி விடுகிறது, வழங்குவது வழக்கமாக இருக்கிறது. என [illegible] அரசு

வழங்கிய பிறகு நாங்களும் வழங்குவோம் என்று கொடுத்த வாக்குறுதிக்கு ஏற்ப, தற்போது வழங்குவது பற்றிய அறிவிப்பைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின்மீது சட்டமன்றப் பேரவையில் பேசும்போது, பணம் இல்லை என்று சொன்னாலும்கூட, தற்போது, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இருக்கின்றார்கள். மனம் இருக்கிறது, பணம் எங்கேயிருக்கிறது என்று கேட்டார்கள். பணம் இல்லையென்று ஒப்புக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையின் அடிப்படையில் நாம் ஏற்கெனவே வழங்கியிருக்கிறோம், வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்கிற வகையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல் "மனமிருந்தால் மார்க்கம் உண்டு, பணம் வராதா? நம் முதலமைச்சர் அவர்கள் மனது வைத்தால் பணமா வராது? அவருக்கே உரிய வகையில் பணத்திற்கு வழிவகை செய்யும் ஆற்றல் அவருக்கு உண்டே" என்றெல்லாம் குறிப்பிட்டதைப் போல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் ஒரு இனிப்பான அறிவிப்பாக அகவிலைப் படி உயர்வு அளிக்க வேண்டும். இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியமைச்சரிடம் பரிந்துரை செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்டியில்கூட அறுசுவை உண்டு. கசப்பு, துவர்ப்பு என்று பல சுவை உண்டு. சில சமயங்களில் கசப்பும் சில சமயங்களில் இனிப்பும் உண்டு. இப்போது கசப்பைக் கொஞ்சம் வைத்துக் கொள்வோம், பிறகு இனிப்பை வைத்துக்கொள்வோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட கருத்திலிருந்து இப்போது இல்லை என்றாலும் பின்னாலே தருவார்கள் என்று தெரிகிறது. அறுசுவை உணவு பரிமாறும்போது, முதலில் ஸ்வீட் வைத்து விட்டுத்தான் மற்றவைகளைப் பிறகு வைப்பது வழக்கம். இனிப்புக்குப் பக்கத்தில்தான் காரம், கசப்பு எல்லாம் வைப்பார்கள். எனவே இன்றைக்கே ஒரு இனிப்பான செய்தியாக இதை அறிவிக்க வேண்டும் என்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் ஒன்றிரண்டு அறிவிப்புகளை இந்த அவையில் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆந்திரத்தில் இதுவரை 33 ஆண்டுகள் அரசுப் பணியாற்றினால்தான் முழு ஓய்வூதியம் அளிக்கப்படும் என்று இருந்ததை அண்மையில் மாற்றி இனி முப்பது ஆண்டுக் காலம் பணி செய்திருந்தாலே, முழு ஓய்வூதியம் அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், 20 ஆண்டுக்காலம் பணியாற்றினால், ஓய்வூதியம் உண்டு என்று சொல்லியிருக்கிறது. தற்போது ஒருவர் பணியில் சேருவதற்குள் 35 வயதாகிவிடுகிறது. அதற்குப் பிறகு 33 ஆண்டுக்காலம் பணி புரிய வேண்டும் என்றால் 68 வயது வரை அவர் பணியில் இருக்க வேண்டும். அப்போதுதான் முழுப் பயனும் கிடைக்கும். எனவே 20 ஆண்டுக் கால பணி முடிப்புக்குப் பின்னர், தானாக ஓய்வு பெற விரும்பினால், அத்தகைய அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் முழுமையான ஓய்வூதியம் அளிக்கப்படும் என்று ஒரு அறிவிப்பைச் செய்தால், நாம் எதிர்பார்ப்பதைவிட மிக அதிகமான அளவில் பணியிலிருந்து பலர் செல்லக்கூடிய வாய்ப்பு உருவாகும். இப்படி காலியாகும் இடங்களில் புதியவர்களை நியமிக்கலாம். இந்த நல்ல ஆலோசனையை அரசு கவனிக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும், கல்வியமைச்சர் அவர்களும் இதைப் பரிவோடு பரிசீலித்து வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வகையில் முடிவெடுக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு ஓய்வு பெறுகிறவர்களின் குடும்பத்தில் யாராவது வேலையில்லாமல் இருந்தால், அவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்க முயற்சித்தால், நன்றாக இருக்கும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நேரமில்லாத காரணத்தால், வேறு பல பிரச்சினைகளைக் குறித்து இங்கே நான் பேச விரும்பவில்லை. தொடக்கப் பள்ளிகளிலும் நடுநிலைப் பள்ளிகளிலும், இடைநிலை ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு டியூட்டி அலவன்ஸ் தரப்படுகிறது. பட்டதாரி ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக இருந்தால், அவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களுக்கான ஊதியம் மட்டும்தான் கொடுக்கப்படுகிறது, டியூட்டி அலவன்ஸ் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றினாலும் கூட, அந்தச் சம்பளம் தான் தரப்படுகிறது. ஆனால் தலைமையாசிரியர்கள் பணி என்பது ஒரு சிறப்பான, அதிகமான, கூடுதலான பணி. அதை ஆற்றுவதற்காக ரூ.15 டியூட்டி அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டும் என்று நீண்ட காலமாகக் கேட்டு வருகிறார்கள். மிகவும் குறைவான எண்ணிக்கையை உடையவர்கள் அவர்கள். எனவே அவர்களுக்கு அந்த டியூட்டி அலவன்சை உடனடியாக வழங்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சின்ன சின்னக் காரியங்களைச் செய்வதில் தவறு இல்லை. இதனால் மிகப் பெரிய செலவும் ஆகிவிடாது என்பதையும் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, எங்கே பார்த்தாலும் சிக்கனம் தேவை என்று சொல்லப்படுகிறது. நிதி ஒதுக்கீடு செய்யும்போது, சிக்கனத்தை வலியுறுத்துகிறோம். ஆனால் நடைமுறையில் மாநிலமெங்கும் பல்வேறு சிக்கனமில்லாத செயல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. திருத்துறைப்பூண்டியில் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் கட்டிடம் கட்டப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு மேலாகிறது. ஆனால் அந்தக் கட்டிடத்தைத் திறப்பதற்கு அமைச்சர் அவர்கள் தேதி தரவில்லை என்ற காரணத்திற்காக அதைத் திறக்காமலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. அதே நேரத்தில் தற்போது அந்த வங்கி இயங்கி வரும் வாடகைக் கட்டிடத்திற்கும் கடந்த ஓராண்டுக் காலமாக வாடகையும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கட்டிட வேலை முடிந்து ஓராண்டாகிறது. கட்டி முடித்து ஓராண்டு ஆன பிறகும் கட்டிடம் திறக்கப்படவில்லை. அதன் காரணமாக வாடகையும் ஓராண்டுக் காலமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது என்றால், இதுதான் சிக்கன நடவடிக்கையா என்று கேட்க விரும்புகிறேன். அடுத்து, என்னுடைய சொந்த ஊரான தலைஞாயிறு பற்றியும் இங்கே ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். தலைஞாயிறில் ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் அலுவலகம் வாடகைக் கட்டிடத்தில் தொடங்கப்பட்டது. பக்கத்துக் கட்டிடத்தில் நான் இருக்கிறேன். என்னை அதற்காக அழைக்கவில்லை. பின்னாலே ஊரில் உள்ள நாலு பேர் கேட்டுக் கொண்டதன் பேரில், என்னை அழைத்துப் போய் திறந்து வைக்கச் சொன்னார்கள். அப்போது "அமைச்சர் அவர்கள் வர வேண்டும், அவர் வந்து திறந்து வைக்க வேண்டும் என்று இருந்தால், இப்போது நீங்கள் திறந்ததாக யாருக்கும் வெளியே தெரிய வேண்டாம். பத்திரிகையில்கூட செய்தி வந்துவிடக்கூடாது. அமைச்சர் அவர்களாலே பின்னாலே முறையாகத் திறந்து வைக்கப்பட வேண்டும்" என்று என்னிடத்தில் சொன்னார்கள். அப்படியென்றால் அமைச்சர்களைத் தவிர வேறு யாரும் இதுபோன்ற கட்டிடங்களைத் திறக்கக் கூடாதா? மற்றவர்களுக்கு இந்த வாய்ப்பு தரக்கூடாதா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எங்களுக்குப் புதிய செய்திகளாக இருக்கின்றன. நானே உத்தரவிட்டிருக்கிறேன் பெரிய அதிகாரிகள் வந்துதான் திறக்க வேண்டும்

அல்லது அமைச்சர்கள் வந்துதான் திறக்க வேண்டும் என்று காத்துக் கொண்டிருக்காமல் வேலை முடிந்த உடனே மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட தகவல்களை எனக்கு எப்படியாவது தெரிவிப்பார்களானால் கண்டிப்பாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, இந்த வகையில் நடவடிக்கையை மேற்கொள்வார்கள் என்றும் நம்புகிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலிருந்து கீழே இறங்கி வரும் படிகள் எல்லாம் நொறுங்கியிருக்கின்றன. எனக்குக் கால் சுளுக்கிக் கொண்டது. எனவே படிகள் பற்றி நானே ரிப்போர்ட் செய்தேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எந்த அளவுக்கு வலிவோடு இருக்கிறார் என்பதற்கு அடையாளமாக இது இருக்கிறது. இருப்பினும் படிகளைப் பழுதுபார்க்க ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: கீழ்ப்படியா, மேல்படியா?

திரு. க. மீனாட்சிசுந்தரம்: கீழே இருந்து மேலே போகிற படி, படி உடைந்திருக்கிற காரணத்தால், சாதாரணமாக 'பேட்ச்' ஒர்க்காவது செய்து விடுங்கள் என்று நானே போய் ரிப்போர்ட் செய்தும்கூட, இதுவரை ஒன்றும் செய்யப்படவில்லை. இப்படி பல்வேறு குறைபாடுகள் இருந்தாலும், நேரம் இல்லாத காரணத்தால், சொல்லவில்லை. இருந்தாலும் இந்தக் கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதால், மீண்டும் இன்றைய தினம் இனிப்பைத் தாருங்கள், பிறகு கசப்பை வைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டு அமைகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின்மீது ஆசிரியர்-பட்டதாரிகள்-முற் போக்கு முன்னணியின் சார்பில் சில கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதற்கு முன்பு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆந்திரத்திற்குச் சென்று சென்னை நகர மக்களுக்கு நீண்ட கால அடிப்படை யில் குடிநீர் வழங்குவதற்கான திட்டத்தை—ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கிருஷ்ணா நதிநீர் திட்டத்தை—முடித்து வந்ததற்காக நாங்கள் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அன்றையதினம் நான் டெல்லியில் இருந்தேன். மகிழ்ச்சிகரமான இந்தச் செய்தி தமிழகத்தில் உள்ள மக்களுக்குத் தெரிவதற்கு முன்னாலே பி. டி. ஐ. செய்தி நிறுவனத்தின் மூல மாக எங்களுக்குத் தெரிந்தபோது, நாங்கள் பெருமகிழ்ச்சியடைந்தோம்.

(முற்பகல் 11-20)

ஆகவே இந்த வரலாற்றுச் சிறப்பு மிகுந்த இந்தத் திட்டம் குறித்து, தமிழகத் தின் சார்பாக அந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டு வந்த மாபெரும் சாதனைக்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை தமிழகத்தினுடைய தலைநகர் என்பதோடு மட்டுமல்லாமல், இந்தியாவின் முக்கியமான நகரங்களில் ஒன்று என்ற அடிப்படையில், சென்னைக்குக் குடி நீர் கொண்டு வரும் இத்திட்டத்திற்கு மத்திய அரசும் உதவி செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. அந்த நிதி உதவியைப் பெறுவதற்கு மாநில அரசு போராட வேண்டும், வாதாட வேண்டும் என்பது என்னுடைய கருத்து. அப்படிப்பட்ட முயற்சிகளில் தமிழக அரசு இடையறாது ஈடுபட்டு இத்திட்டத் திற்கு மத்திய அரசின் நிதி உதவியைக் கணிசமான அளவிற்குப் பெறுவதில் வெற்றி பெற வேண்டும் என்பது என்னுடைய விருப்பம்.

அண்மையிலே நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் திரு. தாண்டன் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அதை நான் பத்திரிகை யில் படித்தேன். நெய்வேலி தண்ணீரை சென்னை நகருக்குக் கொண்டுவர உதவி செய்யத் தயார் என்று சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. எம். ஜீ. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர் களே, பின்னால் விளக்கமாகச் சொல்லலாம் என்று பொறுத்திருந்தேன். இது பற்றி இரண்டாண்டுகளுக்கு முன்பிருந்து நாங்கள் பலமுறை கேட்டோம். ஒரு கேலன் தண்ணீருக்கு நாம் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு என்று அவர்கள் சொன்னபோது, அதனுடைய விலையை விட செலவழிக்கும் தொகை

அதிகமாக இருக்கிறது என்பதைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. இன்று அவர் கள் தாராளமாகச் சொல்லுகிறார்கள். ஆனால் நாங்கள் கேட்டபோது, பணம் இல்லாமல் கொடுக்க முடியாது, அந்தத் தண்ணீரை கொண்டுவர அங்கே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்று சொன்னார்கள் என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நெய்வேலி நிறுவனம் அண்மையில் அத் தகைய கருத்தைத் தெரிவித்திருப்பது எனக்கும் வியப்பை அளித்தது. நெய் வேலி நிறுவனம் மத்திய அரசுக்குச் சொந்தமான நிறுவனம். தமிழக எல்லைக் குள் இருக்கின்ற நெய்வேலியில் நிலக்கரி போன்ற கனிவளம் மட்டுமல்லாமல், நீர்வளமும் இருக்கிறது. அங்கே உபரியாகத் தண்ணீர் இருக்கிறது என்று அந்த நிறுவனத்தினுடைய தலைவரே பகிரங்கமாக அறிவித்த பிறகு, தமிழகத் தின் இதர பகுதிகளுக்கு உதவ வேண்டும் என்று நினைத்தால், அவர்களே ஒரு திட்டம் போட்டு, கணிசமான நிதி ஒதுக்கீடு செய்து, சென்னைக்கு மட்டு மல்லாமல், வறட்சியாக உள்ள மற்ற பல்வேறு பகுதிகளுக்கும் அவர்களே தாராளமாகச் செய்யலாம்.

நம்முடைய மாநில எல்லைக்குள் அந்தச் சுரங்கம் உள்ளது. இன்றுள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, அந்தச் சுரங்கம் மத்திய அரசுக்குச் சொந்தமாக இருக்கிறது. அங்கே உள்ள நீர்வளம் மாநில அரசுக்குச் சொந்தம். கனிவளமும், நீர்வளமும் ஒன்றாக இருப்பதால், அந்த நீர் வளத்தை நாம் பெற முடியாத நிலைமையில் சட்ட முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக இருக்கிறது ஆகவே மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமாக உள்ள நெய்வேலி நிறுவனம் உண்மையிலேயே தமிழகத்திற்கு உதவி செய்ய வேண்டும் என்று விரும்பினால், ஆந்திராவிலிருந்து தண்ணீர் கொண்டு வரு வதைப் போல அவர்களே திட்டமிட்டு, தமிழக அரசின் ஒப்புதலை வாங்கி தாராளமாகச் செயல்படுத்தலாம். அப்படிப்பட்டதொரு திட்டம் வந்தால், நிச்சயமாக நாம் மகிழ்ச்சி அடையலாம். ஏனென்றால் ஒரு பக்கத்திலே மிக முக்கியமான காலக் கட்டங்களில் தண்ணீர் கிடைக்கவில்லை. மறு பக்கத் திலே விவசாயிகள் பயிரிடக்கூடிய பலா, முந்திரி போன்ற வருமானம் அளிக்கக் கூடிய நிலங்களை இழக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே இந்தக் கருத்தை மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

இப்போது கல்வி என்பது பொதுப் பட்டியலில் இருக்கிறது. கல்வி பொதுப் பட்டியலில் இருக்கக் கூடாது என்பதும், மாநில அரசுக்கே முழுக்க முழுக்க சொந்தமாக இருக்க வேண்டும் என்றும் வலிமையாக, அழுத்தந் திருத்தமாக இப்போது சொல்லி வருகிறோம். கல்வி பொதுப் பட்டியலில் இருப்பதால், மாநில அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால், அதற்கு டில்லிக்குச் சென்று அனுமதி பெற வேண்டும் என்ற நிலை இருக்கிறது. பொதுப் பட்டியலில் கல்வி இருப்பதால், மாநிலங்களில் கல்விக்காக ஆகும் செலவில் ஒரு கணிசமான தொகையை வழங்க மத்திய அரசு முன்வர வேண்டும்.

நேற்றைய முன்தினம் டில்லியில் ஒரு பேரணி நடந்தது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் வந்திருந்தார்கள். காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்யக்கூடிய மாநிலங்களிலிருந்தும் ஆசிரியர்கள் வந்திருந்தார்கள். மத்திய அரசு, கல்வித் துறைக்கு கல்விச் செலவுக்காக குறைந்தது 10 சதவீதமாவது ஒதுக்க வேண்டும் என்பது ஒரு கோரிக்கை. மாநிலங்களில் ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. அதைச் சரிக்கட்ட மத்திய அரசு மாநில அரசுகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது மற்றொரு கோரிக்கை. இதெல்லாம் தேசிய கோரிக்கைகள். நாடாளுமன்றத்திற்கு முன் பேரணி நடத்தக்கூடிய அளவிற்கு, மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கும் அளவிற்கு ஆசிரியர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். கல்வி பொதுப் பட்டியலில் இருப்பதை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்று பேசினாலும், பொதுப் பட்டியலில் இருக்கும் வரையில் கல்விக்காக மாநில அரசுகளுக்கு ஏற்படும் செலவைக் கணிசமான அளவிற்கு மத்திய அரசாங்கம் பகிர்ந்துகொள்ள வேண்டும். ஆசிரியர்களுடைய ஊதிய விகிதம், பள்ளிக் கட்டிடம், கல்லூரிக் கட்டிடம், தொழில் நுட்பக் கட்டிடம் ஆகிய எதுவாக இருந்தாலும், அவற்றுக்கு ஆகும் செலவில் கணிசமான அளவை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நம் மாநில அரசு வாதாட வேண்டும் என்பது என்னுடைய ஆவல்.

அகவிலைப் படியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்தை நான் வழிமொழிகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், மத்திய அரசு அறிவிக்கும் போதெல்லாம் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளுவது என்பதைக் கொள்கையாக வைத்திருக்கிறோம் என்று ஏற்கெனவே அறிவித்திருப்பதால், இப்போது மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிவிப்புக்கிணங்க மாநில அரசு மிக விரைவாக ஏழரை இலட்சம் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் மகிழ்ச்சி அடையத்தக்க அளவிற்குச் செய்தியை அறிவிப்பார்கள் என்று நம்புகிறோம்.

சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையில், ஒரு சிலவற்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். வறட்சி நிலைமை உள்ள இந்தச் சூழ்நிலையில் ஊதிய உயர்வு போன்ற பிரச்சினைகளைச் சொல்லுவது ஒத்து வராது என்பது என்னுடைய கருத்து. பண சம்பந்தமான விஷயங்களைச் சொல்லுவது நியாயமாகாது. இருந்தாலும் கூட சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்வதற்கு சில இன்றியமையாத வசதிகள் தேவைப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல, ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு அலுவலகம் இருந்தால், இப்போது செயல்படுவதைவிட மிகச் சிறப்பாகச் செயல்பட முடியும். ஒரு அலுவலகமும், ஒரு உதவியாளரும் தேவைப்படுகிறது. முதற்கட்டமாக ஒரு உதவியாளரைக் கொடுத்தால், போதுமானது. அந்த உதவியாளரை வைத்துக்கொண்டு ஜனநாயகக் கடமையை மிகச் சிறப்பாகச் செய்ய முடியும்.

திரு. ஏ. ஆர். தாமோதரன்: நாம் எல்லாம் 1984-ல் போகவிருக்கிறோம். வருகிறவர்களுக்காகக் கேட்கிறார்களா அல்லது போகிறவர்களுக்காகக் கேட்கிறார்களா?

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: பொதுவாகக் கேட்கிறேன். ஜனநாயகக் கடமையைச் செய்ய வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, யாராவது வரப் போகிறார்கள் என்றால், அதை நான் குறை கூறவில்லை. இருக்கின்றவர்கள் போக வேண்டும் என்று ஏன் முடிவு கட்ட வேண்டும்? மக்களுடைய விருப்பம் என்னவென்று இப்போது நமக்குத் தெரியாது. ஆகவே அவர் கேட்பது உங்களுக்கும் பயன்படலாம், நமக்கும் பயன்படலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் தேர்தலில் நிற்க வேண்டாம் என்று முடிவு செய்து விட்டார் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பல ஆண்டுக் காலமாக இருந்த தலைவலியை இப்போது நீக்கிவிட்டார்கள். ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனி தொலைபேசி இணைப்பு கொடுக்கும் பணி மும்முரமாக நடைபெறுகிறது. ஓரிரு நாட்களில் முடிவு அடையும்

என்று சொல்லப்படுகிறது. இதற்காக மனம் திறந்து பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். தொலைபேசியில் இடையூறுகள் இருந்ததால், எவ்வளவு இன்னல்களுக்கு ஆளானோம் என்பது எங்களுக்குத்தான் தெரியும்.

(முற்பகல் 11-30)

அந்தக் குறையை அறவே நீக்குகின்ற வகையில் அரசு எடுத்த முடிவுக்கு நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், நிதி அமைச்சர் அவர்களுக்கும் இந்த அரசுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரெயில்வே கூப்பன்களைப் பற்றிச் சொல்கின்றேன். அண்மையிலே மத்திய அரசு ரெயில்வே கட்டணங்களை உயர்த்தியிருக்கிறது. அது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஏற்கெனவே ரெயில்வே கட்டணங்கள் உயர்த்தப்பட்டபோது, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் அந்தக் கூப்பன்கள் அளவை உயர்த்தி அவர்கள் ஒரு நல்ல அறிவிப்பையும் வழங்கினார்கள். நாங்கள் பொதுவாக பேருந்திலே செல்வதற்கும், ரெயிலில் செல்வதற்கும் பாஸ் வழங்க வேண்டும். உத்தரப்பிரதேசத்தில் அப்படிச் செய்கின்றார்கள். அப்படிச் செய்தால், ஒரு உடையாளச் சீட்டை வழங்கிவிட்டால், சரியான முறையிலே நம்முடைய கடமைகளைச் செய்ய வசதியாக இருக்கும் என்று கோரியிருக்கின்றார்கள். அதைப் பரிசீலனையில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் தற்போது உயர்த்தியுள்ள ரயில் கட்டணங்களுக்கு ஏற்ப கூப்பன்கள் அளவையும் உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நூலக வசதி பற்றிச் சொல்கின்றேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இப்போது இருப்பதைவிட, இன்றும் சற்று அதிகமான அளவில் படிப்பதற்கு ஏற்ற வசதிகள், விரும்புகின்ற அளவுக்கு இல்லாத காரணத்தினால், அந்த நூலக வசதிகளை இன்னும் விரிவாகச் செய்து இன்னும் செம்மையாக நூலகம் இயங்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அங்கீகரிக்கப்பட்ட கட்சி அலுவலகங்கள் இருக்கின்றன. அந்தக் கட்சி அலுவலகங்களிலே குறைந்த பட்சம் ஒரு கடைநிலை ஊழியரையாவது இருக்கச் செய்தால், அங்கீகரிக்கப்பட்ட கட்சி அலுவலகங்கள் சிறப்பான முறையில் செயல்பட உதவியாக இருக்கும் என்றும் அதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் சொல்லிக்கொள்கிறேன். பொதுவாக ஆசிரியர்களைக் குறித்துச்

சொல்ல வேண்டிய கருத்துக்களையெல்லாம் ஏற்கெனவே நான் சொல்லியிருப்பதால், அதையே மீண்டும் சொல்ல நேரமிருக்காது. அது பொருந்தாது. ஆகவே, நான் மீண்டும் ஒரு முறை சொல்லாமல், நான் நிதிநிலை அறிக்கையிலே, மற்றும் கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது பேசும்போது சொல்லிய கருத்துக்களை மீண்டும் வலியுறுத்திக் கொள்கிறேன். அதிலே நிதி சம்பந்தமான கோரிக்கைகள் எவை எவை தேங்கிக் கிடக்கின்றனவோ, அதிலே முரண்பாடுகள் இருப்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். அதிலே ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. நீண்ட காலமாக இருக்கின்ற கோரிக்கைகள், புதிய கோரிக்கைகள் அல்ல. முரண்பாடுகளைத்தான் சொல்லியிருக்கிறோம். ஊதியம் சம்பந்தமான கோரிக்கைகளை ஆராய வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

தென் ஆற்காட்டைப் பொறுத்தவரையில், கடலூர் கல்வி மாவட்டம் மிகப் பெரிய கல்வி மாவட்டமாக இருக்கின்றது. அதுபோலவே வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை கல்வி மாவட்டம் பெரிய கல்வி மாவட்டமாக இருக்கின்றது. அந்த இரண்டு கல்வி மாவட்டங்களையும் இரண்டாகப் பிரிக்க வேண்டிய அவசியம் வந்திருக்கின்றது. அதற்கான குறிப்புகள் அரசுக்கு வந்திருக்கின்றன. அதுவும் நிதிப் பிரச்சினையாக இருப்பதால், அதையும் கல்வித் துறையிடம் வலியுறுத்துகிறேன். சிதம்பரத்தில் மீண்டும் ஒரு கல்வி அலுவலகம் வேண்டும் வட ஆற்காடு மாவட்டத்தில் போளூரிலே இந்த நடைமுறை ஆண்டிலேயே ஒரு மாவட்டக் கல்வி அலுவலகம் தொடங்க வேண்டும், அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த சமயத்திலே கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, முடிக்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை நிதி நிலை மசோதாவின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். முக்கியமாக இந்தத் துணை நிதிநிலை மசோதாவின் மீது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முக்கியமாக, வறட்சிப் பிரச்சினையில் அரசின் கவனத்திற்கு சில விஷயங்களைக் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கெனவே அரசு வறட்சி நிவாரணத்திற்காக ரூ. 37 கோடி அளவுக்கு மாநில அரசு நிதி ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். இப்போது ரூ. 47 கோடி என்று அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் 37 கோடி ரூபாயில் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு என்று ஒரு 12 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதால், பாக்கி ரூ. 25 கோடிதான் இருக்கிறது.

அதுவும் இந்த 16 மாவட்டங்களுக்கு என்று ஒதுக்குகின்றபோது ஒரு மாவட்டத்திற்கு ரூ. 1½ கோடி என்றுதான் வறட்சி நிவாரணத்திற்குக் கிடைக்கிறது. 45 லட்சம் மக்கள் கொண்ட ஒரு மாவட்டத்திலே இவ்வளவு கடுமையான நிலைமைகள் இருக்கின்றபோது, இந்த 1½ கோடி ரூபாய் என்பது எவ்வளவு குறைவான தொகை என்பது அரசுக்குத் தெரியும். மாவட்டங்களிலே வறட்சி நிவாரண வேலைகளைச் செய்வதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டு, அவர்கள் சொன்ன தொகைகள், நிவாரணத் தொகை, மாநிலம் முழுவதிற்கும் கேட்கக்கூடிய கணக்கு எல்லாவற்றையும் எடுத்துப் பார்த்துச் சொல்லியிருக்கிறார்கள். மாநில அரசு மத்திய அரசிடம் நிவாரணம் கேட்டது ரூ. 200 கோடிக்கு மேலே. ஆனால் மத்திய அரசு ரூ. 60 கோடி சொச்சம் தருவதாக ஒத்துக்கொண்டிருக்கிறது. இன்று கடுமையான வறட்சி இருக்கிறது. கடுமையான வறட்சி தமிழ் நாட்டு மக்களைப் புரட்டிப் புரட்டி எடுக்கின்றது. அது முழு ஆல்வட்டம் சுற்றி வருகிறது. சாதாரணமாக கோடைக்காலத்திலே பெய்யக்கூடிய கோடை மழைகூட இந்த முறை சரியாகப் பெய்யவில்லை என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. வறட்சி முழு ஆல்வட்டம் சுற்றியிருப்பதைப் பார்க்கிறோம். தமிழ் மக்களை வஞ்சிப்பது போன்ற நிலை இருக்கின்றபோது, மத்திய அரசு கொடுக்கும் இந்த 60 கோடி ரூபாய் போதாது. மக்களுக்கு வறட்சியிலிருந்து நிவாரணம் கொடுக்கின்ற அளவிற்கு அது போதுமான அளவில் இருக்காது. இந்த நிலையில் நான் மாநில அரசிடம் வேண்டிக்கொள்வது, அரசு ஏற்கெனவே அனுமதித்திருக்கும் ரூ. 47 கோடி போக, நம்முடைய கன்சாலிடேட்டட் பண்டிலேயிருந்து ரூ 50 கோடி அளவிற்கு ஒதுக்கி, இந்தப் பணமும் போதவில்லை, மேலும் தரவேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். நாம் நிவாரண வேலைகளை இன்னும் அதிகமாகச் செய்வதற்கு மேற்கொண்டு ரூ 50 கோடி ரூபாயை மாநில அரசே ஒதுக்கி, அதற்குப் பிறகு மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இப்போது நாம் ஒதுக்கியிருக்கின்ற இந்த 47 கோடி ரூபாய்க்குள்ளோ அல்லது அவர்கள் தருவதாகச் சொல்கின்ற பணத்தைச் சேர்த்து வைத்துச் செய்தால்கூட, போதுமான அளவுக்கு நிவாரண வேலை நடைபெறாது. அது போதாது. இந்த மாநில அரசே கேட்டது ரூ 200 கோடி. மாநில அரசும் ரூ. 47 கோடி ஒதுக்கியிருக்கிறது. இருந்தாலும் அதுவும் காணாது என்ற நிலை இருக்கும்போது, மேற்கொண்டு ரூ. 50 கோடி அளவிற்கு கன்சாலிடேட்டட் பண்டிலிருந்து ஒதுக்கிச் செலவு செய்து கொண்டு, பிறகு மத்திய அரசிடமிருந்து அதைக் கோர வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்கு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். அதற்கான ஒரு நிர்பந்தத்தை மத்திய அரசுக்குக் கொடுக்க

வேண்டும். அதை நாம் எல்லோரும் சேர்ந்து செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இன்றைக்கு இதிலே மேற்கொண்டு ரூ. 50 கோடி ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடிநீர் பிரச்சினை. குடிநீர் பிரச்சினையிலே மாநில அரசின் முயற்சியை நான் பாராட்டுகிறேன் கிருஷ்ணா நதித் தண்ணீரைக் கொண்டு வருவது மாநில முதலமைச்சர் அவர்களுடைய முயற்சி. பகீரதப் பிரயத்தனம் என்று சொல்வார்களே அதுபோல மாண்புமிகு முதல்வர் அவர்கள் முயற்சி செய்து பெற்றிருக்கின்றார்கள். அதுவும்கூட இந்திய சரித்திரத்தில் உள்ள ஒரு அரசியல் உண்மை என்னவென்றால் இரண்டு மாநிலங்களிலும் காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது வரவில்லை. இந்த மாநிலத்தில் நான்—காங்கிரஸ் இருந்தபோதும், அங்கே ஒரு காங்கிரஸ் கவர்ன்மென்ட் இருந்தபோதும்கூட, கொண்டு வர முடியவில்லை. இரண்டு மாநிலங்களிலும் இரண்டு நான்-காங்கிரஸ், காங்கிரஸ் அல்லாத கவர்ன்மென்ட்ஸ் வந்த பிறகுதான், இன்றைக்கு இந்தப் பிரச்சினை தீர்க்கப்படுகிறது. அப்படி இருந்தால்தான் தீர்க்கப்படும் என்பதைத்தான் இன்று நடந்திருக்கின்ற ஒப்பந்தம் காட்டுகிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

Thiru A. R. DAMODARAN: It is only unfortunate that the same type of pleasant compromise could not be effected when the hon. Member's Party was in power in Kerala, regarding the sharing of the waters of the West-flowing rivers.

திரு. ஆ. நல்லசிவன்: அப்படி அவர்கள் சொல்வது சரியல்ல. அன்று திரு. ஈ. எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்கள் சீப் மினிஸ்டராக இருந்தபோது, நம்முடைய தமிழ் நாட்டிலே ஒரு குறிப்பிட்ட புராஜெக்ட், பெயர் ஞாபகம் இல்லை, கோயம்புத்தூரிலே என்று நினைக்கிறேன். அந்தக் குறிப்பிட்ட ஹைடல் புராஜெக்டுக்கு, இரிகேஷன் புராஜெக்ட்டுக்கு ஒரு ஒப்பந்தம் நடந்தது. அது அவருக்குத் தெரிந்திருக்கும். தெரிந்தும் அவர்கள் இதிலே என்னை வம்பிலே மாட்டி விடுவதற்காகச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுடைய கட்சியினுடைய சரித்திர வரலாறு தனி. அவர்கள் தனியான சரித்திரம் எழுதுவார்கள். அதனாலே சிலவற்றையெல்லாம் தனிப்பட்ட முறையிலே சொல்லி, தனியான விமர்சனத்திற்கு ஆளாவார்கள். ஆனால் கிருஷ்ணா தண்ணீரைப் பொறுத்தவரைக்கும் . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தண்ணீரிலே சரித்திரம் எழுத வேண்டாம்.

திரு. க. இராமமூர்த்தி : அந்தச் சரித்திரம் படைக்கின்ற பேச்சைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதிலேயும் மராட்டிய மாநிலத்தினுடைய தண்ணீர், காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கின்ற மாநிலம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டது. அதுவும் இப்போது சேர்ந்து வருகிறது கர்நாடக மாநிலத்திலேயிருந்து கொடுக்கின்ற தண்ணீர் காங்கிரஸ் ஆட்சி அங்கே இருக்கின்றபோது ஒப்புக்கொண்டது. இந்த இரண்டு ஆட்சியும் ஒப்புக் கொண்டு அப்போதே செய்தது. அப்போதிருந்த மத்திய அரசு தலையிட்டு இதனைச் செய்தது. இப்போதும் மத்தியில் நீடித்திருக்கின்ற காங்கிரஸ் அரசுதான் அதைச் செய்திருக்கிறது. கிருஷ்ணா தண்ணீர் பற்றிய பேச்சு வார்த்தையிலே கடினமான நிலை இருந்தது. அதை எடுக்க வைத்ததே மத்திய அரசிலே உள்ள காங்கிரஸ் ஆட்சிதான். அன்றைக்கு இருந்த காங்கிரஸ் அரசுகளும் அதைத்தான் செய்து கொண்டிருந்தன. வேண்டுமென்றால் அவர்களுடைய பங்கு என்ன என்பதையெல்லாம், கேரளாவிலே அவர்களுடைய ஆட்சியிலே என்ன செய்தது என்பதையெல்லாம் அவர்களாலே குழப்பத்தான் முடியுமே தவிர, நேரடியாகச் சொல்ல முடியாது.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மகாராட்டிரம், கர்நாடகம் தந்தது வாஸ்தவம்தான். ஆனால் தண்ணீர் எடுக்கின்ற பாயிண்டிலே ஏன் வரவழைக்கவில்லை என்பது கேள்வி. கர்நாடகம், மகாராட்டிரம் வாயாலே சொல்லிவிட்டுப் போய் விடுகிறார்கள். ஆனால் தண்ணீர் கொடுக்க வேண்டிய பாயிண்டிலே அது செய்யவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : உறுப்பினர் அவர்கள் எங்கள் பேரிலே குறை சொல்கின்றார்களா அல்லது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேரிலே குறை சொல்கின்றார்களா என்று எனக்குத் தெரியவில்லை. ஆந்திரத்தில் காங்கிரஸ் முதலமைச்சர் அவர்கள் முன்னமே கூப்பிட்டார்கள் என்பதை நமது முதலமைச்சர் ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள். உறுப்பினர் அவர்கள் அ.தி.மு.க மீது கோபமாக இருக்கின்றார்களா அல்லது எங்கள் மீது கோபமாக இருக்கின்றார்களா? அது எனக்குத் தெரியவில்லை.

திரு. ஆ. நல்லசிவன் : நான் யார் பேரிலும் கோபமாக இல்லை. ஆனால் இன்றைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். 1977-லேயிருந்து கடந்த 6 ஆண்டுக் காலமாக அவர்கள் ஏன் கொடுக்காமல் இருந்தார்கள் என்று

எனக்குத் தெரியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். யார் அதைச் சொல்லியிருக்கிறார்கள்? என். டி. ஆர். அவர்கள்தான் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள் கர்நாடகா, மகாராட்டிரம் கொடுத்தால்கூட கொடுக்க வேண்டியது ஆந்திராதான். அவர்கள் கொடுக்க வேண்டிய பாயின்டிலே இருக்கிறார்கள். ஏன் கொடுக்காமல் இருந்தார்கள் என்றுதான் கேட்கிறேன். அங்கே காங்கிரஸ் ஆட்சிதான் இருந்தது.

திரு. க. இராமமூர்த்தி : இதிலே வேடிக்கை என்ன என்றால் இப்போது இருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் கொடுக்கிறது என்று முடிவு பண்ணிய பிறகும்கூட, சில பேர்கள் அதை எப்படி கொடுக்கலாம் என்று கோளாறு பண்ணினார்கள். அந்தக் கோளாறு பண்ணிய அரசியல் கட்சிகளில் கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் புரட்டி விட முடியும் என்று நினைத்தால், அது முடியாது. இந்த நாட்டிலே ஒரு அடிப்படையான உண்மை இருக்கிறது. இந்த நாட்டிலே 35 ஆண்டு காலமாக காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. மத்தியிலே 32 ஆண்டு காலம் காங்கிரஸ் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. ஆந்திராவிலே இடைவிடாமல் இருந்து கொண்டிருந்தது. தமிழ் நாட்டிலே 15 ஆண்டுகளுக்கு முன்பு மாறியது. இவ்வளவு நடந்த பிறகும் தமிழ் நாட்டில் கிருஷ்ணா நதித் தண்ணீர் என்பது இரண்டு நான்-காங்கிரஸ் ஆட்சி வந்த பிறகுதான் நடந்திருக்கிறது என்ற உண்மையை எப்படி புரட்டி எழுதினாலும், அந்தச் சரித்திரத்தைப் புரட்ட முடியாது என்பதை மட்டும் கூற விரும்புகிறேன்.

(முற்பகல் 11-40)

குடி தண்ணீர் கொடுக்கும்போது, அதை லாரிகளில் கொண்டு போய் விநியோகம் செய்வது முக்கிய பிரச்சினையாக இருக்கிறது. போதிய அளவுக்கு லாரிகள் இல்லை என்ற பிரச்சினை எழுந்திருக்கிறது. குமரி மாவட்டத்திலே ஒரு தாமிரபரணி இருக்கிறது. அதைச் சுற்றியுள்ள பஞ்சாயத்து யூனியன் பகுதிகளிலே போதிய குடி தண்ணீர் இல்லாததால், அந்த தாமிரபரணித் தண்ணீரை விநியோகிக்க லாரிகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். திண்டுக்கல்லிலே கூட, அங்கே குடி நீர் சப்ளைக்கு என்று பிரதானமாக இருக்கக்கூடிய காமராஜர் நீர் தேக்கம் வறண்டு விட்டதால், சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து, கிணறுகளிலிருந்து தண்ணீர் கொண்டு வர வேண்டிய நிலை இருக்கிறதென்றும், அதற்குப் போதிய லாரிகள் இல்லை என்றும் சொல்லுகிறார்கள். நெய்வேலித் தண்ணீர்

திண்டுக்கல்லுக்கு இரயிலில் போனாலும், அதை விநியோகிக்க லாரிகள் தேவைப் படுகின்றன. குடி தண்ணீரை மக்களுக்கு சப்ளை செய்ய லாரிகள் தேவைப் படுவதால், அந்தப் பிரச்சினையை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ரேஷன் பிரச்சினை. ஒவ்வொரு கார்டுக்கும் 20 கிலோ அரிசி என்று சொன்னாலும், பல கிராமங்களிலே 2 கிலோ அரிசிதான் கொடுப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. எனவே போதிய அளவுக்குக் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. நான் திருவல்லிக்கேணியில் இருக்கிறேன். என்னுடைய கார்டுக்கு 10 கிலோ அரிசிதான் வழங்குகிறார்கள். அது 6 நாட்களுக்குத்தான் போதுமானதாக இருக்கிறது. மீதி 24 நாட்களுக்கு இல்லை. வெளி மார்க் கெட்டில் 4 ரூபாய், 5 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. நகரங் களிலேயே இப்படி இருக்கும்போது, கிராமங்களிலிருந்து வரும் ரிப்போர்ட் சரி யாகத்தான் இருக்குமென்று நினைக்கிறேன். பொது விநியோகம் சீராக இல்லை. 20 கிலோ அரிசி ஒரு கார்டுக்குக் கிடைக்குமென்றாலும், பல கிராமங் களிலே கிடைக்கவில்லை. போகப் போக இன்னும் சிக்கலாகும். மழை பெய்து குறுவை அறுவடையாகிறவரையில், அக்டோபர் நவம்பர் மாதம் வரை யில் நாம் இந்த நிலைமைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. எனவே இதில் முக்கியமாக கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். என்ன தானியம் கிடைத்தாலும், நம்முடைய மாநிலத்தில் இருந்தா லும் சரி, வெளி மாநிலங்களில் இருந்தாலும் சரி, அதைக் கொள்முதல் செய்ய விசேஷ முயற்சி செய்ய வேண்டும். நாம் எவ்வளவோ கேட்ட பிறகும்கூட, மத்திய அரசு கூடுதலாக 5 ஆயிரம் டன் கோதுமை தான் தர முடியுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே இந்த மாதிரி நிலைமையில் தண்ணீர், நிவாரண வேலைகள், ரேஷன் போன்ற பிரச்சினைகள் வருகின்றன. சில மாதங்களில் இவை முக்கியமான பிரச்சினைகளாகி, ஜனங்களுக்கு வாழ்வா, சாவா என்ற நிலை ஏற்படும் இவற்றைக் களைய தமிழ் நாடு அரசு எடுக்கும் முயற்சிகளைப் பார்க்கும்போது, அந்த முயற்சி போதுமானதாக இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசுதான் தேவையானதைத் தர முடியும், நம்மால் மட்டும் சமாளிக்க முடியாது என்பதில் உண்மையைப் பார்க் கிறோம். மத்திய அரசு தருவது போதாது, 20,000 டன் கோதுமையும், 15,000 டன் அரிசியும் காணாது என்பதை எப்படி வற்புறுத்தப் போகிறோம்? தமிழ் நாட்டு அரசைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கும்போது, தமிழ் மக்களிடத்திலே விவரங்களைச் சொல்லி, ஜனங்களைத் திரட்டுவதன் மூலம்தான் மத்திய அரசை நிர்பந்தப்படுத்த முடியுமென்று

ன்னோம். அப்படிச் செய்ய முடியாது, டயலாக்கிலேயே, பேசியே
வோம் என்று சொன்னார்கள். அந்தக் கால கட்டத்தில் நம்முடைய
லமைச்சர் அவர்களே உண்ணாவிரதம் இருக்க வேண்டிய அவசியம் ஏற்
டது. மத்திய அரசு தராததற்கு, மத்திய அரசு சொல்லும் தவறான
ணம், அரைகுறை காரணம் அல்லது பார்சியலி அன்ட்ரூ என்பதை மறுப்
கு நம்முடைய முதலமைச்சரவர்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டிய
மை ஏற்பட்டது. தமிழ் நாட்டிலே ஆளும் கட்சியே கடந்த ஏப்ரல் 3
தேதி விளக்கப் பிரச்சாரக் கூட்டம் நடத்தியதைப் பார்த்தோம். அப்படி
க்கப் பிரச்சாரக் கூட்டங்களை நாம் நடத்தியபோது, நம்முடன் சேர்ந்து
று, வலியுறுத்த அரசு முன்வரவில்லை இருந்தாலும் தனியாக நடத்தி
தப் பாராட்டுகிறேன். முதலமைச்சரவர்களே ஒரு கருத்தைச் சொன்
கள். முன்பு நெய்வேலியிலிருந்து தண்ணீர் கேட்டபோது, அதற்குப்
ம் செலவாகுமென்று சொன்னார்கள், இன்றைக்கு ஓடி ஓடி வந்து, தரு
றாம்; நெய்வேலியிலிருந்து எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்
ர், இது எப்படி ஏற்பட்டது? தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், மத்திய
சு பாரபட்சமாக நடக்கிறது என்று பெரும் கிளர்ச்சி நடத்தியதால்தான்
றைக்கு 60 கோடி ரூபாய் தருகிறேன் என்கிறார்கள்; 35,000 டன் உணவுப்
ருள்கள் தருகிறோமென்று சொல்லுகிறார்கள்; தண்ணீரை கிருஷ்ணாவிலிருந்
, நெய்வேலியிலிருந்தும் தருகிறோமென்று சொல்லுகிறார்கள். இருந்தாலும்
வளவையும் வைத்துக்கொண்டு அடுத்த 6 மாதங்களைச் சமாளிக்கமுடியாது
திய அரசு, இந்தப் பிரச்சினையில், வறட்சியைச் சமாளிக்கும் பிரச்சினையில்,
நிலத்திற்குப் போதிய அளவுக்கு உதவி செய்யவில்லை, பாரபட்சம் காட்டு
து என்று நாம் நிர்பந்தம் கொடுக்கக் கொடுக்கத்தான், அது பாரபட்சத்தைக்
ஞ்சம் கொஞ்சமாகத் தளர்த்துகிறது. தமிழ் மக்கள் எல்லோரும் சேர்ந்து
புறுத்தினால்தான், இன்றைக்கு நமக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்கு
ன்று வற்புறுத்தும் நிலையிலே தமிழக அரசு இருக்கிறதா என்பது சந்தேக
க இருக்கிறது. சமீப காலத்திலே ஒரு பேச்சு அடிபடுகிறது. தமிழ் நாட்டில்
ட்சி நிலைமை இருக்கும்போது, நம்முடைய முதலமைச்சரவர்கள் 1984
ர்தல் பற்றி இந்திரா காங்கிரசோடு பேசினார் என்ற செய்தி வருகிறது.
ால் அந்த மாதிரி அறிக்கை வரும்போது பிரதம மந்திரி உடனே அதை
க்கிறார். 1985-க்கு இடையிலே தேர்தல் நடக்கப் போவதில்லை; எப்
ாது நடந்தாலும் சரி, 1985ல் நடந்தாலும் சரி, அப்போது இருக்கும் நிலைமை
ில் அதைச் சொல்லுவார்கள், அதற்கு அவர்களுக்குச் சாமர்த்தியம் இருக்
து. ஆனால் நம்முடைய முதலமைச்சரவர்களோ, ஆளுங் கட்சியோ

அப்படி கிடையாது என்று மறுக்கவில்லை. அது சந்தேகத்தை உண்டாக்கு கிறது. ஒரு கட்சிக்கும், இன்னொரு கட்சிக்கும் உள்ள அரசியல் உறவைப் பற்றி நான் மறுக்கவில்லை.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நாங்கள் யாருடனாவது சேர்ந்து, அவர்கள் வராமல் தான் பண்ணுவோம். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இப்போதைக்கு அந்தக் கவலை இல்லை. தமிழ் நாட்டில், தமிழ் நாட்டு மக்கள் அனைவரையும் திரட்டி, மத்திய அரசு பாரபட்ச முறையில் போய்க் கொண்டிருக்கிறது என்று பெரும் இயக்கம் நடத்த வேண்டிய நேரத்தில் மாநில அரசு எதிர்காலத் தேர்தலை முன்னிட்டு பேரம் பேசிக் கொண்டிருக்கிறது. அதனால் போதிய அளவுக்கு அரிசியை வாங்க முடியவில்லை, நிதியை வாங்க முடியவில்லை, தண்ணீரை வாங்க முடியவில்லை என்று தமிழ் மக்களுக்கு எண்ணம் ஏற்பட்டால், அது சரிதானா என்று கேட்க விரும்புகிறேன். இதை மறுக்க வேண்டாமா? மறுக்காதது மட்டுமல்ல, ஏப்ரல் 3 ஆம் தேதி நடத்திய இயக்கத்திற்குப்பிறகு சும்மா இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கிறதென்று சொல்ல வேண்டும். அப்படி ஒரு நிர்பந்தம் கொடுக்காமல் மத்திய அரசு அசையாது. அது கல்லுளி மங்கன் அரசு. இவ்வளவு பெரிய கூப்பாடு போட்ட பிறகுதான், இதுவாவது வந்திருக்கிறது. தமிழ் மக்களுடன் சேர்ந்து மத்திய அரசை நிர்ப்பந்திக்கும் பாதையில் போகவில்லை என்றால், தமிழ் மக்கள் இந்த உரிமைகளுக்காகக் கிளர்ச்சி செய்யும்போது, அதை எப்படிச் சமாளிப்பது என்று யோசிக்க வேண்டியிருக்கும். நான் ஒன்று கேள்விப்படுகிறேன். இன்டலிஜென்ஸ் ஆபீசர்களைக் கூப்பிட்டு வறட்சி நிலைமை எப்படி இருக்கிறது, வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது. இன்றைக்குள்ள போலீசாரால் சமாளிக்க முடியுமா என்று கேட்டதாகவும், வறட்சி மோசமாக இருக்கிறது, மக்களிடையே கொந்தளிப்பு இருக்கிறது. இன்றைக்குள்ள போலீசாரால் சமாளிக்க முடியுமா என்பது சந்தேகமாக இருக்கிறது என்று அவர்கள் ரிப்போர்ட் கொடுத்ததாகவும் கேள்விப்படுகிறேன். இப்படி ரிப்போர்ட் வரும்போது, மத்திய அரசு மக்களோடு மோதிக் கொள்ளாமலிருக்க மத்திய அரசை நிர்பந்திப்பதற்கு பதிலாக, மத்திய அரசோடு சமரசம் என்று சொன்னால், அடுத்த தேர்தலை அடிப்படையாகக் கொண்டு சமரசம் செய்ய நினைத்தால், இங்கே மோசமான நிலைமை ஏற்படும். அப்போது இந்த அரசு மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்படுமென்று கூற விரும்புகிறேன். ஆகவே இந்த விஷயங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, உங்களை வற்புறுத்துவதற்கும், மத்திய

அரசின் பாரபட்சப் போக்கைக் கண்டிக்கவும்தான் தமிழ் நாட்டில் ஜனநாயகப் பாதுகாப்பு அணி சார்பிலே மே 4 ஆம் தேதி ஒரு மறியல் இயக்கம் நடத்துவது என்று முடிவு செய்துள்ளோம். மத்திய அரசை எதிர்த்தும், மாநில அரசை எதிர்த்தும் நடத்துகிறோம். மாநில அரசை எதிர்த்து என்று சொல்லும்போது மாநில அரசு செய்யும் நிவாரணப் பணிகளை எதிர்த்து அல்ல, மத்திய அரசோடு சண்டை போடாமல், அரசியல் பேரம் பேசும் போக்கைத் தடுப்பதற்காகத்தான் . . . .

(முற்பகல் 11-50)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாற்றுத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே எந்த பேரமும் நடைபெறவில்லை. அதுபோல் மத்தியில் இருக்கிற ஆளும் கட்சிக்கும் தமிழகத்தில் இருக்கிற ஆளும் கட்சிக்கும் இடையே கூட எந்த ஒரு பேரமும் நடைபெறவில்லை. மத்திய அரசிடமிருந்து மோதுவதன் மூலம் தான் நன்மையை நாம் பெற முடியும் என்கிற அறிகுறி இருந்தால், மோதிக் கொள்ளலாம். ஆனால் மத்திய அரசுடன் மோதுவது நல்லதா, இல்லை பேசிப் பெறுவது நல்லதா என்று ஆராய்ந்து பார்த்து, பேசி, வாதாடிப் பெறுவதன் மூலம் தான் பலன் ஏற்படும் என்கிற அடிப்படையில் தான், இன்றைய தினம் மேற்கு வங்க அரசு அத்தகைய ஒரு அணுகுமுறையை மேற்கொண்டிருக்கிறது. அதுபோல் நாமும் மத்திய அரசுடன் வாதாடி, மத்திய அரசை வற்புறுத்தி, மேலும் மேலும் எடுத்துச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் போன்றவர்களுடைய முழு ஒத்துழைப்பையும் பெற்று, பெற வேண்டியதைப் பெறுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): உறுப்பினருக்கு ஒதுக்கிய நேரம் முடிந்து விட்டது. சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. ஆ. நல்லசிவன்: நான் எப்போதுமே மத்திய அரசுடன் மாநில அரசு மோதிக்கொண்டே இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. பேசியே பெற முயல வேண்டும் அப்படிப் பேசி பெற இயலவில்லையென்றால், மோதியாவது எவ்வளவு பெற முடியுமோ அவ்வளவையும் பெற வேண்டும். எப்படியாவது நமது கோரிக்கைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டால், சரி அந்த வகையில் நம்முடைய தமிழ் நாட்டு மக்களுடைய நலன் பேணப்பட்டால், அது போதும். எப்போதுமே அத்தகைய ஒரு கண்ணோட்டத்தில் தான் நம்முடைய அரசு இருக்க வேண்டும். ஆனால் நான் இங்கே சொல்ல வருவது என்னவென்றால், இங்கேயுள்ள ஆளும் கட்சி மத்தியிலுள்ள ஆளும் கட்சியுடன்

அப்படி கிடையாது என்று மறுக்கவில்லை. அது சந்தேகத்தை உண்டாக்குகிறது. ஒரு கட்சிக்கும், இன்னொரு கட்சிக்கும் உள்ள அரசியல் உறவைப் பற்றி நான் மறுக்கவில்லை.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நாங்கள் யாருடனாவது சேர்ந்து, அவர்கள் வராமல் தான் பண்ணுவோம். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இப்போதைக்கு அந்தக் கவலை இல்லை. தமிழ் நாட்டில், தமிழ் நாட்டு மக்கள் அனைவரையும் திரட்டி, மத்திய அரசு பாரபட்ச முறையில் போய்க் கொண்டிருக்கிறது என்று பெரும் இயக்கம் நடத்த வேண்டிய நேரத்தில் மாநில அரசு எதிர்காலத் தேர்தலை முன்னிட்டு பேரம் பேசிக் கொண்டிருக்கிறது. அதனால் போதிய அளவுக்கு அரிசியை வாங்க முடியவில்லை, நிதியை வாங்க முடியவில்லை, தண்ணீரை வாங்க முடியவில்லை என்று தமிழ் மக்களுக்கு எண்ணம் ஏற்பட்டால், அது சரிதானா என்று கேட்க விரும்புகிறேன். இதை மறுக்க வேண்டாமா? மறுக்காதது மட்டுமல்ல. ஏப்ரல் 3 ஆம் தேதி நடத்திய இயக்கத்திற்குப்பிறகு சும்மா இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கிறதென்று சொல்ல வேண்டும். அப்படி ஒரு நிர்பந்தம் கொடுக்காமல் மத்திய அரசு அசையாது. அது கல்லுளி மங்கன் அரசு. இவ்வளவு பெரிய கூப்பாடு போட்ட பிறகுதான், இதுவாவது வந்திருக்கிறது. தமிழ் மக்களுடன் சேர்ந்து மத்திய அரசை நிர்ப்பந்திக்கும் பாதையில் போகவில்லை என்றால், தமிழ் மக்கள் இந்த உரிமைகளுக்காகக் கிளர்ச்சி செய்யும்போது, அதை எப்படிச் சமாளிப்பது என்று யோசிக்க வேண்டியிருக்கும். நான் ஒன்று கேள்விப்படுகிறேன். இன்டலிஜென்ஸ் ஆபீசர்களைக் கூப்பிட்டு வறட்சி நிலைமை எப்படி இருக்கிறது, வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது. இன்றைக்குள்ள போலீசாரால் சமாளிக்க முடியுமா என்று கேட்டதாகவும், வறட்சி மோசமாக இருக்கிறது, மக்களிடையே கொந்தளிப்பு இருக்கிறது. இன்றைக்குள்ள போலீசாரால் சமாளிக்க முடியுமா என்பது சந்தேகமாக இருக்கிறது என்று அவர்கள் ரிப்போர்ட் கொடுத்ததாகவும் கேள்விப்படுகிறேன். இப்படி ரிப்போர்ட் வரும்போது, மத்திய அரசு மக்களோடு மோதிக் கொள்ளாமலிருக்க மத்திய அரசை நிர்பந்திப்பதற்கு பதிலாக, மத்திய அரசோடு சமரசம் என்று சொன்னால், அடுத்த தேர்தலை அடிப்படையாகக் கொண்டு சமரசம் செய்ய நினைத்தால், இங்கே பேரசமான நிலைமை ஏற்படும். அப்போது இந்த அரசு மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்படுமென்று கூற விரும்புகிறேன். ஆகவே இந்த விஷயங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, உங்களை வற்புறுத்துவதற்கும், மத்திய

அரசின் பாரபட்சப் போக்கைக் கண்டிக்கவும்தான் தமிழ் நாட்டில் ஜனநாயகப் பாதுகாப்பு அணி சார்பிலே மே 4 ஆம் தேதி ஒரு மறியல் இயக்கம் நடத்துவது என்று முடிவு செய்துள்ளோம். மத்திய அரசை எதிர்த்தும், மாநில அரசை எதிர்த்தும் நடத்துகிறோம். மாநில அரசை எதிர்த்து என்று சொல்லும்போது மாநில அரசு செய்யும் நிவாரணப் பணிகளை எதிர்த்து அல்ல, மத்திய அரசோடு சண்டை போடாமல், அரசியல் பேரம் பேசும் போக்கைத் தடுப்பதற்காகத்தான் . . . .

(முற்பகல் 11-50)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாற்றுத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே எந்த பேரமும் நடைபெறவில்லை. அதுபோல் மத்தியில் இருக்கிற ஆளும் கட்சிக்கும் தமிழகத்தில் இருக்கிற ஆளும் கட்சிக்கும் இடையே கூட எந்த ஒரு பேரமும் நடைபெறவில்லை. மத்திய அரசிடமிருந்து மோதுவதன் மூலம் தான் நன்மையை நாம் பெற முடியும் என்கிற அறிகுறி இருந்தால், மோதிக் கொள்ளலாம். ஆனால் மத்திய அரசுடன் மோதுவது நல்லதா, இல்லை பேசிப் பெறுவது நல்லதா என்று ஆராய்ந்து பார்த்து, பேசி, வாதாடிப் பெறுவதன் மூலம் தான் பலன் ஏற்படும் என்கிற அடிப்படையில் தான், இன்றைய தினம் மேற்கு வங்க அரசு அத்தகைய ஒரு அணுகுமுறையை மேற்கொண்டிருக்கிறது. அதுபோல் நாமும் மத்திய அரசுடன் வாதாடி, மத்திய அரசை வற்புறுத்தி, மேலும் மேலும் எடுத்துச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் போன்றவர்களுடைய முழு ஒத்துழைப்பையும் பெற்று, பெற வேண்டியதைப் பெறுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : உறுப்பினருக்கு ஒதுக்கிய நேரம் முடிந்து விட்டது. சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. ஆ. நல்லசிவன் : நான் எப்போதுமே மத்திய அரசுடன் மாநில அரசு மோதிக்கொண்டே இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. பேசியே பெற முயல வேண்டும் அப்படிப் பேசி பெற இயலவில்லையென்றால், மோதியாவது எவ்வளவு பெற முடியுமோ அவ்வளவையும் பெற வேண்டும். எப்படியாவது நமது கோரிக்கைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டால், சரி அந்த வகையில் நம்முடைய தமிழ் நாட்டு மக்களுடைய நலன் பேணப்பட்டால், அது போதும். எப்போதுமே அத்தகைய ஒரு கண்ணோட்டத்தில் தான் நம்முடைய அரசு இருக்க வேண்டும். ஆனால் நான் இங்கே சொல்ல வருவது என்னவென்றால், இங்கேயுள்ள ஆளும் கட்சி மத்தியிலுள்ள ஆளும் கட்சியுடன்

பேரம் பேசியிருக்கிறது. பிரதமர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவிக்கும்போது, அது நமக்கு மாறுபட்ட கருத்தாக இருக்கிறதென்றால், உடனே ஏன் நமது அரசின் சார்பாக நமது கருத்துக்களை தைரியமாக எடுத்துச் சொல்லக் கூடாது? நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது நிதியமைச்சர் என்கிற முறையில் பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசுகிறார்கள். அரசின் சார்பிலேயோ, கட்சியின் சார்பிலேயோ பேரம் ஒன்றும் நடத்தவில்லை என்று இங்கே தெரிவிக்கிறார்கள். எனக்கு இருக்கிற வருத்தமெல்லாம் இங்கே இருக்கிற ஆளும் கட்சியின் சார்பாக அப்படி பேரம் ஒன்றும் நடைபெறவில்லை என்று அறிக்கை ஒன்றை வெளியிடுவதுதானே? அதை ஏன் இதுவரை செய்யவில்லை? அந்த அறிக்கை இனிமேலாவது ஆளும் கட்சியின் சார்பாக வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கிறேன். வறட்சியைச் சமாளிக்க, மத்திய அரசுக்கு நினைவுபடுத்த எப்ரல் 4 ஆம் தேதி இங்குள்ள ஆளும் கட்சி ஒரு கன்பிரான்டேஷன் நடத்தியபோது, அதற்குச் சொன்ன காரணம் என்ன என்பதை இங்கே நாம் கவனிக்க வேண்டும். அதுபோல் நெய்வேலியிலுள்ள தண்ணீரை ஒரு காலத்தில் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டபோது, அதற்குப் பணம் தர வேண்டுமென்று கேட்டதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த விவகாரத்தை ஏன் உடனேயே மக்கள் முன்பு சொல்லவில்லை? யாருக்கும் இதுபற்றி அப்போது தெரியாதே? இந்தக் காலகட்டத்திலாவது, தண்ணீர் கிடைக்காத இந்த நிலைமையிலாவது இதுபற்றி அரசு மக்களிடத்தில் சொல்லவில்லையென்றால் கூட, ஆளும் கட்சியாவது இப்படி இப்படி மத்திய அரசிலே இருப்பவர்கள் இந்த மாநில அரசு கேட்டதற்குப் பிறகும் மறுக்கிறார்கள் என்கிற விவரத்தைச் சொல்லக் கூடாதா? இம்மாதிரி விஷயங்களை கட்டாயம் தமிழ் நாட்டிலுள்ள மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். தமிழக அரசைப் பொறுத்தவரையில், இம்மாதிரி விஷயங்களை மக்களுக்குத் தெரியப்படுத்தாமல், மூடு மந்திரமாக வைக்கக் கூடாது. மத்திய அரசு நம்மை வஞ்சிக்கிறது என்பது மக்களுக்கு எப்படித் தெரிய வரும்? இதை இங்கே தைரியமாக தெரியப்படுத்தினால் தான், மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி போன்றவர்களுக்குத் தெரிய வரும். அவர்களும் நமக்காக வாதாடுவார்கள்.

அடுத்து, நுழைவு வரி பற்றி இங்கே ஏற்கெனவே நாங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறோம். நுழைவு வரி என்கிற பெயரிலே 20 கோடி ரூபாய்க்கு வரியை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விற்பனை வரியின் மூலம் ஏறத்தாழ 100 கோடி ரூபாயை கூடுதலாக எப்படியெல்லாம் வசூலிக்க இருக்கிறார்கள் என்கிற விவரத்தை ஏற்கெனவேயே சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது இந்த 20

கோடி ரூபாய்க்கு நுழைவு வரி என்பது தேவையா? இப்படி நான் சொன்னவுடனே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மேற்கு வங்கத்தை உதாரணத்திற்குச் சொல்வார்கள். அங்கே ஏற்கெனவே இருந்த ஒன்றைத்தான் இப்போது மாற்றியிருக்கிறார்கள். ஆனால் இங்கே அப்படி அல்ல. புதிதாக நுழைவு வரி என்கிற பெயரில் போடப்பட்டிருக்கிறது. இந்த வரி எல்லாத் தரப்பு மக்களையும் நிச்சயம் பாதிக்கப் போகிறது. வியாபாரிகளும் தங்களை இந்த வரி பாதிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்த வரி விதிப்பை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கைவிட்டு விடுவார்கள் என்று அன்றைக்கு நாங்கள் எல்லோரும் எதிர்ப்பு தெரிவித்தபோதே நம்பிக்கொண்டிருந்தோம். அன்றைக்கு அவர்கள் இதைப்பற்றி பரிசீலிக்கிறேன் என்று சொன்ன காரணத்தால், அப்படித்தான் நாங்கள் எல்லாம் நம்பிக்கொண்டிருந்தோம். ஆனால் நேற்றைய தினம் அவர்கள் பேரவையிலே இதனை அறிமுகப்படுத்திப் பேசியிருப்பதைப் பார்க்கும்போது, அவர்கள் இதனைக் கைவிடவில்லை என்பதைத் தெரிந்துகொண்டேன். இந்த வரியை விதித்தால், அனைத்துத் தரப்பு மக்களுடைய எதிர்ப்பையும் எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, குறிப்பாக ஒன்றிரண்டு பிரச்சினைகளைப் பற்றி மட்டும் சொல்லி, என் உரையை முடித்துக் கொள்கிறேன். காரைக்குடியில் அழகப்ப செட்டியார் கல்லூரி இருக்கிறது. அதில் இருக்கிற பிரின்சிபால் அங்குள்ள கோவாப்பரேட்டிவ் சொசைட்டியில் கடந்த 5 வருடங்களாக எக்ஸ்-அபிசியோ பிரசிடென்ட் ஆக இருக்கிறார். அவரைப்பற்றி ஒரு புகார் இருக்கிறது. அவரைப் பற்றி மாநில கோவாப்பரேட்டிவ் ரெஜிஸ்ட்ராருக்கு ஏற்கெனவே தெரிவித்தும் கூட, இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. 1975 ஆம் ஆண்டு அவர் அந்தக் கல்லூரிக்கு பிரின்சிபாலாக வந்ததிலிருந்து அங்குள்ள ஸ்டுடென்ட்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டியினுடைய எக்ஸ்-அபிசியோ தலைவராக இருக்கிறார். இதுவரை ஒரு கூட்டத்தைக் கூட அவர் கூட்டவில்லை. இதுவரை ஒரு தடவை கூட அந்த சொசைட்டி பற்றிய ரிப்போர்ட்டை யாருக்கும் கொடுக்கவில்லை. அங்கே இருக்கின்ற போர்டு உறுப்பினர்கள் சொல்வதைக்கூட அவர் கேட்பதில்லை. அவராகவே தீர்மானத்தைக் கொண்டுவந்து, அதை நிறைவேற்றிவிட்டதாக 'சர்க்குலேஷன்' மூலம் தெரிவிக்கிறார். ரெகுலராக அந்த சொசைட்டி கணக்குகளை 'ஆடிட்' பண்ணுவதில்லை. அவர் பேரில் 3 ஆயிரம் ரூபாய்க்கு மேல் 'ஓவர் டியூ' பாக்கி இருக்கிறது. ஒரு ஆசிரியர் பெயருக்கு அவர் கடன் கொடுத்திருக்கிறார். அதோடுகூட வெளி ஆட்களுக்குக் கடன் கொடுத்திருக்கிறார்.

கடன் பாக்கிகளையெல்லாம் வசூல் பண்ண வேண்டியிருக்கிறது. அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபற்றி விவரமாக ரெஜிஸ்ட்ரார் அவர்களுக்குத் தெரிவித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதே பிரின்சிபால் 1967 ஆம் ஆண்டு பூண்டி புஷ்பம் கல்லூரியிலே பிரின்சிபாலாக இருந்தார். அப்போதும் அங்கு இருந்த கோஆப்பரேட்டிவ் சொசைட்டியில் எக்ஸ்-அபிசியோ பிரசிடெண்ட் ஆக இருந்தார். அந்த சமயத்தில் இவர் "சொசைட்டி கணக்கு பூராவும் தீ பிடித்து எரிந்து போய்விட்டது" என்கிற ஒரு நிலையை ஏற்படுத்தியிருந்தார். இவரைப்பற்றி ஏற்கெனவே மாநில கோஆப்பரேட்டிவ் ரெஜிஸ்ட்ராருக்கு கம்ப்ளைண்ட் பண்ணியும் இதுவரை நடவடிக்கை எடுக்காததால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு இந்த பிரச்சினையைக் கொண்டுவந்து இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** மாற்றுத் தலைவர் அவர்களே, 1974-75 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். 2,400 கோடியே 40 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாயை இந்தத் தொடர் கூட்டம் முடிவடைகின்ற நேரத்திலே நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்திலே ஒப்படைக்கின்ற கடைசி சடங்காக இன்றைய தினம் நிகழ்ச்சிகள் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே இது குறித்து சிலவற்றைக் கூறுகின்ற வாய்ப்பினை எனக்கு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக பல்வேறு துறைகள் மீதும், பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கின்றார்கள் என்றாலும்கூட, குறிப்பிட்ட இந்த நேரத்தில் நான் ஒன்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாகிற (Rectified Spirit) ரெக்டிபைட் ஸ்பிரிட்டைப் பொறுத்தவரையில், நம்முடைய மாநில அரசு பல்வேறு தரப்பட்ட விலைகளை இதற்கு வைத்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாகின்ற இந்தப் பொருளை மற்ற மாநிலங்களுக்கு நாம் எந்த விலைக்கு விற்கிறோமோ அதை விட அதிக விலைக்கு நம்முடைய மாநிலத்தில் விற்கப்படுகின்ற ஒரு நிலையைப் பார்க்கிறேன். 'ரெக்டிபைட் ஸ்பிரிட்' வெவ்வேறு (Grade) கிரேடில் இருக்கிறது என்கிற அடிப்படையில், எந்தெந்தத் தொழில்களுக்கு இது தேவைப்படுகிறதோ அந்தத் தொழில்களின் தன்மைகளுக்கு ஏற்ப இதனுடைய விலையையும் அரசு நிர்ணயித்திருக்கிறது. ஆனால் அந்தப் பொருளை மூலப் பொருளாக வைத்து நம்முடைய தொழிற்சாலைகளில் அதைப் பயன்படுத்துகிறபோது, கையாள்கிற

போது அதற்கு ஒரு விலையையும் வேறு மாநிலத்திற்கு அதை அனுப்புகிறபோது இன்னொரு விலையையும் நிர்ணயித்திருக்கிறோம். எந்தத் தொழிலுக்கு இந்த மூலப் பொருள் அத்தியாவசியமாகத் தேவைப்பட்டு, தமிழ் நாட்டில் அதன் காரணமாக தொழிற்சாலைகள் இயங்குகின்றனவோ அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் அதிக விலையைக் கட்டாயமாகக் கொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலையும் அதே சமயத்தில் அதே மூலப் பொருளை அடிப்படையாக வைத்து, வேறு மாநிலங்களில் இயங்குகின்ற தொழிற்சாலைகள், குறைவான விலை கொடுத்து வாங்குகின்ற சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இதன் விளைவாக இந்தப் மூலப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியாகிற பொருள்கள் தமிழகத்திலுள்ள தொழிற்சாலைகளிலிருந்து மார்க்கெட்டுக்கு வருகிற நேரத்திலே பெருமளவுக்கு சங்கடங்களுக்கு ஆளாகின்றன. அல்லது நஷ்டத்தை அடைகின்றன. மற்ற மாநிலங்களிலுள்ள தொழிற்சாலைகளிலிருந்து உற்பத்தியாகின்ற பொருள்களோடு தமிழ் நாட்டினுடைய தொழிற்சாலைகளிலிருந்து உற்பத்தியாகின்ற பொருள்கள் போட்டியிட முடியாத நிலை அல்லது மார்க்கெட்டில் நல்ல விலைக்கு விற்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனுடைய விலையைப் பொறுத்தமட்டிலும் அரசு ஒரு தெளிவான நிலையை எடுக்க வேண்டும். இதில் யாருக்கும் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையில், குழப்பத்துக்கு இடமில்லாத வகையில் ஒரு முடிவினை எடுக்க வேண்டும். சென்ற இரண்டு, மூன்று ஆண்டுகளாகவே தமிழ் நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் இதன் விளைவாக பாதிக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, இந்த மேலவையினுடைய பிரதிநிதியாக பொதுக் கணக்குக் குழுவிலே அங்கம் வகிப்பவன் என்கிற உரிமையிலே ஒன்றைச் சொல்கிறேன். (Steel Rolling mills) ஸ்டீல் ரோலிங் மில்சைப் பொறுத்தவரையில், பொதுக் கணக்குக் குழுவினுடைய அறிக்கை வந்திருக்கிறது. அதிலுள்ள விவரங்களுக்கு உள்ளே நான் போக விரும்பவில்லை. ஆனால் பொதுக் கணக்குக் குழுவினுடைய பரிசீலனைக்கு என்று வருகின்றபோது, அரசுத் தரப்பிலேயிருந்து சில ரெக்கார்டுகளைக் கேட்டால், தரமாட்டேன் என்று ஒரு இலாகா சொல்கிறது என்றால், அவர்கள் அதிலே முறைகேடுகளைச் செய்திருக்கிறார்கள் என்கிற வலுவான சந்தேகத்தை நாட்டு மக்களிடம் விதைக்கிறார்கள் என்றுதான் அர்த்தம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12-00)

அப்படித் தவறுகிறபோது, அந்தத் துறை தவறு செய்ததாக வராது; அரசு தான் தவறு செய்ததாக வரும். இரண்டாவதாக இத்தகைய நிலைகளை வரையறுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. பொதுக் கணக்குக் குழு அரசாங்கத்தின் உயர் மட்டக் குழு. இந்தக் குழுவினர் யாரையும் எந்த நேரத்திலும் எந்த விளக்கத்தையும் கேட்கலாம். ஆனால் அந்தக் குழு அது கூட பார்க்க முடியாத அளவுக்கு சில இடங்களில் ரகசியங்கள் பொதிந்து கிடக்கின்றன என்று தெரிகிறது. இப்படி தரமாட்டோம் என்று சொல்கிற நிலை இருந்தால், கணக்கு வழக்குகளில் இருக்கிற பலவீனம், இதைவிட வேறு எதுவும் இருக்க முடியாது. இதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நேரடியாக பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களை நம்பித் தான் இவ்வளவு பணம் கொடுக்கிறோம். அந்தப் பணத்தைச் செலவிட்டு விட்டு, அப்படி ஏதேனும் சர்ச்சை வருகிறபோது, சர்ச்சைக்குரிய சங்கடங்கள் வருகிறபோது, பொதுக் கணக்குக் குழு கேட்ட பிறகும், அதை அனுப்ப முடியாது, அனுப்ப மாட்டோம் என்று சொல்கிற நிலைமை வந்தால், நாங்கள் அவர்களை நம்பி கொடுத்த பணத்திற்கு கணக்கு எங்கே? அதிலே பல, வெளியே வரமுடியாத ரகசியங்கள் புதைந்து கிடக்கின்றன என்று சொல்கிற போது, இதில் அதிகாரிகளைச் சந்தேகப்படுவதா, ஆட்சியைச் சந்தேகப் படுவதா என்ற நிலை இருக்கிறது. இந்த நிலை தெளிவாவதற்கு இனிமேலாவது அரசு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவுக்கு என்று விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் பொதுக் கணக்குக் குழு அரசின் எந்தத் துறையிலும் எந்த வினாவையும் எழுப்பி, மற்றவர்கள் கொடுக்கவில்லை என்று சொன்னால், விதி இருந்தும் ஏன் கொடுக்கவில்லை என்றும் கேட்கலாம். அப்படி விதி முறைகளுக்கு மாறாக நடந்திருந்து, அதை கவனத்திற்குக் கொண்டு வந்தால், விதி முறைகளை நடைமுறைப்படுத்த அரசு முயற்சிகள் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. க. இராமமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், உரிமையோடும் பொறுப்போடும் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அந்தக் குழுவில் செயலாற்றியவன் என்ற அடிப்படையிலும் ஒன்று எனக்குத் தெரியும்.

எந்த விதியின் அடிப்படையில் இதைக் கொடுக்க முடியாது என்று அவர்கள் சொல்லவில்லை. இரண்டாவதாக, சான்றிதழ்கள், ரெக்கார்டுகள் இதற்குத் தான் தேவை என்று கேட்கவில்லை. பொதுக் கணக்குக் குழு எழுப்புகின்ற பிரச்சினையின் அடிப்படையில் அந்த விவரங்கள் தேவைப்பட்டன. அதனால் தான் அந்த ரிக்கார்டுகள் கேட்கப்பட்டன. இந்தப் பிரச்சினைக்கு அப்பாற் பட்டதாகவே நாங்கள் கொடுக்க மறுக்கிறோம் என்றால், அதைப் பரிசிலித்திருக்கலாம். அது வரவில்லை. அல்லது விதிகளின்படி ரிக்கார்டுகளை பொதுக் கணக்குக் குழு கேட்க முடியாது என்று சொல்லியிருந்தாலும், பரவாயில்லை. இந்த விதிகளையெல்லாம் தெரிந்த சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. அழகிரிசாமி அவர்கள் கூட பொறுப்பில் இருந்து எழுதுகிறார். ஆளும் கட்சியினர் அதிக அளவில் இருப்பதால், அவர்களும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கூட இந்தக் கருத்தில் மாறுபடவில்லை. அதற்குப் பிறகு இந்த நிலை ஏற்பட்டதால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதைப் பரிசிலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நெய்வேலியிலிருந்து தண்ணீர் வருகிற பிரச்சினை வந்தது. உள்ளே அதிகமாகப் போக விரும்பவில்லை. அதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. சில பிரச்சினைகள் உருவாகிறபோதுதான் அதில் தெளிவான முடிவைக் காண முடியும். திரு. நல்லசிவன் அவர்கள் "திண்டுக்கல் வறண்டு கிடக்கிறது. ரயிலிலாவது தண்ணீரைக் கொண்டுவந்து கொடுக்கக் கூடாதா?" என்று கேட்டார். திண்டிவனம் என்ன பாவம் செய்தது? தண்ணீருக்கு ஆலாய்ப் பறக்கிறோம். எவ்வளவோ முயற்சி செய்கிறோம், திண்டிவனத்தைச் சுற்றி யிருக்கிற இடங்களுக்குத் தண்ணீர் வரவில்லை என்று அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் கூட சொன்னார். கண்ணுக்கு எதிரே தண்ணீருக்கு நாங்கள் ஆலாய்ப் பறக்கிறோம். எங்களுக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுத்தால் என்ன? என்னதான் திரு. நல்லசிவன் அவர்கள் எங்களுக்குள் சண்டை மூட்டிவிட்டாலும், அதற்காக திண்டுக்கல்லுக்குத் தண்ணீர் போக வேண்டுமா? திண்டிவனத்தைக் கொஞ்சம் பார்க்கக் கூடாதா? அதற்காக திண்டுக்கல்லுக்குப் போகக்கூடாது என்று சொல்லவில்லை திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் சென்ற ஆண்டு இங்கே பேசுகிறபோது கூட சொன்னார்கள். நெய்வேலியில் தண்ணீர் அதிகம் கிடைக்கிறது என்று. நெய்வேலியைச் சுற்றியிருக்கிற பகுதிகள் தண்ணீருக்கு அவதிப்படுகின்றன என்று சென்ற ஆண்டே சொன்னார். 10, 15 மைல் வட்டாரத்திற்கு அந்தத் தண்ணீரைக் கொடுக்கலாம் என்று சென்ற ஆண்டு சொன்னார். அதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று நான் கேட்க விரும்பவில்லை. திண்டுக்கல்

(திரு. க. இராமமூர்த்தி) [1983 எப்ரல் 22

அவ்வளவு தூரத்திற்குக் கொண்டு போகக் கூடிய தண்ணீரை, பக்கத்தில் இருக்கிற திண்டிவனத்திற்குக் கொடுக்கக்கூடாதா? ஆகவே அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளதுடன், திட்டமிட்டு இந்தப் பகுதியை அரசு புறக்கணிக்கிறது என்று சொல்வது அவ்வளவு நல்லதல்ல. அவர்களும் உங்களுக்கு ஓட்டுப் போட்டவர்கள்தான். அதோடு மட்டுமல்ல. உங்களுக்குத் தெரியாத பகுதியல்ல வறட்சிப் பகுதிகளைக் கணிப்பதில் அரசு பாரபட்சம் காட்டக்கூடாது. அல்லது மெத்தனமாக அதிகாரிகள், எப்படி வேண்டுமானாலும் செயல்படலாம் என்னும் நிலையை நாம் உருவாக்கிவிடக் கூடாது. திண்டிவனத்திற்குத் தண்ணீர் அனுப்பாமல் இருந்தால்தான், அமைச்சருக்குத் திருப்தியாக இருக்கும் என்று அதிகாரிகள் நினைக்கக் கூடாது. அதற்கு எல்லையே இல்லாமல் போய்விடும். ஆகவே நெய்வேலி தண்ணீரை, திண்டிவனம், செஞ்சி போன்ற வறண்ட பகுதிகளுக்கு உடனடியாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது என் கடமை.

சென்ற ஆண்டு இந்த அவையில் ஒரு உறுதிமொழி கொடுக்கப்பட்டது. அதிலே, போக்குவரத்துக் கழகங்கள் பற்றி சொன்னது நிறைவேற்றப்படவில்லை. அங்கு பணி புரிபவர்களுக்கு மாற்று உடை தருவதுபற்றி உறுதிமொழி கொடுக்கப்பட்டது. அது இன்று வரை நிறைவேறவே இல்லை. Certain agreement, certain assurances நிறைவேற்றப்படவில்லை என்றால், அதற்கு என்ன மரியாதை? இப்படித்தான் கண்டக்டர், டிரைவர்களுக்கு இலவச பாஸ் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்த பாசைப் பயன்படுத்தவே முடியாத நிலையில் அங்கே சட்டங்கள், விதிகள் போடப்பட்டிருக்கின்றன. பயன்படுத்த முடியாத அளவில் விதிகளைப் போட்டுவிட்டு, அதன் பிறகு சலுகைகள் கொடுக்கிறேன் என்பது நியாயம் அல்ல. It should be whole hearted. If you cannot do, you may say that you are not doing it. சலுகை கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு பயன்படுத்த முடியாத நிலை இருப்பது ஆட்சியின் மீது மட்டுமல்ல, நிர்வாகத்தின் மீதும் கசப்பு உண்டாக்கும் நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இந்த அரசு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையைத் தீர்த்திருக்கிறது. கிருஷ்ணா நதி நீரை தமிழகத்திற்குக் கொண்டுவரும் பெரும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றிகரமாக முடித்ததற்கு, மாண்புமிகு முதலமைச்சருக்கும் இந்த அரசுக்கும் என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கவும், பாராட்டவும் கடமைப்பட்டுள்ளேன் அதிலே No. Reservations.

1983 எப்ரல் 22] (திரு. க. இராமமூர்த்தி)

இதிலே எவ்வளவு செலவாகும் என்பதைப் பற்றிக்கூட கவலைப்படவில்லை. குடி தண்ணீரைப் பொறுத்தவரையில், பணம் என்பது விலை அல்ல. ஆகவே இதைச் சிறப்பாகச் செய்து முடித்ததற்காக பாராட்டுகிறேன். வழியில் நீர்ப்பாசனம் போன்ற பல சங்கடங்கள் இருக்கலாம். இருந்தாலும் அதையெல்லாம் தாண்டி இந்தப் பிரச்சினையை அணுகி அது தீர்க்கப்பட்டிருக்கிறது. இது கிட்டத்தட்ட 50 ஆண்டுக் காலத்திற்கு மேலும் சென்னையின் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்த்து வைக்கும் என்று நம்புகிறேன். ஆனால் இது வேகமாகச் செயல்பட வேண்டும். அதற்கான நடவடிக்கையில் அரசு ஈடுபட வேண்டும். அது மட்டுமல்ல. சென்னை நகரம் வளர்ந்து வருகிற நகரம். தாம்பரம் கூட சென்னையைத் தாண்டி இருக்கிறது என்று சொல்ல முடியாது. சென்னை வளர்ந்து வருகிறது. அதனால் கூடுதலான தண்ணீர் கொண்டுவர முயற்சி எடுக்க வேண்டும். இப்போது அதற்கு அவகாசம் இருப்பதால், கோபதாபத்தை மறந்துவிட்டு, மீண்டும் வீராணம் பிரச்சினையைப் பரிசீலிக்க வேண்டும். அப்படி கொண்டு வந்தால், மழை இருந்தாலும் இல்லாவிட்டாலும், வான் பொய்த்தாலும் பொய்க்கா விட்டாலும், வீராணம் தண்ணீரைக் கொண்டு வரும் வழியில் உள்ள கிராமங்கள், நகரங்கள் தண்ணீர் பெறும் வகையிலும், சென்னையின் குடி-நீர்ப் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்படும் என்ற வகையிலும் வீராணம் திட்டத்தைப் பரிசீலித்து அதற்கு முடிவு காண்பது நல்லது என்று நினைக்கிறேன்.

(பிற்பகல் 12-10)

எனவே வீராணம் திட்டத்தைப் பொறுத்தவரையில் மீண்டும் நிதானத்தோடு பரிசீலிக்க வேண்டிய அவசியமும் அவசரமும் இன்றைய தினம் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இறுதியாக, நான் மொழிப் பிரச்சினையைப்பற்றிப் பேச விரும்பவில்லை என்றாலும், அது தொடர்பான ஒன்றை மட்டும் சொல்லி முடிக்க விரும்புகிறேன். இருமொழிக் கொள்கை என்பது ஆட்சியாளர்களின் திட்டம், மும்மொழிக் கொள்கை என்பது எங்கள் கட்சியின் திட்டம். ஆட்சியில் இருக்கிற காரணத்தால், நீங்கள் உங்கள் கொள்கையை அமுல் படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். அதைத் தவறு என்றுகூட நான் சொல்லவில்லை. ஆனால் அண்ணா அவர்கள் ஒன்றை வெகு தெளிவாகக் குறிப்பிட்டார்கள். அதாவது ஆங்கிலம் இந்தியாவின் 'லிங்க் லேங்குவேஜ்' ஆக இருப்பதால், அதற்கு என்றைக்கும் முக்கியத்துவம் இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கு என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். பகாம் படைத்தவர்களும், வாய்ப்பு

படைத்தவர்களும், எதிர்காலத்தைப் பற்றி நல்ல முறையில் சிந்திக்கக்கூடிய திறன் பெற்றவர்களும் தங்களுடைய பிள்ளைகளையெல்லாம் ஆங்கிலத்தில் நல்ல முறையில் தயார் செய்கிறார்கள். (Link Language) 'லிங்க் லேங்குவேஜ்' ஆன ஆங்கிலத்தில் அவர்களின் பிள்ளைகளை நல்ல முறையில் பயிற்சி பெறச் செய்கிறார்கள். ஆனால் பணமில்லாதவர்களும், வாய்ப்பு வசதி இல்லாதவர்களும், என்னைப் போன்ற விவரம் அறியாதவர்களும் தங்களுடைய பிள்ளைகளையெல்லாம் கார்ப்பரேஷன் அல்லது முனிசிபல் பள்ளிகளுக்கு அனுப்பி இங்கிலீஷ் மீடியம் இல்லாத நிலைமையில் தமிழ் மொழியில் படிக்கச் சொல்கிறார்கள். உங்கள் கொள்கையில் நீங்கள் தெளிவாக இருக்க வேண்டாமா? தமிழகத்தில் தமிழ் மொழிதான் பயிற்சி மொழியாக இருக்க வேண்டுமென்றால், அதற்கு முன்மாதிரியாக, வழிகாட்டிகளாக நீங்கள் அல்லவா உங்களுடைய வீட்டுப் பிள்ளைகளைத் தமிழ் மொழியில் பயிற்றுவிக்கும் பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டும். பின்தங்கியவர்களையெல்லாம் தமிழ் மொழியில் படிக்கச் சொல்லிவிட்டு, உங்கள் வீட்டுப் பிள்ளைகளை மட்டும் ஆங்கிலத்தில் படிக்கச் சொல்வது என்பது எந்த வகையில் நியாயம் என்றுதான் கேட்கிறேன். இதைத்தானே அண்ணா அவர்கள் சொன்னார்கள். இதற்காகத் தானே 5 ஆண்டுகள் அவகாசம் கொடுத்தார்கள். 5 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்தான் அனைவருக்கும் பயிற்சி மொழி என்றுதானே அறிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் வர்க்கப் போராட்டத்திற்கு என்றால் வருவார். ஆனால் இதைப் போன்ற பிரச்சினைகளுக்கு வர மாட்டார் என்பது எனக்குத் தெரியும். என்னைப் பொறுத்தவரையில், வாய்ப்பும் வசதியும் உள்ளவர்கள், விபரம் தெரிந்தவர்கள், படித்தவர்கள் என்பவர்கள் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாம் என்றும், விவரம் தெரியாதவர்கள் கஷ்டப்பட வேண்டும் என்றும் விடுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கொள்கையில் நீங்கள் ஒரு தெளிவான நிலையை மேற்கொள்ள வேண்டும். தமிழில்தான் பயிற்சி அளிக்கப் பட வேண்டும் என்றால், மாணவர்கள் தமிழில்தான் கல்வி கற்க வேண்டுமென் றால், அதற்கான வழிவகைகளைச் செய்யுங்கள். முதலில் நீங்கள் அதற்கு முன்னுதாரணமாக நடந்து கொள்ளுங்கள். ஒரு வழிகாட்டியாக நடந்து கொள்ள முன்வாருங்கள். முதலில் உங்கள் வீட்டுப் பிள்ளைகளின் காலை ஒடித்து தமிழ் மீடியம் பள்ளிகளில் படிக்கச் சொல்லுங்கள். அதைச் செய்யா மல் எங்கள் வீட்டுப் பிள்ளைகளை எல்லாம் காலை ஒடித்து, தமிழ் மீடியம் வகுப்பில் படிக்கச் சொல்லிவிட்டு உங்கள் வீட்டுப் பிள்ளைகளை எல்லாம் இங்கிலீஷ் மீடியம் வகுப்புக்கு அனுப்பாதீர்கள். இது உங்களுக்கு நல்லதல்ல,

நாட்டுக்கும் நல்லதல்ல, அண்ணாவின் கொள்கைக்கும் நல்லதல்ல என்று சொல்லி, இந்த வகையில் உங்களின் போக்கை மறுபரிசீலனை செய்யுங்கள் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ரூபாய் இரண்டாயிரத்து நானூற்று தொண்ணூறு கோடியே நாற்பது இலட்சத்து, அறுபத்தி மூவாயிரத்திற்கான அனுமதியைக் கோரும் சட்ட முன்வடிவை இங்கே வைத்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், மாண்புமிகு நாவலர் அவர்கள் ரூ. 5,000 கோடி அளவுக்கு அனுமதி கேட்டால்கூட, தாராளமாகக் கொடுக்கலாம் என்று சொல்லு கிற நிலையில்தான் இருக்கிறேன். ஆனால் அவருக்கே தெரியாமல் அரசாங்கத் தில் எவ்வளவோ விவகாரங்கள் நடக்கின்றன, அவருடைய கவனத்திற்கு வரா மலேயே பல துறைகளில் பல தவறுகள் நடக்கின்றன என்னும்போதும், மாண்பு மிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், அவருடைய நிதி இலாக்காவுக்கும் தெரியா மலேயே ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படாமல் இருப்பதையும் அல்லது தவறான முறையில் செலவாவதுமான நடைமுறைகள் இருப்பதையும் பார்க்கும் போதும், எதற்காக ஆண்டுதோறும் இப்படிப்பட்ட சம்பிரதாயமான முறையில் இந்த மன்றத்தில் அனுமதி கோரி வர வேண்டும் என்பது எனக்குப் புரிய வில்லை.

இதை நான் சொல்லுவதால், ஏதோ நிதித் துறையே செயல்படாமல் இருப்ப தாகவோ மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சரியாகச் செயல்படாமல் இருப்ப தாகவோ யாரும் கருதக்கூடாது. இங்கே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அதைப் போலவே நிதித் துறையும் இருக்கிறது. ஆனால் இவர்கள் இருவருக்கும் தெரியாமல் நாட்டில் எவ்வளவோ அநியாயங்கள் நடக் கின்றன என்பதை எண்ணிப் பார்க்கும்போது, அவைகளை இப்படிப்பட்ட நேரத்தில் சுட்டிக்காட்டுவதன் மூலமே மாண்புமிகு நாவலர் அவர்களும் அவரு டைய இலாக்காவும் தவறு செய்பவர்களைத் தட்டிக் கேட்க ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதாலேயே அந்த அடிப்படையில் ஒரு சில கருத்துக்களை இங்கே எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1983 ஏப்ரல் 22

இன்றையதினம் திட்டங்களுக்காக என்று ஒதுக்கப்படும் பணம் முறையாக செலவழிக்கப்படுவதில்லை. உதாரணமாக கிராமப்புறத்தில் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற வகையில் மத்திய அரசு நமக்குக் கொடுத்த பணம் சுமார் ரூபாய் 10 கோடியே 75 லட்சமாகும். 1980 ஆம் ஆண்டு மத்திய அரசு நமக்கு இந்தத் தொகையைக் கொடுத்தது. ஆனால் அந்தத் தொகை முழுவதையும் நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளோமா என்றால் இல்லை. ரூ. 6 கோடியே 29 லட்சம் அளவுக்கு மட்டும் பயன்படுத்திக் கொண்டு, ஏறத்தாழ 4 கோடி ரூபாய் அளவுக்குத் திருப்பிக் கொடுக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு பக்கம் மத்திய அரசு நமக்கு நிதி உதவி. செய்வதில்லை என்று குறை சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இன்னொரு பக்கத்திலே கொடுத்த பணத்தையும் செலவழிக்காமல் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி திருப்பிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்படி ஒதுக்கப்பட்ட பணம் எந்தக் காரியத்திற்காக ஒதுக்கப்பட்டதோ அதற்காகச் செலவழிக்கப்படாத நிலைமையும், சில நேரங்களில் திட்டமே நிறைவேற்றப்படாமல் இருக்கிற நிலைமையும் இருக்கின்றன என்பதைப் பல்வேறு ஆதாரங்களோடு இங்கே தான் சுட்டிக்காட்ட முடியும்.

மேலவையில் காம்ப்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரலின் அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதில் 1979-80 ஆம் ஆண்டுக்குப் பிறகு எந்தெந்த இலாக்காக்களில் எப்படிப்பட்ட தவறுகள், எப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்கிற விவரமெல்லாம் விளக்கமாகச் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதைக் காட்டிலும், வேறு யாரும் அதிகமான குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட முடியாது. இந்த அரசாங்கம் முறையாக இயங்கவில்லை என்பதற்கு இதைவிட பெரிய ஆதாரங்களை நாம் தேடிப் போக வேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சென்னை நகரில் ஏறத்தாழ 35 ஆண்டுகளாகக் குடியிருக்கிறார்கள். பொதுவாக இங்கே இருக்கிற சாலைகள் பழுதடைந்தால், அவற்றைப் பழுது பார்க்கும் வகையில் தார் பூசி, செப்பனிடுவார்கள். ஆனால் இப்போது நடைமுறையில் இருக்கும் ஒரு முறையை யார் கண்டுபிடித்தார்களோ எனக்குத் தெரியவில்லை. சென்னை நகரில் இப்போது புதுவிதமான முறையில் சாலைகள் பழுது பார்க்கப்படுகின்றன. முதலில் ஏற்கெனவே இருக்கிற தார் முழுவதையும் பெயர்த்து எடுக்கிறார்கள். அதற்கு என்று ஒரு 'ரேட்' கொடுக்கிறார்கள். பிறகு பெயர்த்தெடுத்த தாரை வெளியே கொண்டு போய் கொட்டுவதற்கு ஒரு ரேட் கொடுக்கிறார்கள். பிறகு புதிதாக ஜல்லி போட்டு தார் போடுவதற்கு ஒரு ரேட் கொடுக்கிறார்கள்.

1983 ஏப்ரல் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்படி 100 சதுர அடி ரோடு போடுவதற்கு இதற்கு முன்பு ரூ. 200 செலவழித்தோம் என்றால் இப்போது ரூ. 400 செலவழிக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படி ஒன்றுக்கு இரண்டு மடங்காகத் தமிழக மக்களின் வரிப் பணம் இங்கே விரையமாகிக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் நிதி இலாக்கா கவனிக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. எனவே கடந்த ஆண்டுவரை நாம் எப்படிப்பட்ட கொள்கையைக் கடைப்பிடித்து வந்தோமோ அந்தக் கொள்கையை மீண்டும் பின்பற்றினால், தற்போது 200 கிலோ மீட்டர் சாலை போடக்கூடிய தொகையைக் கொண்டு 400 கிலோ மீட்டர் சாலையை அமைக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாநகராட்சியின் பணம் இந்த அளவுக்கு விரையமாகிக் கொண்டிருக்கிறது.

அடுத்து, அஞ்சல்வழி வேளாண்மைப் பயிற்சித் திட்டம் என்பது உலக வங்கியின் நிதியுதவியோடு கிராமப்புறத்தில் விளைச்சலைப் பெருக்குவதற்காக உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குத் தெரியும். மாநிலத்தில் ஏராளமான கிராமப் பகுதிகளுக்குச் சுற்றுப்பயணம் செய்கிற வாய்ப்பைப் பெற்றவர் அவர். மூலைக்கு மூலை சாலையோரங்களில் இதற்கான விளம்பரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எந்த ஒரு கிராமத்திலாவது சென்று, இது என்ன திட்டம், இதில் யார் பயிற்சி அளிக்கிறார்கள், யார் பயிற்சி பெறுகிறார்கள் என்று கேட்டால், ஒருவருக்கும் தெரியவில்லை. அதிகாரிகளுக்கேகூட இது சரியாகத் தெரியவில்லை. ஏற்கெனவே பி.டி.ஓக்கள் அலுவலகத்தில் ஈ. ஓ. (அக்ரி.) என்று ஒருவர் இருக்கிறார். அவருக்கு அடுத்தபடியாக ஒவ்வொரு பிளாக்கிலும் இப்படிப்பட்ட பயிற்சியைக் கொடுப்பதற்கு என்று இன்னொரு ஈ.ஓ. (அக்ரி.) நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் எங்கே போகிறார், என்ன செய்கிறார் என்று அங்கே உள்ள அதிகாரிகளுக்கே தெரியாது. உலக வங்கி ஒரு நல்ல நோக்கத்தோடு நாட்டில் அதிகமான விளைச்சலை உண்டாக்க வேண்டும் என்றும், புதிய ரகங்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும், தமிழ்நாட்டு விவசாயிகள் முன்னேற வேண்டும் என்றும் நல்லெண்ணத்தில் கொடுக்கிற கோடிக்கணக்கான ரூபாய் இப்படி விளம்பரங்கள் என்ற பெயராலும், பயனற்ற அதிகாரிகள் பெயராலும் செலவழிக்கப்படுகிறதே தவிர, அதனால் நாட்டுக்குப் பலன் ஏதும் கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை. ஒரு 5 சதவீத பலனாவது விவசாயத் துறையில் கிடைத்திருக்கும் என்றால், நாம் மகிழ்ச்சியடையலாம். இந்த ஆண்டு 77 கோடியே 75 லட்சம் விவசாயத் துறைக்காக என்று ஒதுக்குகிறோம். இப்படி

நிதியை ஒதுக்கிக் கொண்டிருக்கிறோமே தவிர, ஒதுக்கப்படுகிற நிதி உருப்படியாக விவசாயிகளுக்குப் பயன்படுகிறதா என்றால் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அதைப் போலவே தன்னிறைவுத் திட்டம். முதற் கட்டத்திலே அது 50 ஒன்றியங்களில் செயல்படுத்தப்படும் என்றும் பிறகு 150 ஒன்றியங்களில் செயல்படுத்தப்படும் என்றும் கூறி, மூன்று ஆண்டுக் காலத்திலே தன்னிறைவுத் திட் திட்டத்தின் கீழ் எல்லாக் கிராமங்களுக்கும் எல்லாவிதமான வசதிகளும் செய்து கொடுப்போம் என்று சொல்லி, ஏறக்குறைய 150 கோடி ரூபாய்க்கு மேலே செலவு செய்தும் இன்னும் நாட்டிலே குடிநீர் கிடைக்கவில்லை. சாலைகள் இல்லை, ஏரிகளைப் பழுது பார்க்கவில்லை, பள்ளிக் கட்டிடங்கள் இல்லை என்ற நிலை அப்படியே இருக்கிறது. செலவழிக்கப்பட்ட 150 கோடி ரூபாய் உள்ளபடியே மக்களுக்குப் பயன் தருகிறதா என்றால், இல்லை. இதனால் 75 கோடி ரூபாய்க்குப் பயன் கிடைத்திருக்குமானால், மற்ற 75 கோடி ரூபாய் இடையிலே இருக்கின்றவர்களுக்குக் கமிஷனாக அல்லது வேலை செய்யாமலே பங்கு போடக்கூடிய சூழ்நிலையில் செலவாகியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே தண்ணீர் பிரச்சினையைப்பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஐதராபாத் சென்றார், குடிதண்ணீர் கொண்டுவர ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போட்டார், இனிப்பு வழங்கினார் என்றெல்லாம் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள்கூட இவ்வளவு பெரிய சாதனை செய்து வந்திருப்பதைப்பற்றி இந்த அவையிலே பாராட்டு தெரிவிக்கவில்லையே என்றார். உள்ளபடியே சாதனைகளை யார் செய்தாலும் பாராட்டலாம். இதனால் உள்ளபடியே நாட்டு மக்களுக்குப் பலன் கிடைக்கப் போகிறது என்பதிலே நம்பிக்கை இருந்தால், இன்னும் பல மடங்கு பாராட்டலாம். உண்மையிலேயே இரண்டு முதலமைச்சர்களும் சந்தித்தார்கள். ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். ஆனால் ஏதோ திடீரென்று 1977க்குப் பிறகு தமிழ் நாட்டில் அ.தி.மு.க. ஆட்சி வந்த பிறகு, ஆந்திராவில் தெலுங்கு தேசம் ஆட்சிக்கு வந்த பிறகு, என்.டி.ஆர். முதலமைச்சராக உருவாகியதற்குப் பிறகு, இந்த ஒப்பந்தம் ஏற்பட்டதா என்றால், இல்லை. காமராஜர் காலத்திலேயே பேச்சுவார்த்தை நடந்து, இந்தியப் பிரதமர் அவர்களால் 1976 ஆம் ஆண்டு சென்னை கடற்கரைக் கூட்டத்தில் "கிருஷ்ணா தண்ணீர் சென்னைக்குக் கிடைக்கும்" என்று சொல்லப்பட்டதற்குப்

பிறகு, இப்போது இந்த ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆறாண்டுக் காலத்திற்குள்ளே இந்தத் தண்ணீர் சென்னைக்குக் கிடைக்கும் என்று சொல்லுவது உண்மையாக இருக்குமானால், திராவிட முன்னேற்றக் கழகம் முழு மனதோடு இந்த அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. ஒப்பந்தம் கையெழுத்து ஆகியிருக்கிறது, ஆனால் அதனுடைய விவரம் இன்னும் நமக்குத் தெரியவில்லை. 500 கி.மீ. தூரம் என்கிறார்கள், 720 கோடி ரூபாய் திட்டம் என்கிறார்கள். ஆனால் அந்தத் திட்டத்திற்கு யார் பணம் கொடுக்கப் போகிறார்கள் என்ற விவரம் இல்லை. திருமதி இந்திரா காந்தி அவர்கள் மனது வைக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அவர் மனது வைக்கப் போகிறாரா என்பது நமக்குத் தெரியாது. ஆனால் இங்கே தண்ணீர் இல்லை என்பதற்காக மக்களைத் திசை திருப்ப தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது, தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். இப்படித்தான் பொதுக் கூட்டத்திலே அழகாகச் சொல்லுவோம். நாவலர் அவர்கள் கூட்டத்திற்குச் சரியான நேரத்தில் வந்துவிடுவார். ஆனால் அண்ணா அவர்கள் சற்று காலதாமதமாக வருவார்கள். அப்போது "அண்ணா வந்து விட்டார்கள்", "அண்ணா புறப்பட்டு விட்டார்கள்", "அண்ணா வந்து கொண்டேயிருக்கிறார்கள்", "காஞ்சிபுரம் வந்து விட்டார்கள்" என்ற செய்தியை கூட்டத்திலே சொன்னதைப் போல நிச்சயமாக தண்ணீர் வந்துவிடும் என்று.

டாக்டர் இரா. சனார்த்தனம் : அவைத் தலைவர் அவர்களே, அண்ணா வருவதை மக்கள் எதிர்பார்ப்பதைப் போல அண்ணா வந்து எப்படி மக்களை மகிழ்வித்தார்களோ அதேபோல் தண்ணீர் கொண்டு வந்து மக்களுக்குத் தந்து முதல்வர் அவர்கள் இதிலே வெற்றி பெறத்தான் போகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு உறுப்பினருக்கு அதிக அனுபவம் இருக்காது. அண்ணா அவர்கள் சில நேரங்களில் வராமலே இருந்ததுண்டு. அப்படிப்பட்ட நிலை இதிலும் வந்துவிடக் கூடாது.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி பிறகு நான் விளக்கமாகப் பேசவிருக்கிறேன். கிருஷ்ணா ஆற்று நீர் ஒப்பந்தம் பற்றி முழு விவர அறிக்கையை பேரவையிலே வைப்பேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுப்பினர் அவர்கள் வருவதற்கு முன்பே இங்கே தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது செய்தி சொல்லப்பட்டிருக்கிறது, முழு விவரம் வைக்கப்படும்போது மாண்புமிகு உறுப்பினர் யார் பணத்தைத் தருகிறார்கள் என்ற

முடிவிற்கு வரலாம். இப்போதுதான் ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இப்போதே கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீர் வராது என்று நம்பிக்கையில்லாமல் இருக்க வேண்டும் என்று கருதுகிறாரா? அல்லது வரக்கூடாது என்று கருதுகிறாரா? எப்படிப்பட்ட சூழ்நிலை வந்தால், நல்லது என்று எண்ணுகிறார்?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தண்ணீர் வர வேண்டும் என்றுதான் எண்ணுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வராது என்று எதிர்பார்த்துச் சொல்லுவதற்கு அண்ணா அவர்களை உவமையாக ஆக்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : சில நேரங்களில் தவிர்க்க முடியாத காரணத்தால், தம்பி அன்பழகன், தம்பி கருணாநிதி ஆகியவர்கள் வருவார்கள் என்று சொல்லுவார்கள். அண்ணா அவர்கள் சில நேரங்களில் சூழ்நிலை காரணமாக வராமல் இருந்திருக்கிறார். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எங்களுடைய கருத்தைக் கேட்டார்கள். எங்களைப் பொறுத்தவரையில், கிருஷ்ணா நீர் சென்னைக்கு வர வேண்டும்; யார் பணம் கொடுத்தாலும், அதை வரவேற்கிறோம். ஆனால் விரைவிலே வர வேண்டும். அதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஆறாண்டுக் காலத்திற்குள் வருமா என்பதைத்தான் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போது தண்ணீர் இல்லாமல் மக்கள் கஷ்டப்படும் போது இரயிலில் தண்ணீர் வருகிறது, கப்பலில் தண்ணீர் வருகிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே கிராமப்புறங்களில் உள்ள தாய்மார்கள் எவ்வளவு வேதனைப்படுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். குடிக்க ஒரு குடம் தண்ணீர் கொண்டுவர இரண்டு மைல் வெய்யிலில் சென்று மிகவும் வேதனைப்படுகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் மக்களை திசை திருப்பக் கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் வீராணம் திட்டம் பற்றிச் சொன்னார்கள். வீராணம் திட்டத்தை இந்த அரசினர் நிச்சயமாக எடுக்கமாட்டார்கள். ஏனென்றால் கலைஞர் அவர்களுக்கு நல்ல பெயர் வந்துவிடும் என்ற காரணத்தால், வீராணம் திட்டம் வேண்டாம் என்று சொல்லுவார்கள். ஆனால் இப்போது நெய்வேலியிலிருந்து தண்ணீர் தருகிறோம் என்கிறார்கள். நெய்வேலி தண்ணீரைப் பயன்படுத்திக் கொண்டால் என்ன? இதைப்பற்றி அரசாங்கம் ஏன் மௌனம் சாதிக்கிறது? நெய்வேலி நிறுவன அதிகாரிகள் சென்னையிலே இருக்கக்கூடிய குடிநீர் பஞ்சத்தைப் பார்த்துவிட்டு அவர்களாகவே முன்வந்து தண்ணீர் தருகிறோம் என்றார்கள். அதைப்பற்றி ஒன்றும் பேசாமல் 'கிருஷ்ணா கிருஷ்ணா இராமா இராமா' என்று சொல்லிக் கொண்டிருந்தால், எப்போதுதான் கிருஷ்ணாவும், இராமாவும் வரப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

தமிழகத்திலே ஒரு பக்கத்திலே வறட்சி என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். குடிக்கத் தண்ணீர் இல்லை. ஆடுமாடுகளுக்குத் தீவனம் இல்லை. ஆனால் இன்னுமொரு பக்கத்திலே தமிழ்நாடு முழுவதும் வரி வசூல் செய்வதைத் தள்ளி வைக்காமல் விவசாயிகள் செலுத்த வேண்டிய கடனைச் செலுத்தித்தான் ஆக வேண்டும் என்று கூட்டுறவு இலாக்கா அதிகாரிகள் வற்புறுத்துகிறார்கள். வறட்சியின் காரணமாக கேரள மாநில அரசு ஐயாயிரம் ரூபாய்க்கு உள்ளிட்ட கடன் வசூலை நிறுத்தி வைத்திருப்பதாக அறிவித்திருக்கிறது. அப்படிப்பட்ட நடவடிக்கைகளை விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கக் கூடிய வகையில் இங்கேயும் செய்திருந்தால் உள்ளபடியே பாராட்டலாம். உள்ளபடியே நமக்கு நிதிப் பற்றாக்குறை இருக்கலாம். நிதியை எப்படிச் சேகரிக்கலாம் என்பதற்குரிய வழியை நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். விவசாயிகள் வறட்சியால் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும்போது, கடன்களை வசூலிக்க தீவிர நடவடிக்கை எடுத்தால், அவர்கள் யாரிடத்திலே கடன் கேட்பார்கள்? மார்வாடிகளிடத்திலே கேட்கலாம் என்று நினைத்தாலும், கொடுத்த கடனைத் திருப்பிக் கொடுக்கக் கூடாது என்று ஒரு பக்கத்திலே சட்டத்தைப் போட்டிருப்பதால், அவர்களும் கடனைக் கொடுக்க மறுக்கிறார்கள், வங்கிகளிலும் கடனைக் கொடுக்கத் தயாராக இல்லை. ஆகவே வறட்சி உள்ள இந்தச் சூழ்நிலையில் 1983-84ஆம் ஆண்டு வரையில் அல்லது வறட்சி நீடிக்கிற வரையில் விவசாயிகளைப் பொறுத்த வரையில், எல்லா வரிகளையும் தள்ளி வைக்கிறோம் என்ற அறிவிப்பை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொடுத்தால், விவசாயிகளைப் பொறுத்த வரையில், அதைவிட நல்ல மகிழ்ச்சியான செய்தி இந்த ஆண்டு எதுவும் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் வரிகளை ரத்து செய்யும்படி கேட்கவில்லை.

மின்சாரத்தைப் பொறுத்த வரையில், நமக்கு 3,500 மெகாவாட் உற்பத்தி இருந்தால்தான் நிறைவு பெறலாம் என்ற நிலை இருந்தாலும், இப்போது 700 மெகாவாட்தான் உற்பத்தி ஆகும் நிலை இருக்கும்போது, உள்ள மின்சாரத்தை

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1983 ஏப்ரல் 23

எப்படி பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதில் அதிகாரிகள் அக்கறை எடுத்துக் கொள்ளாமல், சில இடங்களில் 24 மணி நேரமும் மின்சாரம், சில இடங்களில் நினைத்தபோது மின்சார வெட்டு என்று இருந்தால், அதனால் பாதிக்கப்படு பவர்களுக்கு ஏற்படும் துயரை அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பத்திரிகை அலுவலகங்களுக்கு மின்சார வெட்டு அறவே கிடையாது என்பதுதான் அரசாங்கத்தின் உத்தரவு. ஆனால் இன்றைக்குள்ள நிலைமை என்னவென்றால், ஆளும் கட்சியைத் துதி பாடுகின்ற பத்திரிகைகளுக்கு மின்சார வெட்டு அறவே கிடையாது. ஆனால் எதிர்க்கட்சிப் பத்திரிகைகளாக இருந்தால், முன்கூட்டியே சொல்லாமல் மின்சார வெட்டை அமுல் செய்கிறார்கள். ஒரு நாளைக்கு 8 மணிக்கு மின்சாரம் வரும் என்கிறார்கள். ஒரு நாளைக்கு பத்து மணிக்கு மின்சாரம் என்கிறார்கள், இன்னுமொரு நாளைக்கு மின்சாரமே வராது என்கிறார்கள். மின்சாரம் வர வேண்டும் என்றால், அரசாங்கத்தைப் புகழ்ந்து பாராட்டிக் கொண்டே இருக்க வேண்டும், பத்திரிகையில் ஆரம்ப எழுத்தி லிருந்து முடிகிற வரையில் புரட்சித் தலைவருடைய புகழை அச்சடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்றால், பத்திரிகைகளை எப்படி நடத்த முடியும்? அப்படி அச்சடிப்பதிலேகூட எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் யார் அதை வாங்கிப் படிப்பது? இந்த நாட்டு மக்களுக்குத் தேவையான செய்திகளைக் கொடுக்கக்கூடிய பத்திரிகைகள், நாட்டு நடப்புகளை எழுதுகிற பத்திரிகைகள், இந்த ஆட்சியில் உள்ள குறைகளை எடுத்துச் சொல்லும் பத்திரிகைகள் ஆகியவற்றுக்கு மின்சாரம் இல்லை என்ற நிலை ஜனநாயக நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசில் இருக்கக்கூடாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்த வரையில், 76 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறோம். காவல் துறையினர் எப்படி தங்களுடைய கடமை களைச் செய்கிறார்கள் என்பதைப்பற்றி அதிலே அதிகக் கவனம் செலுத்த விரும்பவில்லை. ஒரு சிலவற்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். நக்சலைட் என்ற பெயரால் வட ஆற்காடு மாவட்டத்திலே, தர்மபுரி மாவட்டத்திலே 36 இளைஞர்கள், பி.ஏ. படித்தவர்கள். . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சட்டமுன்வடிவு நிறைவேற்றப் படும் வரை, அவையின் நேரம் அவையின் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

1983 ஏப்ரல் 22]

(பிற்பகல் 12-30)

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அப்படிப்பட்ட ஏழைகள், இன்னும் சொல்லப்போனால் ஒரு ஏக்கர் நிலம் இருந்து, 2 ஏக்கர் நிலம் இருந்து, அந்த நிலத்தில் பிழைக்க முடியாமல் இருந்து, வசதியில்லாமல் இருப்பவர்கள், அந்த நிலங்களை விற்று தன் மகனைப் படிக்க வைத்தால், அவர்கள் குடும்பங்களின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும் என்ற ஒரு நம்பிக்கையோடு இருக் கின்றார்கள். அப்படி படிக்கவைக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு வேலை யில்லாமல் இருக்கின்றது. வேறு வழியில்லாமல் வறுமையில் உழன்றுகொண் டிருந்த நேரத்திலே, அந்த படித்தவர்களையெல்லாம் நக்சலைட்டுகள் என்று பெயர் சூட்டி, 36 இளைஞர்களை காரணம் இல்லாமல் சுட்டுத் தள்ளியிருக்கிறது இந்தப் போலீஸ். இப்படி விசாரிக்காமல், நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லாமல், எப்படிப்பட்ட சூழ்நிலையிலே இந்த 36 இளைஞர்களை இந்த இலாக்கா சுட்டிருக்கிறது? இதைப் பார்க்கின்ற நேரத்திலே இந்த இலாக்காவிற்கு இவ்வளவு நிதி தேவைதானா என்று எண்ணவேண்டியிருக்கிறது. இன்றையதினம் போலீஸ்காரர்கள் ஒரு அரசாங்கம் இருப்பதாகவோ, அமைச்சர் இருப்பதாகவோ நினைக்காது செயல்படுகின்றார்கள். தடி எடுத் தவன் தண்டல்காரன் என்று சொல்வார்கள். அதுபோல உள்ளபடியே இந்த நாட்டிலே போலீஸ் துறையிலே நடக்கிறது. உதாரணத்திற்குச் சொல்கின்றேன். சென்னையிலே அண்ணா நகரிலே ஒரு பூங்காவிலே இரண்டு படித்த மாணவர் கள், அதிலேயும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பிரச் சாரச் செயலாளர், திரு. கந்தப்பனுடைய மகன் ஒருவர், இன்னொருவர் சேர்ந்து இருவரும் 7 மணிக்கு பூங்காவில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கி றார்கள். 7 மணிக்கு மேலே யாரும் பூங்காவிலே இருக்கக்கூடாது என்று போலீஸ் இன்ஸ்பெக்டர் அங்கே உட்கார்ந்து இருப்பவர்களைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார். அந்த இரண்டு பேர்களும் ஒரு ஓரத்திலே உட்கார்ந்து கொள்கின்றார்கள். 'யாரடா, எழுந்து போங்களடா' என்று 'அடா, போடா' என்ற வார்த்தையிலே சொல்லியபோது, அவர்கள் 'என்ன சார், சொன்னால் போகிறோம், அதற்கு ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்?' என்று கேட்ட தற்காக பள்ளியிலே படிக்கின்ற இரண்டு மாணவர்களையும் அழைத்துக் கொண்டுபோய், ஏதோ கிரிமினல் குற்றவாளிகளை அடிப்பதுபோல எலும்பு முறிகின்ற அளவுக்கு அடித்திருக்கிறார்கள். அன்றைக்கு 4½ மணிக்கு அவர்களை வீட்டிற்குக் கொண்டுபோய் விட்டார்கள். அந்தப் போலீசை நம்பி சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கப்போகிறோம். அது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. 4 தினங்களுக்கு முன்னாலே வட ஆற்காடு மாவட்டத்திலே

கலவை என்ற கிராமத்திலே துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. வேறு ஒன்றும் இல்லை. ஏதோ பெரிய போராட்டம், துப்பாக்கிச்சூடு என்றால், பரவாயில்லை. ஒரு போலீஸ்காரருடைய மனைவி சினிமாவிற்குப் போகிறார். அவர் ரிக்ஷாக் காரனைக் கூப்பிட்டு. போய் மனைவியை அழைத்து வா என்று அவர் உத்தரவு போடுகிறார். அதற்கு ரிக்ஷாக்காரர், "என்னை வேறு ஒருவர் அழைத்திருக்கி றார். நான் அந்த நேரத்திலே செல்ல வேண்டும். அதற்குப் போயாகவேண்டும்" என்று சொல்லிவிட்டார். அவர் அப்படி பதில் சொல்கின்றார். அதற்கு போலீஸ் காரர், "என்னுடைய மனைவியை அழைத்துக்கொண்டு வருவதைவிட, அப்படி வேறு என்ன வேலை? யாரடா அவ்வளவு பெரிய மனிதன் இந்த ஊரிலே உன்னை இப்போது வரச்சொன்னது?" என்று சொல்லி ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டுபோய் அவனை அடித்துத் துன்புறுத்தி, அப்படி அடித்த அடியிலே அவன் இறந்து விட்டான். இறந்துவிட்ட செய்தி கேட்ட அந்தப் பகுதி மக்கள் இரண்டு ஆயிரம் பேர்கள் அந்தப் போலீஸ் ஸ்டேஷனைத் தாக்க முயற்சித்திருக்கின்றார்கள். விவரம் தெரிந்ததும் உடனடியாக போலீசை வேலூரிலிருந்தும் செய்யாற்றிலிருந்தும் வரவழைத்து அங்கே வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தி அந்தக் கூட்டத்தைக் கலைத்திருக் கின்றார்கள். இப்படிப்பட்ட செயல்களைச் செய்கின்ற, அதிலே ஈடுபடு கின்ற அதிகாரிகள் மீது மேலும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டாமா? அப்படி எடுக்காவிட்டால், எப்படி நாம் காவல் துறையைக் கட்டுப்படுத்தப் போகிறோம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இலாகாக்களிலே ஒன்று சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மெண்ட். அந்த இலாகாவிலேகூட அரசாங்கத்திற்குத் தெரியாமல், அமைச்சர் அவர்களுக்குத் தெரியாமல் இந்த அரிசி விநியோ கத்திலே தவறு நடந்ததாகச் சொல்கின்றார்கள். அப்படி இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னால். ஒத்துக்கொள்கிறேன். இப்படி நடந்து விட்ட காரணத்தினாலேயே, அதிகாரிகள் மட்டத்திலே ஒரு பெரிய தவறு, எதிர்பாராத தவறு, நினைத்துப் பார்க்கமுடியாத தவறு நடந்துவிட்டது என்ற செய்தி அரசாங்கத்திற்குக் கிடைத்தவுடன், ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. ஆர். நடராசன் உட்பட ஒரு 150 தொழிலாளர்களை அந்த இலாகாவிலே இருந்து மாற்றம் செய்திருப்பதாகச் சொல்கின்றார்கள். அது எந்த அளவுக்கு உண்மை என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒரு இலாகாவிலே

அதிகாரிகள் பல இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய் அளவிலே தவறு செய்யமுடிகிறது என்று சொன்னால், அதற்கு என்ன காரணம்? யாராலே அது நடக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறு நடைபெற்றதால், ஊழல் நடைபெற்ற தால் இல்லை. அந்த இலாகா மேலும் செம்மைப்பட வேண்டும், சீர்திருத்தப் பட வேண்டும், விரைவாக சுறுசுறுப்பாக நடக்க வேண்டும் என்றுதான் யாரைப்போடுவது, யாரை எடுப்பது, யாரை வைக்கலாம் என்று அரசு அவ்வப்போது எடுக்கின்ற முடிவுப்படி செய்திருக்கிறோம். அது செய்யக் கூடிய ஒன்றுதான். அது எல்லா இலாகாவிலும் நடக்கக்கூடிய ஒன்றுதான். ஆக தனிப்பட்ட திரு. நடராசன் பற்றிப் பரிந்துரை செய்து பேசவோ, ஏன் இவர்களை எடுத்தார்கள், ஏன் இவரைப் போட்டார்கள் என்று சொல்லவோ வேண்டியதில்லை. தவறாக எதுவும் நடைபெறவில்லை என்பதைச் சொல் கின்றேன். அந்த இலாகா சிறப்பாக நடைபெற வேண்டுமென்பதற்காக மாற்றுவது என்பதும், மாற்றாமல் இருப்பது என்பதும் அரசு அவ்வப்போது எடுக்கின்ற நடவடிக்கைகள்தான். அப்படித்தான் இதை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, வேறு ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன காரணத்தினாலே, நான் அந்தப் பிரச்சினைபற்றிப் பேசவில்லை. ஆனால் பொதுவாக அதிகாரிகளை மாற்றுவது என்பது அன்றாட நிர்வாக நிலைமை என்ற அளவிலே இருந்தாலும், ஒரே நேரத்தில் 150 பேர்களை இது வரையில் மாற்றியதாக இல்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : என்னுடைய எண்ணம் இன்னும் பல பேர்களை மாற்றினால், சரியாக இருக்கும் என்பதுதான்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அப்படி மாற்றுவதனால் இந்த இலாகா உருப்படியாக நடக்கும் என்றால், நல்லதுதான். அங்கே இருக்கக்கூடிய யார் மீதும் எனக்கு அக்கறை இல்லை. பொதுவாக அந்த இலாகாவிலே பரபரப்பான செய்திகள் பேசப்படுகின்றன. அதனாலேதான் அதைக் குறிப் பிட்டேன். அந்த இலாகா உருப்படவேண்டும் என்று சொல்வதனாலே, அது இதுவரையிலே உருப்படியாக இல்லை என்பது நன்றாகத் தெரிகிறது. அது உருப்படியாக ஆகக்கூடிய அளவுக்கு மாற்றினால்கூட, அதை நான் வரவேற்ப தற்குத் தயாராக இருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு பக்கத்திலே நாம் நிதி ஒதுக்கம் செய்கிறோம். ஆனால் அரசாங்கத்திற்கு வரவேண்டிய நிதியை இந்த அரசாங்கம் முறையாகப் பெறுகிறதா என்றால், இல்லை. யாராவது எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள், இளிச்சவர்கள், இப்படிப்பட்டவர்கள் இருந்தால், அவர்களை மிரட்டுவது, நீதிமன்றத்திற்குப் போவது, அட்டாச்மெண்ட் செய்வது, ஜப்தி செய்வது போன்ற நடவடிக்கைகளில் எல்லாம் ஈடுபடுகிறது. ஆனால் மால்கோ 9½ கோடி ரூபாய் இந்த அரசாங்கத்திற்குப் பணம் கட்டவேண்டும். வசூலித்ததா? வசூலித்து விட்டார்களா? எத்தனையோ ஆண்டுகளாகக் கேட்கிறோமே. அது வசூல் செய்யப்படவில்லை. உடனே "தனியார் நிறுவனத்திலே இருக்கின்றார்கள். அவர்கள் நீதிமன்றத்திற்குப் போயிருக்கின்றார்கள்" என்று சொன்னார்கள். அரசாங்கத்திலே அட்வோகேட்-ஜெனரல் இருக்கின்றார், பப்ளிக் பிராசிக்கியூட்டர் இருக்கின்றார்கள். ஒரு தனியார் வாங்கிய ஸ்டே ஆர்டரை 'வெக்கேட்' செய்வதற்கு ஒரு அரசாங்கத்திற்கு ஏழு ஆண்டுக்காலமாக முடியவில்லை. எதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றார்கள்? ஒரு தனிப்பட்ட விவசாயி ஒரு 100 ரூபாய் மின்சாரக் கட்டணம் கட்டவில்லை என்றால், மின்சாரம் உடனடியாகத் துண்டிக்கப்படுகிறது. அப்படி கட்டாவிட்டால் அபராதம் போடப்படுகிறது. கட்டாவிட்டால் மின் இணைப்பு கிடைக்காது. ஆனால் இப்படி 9½ கோடி ரூபாய்க்கு மின்சாரக் கட்டணம் கட்டாதவர்கள் மீது நடவடிக்கை இல்லை. சிட்கோ நிறுவனம் இருக்கிறது. ஜாயிண்ட் செக்டாரிலே இருக்கக்கூடிய அந்த நிறுவனம் மின்சார இலாகாவிற்குச் செலுத்தவேண்டிய பணம் முழுவதையும் செலுத்தவில்லை. லட்சக்கணக்கான ரூபாய், கோடிக்கணக்கான ரூபாய் வரவேண்டியதாக இருக்கிறது. ஆனால் அதிகாரிகள் கேட்கக்கூட பயப்படுகின்றார்கள். என்ன காரணம். அவர்களுக்கு இருக்கின்ற செல்வாக்கு அப்படி. ஆகவே செல்வாக்குப் படைத்தவர்கள் அரசாங்கத்திற்கு வேண்டியவர்கள் அல்லது ஆட்சியிலே இருக்கின்றவர்களுக்கு ஆதரவாக இருப்பவர்கள், அவர்களைக் கேட்கப் பயப்படுகின்றார்கள். ஆனால் அப்பாவி மக்களை எது வேண்டுமானாலும் செய்யலாம். அவர்கள் அவதிப்பட வேண்டிய நிலை இந்த நாட்டிலே இருக்கின்றது என்பதற்காகச் சொல்கின்றேன். ஏனென்றால் மின்சார வாரியத்தின் அரியர்ஸை எடுத்துப்பார்த்தால், வரவேண்டியது ரூ. 3 கோடியே 60 லட்சம். இப்படி இருக்கின்றது. இந்த அரியர்சிலே ஆயிரம் ரூபாய் செலுத்தவேண்டிய ஒரு கன்ஸ்யூமர் இருக்கின்றாரா என்றால், இல்லை. அப்படி யாராவது இருக்கின்றார்களா என்றால் இல்லை. எல்லாம் இலட்சக் கணக்கிலே ரூபாய் செலுத்தவேண்டியவர்கள்தான் இருக்கின்றார்கள். பத்து லட்சம், 15 லட்சம், 45 லட்சம் என்று ரூபாய் செலுத்த வேண்டியவர்கள் இருக்கிறார்கள். இவர்களிடமிருந்து வசூல் செய்ய என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அதற்கு இங்கே நடவடிக்கை இல்லை. அதைப்போலவேதான் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே கொடுத்த அறிக்கையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். நான் அதைப்பற்றிப் பேசவில்லை. இன்றைக்கு ரூ. 3.2 கோடி ரூபாய் வரை ரத்து செய்ய வேண்டிய அளவுக்கு சலுகை காட்டவேண்டிய அவசியம் ஏன்? நாட்டிலே எவ்வளவோ பேர்கள் இதைவிட மோசமான நிலையில் தொழிலை நடத்தி லாபம் சம்பாதிக்க முடியாமல் இருக்கின்றார்களே அவர்களுக்கு இந்த விதிவிலக்கு கொடுக்கப்படுகிறதா? அவர்களுக்கு மட்டும் கொடுக்கின்றார்கள் என்றால் என்ன அர்த்தம்? அவர்கள் கொடுக்கவேண்டியதைக் கொடுத்துவிட்டதால், கொடுக்கவேண்டிய சலுகைகளைக் கொடுக்கிறோமா என்று கேட்டால், ஆளும் கட்சியிலே இருப்பவர்களுக்கு ஆத்திரம் வருகிறது. அப்படி அந்த 65 பேர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3.2 கோடி என்று விலக்குக் கொடுத்து, 7, 8 ஆண்டுக்காலமாக கிட்டத்தட்ட 25 கோடி ரூபாய்க்குச் சலுகை கொடுத்திருக்கிறார்கள். மக்களுக்கு வந்து சேரவேண்டிய வரிப் பணம் அந்த 65 குடும்பத்தினருக்குப் போகிறது. அவர்கள் அனுபவிக்க நாம் அனுமதிக்கிறோம். காரணம் ஆட்சியிலே இருப்பவர்களுக்கு அவர்கள் தயவு தேவைப்படுகிறது. ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் அவர்களுக்கு தயவு காட்டுகின்றார்கள். இப்படி இருந்தால், அரசாங்கக் கஜானாவிற்கு எப்படி பணம் வர முடியும்?

அது மட்டுமல்ல. இன்றைய தினம் ஆயத்தீர்வைபற்றிச் சொல்கின்றார்கள், அதுபற்றி நான் சொல்கின்றேன். நம்முடைய அரசாங்கம் போடுகின்ற ஆணைகளைப்பற்றி நீதி மன்றங்களிலே என்ன சொல்கின்றார்கள்? அரசாங்க ஆணைகளைப்பற்றி எப்படியெல்லாம் குறை கூறுகின்றார்கள்? அதைப் பார்த்தால், வேதனையாக இருக்கிறது. இந்த நாட்டிலே உள்ள நிதி அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். அரசுக்கு உள்ளபடியே நுழைவு வரி மூலம் ரூ. 26 கோடிதான் வரும் என்று சொல்கிறோம். நான் சொல்கின்ற திட்டத்தை அமுல்படுத்தினால் குறைந்தது ரூ. 75 கோடி வரும். அப்படி வரவில்லை என்றால் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எந்தத் தண்டனை கொடுத்தாலும், நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மொத்தம் நமக்கு ரூ. 131 கோடிக்குப் பற்றாக் குறை இருப்பதாலே, எவ்வளவு யோசனைகள் சொன்னாலும், எவ்வளவு ஆதாயம் கிடைக்க வழிவகைகள் சொன்னாலும், அதை யோசித்துப் பெறுவதற்கு நாங்கள் முயற்சி செய்கிறோம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : எனக்கு நிதி அமைச்சர் அவர்களிடத்தில், அவரே அவரைப்பற்றி நம்பிக்கொண்டிருப்பதைவிட, நிறைய நம்பிக்கை இருக்கின்றது. ஆனால் அவருக்கே தெரியாமல் நடைபெறுகின்றவைகளுக்கு அவர் என்ன செய்வார் பாவம். இங்கே அரசாங்கம் பல அரசு ஆணைகளைப் பிறப்பித்திருக்கிறது. எக்சைஸ் டிப்பார்ட்மென்டிலே ப்ளென்டிங் யூனிட்

(பிற்பகல் 12-40)

வைத்திருக்கிறார்கள்; ஹோல்சேல் ஆரக் டிஸ்டிரிபியூஷனுக்கு லைசன்ஸ் கொடுக்கிறார்கள், ஐ.எம்.எஃப்.எல்.-க்கு லைசன்ஸ் கொடுக்கிறார்கள். நான் கேட்கிறேன், ஒரு மாவட்டத்திற்கு ஹோல்சேல் ஆரக் டிஸ்டிரிபியூஷன் லைசன்சுக்கு எவ்வளவு? ஆண்டு ஒன்றுக்கு 30,000 ரூபாய். ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கக்கூடிய ஹோல்சேல் டிஸ்டிரிபியூட்டர்கள் எவ்வளவு சம்பாதிக்கிறார்கள் என்றால், ஒரு நாளைக்கு 50,000 ரூபாய் சம்பாதிக் கிறார்கள். அதை ஏன் கூட்டுறவுத் துறையில் வைத்துக்கொள்ளக் கூடாது? ஆரக் ப்ளென்டிங் யூனிட், ஆரக் டிஸ்டிரிபியூஷன், ஐ.எம்.எஃப்.எல். ஹோல்சேல் —இந்த மூன்றையும் மாண்புமிகு நாவலர் அவர்களே எடுத்துக்கொண்டு, அதை ஒரு வாரியமாக்கி, நாவலருக்கு நம்பிக்கையான ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை அந்த வாரியத்திற்குத் தலைவராகப் போடுங்கள். குறைந்தது ஆண்டு ஒன்றுக்கு 75 கோடி ரூபாய் அதிலே லாபம் வராவிட்டால், மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் என்ன தண்டனை கொடுத்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கலைத்துவிடுங்கள் என்று சொன்னாலும்கூட, கலைக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் அதை ஏன் செய்ய மறுக்கிறார்கள்? 75 கோடி ரூபாய் அரசாங்கக் கஜானாவுக்கு வருவதற்கு பதிலாக 10 குடும்பங்களின் கஜானாவுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. அந்த 10 குடும்பங்கள் 75 கோடி ரூபாயை நாட்டிலே கொள்ளை அடித்துக்கொண்டிருக்க, ஏழை மக்கள் வாட வேண்டுமா என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே அதைச் செய்யவேண்டும். நம்முடைய மாநிலத்திலே கூட்டுறவுத் துறை மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருப்பதாக நாம் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். கூட்டுறவுத் துறையிலே அவற்றை எடுத்துக்கொண்டு,

நிர்வாகத்தைக் கவனித்துக்கொள்ள ஒரு ஜாயின்ட் ரெஜிஸ்டிராரைப் போடுங்கள். இல்லையென்றால் ரெஜிஸ்டிரார் ஆஃப் கோவாபரேடிவ் சொன்சஊஸ் (ப்ரொஹிபிஷன்) என்ற ஒருவரைப் போடுங்கள். அப்படி ஒரு போஸ்டை 'கிரியேட்' செய்யுங்கள். அவருக்குக் கீழே நான்கு ஜாயின்ட் ரெஜிஸ்டிராரைப் போடுங்கள். இன்றைக்கு கன்ஸ்யூமர் பெடரேஷன் நல்ல முறையில் செயல்படவில்லையா? வெளிநாட்டிலிருந்து கொண்டு வரும் பொருள்களை 'சீல்' செய்து, அழகாக விற்பனை செய்கிறார்களே, அவர் களுக்கு சாராயத்தை விற்பனை செய்யத் தெரியாதா? யாரோ, எங்கோ இருக்கக்கூடிய குருவில்லா, எங்கோ இருக்கக்கூடிய சுப்பராம ரெட்டி, எங்கோ இருக்கக்கூடிய கோடே கம்பெனி—இவர்களுக்குத்தான் தமிழ்நாட்டில் விற்பனை செய்யத் தெரியுமா? ஆக விற்பனையைப் பொறுத்தவரையில் உள்ளபடியே ஊழல் இல்லை, நாணயமாக இருக்கிறோம், எங்களுடைய மடியில் கனமில்லை என்று பேசுவது உண்மையாக இருந்தால், இந்தத் துறையை நேஷனலைஸ் செய்து, அரசாங்கமே ஏற்று, இதை நடத்த வேண்டுமென்று நான் மிகப் பணிவன்போடு, நிதி அமைச்சர் அவர்களுக்குப் பணம் தேவைப் படுவதால், சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம் இருக்கிறது. எவ்வளவு வேடிக்கை நடக்கிறது என்று சொன்னால் திருநெல்வேலியிலே, செங்கற்பட்டிலே உள்ள இரண்டு ப்ளென்டிங் யூனிட்டுகளின் உரிமையாளர்கள் யாருக்கோ செலுத்த வேண்டிய தொகையை— அரசாங்கத்திற்குச் செலுத்துவதைச் சொல்லவில்லை—தனியாகச் செலுத்த வேண்டியதை மாதாமாதம் குறிப்பிட்ட காலத்தில் செலுத்தவில்லை. உடனே ஆத்திரப்பட்டார்கள். அவர்களுடைய லைசன்ஸ் 'கேன்சல்' செய்யப்பட்டது. உடனே அப்ளிகேஷன் கால்-பார் செய்தார்கள். அதில் சரியானவர்கள் வரவில்லை. உடனே அதை ரத்து செய்தார்கள். மறுபடியும் அப்ளிகேஷன் 'கால்-பார்' செய்தார்கள். அதற்குள் பேரம் சரியாகிறது. உடனே நீதி மன்றத்திற்கு ஒருவனை அனுப்பி 'ஸ்டே' வாங்குகிறார்கள். அதற்கிடையிலே அரசாங்கம் புதிய விண்ணப்பதாரர்களுக்கு லைசன்ஸ் கொடுத்தால்கூடப் பரவாயில்லை. யாரை குற்றவாளி என்று சொல்லி, யார் நடத்தக் கூடாதென்று நினைத்தார்களோ அவர்களையே கூப்பிட்டு, அவர்களுக்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்கிறார்கள். அவர்கள் 'ஐயா, இந்தத் தொழிலே வேண்டாம். இந்தத் தொழில் செய்வதாலே எங்களுடைய வீட்டிலேகூட தகராறு ஏற்படுகிறது, குடும்பத்தினுடைய பெயர் கெட்டுவிடுகிறது, நேற்று வரையில் நல்ல வியாபாரியாக இருந்து, இப்போது பெயர் 'சாராய வியாபாரி' என்று ஆகிவிட்டது, ஆகவே நாங்கள் செய்யமாட்டோம் என்கிறார்கள்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1983 ஏப்ரல் 22

"நீ செய்கிறாயோ, இல்லையோ, உன் பெயரிலே லைசன்ஸ் இருக்கட்டும், யாராவது செய்வார்கள்" என்று சொல்லி எக்ஸ்டன்ஷனுக்கு ஒரு ஜீ.ஓ. ஜீ.ஓ. எம்.எஸ். நெ. 212, நாள் 29 மார்ச் 1982—அதிலே இரண்டு மாதங்களுக்கு லைசன்சை ரென்யூ செய்கிறோமென்று சொல்லுகிறார்கள். அதிலும் சரியாக வில்லை. மறுபடியும் ஒரு ஜீ.ஓ. போடுகிறார்கள். ஜீ.ஓ. எம்.எஸ். நெ. 550, ப்ரொஹிபிஷன் அன்ட் எக்சைஸ், நாள் 29 ஜூலை 1982, மறுபடியும் இரண்டு மாதம் எக்ஸ்டன்ஷன். மறுபடியும் ஒரு ஜீ.ஓ. போடுகிறார்கள். ஜீ.ஓ. 656, ப்ரொஹிபிஷன் அன்ட் எக்சைஸ், 24—8—1982. மறுபடியும் இரண்டு மாதங்கள். இப்படி லைசன்ஸ் இல்லாமல் ரென்யுவல் என்றே ஓராண்டுக் காலமாக செங்கற்பட்டில் உள்ள ஓ. எஸ். குமார் ப்ளென்டிங் யூனிட்; நெல்லையில் உள்ள ஐ. எஸ். சேவக் ப்ளென்டிங் யூனிட் இரண்டும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆக இப்படி இரண்டு தனிப்பட்டவர்கள் இன்றையதினம் லைசன்ஸ் இல்லாமலே கூட தொழில் நடத்த முடிகிறது. ஒரு அரசாங்க ஆணையின்பேரில் அப்படி தொழில் நடத்த முடிகிறது. இந்த ஆணைகள் பூலன் தரத்தக்கதாக இருக்கவேண்டும். அரசாங்கம் ஆணைகள் பிறப்பிக்கலாம், அது நாட்டிலே உள்ள ஏழை மக்களைக் காப்பாற்றுவதாக இருக்கவேண்டும். அதை விட்டுவிட்டு யாரோ இரண்டு சாராய வியாபாரிகள் கொள்ளை அடிக்க அரசாங்கம் ஜீ.ஓ. போடுவது என்பது நல்லதொரு ஜனநாயக நாட்டுக்கு நல்லதல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இவற்றை தேசியமயமாக்குவதால், நிதி அமைச்சர்வர்களின் கஜானாவில் இன்னும் 75 கோடி ரூபாய் கூடும் என்பதால், நம்முடைய நிதி அமைச்சரவர்கள் நேரம் கிடைக்கும்போது முதல் அமைச்சரவர்களிடத்திலே மிக சாவகாசமாகப் பேசி, எப்படியும் 1983 ஜூன் மாதத்திலிருந்து சாராயம், மது, ப்ளென்டிங் தொழில்கள் • எல்லாவற்றையும் அரசுடைமையாக்குகிறோம் என்று அறிவிக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டு, அந்த நம்பிக்கையிலே நிதி ஒதுக்கீடு மசோதாவை முழு மனதோடு ஆதரித்து, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, 1983ஆம் ஆண்டு வரவு-செலவுக் கணக்கினுடைய அடிப்படையிலே நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு பேரவையால் நிறைவேற்றப் பட்டு, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் நிலையில் மேலவையைச் சேர்ந்த உறுப்பினர் பெருமக்கள் தங்களுடைய சீரிய கருத்துக்களை வழங்கியிருப் பதற்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் சொல்ல வேண்டிய

1983 ஏப்ரல் 22] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கருத்துக்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள் என்றாலும், இறுதியிலே நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவை முழுவதும் வரவேற்கிறேன் என்று சொல்லி அமைந்ததற்காக என்னுடைய நன்றியைத் தனிப்பட்ட முறையில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்றைய உறுப்பினர்களும் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த ஆண்டு 2,492 கோடியே 40 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய்க்கு நிதி ஒதுக்கம் செய்கிறோமென்றாலும், இதுவரையில் இந்த அவையில் நிறை வேற்றப்படாத ஒரு தொகை இது. சட்டமன்றப் பேரவையில் ஒவ்வொரு மானியக் கோரிக்கையின் அடிப்படையில் கேட்கப்படும் தொகை அங்கே வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த வகையிலே நிறைவேற்றப்பட்ட தொகை 2,053 கோடியே 33 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய். ஆனால் பேரவையின் வாக்கெடுப்புக்கு விடாமலே, மாநில தொகு நிதிக்கு சாட்டப்பட்ட தொகை என்ற வகையிலே 439 கோடியே 7 லட்சத்து 1 ஆயிரம் ரூபாய் வருகிறது. அங்கே வாக்கெடுப்பிலே சேராது; ஆனால் நிதி ஒதுக்கத்தில் அனுமதி பெற வேண்டிய கட்டத்தில் இருப்பது. மற்றும் சில சமயங்களிலே சில முக்கியமான மானியக் கோரிக்கைகளை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு, சில மாநிலக் கோரிக்கைகளுக்கு விவாதத்திற்கு நேரத்தை ஒதுக்க வேண்டா மென்று முடிவு செய்யப்பட்டு, கடைசியில் 'கில்லடின்' என்று அத்தகைய மானியக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டாலும்கூட, அவைகளுக்கெல்லாம் சேர்த்து ஒன்றாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றுதான் நிதி ஒதுக்கீடு மசோதா, கடைசியிலே விடையாற்றி மண்டகப்படி மாதிரி, வந்து சேருகிறது. ஆகவே சட்டமன்றப் பேரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை, பேரவையில் வாக்கெடுப்புக்கு விடாமல் சாட்டப்பட்ட தொகை, 'கில்லடின்' என்ற அளவுக்கு மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப்படாமல் தள்ளி வைக்கப்பட்டால், அதையும் சேர்த்து ஒன்றாகக் கொண்டு வந்து, நிதி ஒதுக்க மசோதாவாக நிறைவேற்றப்படுகிறது. நிதி ஒதுக்கீடு மசோதாவைக் கொண்டு வந்து, மேலவையின் முழு ஒத்துழைப்பையும், முழு ஆதரவையும் பெற்று, முழுத் தொகைக்கும் ஒப்புதல் தர வேண்டுமென்று கேட்கிறோம். ஆனால்

(பிற்பகல் 12-50)

இதையொட்டி சாதாரணமாக இது ஒரு நிதி ஒதுக்கம் என்கின்ற அளவுக்குத் தான் வந்திருக்கிறது. என்றாலும்கூட நிதி ஒதுக்கீட்டு முறையிலுள்ள தவறுகள் அல்லது மாறுபாடுகள் ஏதாவது இருந்தால், அவற்றைப்பற்றி உறுப்பினர்கள் சொல்லலாம். அதற்கான வாய்ப்பு இது. ஏற்கெனவே இதில் விடுபட்டுப்போன

ஏதாவது இருந்தாலும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அதைச் சொல்லலாம். அந்த அடிப்படையிலே இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய அருமையான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் எல்லாம் புறக்கணிக்கப்பட வேண்டியவை என்று நான் சொல்லவில்லை. ஆனால் அவை எல்லாவற்றுக்கும் முழுமையாக பதில் சொல்லக்கூடிய அளவுக்கு நிதியமைச்சர் இருப்பார் என்று எதிர்பார்க்கக் கூடாது. ஆனால் பல்வேறு துறைகளைப்பற்றி இங்கே கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்கிற அடிப்படையில், அந்தந்தத் துறை அமைச்சர்கள் தான் அவற்றுக்கு முழுமையான அளவில் பதில்களைத் தர வாய்ப்பாக இருக்கும். மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தின் போதும் இன்னும் சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அவற்றுக்கு பதிலளிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பல்வேறு துறைகளைப்பற்றி இங்கே நுணுக்கமான, தெளிவான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களைப் பற்றி அந்தந்த துறையைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள் என்பதை நான் இங்கே கூறிக்கொள்கிறேன். அதோடுகூட இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன குறைகளை, குற்றங்களை, குற்றச்சாட்டுகளை, இன்னும் மற்றவைகளை எல்லாம் குறித்துக் கொண்டு அந்தந்த இலாகா அதிகாரிகளும் அவற்றைக் களைவதற்கான, போக்குவதற்கான நடவடிக்கைகளை முறைப்படி எடுத்துக்கொள்வார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வறட்சி நிலை பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். வறட்சி நிலையை சமாளிக்க இந்த அரசு எந்தெந்த வகைகளில் எல்லாம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் மிகவும் தெளிவாக இந்த அவைக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அந்த வகையிலே இன்றைக்கு குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிற தன்மையையும், அதைப் போக்குகிற முயற்சியிலே இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிற பாங்கினைப்பற்றியெல்லாம் அருமையாக மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்சொன்னார்கள். எந்தெந்த முறையிலே குடிநீரைப் பெற முடியுமோ அந்தந்த முறையிலே எல்லாம் இதனைப் பெறுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம். அதற்கான சீரிய யோசனைகளை இங்கே எடுத்துச்சொன்னார்கள். சென்னை நகரைப் பொறுத்தவரையில், நாளுக்கு நாள் குடிநீரின் அளவு குறைந்து

கொண்டு வருவதுபற்றியும்; நிலத்தடி நீர்பற்றியும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சுட்டிக்காட்டிய கருத்துக்களின் அடிப்படையில் ஏற்கெனவே இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முக்கியமான சேரிப் பகுதிகளிலும், பிற பகுதிகளிலும் 1,800 தண்ணீர் தொட்டிகள் வைக்கப்பட்டு, 200 லாரிகளைப் பயன்படுத்தி திருவான்மியூருக்கு அப்பாலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. கோடை மழை பெய்தால், நிலைமை ஓரளவுக்குச் சீராகும். அப்படி கோடை மழை பெய்யாமல் போனால், மே, ஜூன் திங்கள்களில் இன்னும் நிலைமை கடுமையாக ஆகி, இப்போது நிலத்தடியில் இருக்கின்ற நீரின் மட்டம் இன்னும் 4, 5 அடி கீழே செல்லக்கூடிய நிலை ஏற்படும். அப்போது இன்னும் அதிகமாக லாரிகளை நாம் பயன்படுத்த வேண்டியிருக்கும். அதற்கான முயற்சிகளில் இப்போதிலிருந்தே ஈடுபட வேண்டுமென்று நாம் ஏற்கெனவே குடிநீர் வடிகால் வாரியத்திடம் சொல்லிச் சொல்லி, அவர்களும் அதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்போது நாம் ஒருநாள் விட்டு ஒரு நாள்தான், சென்னையைப் பொறுத்தவரை, தண்ணீர் தருகிறோம். மே, ஜூன், ஜூலை மாதங்களில் மழை பொய்த்துவிட்டால், நிலைமை கடுமையாக ஆகிவிடும். அப்போது தென்மேற்குப் பருவ காற்று வந்து அதன்மூலம் நமக்கு மழை வந்துவிட்டால், நிலைமை நல்லபடியாக இருக்கும். காரணம் மூன்று ஆண்டுகளாக மழை பொய்த்துவிட்ட நிலையில், வறட்சி ஏற்பட்டிருக்கும் நிலையில், தென்மேற்குப் பருவ மழையும் பொய்த்து விடுமேயானால், பிறகு நாம் வடகிழக்குப் பருவ மழையைத்தான் எதிர்நோக்க வேண்டியிருக்கும். அதற்காகத்தான் முன் கூட்டியே இருக்கிற கொஞ்சம் தண்ணீரையும் முழுமையாகப் பயன்படுத்திவிடக் கூடாது என்கிற அடிப்படையில் சிக்கன அடிப்படையில், ஒருநாள் விட்டு ஒரு நாள் சென்னை நகருக்கும், சுற்றியிருக்கிற பகுதிகளுக்கும் தண்ணீரைக் கொடுக்கிற முறையைக் கையாண்டிருக்கிறோம். மேலும் நிலத்தடி நீரை வெளியே கொண்டுவர வேண்டுமென்ற அடிப்படையில் 22 ஆழ் துளைக் கிணறுகளைத் தோண்டி அவற்றிலிருந்தும் தண்ணீர் எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கொண்டும் 15 ஆழ் துளைக் கிணறுகளைப் போடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருவான்மியூர் போன்ற பகுதிகளில் நிலத்தடி நீர் கிடைக்கிறது. அதுபோல் பொன்னேரி, மீஞ்சூர் போன்ற பகுதிகளில் எல்லாம் நிலத்தடி நீர் கிடைக்கிற காரணத்தால்தான், நெடுங்காலத்திற்கு முன்பே ஆயில் ரிபைனரீஸ் போன்ற தொழிற்சாலைகள் எல்லாம் ஏற்பட்டன. அந்தத் தொழிற்சாலை களுக்காக மீஞ்சூர், பொன்னேரி போன்ற பகுதிகளிலிருந்து நிலத்தடி நீரைக்

கொண்டு வருகிற முயற்சியில் ஈடுபட்டு ஓரளவு வெற்றியும் பெற முடிந்தது. அதுபோல் இன்றைக்கு திருவான்மியூருக்கு அப்பாலிருந்து எல்லாம் லாரி மூலம் தண்ணீர் கொண்டுவருகிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீர் குறித்து உடன்பாடு ஏற்பட்டிருப்பது பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள். உள்ளபடியே அது எல்லோருக்கும் மகிழ்ச்சியளிக்கிற ஒன்று. அது ஐயப்பாட்டுக்குரிய ஒன்று என்று அதுபற்றி பத்திரிகைகளில் செய்தி வந்தது. உடன்பாடு ஏற்படுவது ஐயப்பாட்டுக்குரிய ஒன்று என்று செய்தி வந்ததை வைத்துக்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை கூடாத நேரத்தில்—பேரவை கூடியிருந்த நேரத்தில்—"பேச்சுவார்த்தை முடிந்துவிட்டது, உடன்பாட்டுக்கு ஆந்திராவுக்கு வாருங்கள்" என்று ஆந்திரா முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவர்கள் புறப்படுவதற்கு முன்பு ஒன்றைச் சொல்லிவிட்டுப் போனார்கள். அப்போது எதிர்த்தரப்பிலிருந்த கட்சித் தலைவர்கள் எல்லாம், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இப்படி ஐயப்பாடான, மாறுபாடான செய்தி பத்திரிகைகளில் வந்திருக்கிறதே என்று சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ "இங்கே எதிர்த் தரப்பிலுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன நல்லெண்ணத்தின் அடிப்படையில் எப்படியும் இந்த உடன்பாடு ஏற்படும்" என்று சொல்லி, "நம்பிக்கை கொள்ளும் வகையில் இது அமையும் என்று நம்பிச் செல்கிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். உள்ளபடியே எந்தவிதமான ஐயப்பாட்டுக்கும், மாறுபாடான கருத்துக்கும் இடம் தராத வகையில் இந்த உடன்பாடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்பிக்கை தெரிவித்ததற்கேற்றாற்போல், ஏற்பட்டது நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியை அளிக்கிறது. சரியோ தப்போ அவர்கள் கேட்கிறார்கள், கொடுக்கலாமென்ற பெருந்தன்மை கொண்டவர்களும் இருக்கிறார்கள். அதேசமயத்தில் மாநில உணர்வுத் தன்மையில் இருக்கிறவர்களும்—பவ்வர் பாலிடெக்ஸ் அல்லது லோக்கல் பாலிடெக்ஸ்-ஐ நடத்திக் கொண்டிருக்கிறவர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் சேர்ந்து இந்த உடன்பாட்டைத் தடுத்து நிறுத்துகின்ற நிலை ஒன்றும் ஏற்படாமல் போனதும், நல்ல முறையில் இந்த உடன்பாடு கையெழுத்தானதும் நமக்கெல்லாம் பெரு மகிழ்ச்சியை அளிக்கிறது. இந்த உடன்பாடு உள்ளபடியே நாமெல்லாம் மிக மிக பாராட்டத்தக்க ஒன்று. அதற்காக இங்கே மாண்புமிகு உறுப்பினர்களில் பலரும் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்கள். அந்தப் பணி விரைவாக நடைபெறும்

என்கிற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. வருகின்ற புதன்கிழமையன்று ஆந்திராவில் இரண்டு இடங்களில் இந்தத் திட்டத்தைத் துவக்கி வைக்கின்ற அளவுக்கு, அடிக்கல் நாட்டுவிழா நடத்துகின்ற அளவுக்கு வந்து கலந்துகொள்ள வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை ஆந்திரா முதலமைச்சர் அவர்கள் கூப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு அங்கு செல்லவும் கூடும். அதற்குப் பிறகு தமிழகப் பகுதியில் அந்தத் திட்டத்தைத் துவக்குவதற்கான முயற்சிகளை நம்முடைய தமிழக அரசு எடுத்துக் கொள்ளவும் கூடும். இப்படிப்பட்ட திட்டங்களுக்காக ஆந்திரா முதல்வருக்கு மட்டுமல்லாமல், மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா முதல்வர்களுக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். மகாராஷ்டிராவிலிருந்து 500 கோடி கன அடி நீரைக் கொடுக்கிறார்கள். அதுபோல் கர்நாடகாவிலிருந்து 500 கோடி கன அடி நீரைக் கொடுக்கிறார்கள். ஆந்திராவிலிருந்து 500 கோடி கன அடி நீரைக் கொடுக்கிறார்கள். ஆக மொத்தத்தில் 1,500 கோடி கன அடி நீர் ஆந்திராவின் முயற்சியின் காரணமாக, அவர்களின் மூலமாக ஆந்திராவிலிருந்து நமக்கு வருகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கடைசியில் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டபடி, ஆவியாகும் தண்ணீர் போக நமக்கு 1,200 கோடி கன அடி நீர் தான் மிஞ்சும் என்கிற கணக்கைச் சொல்கிறார்கள். அதுபற்றி முழு விவரத்தையும் விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்க இருக்கிறார்கள். இந்தத் திட்டம் பற்றிய பிரச்சினை இப்போது ஏற்பட்டதல்ல. 1881 ஆம் ஆண்டிலேயே கர்னல் ஒருவர் எஞ்சினியராக இருந்தார், அவராலே இந்தப் பிரச்சினை ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப் பிறகு எஞ்சினியர்களாலே, வல்லுநர்களாலே ஒருவருக்கு ஒருவர் இந்தத் திட்டத்தைக் கொண்டுவரலாமென்று கருத்து தெரிவிக்கப்பட்டு, கருத்துக்கள் வளர்ந்து வளர்ந்து இப்போது தான் இதில் உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இது இப்போது ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்று நான் சொல்லவில்லை. அதற்கு முன்பு இருந்தவர்கள் ஒவ்வொருவரும் இதற்காக உதவி செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். கடைசியில் இப்போது வந்திருக்கிறது. எப்படி கடைசியில் இரண்டு, மூன்று சொட்டு பாலை விடுவதன் மூலம் குவளை நிரம்புமோ அதுபோல் நாம் அதை நிறைவு பண்ணியிருக்கிறோம். (சிரிப்பு) அந்த வகையில் பலரும் இதற்கு உதவி செய்திருக்கிறார்கள்.

மேட்டூர் அணையைப் பொறுத்தமட்டில் கூட தஞ்சை மாவட்டத்திலுள்ள சில பகுதிகளுக்கு பாசன வசதியளிப்பதற்காக இந்த அணையைக் கட்டலாம் என்கிற எண்ணத்தை முதலில் சொன்னவர் ஒரு வெள்ளைக்கார எஞ்சினியர் தான். 1826 ஆம் ஆண்டில் அவர் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார். ஆனால் சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் காலத்தில் இந்தத் திட்டம் 1925 ஆம் ஆண்டு தான் துவக்கப்பட்டது. 1925 ஆம் ஆண்டு அணையைக் கட்ட ஆரம்பித்தார்கள். ஆனால் 1931 ஆம் ஆண்டு தான் அணை கட்டி முடிக்கப்பட்டது. ஆக 5, 6 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. அதுபோல் எப்படியும் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையிலும் கூட 5, 6 ஆண்டு களுக்குள் நடைமுறைக்கு வந்துவிடும். மாண்புமிகு உறுப்பினர் திரு வீராசாமி 6 ஆண்டுக்காலத்தில் இத்திட்டம் வந்து விடுமா என்று கேட்டார். அது அவருக்கும் தெரியாது, நமக்கும் தெரியாது. (சிரிப்பு) வரும் என்று பொறியாளர்களும், வல்லுநர்களும் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதை நம்பித்தான் நாங்களும் சொல்கிறோம். கூடுமானவரை இந்தத் திட்டத்தைத் தீவிரப்படுத்தி, வேலை ஆட்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி 3, 4 ஆண்டுகளுக்குள்ளாகவே இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்கிற நல்ல யோசனையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் இந்தப் பணியை விரைவில் வல்லுநர்களின், எஞ்சினியர்களின் துணையுடன் நிறைவேற்றுவது பற்றி கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவுக் கெவ்வளவு விரைவில் இத்திட்டத்தினை முடிக்கின்ற சூழ்நிலை வருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு இதனால் நமக்குத்தான் நன்மை. இத்திட்டம் நமக்கு எவ்வளவு தூரம் பயன்படப் போகிறது என்பது மாத்திரமல்ல. இப்போது உள்ள சூழ்நிலைப்படி, இதற்காக ஏறக்குறைய 720 கோடி ரூபாய் நாம் மொத்தத்தில் செலவிட வேண்டியிருக்கும், அல்லது ஒதுக்க வேண்டியிருக்கும். ஆனால் காலம் ஆக ஆக, திட்டம் நிறைவு பெறாமலிருந்தால், மேற்கொண்டு 50 சதவிகிதம் கூடுதலாகச் செலவிட வேண்டி வரலாம். அப்போது இந்த 720 கோடி ரூபாய் என்பது ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் ஆகிவிடும். இப்படி ஏற்படுகின்ற செலவைப் பார்க்கின்றபோது கூட, காலா காலத்தில், குறிப்பிட்ட காலத்திற்குள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்பதுதான் எல்லோருக்கும் இருக்கக்கூடிய விருப்பமும். இது வெற்றிகரமாக நிறைவேறும் என்று நாம் நம்புகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் அருமையாக ஒரு கருத்தைச் சொன்னார். கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரை நாம் கொண்டு வந்து சென்னைக்கும், சென்னை நகரைச் சுற்றியிருக்கிற பகுதிக்கும் கொடுக்கத் தக்க அளவுக்கு நிலைமைகள் வந்தாலும் கூட, உள் நாட்டுப் பகுதியில் இருக்கிற நீர்த் தேக்க நிலைகளை நன்றாகக் கண்டறிந்து, ஆராய்ந்தறிந்து அவற்றை நல்லமுறையில் நீர் இல்லாத இடங்களுக்குக் கொண்டு போய் வழங்குகின்ற நிலைமைகளைப் பற்றி ஆராய வேண்டுமென்று சொன்னார்கள். அதையும் ஆராய இருக்கிறோம். அந்த வகையில் பல்வேறு திட்டங்களைப் போடுகிறோம்.

அடுத்து, வீராணம் திட்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி ஒன்றைக் குறிப்பிட்டார். அதைப்பற்றி இந்தத் துறையைச்

(பிற்பகல் 1-00)

சேர்ந்தவர்கள் விளக்கங்கள் தருகிறார்கள். வீராணம் பற்றி எங்களுக்குக் கோபம் கிடையாது, காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் வருவதிலும் கோபம் கிடையாது. அண்ணா முதலமைச்சராக இருந்தபோது அண்ணா துவக்கி வைத்த திட்டம்தான் அது. வீராணத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவது பற்றி நீண்ட நெடுங்காலமாகவே செயற் குறிப்புகள் இருக்கின்றன. மேட்டூருக்குப் பக்கத்தில் நங்கவல்லி என்ற இடத்தில் அணை போட்டு, அங்கிருந்து தண்ணீரை, பூமியின் இழுப்புப் பாதையிலேயே (Gravitation force) கொண்டுவரலாமா, அல்லது வீராணத்திலிருந்து கொண்டு வரலாமா என்பது போன்றவைகள் 40-50 ஆண்டு காலமாக இருந்துவருகிற ஒன்று. ஆகவே தனிப்பட்டவர்கள் காலத்தில் இது திட்டமாகக் கொண்டு வரப்பட்டது என்பது அல்ல. மாண்புமிகு திரு. இராகவானந்தம், அந்தத் திட்டத்திற்குச் செலவழிக்கப்படுகிற அளவுக்கு அந்தத் திட்டம் சரியாக இல்லை என்று வல்லுநர்கள் சொல்வதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு வீராசாமி அவர்கள் சொல்வது போன்று, சென்னைக்கு மட்டுமல்ல, உள்நாட்டிலே திண்டிவனம், விழுப்புரம் போன்ற பல பகுதிகளுக்குக் கூட கொடுக்கலாம் என்று சொன்னார்கள். ஆகவே சென்னைக்கு மட்டுமல்ல, வீராணம் தண்ணீரை எளிதாக, சுலபமாக சென்னைக்குக் கொண்டு வருவதில் சாத்தியக்கூறுகள் இருக்கலாம் என்பதைக் கூட பரிசீலிக்க, ஆராய அரசு தயாராக இருக்கிறது. அதில் சங்கடம் இருக்காது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 22

கடந்த 75 ஆண்டு கால வரலாற்றை நாம் புரட்டி பார்ப்போமேயானால், 44 ஆண்டு காலம் வறட்சி ஆண்டாகவே இருந்திருக்கிறது. அதிலும் 13 ஆண்டுகள் கடுமையான வறட்சியாக இருந்திருக்கிறது. 31 ஆண்டுகள் பரவலான வறட்சி. 31 ஆண்டுகள் மழை பெய்திருக்கிறது. அதில் ஒன்பது ஆண்டுகள் கடுமையான மழை ஏற்பட்டு, வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. பெரும் மழை உண்டாகிற காலத்தில், அந்த மழைத் தண்ணீரை ஒரு சொட்டு கூட வீணாக்கி விடாமல், 1,000 அடி, 700 அடி என்ற அளவுக்கு பூமிக்குக் கீழே கொண்டுபோய் தண்ணீரை விட்டுவிட்டு, தேவையானபோது அந்தத் தண்ணீரை பம்ப் போட்டு எடுத்துக்கொள்ளலாம் என்ற நீண்ட காலத் திட்டமாகப் போடலாம் என்று வல்லுனர்கள் பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார்கள். பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மழை பெய்கிறபோது, சித்திரை மாதம் போல் சிக்கனமாக இருந்து, அந்தத் தண்ணீரை கடலுக்குப் போக விடாமல், வீணாக்கி விடாமல், பூமிக்குள்ளேயே இறக்கிவிடலாம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முறைகளை பாலைவனம் போன்ற பகுதிகளில் கையாளுகிறார்கள். அப்படிப்பட்ட முறைகளைக்கூட நாம் ஏன் கையாளக்கூடாது என்று நினைக்கிறோம். ஏனென்றால், எதிர்காலத்தைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, இரண்டாயிரம் மூன்றாயிரம் ஆண்டுகளாக பஞ்சம் வருவதும், வெள்ளம் வருவதும், அது இயற்கையாக மறைவதும், பிறகு கடும் பஞ்சம் வருவதும், கடும் வெள்ளம் வருவதும், ஆக இப்படி இயற்கையின் தன்மை மாறி மாறி வருவதால், அதைச் சமாளிக்க நவீன விஞ்ஞான முறைகளைக் கூட நாம் ஆராயக்கூடிய தன்மையில் இருக்கிறோம்.

நெய்வேலி தண்ணீர் பிரச்சினைபற்றிச் சொன்னார்கள். கிருஷ்ணா தண்ணீர் வருவதை நாம் பூரணமனதோடு வரவேற்கிறோம். ரயில்வேக்கு நாம்தான் தண்ணீர் முழுமையாகக் கொடுத்து வந்திருக்கிறோம். துறைமுகத்துக்கும் நாம்தான் கொடுத்து வந்தோம். எல்லோருக்கும் தண்ணீர் தட்டுப்பாடு மாதிரி, அந்த அடிப்படையில் ரயில்வேக்கு நம்மால் தண்ணீர் கொடுக்க முடியவில்லை. ஓரளவுக்கு ரயில்வேக்கும், துறைமுகத்துக்கும் குறைத்துத்தான் கொடுக்கிறோம். அவர்களுக்கு ஏற்பட்ட பற்றாக்குறையால் ஒரிசாவிலிருந்து கப்பல் மூலமாக அவர்களுக்காகத் தண்ணீர் கொண்டுவருவதும், ரயில்வேயின் பற்றாக்குறையைத் தீர்க்க ரயில் வேகன்களில் தண்ணீர் கொண்டு வந்து அவர்கள் பற்றாக்குறையைத் தீர்த்துக்கொள்வதும் மகிழ்ச்சிக்குரிய ஒன்று. இங்கே இருக்கிற மற்ற நிறுவனங்களை கவனிக்கிற பொறுப்பும் நமக்கு இருக்கிறது. அதையும் செய்ய வேண்டும். இன்னும் சொல்லப்போனால்,

1983 ஏப்ரல் 22] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இன்னும் கூடுதலாகத் தண்ணீர் கொண்டு வந்து, பொதுமக்களுடைய கஷ்டத்தையும் போக்க வேண்டும். அதையும் வற்புறுத்துகிறோம். ஆக இவைகளைப் பாராட்டுகிறோம். வேண்டும் என்கிறோம். வேண்டாம் என்று சொல்லவில்லை. நெய்வேலி தண்ணீரைக் கொடுக்கிறேன் என்று அவர்கள் சொன்னதும் அதற்கான பேச்சு வார்த்தைகள் நடக்கின்றன. அதையும் வேண்டாம் என்று சொல்லவில்லை எங்கிருந்தாலும் தண்ணீர் வேண்டும். நெய்வேலி தண்ணீரையும் கொடுத்து வேகன்களையும் இலவசமாகக் கொடுத்து விஜயவாடாவிலிருந்து கொண்டு வருவது மாதிரி இருக்க வேண்டும் என்று பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்தத் தண்ணீரை சென்னைக்கு மட்டுமல்லாமல், திண்டுக்கல்லுக்கும் கொண்டுபோகலாமா என்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் "திண்டுக்கல்லுக்குப் போவதைப்போல திண்டிவனத்துக்கும் கொடுக்கக்கூடாதா?" என்று கேட்டார்கள். அங்கே கொடுக்கக்கூடாது என்பது அல்ல. திண்டுக்கல்லில் எங்கள் கட்சி எம்.எல்.ஏ. இல்லை. "அப்படியே உங்களிடம் திண்டிவனம் இருந்தாலும் என்றைக்குமே உங்களிடம் இருக்கவா நாங்கள் விட்டு விடுவோம்?" இப்போதே அந்த மக்கள் மகிழ்ச்சி பெறத்தக்க வகையில் நாங்கள் செய்தால்தான், அடுத்த தேர்தலிலாவது அந்தத் தொகுதி எங்களுக்கு வரும் அந்த நோக்கத்தின் அடிப்படையிலாவது செய்வோமே தவிர, எந்தத் தொகுதிக்கும் செய்யக்கூடாது என்பது அல்ல. காரணத்தைக் கண்டறிந்து, நெய்வேலியிலிருந்து கொண்டுவரும்போது, அருகில் உள்ள ஊர்களுக்குக் கொடுத்தால், செலவும் குறையும். அப்படி பகிர்ந்து அளிக்கப்படும் என்ற கருத்தும் பரிசீலனையில் இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் (அவையில் இல்லை) எடுத்துச் சொல்கிறபோது, குடிநீர் மெயின் குழாய்களிலிருந்து பம்ப் போட்டு, மெயின் லயனிலிருந்து தண்ணீரைத் திருட்டுத்தனமாக எடுத்துவிடுகிறார்கள் என்று சொன்னார். அதைப் பரவலாக நாமும் கேள்விப்பட்டிருக்கிறோம். குடிநீர் வடிகால் துறையினராலும், தேவைப்பட்டால் காவல்துறையினராலும் அப்படிப்பட்ட தீய விளைவுகளைத் தடுப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும். மின்சாரத்தைத் தடைப்படுத்துகிற நேரத்தில் குடிநீரை விடலாமா என்று கூட யோசனை சொன்னார்கள். அது நடைமுறைக்கு சாத்தியமா, ஒழுங்குபட்டு வருமா, மற்றவர்கள் அதனால் பாதிக்கப்படாமல் இருப்பார்களா என்று பார்த்து வேறு தொழில்கள் இதனால் பாதிக்கப்படாமல் இருக்குமா என்ற கூறுபாடுகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான் செய்ய வேண்டும். இது ஒன்றை மட்டுமே மனதில் வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சினையில்

ஆணையிட முடியாது. ஆனால் அது சிந்தனைக்குரிய ஒன்றாக இருக்கிறது. இப்படித் திருட்டுத்தனமாகத் தண்ணீரை எடுக்கிற முயற்சிகளைத் தடுத்து யார் யாருக்கு முறையாகத் தண்ணீர் கிடைக்கச் செய்ய வேண்டுமோ அவர்களுக்குக் கிடைக்கச்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வசந்த பை அவர்கள் இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். ஸ்ரீரங்கத்தைத் திருவரங்கம் என்று மாற்றுகிறோம் என்றும் இப்படிப்பட்ட வடமொழிப் பெயர்களை மாற்றும் முயற்சியில் ஈடுபட வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்கள். வடமொழியின் சிறப்பு, உயர்வு இவைபற்றியெல்லாம் சொன்னார்கள். வடமொழியின் தனி உயர்வு, சிறப்பு, அதிலே இருக்கிற சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள், புராணங்கள், இதிகாசங்கள், உபநிஷத்துகள் ஆகியவற்றைப்பற்றியெல்லாம் நாம் ஒன்றும் சொல்ல வரவில்லை. அதற்கு இருக்கிற தனிச் சிறப்பு இருக்கிறது. வட மொழி இருக்க வேண்டிய இடத்தில், இருக்கக்கூடிய இடத்தில், அதற்கு உரிமையான இடத்தில் இருந்து அதை நீக்கிவிட்டு, நாம் தமிழைக் கொண்டுபோய் அங்கே வைத்தால், அது தவறுதான். அந்தந்த மொழிக்குரிய இடம், அந்தந்த மொழிக்குரிய சிறப்பு, அந்தந்த மொழிக்குரிய வரலாற்றுச் சிறப்புகள் அந்தந்த மொழிகளுக்கு இருப்பது குறைபாடல்ல. நமக்கு இருக்கிற சங்கடங்கள் எல்லாம் அது திருவரங்கம் என்றுதான் இருந்தது. "ஆதலால் இப்பிறவி வேண்டேன், அரங்கமா நகருளானே" என்றுதான் ஆழ்வார்கள் எல்லாம் பாடியிருக்கிறார்கள். அந்தப் பாடலில் 'திருவரங்க மாலை' என்றுதான் இருக்கிறது. பாடிய ஆழ்வார்கள், மற்றவர்கள் எல்லாம் 'திருவரங்கம்' 'திருவரங்கம்' என்றுதான் சொல்லிப் பாடியிருக்கிறார்கள். அரங்கம் என்றாலே இரண்டு ஆற்றுக்கு நடுவில் இருக்கிற திட்டுக்குப் பெயர்தான் அரங்கம். ஒரு பக்கம் கொள்ளிடமும், ஒரு பக்கம் காவிரியும் சென்று அது ஒரு திட்டாக அமைந்திருக்கிறது. அதனால் தான் அரங்கம் என்று சொல்வார்கள். அதன் சிறப்பு குறித்து, அழகு குறித்து, மேன்மை குறித்து, உயர்வு போன்ற பல்வேறு சிறப்புகளைக் குறிக்கத்தான் 'திரு' என்ற அடைமொழியைச் சேர்ப்பது தமிழர்களுடைய சிறப்பியல்பு. அந்த வகையில் அரங்கத்தை திரு அரங்கம் என்று அழைத்தார்கள். ஆனால் திருவரங்கம் என்று இருந்ததை ஸ்ரீரங்கம் என்று ஆக்கிவிட்டார்கள். (சிரிப்பு) அந்த ஸ்ரீரங்கத்தை மறுபடியும் திருவரங்கமாக மாற்றுகிறோமே தவிர, வடமொழிப் பெயரை நாம் மாற்றிவிடவில்லை. (பலத்த சிரிப்பு) திருமறைக்காடு என்றுதான் நாயன்மார்கள், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் எல்லாம் பாடினார்கள். திருமறைக்காடு, திருமறைக்காடு என்றுதான் அவர்கள் பாடியிருக்கிறார்கள்.

இப்போது கூட ஆங்கிலத்தில் மோகம் வந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதுபோல் இடையில் ஒரு மோகம் வந்திருக்கிறது. சமஸ்கிருதம் தெரிந்து, அதைக் காண்பிக்கிறதில் ஒரு மோகம், அதைச் சொல்லிக்கொள்வதில் ஒரு மோகம், சமஸ்கிருதத்தில் நடைபெறுகிறது என்று சொல்லிக் கொள்வதில் ஒருமோகம், அதிலே ஒரு உயர்வு, ஏனென்றால் தெரியாத மொழியைப் பேசுவதில் சிறப்பு என்று நினைத்துக் கொள்வது, காரணம், ஊரிலேயே இரண்டு பேர்தான் சமஸ்கிருதம் படிப்பார்கள், அது தனிச்சிறப்பு, தனி ஆற்றல் என்று நினைத்துக்கொண்டு, தெரியாத ஒன்றைச் சொன்னால் இவருக்கு எல்லாம் தெரியும் போல இருக்கிறது என்று நினைப்பார்கள் என்று பேசுவார்கள். தெரிந்ததைச் சொன்னால் புரிந்து போய்விடுமே என்று சொல்லமாட்டார்கள். அப்படியே விட்டுவிட்டதால், அப்படியே சமஸ்கிருதத்தில் எல்லாப் பெயரையும் மாற்றும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அதனால் திருமறைக்காட்டை வேதாரண்யம் என்று மாற்றிவிட்டார்கள். மறை என்றால் வேதம், காடு என்றால் ஆரண்யம். திருமறைக்காடு என்பது முதலில் இருந்த பெயர். அதை வேதாரண்யம் என்று மாற்றிவிட்டார்கள். ஆக மறுபடியும் அதை திருமறைக்காடாக மாற்றுகிறோமே தவிர, வேறு மாற்றம் செய்யவில்லை. அதுபோல திருமுதுக்குன்றத்தை விருத்தாசலம் என்று மாற்றிவிட்டார்கள். குன்றம் என்றால்

(பிற்பகல் 1—10)

அசலம். முது என்றால் பழமையானது. திருமுதுகுன்றம் என்றுதான் ஏடுகளில் எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அது பின்னாலே விருத்தாசலம் என்று மாறியிருக்கிறது. அதைப்போலத்தான் திருவில்லிபுத்தூர் என்று இருந்ததுதான் பின்னாலே ஸ்ரீவில்லிபுத்தூராக மாறியிருக்கிறது. திருப்பெரும்புதூர்தான் ஸ்ரீபெரும்புதூராக மாறியிருக்கிறது. இராமானுஜர் பிறந்தபோதும், பெரியாழ்வார் வாழ்ந்த காலத்திலும் திருப்பெரும்புதூர், பெரும்புதூர் என்றுதான் வழங்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே மயிலாடுதுறை என்று இருந்தது. மாயவரமாகி, மாயூரமாகி இப்போது மீண்டும் மயிலாடுதுறை என்று மாற்றப்பட்டிருக்கிறது. எனவே இதிலெல்லாம் மொழிப் பிரச்சினை எதுமில்லை. மொழி வெறி எதுமில்லை. வேறு மொழியில் கொண்டுபோய் நம்முடைய மொழியைப் புகுத்தினால், அது தவறு. ஆனால் தமிழன், தமிழ் மொழியை, தமிழகத்தில் பயன்படுத்த வேண்டும் என்று சொல்வது எந்த வகையிலும் தவறல்ல என்பதைத்தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இருப்பதை ஏற்றுக் கொண்டால்தான், விசாலமான

அறிவு வரும் என்று சொல்ல முடியாது. ஆங்கிலத்தில் நாம் தினம் தினம் புதிய வார்த்தைகளைப் புகுத்திக்கொண்டிருந்தால், அது சரியாக இருக்காது. This is a garland. என்பதை மாற்றி "திஸ் ஈஸ். எ பூமாலை" என்று சொல்லி, புதிதாக ஆங்கிலத்தில் ஒரு சொல்லைச் சேர்க்கிறேன் என்று சொன்னால், யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆங்கிலம் அதற்கு இடம் தராது. எனவே நமக்கு உரிய இடத்தில் நமது மொழியைப் பயன் படுத்த வேண்டும் என்ற நோக்கமே தவிர, இதில் எதோ தகராறு செய்ய வேண்டும் என்ற எண்ணமில்லை.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதுகிற கடிதங்களுக்குப் பதில் வருவதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் இங்கே குறைபட்டுக் கொண்டார்கள். பொதுவாக எல்லா அமைச்சர்களுக்கும் மற்றவர்களுக்கும் இதுகுறித்து தக்க அறிவுரைகள் ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப் பினர்கள், புகார், அல்லது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிடும் வேண்டுகோள்களைக் கொடுப்பார்களானால், அதுபற்றி அவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுபற்றி "இந்த நிலையில் ஆராயப்படுகிறது" என்று சொல்லப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதைப்போலவே நடவடிக்கை முடிந்து திரும்ப வருகிற போது அல்லது நடவடிக்கை எடுத்து நடவடிக்கையின் முடிவைத் தெரிவிக்கும் போது, யார் பெட்டிஷன் கொடுத்தார்களோ அவர்களுக்கு மட்டும் சில சமயம் பதில் போய்விடுகிறது. எந்தச் சட்டமன்ற உறுப்பினர் அந்தப் பெட்டி ஷனைக் கொண்டுவந்து கொடுத்தாரோ அவருக்கு எந்தத் தகவலும் தெரிவிக் கப்படுவதில்லை. எனவே நடவடிக்கை எடுத்து உண்டு அல்லது இல்லை என்று தெரிவிக்கிறபோதும், அல்லது நிலைமையை விளக்குகிறபோதும், பெட்டிஷன் கொடுத்தவர்களுக்கு மட்டும் பதில் போவது என்றில் லாமல் எந்த உறுப்பினர் அந்த பெட்டிஷனைக் கொண்டு வந்து கொடுத்தாரோ அவருக்கும் 'காப்பி' போடப்பட வேண்டும், அதுதான் நல்லது என்கிற அளவுக்கு அமைச்சரவையிலேயே இது அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. பெரும் பாலான அமைச்சர்கள் இம்மாதிரி பதில் எழுதுகிறார்கள். சில சமயங்களில் எழுத முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. உண்டு அல்லது இல்லை என்று உரியவர்களுக்குத் தெரிவித்துவிட்டால், எங்களுக்கும் அது நல்லதாக இருக்கிறது. காரணம் பிரச்சினை அதோடு முடிந்துவிடும். இல்லையென்றால் இரண்டு வாரத்திற்கு ஒருமுறை அவர் திரும்பத் திரும்ப பெட்டிஷன் கொண்டு

வந்து கொடுக்கிற நிலைமைதான் ஏற்படுகிறது. அன்றைக்கே கொடுத்தீர்களே என்றால், நீங்கள் எங்கே மறந்துவிட்டீர்களோ என்று நினைத்தேன் என்று சொல்லுகின்றார். இல்லையென்றால், "முன்னாலே கொடுத்ததன் மேல் நடவடிக்கை எடுத்தீர்களோ இல்லையோ என்று தெரியவில்லை. ஆகவே இப்போது கொடுக்கிறேன்" என்று சொல்லுகிறார். இப்படி ஒரே மாதிரியான விண்ணப்பங்கள் நான்கு அல்லது ஐந்து எங்களுக்கு வந்து சேருகிற நிலை மையும் இருக்கிறது. எனவேதான் உண்டு அல்லது இல்லை என்ற பதிலைத் தெரிவித்துவிட்டால், எல்லோருக்கும் நல்லதாக இருக்கும். சில நேரங்களில் பொதுமக்கள் நியாயம் வேண்டும் என்று எதிர்பார்க்கும்போது, சட்டமன்ற உறுப்பினர்களை அணுகுவது என்பது நியாயமான ஒன்றுதான். சில நேரங்களில் நியாயம் கிடைக்க உறுப்பினர்கள்தான் பரிந்து பேச வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கூட இதுபற்றி அமைச்சரவைக் கூட்டத்திலேயே எடுத்துச் சொல்லி, எல்லா அமைச்சர்களுக்கும் அறிவுரை தந்திருக்கிறார்கள். எனவே அவர்களும் அதைக் கடைப்பிடிப்பவர்கள் என்பதில் யாருக்கும் எந்தவிதமான ஐயப்பாடும் தேவையில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். சிலபல இலாக்காக்களில் செய்கிறார்கள். சிலர் தவறி விடுகிறார்கள். அந்தத் தவறுகள் இனி திருத்தப் படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு காலவரையறை தேவை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இப்போதே அது பற்றிய விதிகள் இருக்கின்றன, எந்த எந்த பைல் எவ்வளவு நாட்களுக்கு இருக்கலாம், எவ்வளவு நாளில் திரும்ப அனுப்பப்பட வேண்டும் என்று விதிகள் இருக்கின்றன. அவற்றை நாங்களேகூட வற்புறுத்திக் கொண்டிருக் கிறோம். அப்படியும் சில நேரங்களில் காலத்தாழ்வு ஏற்பட்டுவிடுகிறது. இங்கே அவையில் கூட கேள்விகள் கேட்கப்பட்டால், இத்தனை நாளில் பதில் சொல்லப்பட வேண்டும் என்று விதி இருக்கிறது. நாங்கள் அதைத் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள்கூட ஓராண்டுக்கு முன்பு கேட்கப் பட்ட வினாக்களுக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை என்று குறிப்பிட் டார்கள். இத்தனை நாட்களுக்குள் பதில் வந்தாக வேண்டும் என்று நாங்களும் வற்புறுத்திக்கொண்டுதான் இருக்கிறோம் ஆனாலும் சில எதிர்பாராத வகையில் காலத் தாழ்வுகள் ஏற்படுகிற சூழ்நிலை உருவாகிவிடுகிறது. ஆனாலும்

இங்கே பேசப்படுகிற பேச்சுக்களின் அடிப்படையிலும், நாங்கள் கொடுக்கிற உறுதிமொழிகளின் அடிப்படையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பத் திரும்ப வற்புறுத்துகிற அடிப்படையிலும், இனி காலத்தாழ்வு ஏற்படாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள் கிறேன். இல்லையென்றாலும் இந்தக் காரணத்தால் இது தேங்கியிருக்கிறது, அல்லது இதில் தடை ஏற்பட்டிருக்கிறது என்ற விவரத்தையாவது எடுத்துச் சொல்வது நலமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

அடுத்து, உணவுப் பங்கீடு முறையில் உள்ள குறைகளைச் சீர்திருத்த வேண்டும் என்பதற்கான காரணங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். உணவுபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசும் போதே நான் நீண்ட விளக்கத்தைக் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் போன்றவர்கள் மீண்டும் அதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னபடி, ஒரு குழு அமைப்ப தற்கான முயற்சிகள் அந்தத் துறையால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதன்மூலம் அந்தத் துறையின் மூலம் மட்டுமல்லாமல் தனியார் மூலமாகவும் சில இடங்களில் - அதாவது வாடகை நஷ்டமில்லாமல் வேறு பல செல வினங்கள் இல்லாத வகையில் அதைச் செய்ய இயலுமா என்பதை ஆராய்ந்து பார்த்து முடிவுகளை எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது. இதற்கு ஒரு குழு அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று சொல்லிக்கொள்கிறேன்.

உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நமது மாநிலத்தில் ஏறத்தாழ 61 அல்லது 62 இலட்சம் டன் அரிசி விளைகிற அளவுக்கு இங்கே சூழ்நிலை இருக்கிறது இது ஆண்டுக்காண்டு வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதில் யாருக்கும் எந்தக் கருத்து வேறுபாடும் இருக்க முடியாது.. அதிலும் புதிய புதிய முறைகளை நாம் மேற்கொண்டிருப்பதாலும், நீர்ப் பாசனத் திட்டங் களைத் தொடர்ந்து சீர்படுத்திக் கொண்டிருப்பதாலும், புதிய புதிய வகை களைக் கண்டுபிடித்துக்கொண்டிருப்பதாலும், ஐ.ஆர். 8, ஐ.ஆர். 5, ஐ.ஆர். 21, ஐ.ஆர். 33, ஏ.டி.டி. 27 போன்ற ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாலும், பொறுக்கு விதைகள் காரணமாகவும், ஒரு போகம் என்றிருந்த நிலைமைகளை மாற்றி இரண்டு போகம், மூன்று போகம் என்று ஆக்கப்பட்டிருப்பதாலும், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குக் கிணற்று நீர்ப்பாசனம் மூலமாகவும் பம்ப்செட் மூலமாகவும் நாம் உணவு உற்பத்தியை அதிகரித்துக் கொண்டே வந்திருக்கிறோம். பம்ப்செட்களைப் பொறுத்த வரையில்,

தொடர்ந்து பல ஆண்டுகளாக நாம் அதற்கு ஆதரவு அளித்து வந்திருக் கிறோம். காங்கிரஸ் ஆட்சியிலும் சரி, தி.மு.க. ஆட்சியிலும் சரி, பிறகு இந்த ஆட்சியிலும் சரி, தொடர்ந்து ஆதரவு தரப்பட்டதால், அகில இந்தியா விலேயே அதிகமான அளவுக்கு அதாவது சுமார் 9-3/4 இலட்சம் கிணறு களுக்கு பம்ப்செட் தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். இதன் காரணமாக வடாற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் விளைச்சல் அதிக மாகப் பெருகியிருக்கிறது. 'மார்ஜினலி சர்ப்ளஸ்' என்று சொல்லுகிற அளவுக்கு நிலைமை உருவாகியிருக்கிறது. ஆக சாதாரணமாக 62 இலட்சம் டன் உணவு தான்யம் விளைகிற நம் மாநிலத்தில் 1982-83 ஆம் ஆண்டில் வெறும் 28 இலட்சம் டன் அளவுக்கு மட்டுமே விளைச்சல் இருந்த காரணத் தால், பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இதற்காகத்தான் மத்திய அரசு நமக்கு உதவிட வேண்டும் என்று மாதத்திற்கு 80,000 டன் அரிசியும் 40,000 டன் கோதுமையும் தர வேண்டும் என்று கேட்டோம். எப்ரல் மாதத்திலிருந்து 15,000 டன் அரிசியும் 15,000 டன் கோதுமையும் தருவதாக வாக்களித்துள்ளார்கள். மே மாதம் முதல் 20,000 டன் கோதுமையும், 15,000 டன் அரிசியும் தருவதாக இப்போது வாக்களித்திருக்கிறார்கள். கொடுத்திருக்கிற அளவுக்கு நாம் நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டாலும், இது போதுமான அளவுக்கு இல்லை என்பதால், தொடர்ந்து அவர்களுக்கு நாம் கடிதங்களை எழுதிக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால் போகப்போக கடினமான காலம் வரக்கூடும். சாதாரண காலத்தைவிட ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்கள் பொதுவாகக் கடுமையாக இருக்கும். இந்த ஆண்டு எப்படியாகுமோ என்று அச்சப்பட்டுக் கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. எனவே இப்போதே 'பஃப்பர் ஸடாக்' சேர்த்து வைத்தால் தான் ஓரளவுக்குப் பொதுமக்களுக்குப் உணவுப் பொருள்களை வழங்க முடியும் என்பதால், தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டிருக் கிறோம்.

அகில இந்தியாவிலும் 1981-82 ஆம் ஆண்டில் விளைந்த விளைச்சல் 13 கோடியே 60 இலட்சம் டன். இது மத்திய அரசே நாடாளுமன்றத்தில் அறிவித்த விவரம். ஆனால் 1982-83 ஆம் ஆண்டில் உற்பத்தியானது 12 கோடியே 20 இலட்சம் டன்தான். இன்றைக்குக் கூட வானொலியில் இதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒரு கோடி சொச்சம் டன்தான் குறைவு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இதில் மத்திய அரசு எவ்வளவு கொள் முதல் செய்திருக்கிறது என்றால் 12½ சதவீதம்தான். 25 அல்லது 30 சத வீதம் அளவுக்கு அவர்கள் கொள்முதல் செய்திருக்கலாம். ஆனால்

வர்கள் 12½ சதவீதம் அளவுக்கு மட்டுமே கொள்முதல் செய்த காரணத்தால் ஹரியானா, பஞ்சாப் போன்ற இடங்களில் ஓப்பன் மார்க்கெட்டில் தனி வியாபாரிகள் நெல்லை விற்றுக் கொண்டிருக்கிறார்கள். கோதுமையை விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதனால் தான் வறட்சி மாநிலத்தைச் சார்ந்தவர்கள் பலரும் அங்கே போய் அலைந்து கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு குறைந்தபட்சம் 30 சதவீதம் அளவுக்குக் கொள்முதல் செய்திருந்தால், நல்ல நிலைமைகள் உருவாகியிருக்கும். காரணம் அவர்களின் சொந்த உபயோகத்திற்கும் மற்ற மற்ற சூழ்நிலைகளுக்குமாக சுமார் 70 சதவீதத்தை விட்டுவிட்டு சுமார் 30 சதவீதம் அளவுக்குக் கொள்முதல் செய்திருந்தால், ஓரளவுக்கு இன்றைக்குப் பற்றாக்குறையால் பரிதவிக்கும் மாநிலங்களுக்கு தேவையான அளவுக்குக் கொடுத்திருக்க முடியும். ஆனால் அவர்கள் எட்டில் ஒரு பகுதிதான் கொள்முதல் செய்தார்கள். மிகக் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிற காரணத்தால், மேற்கு வங்கம் 4 இலட்சம் டன் கேட்கிறது. கேரளம் சுமார் 2½ அல்லது 2¼ இலட்சம் டன் கேட்கிறது. நாம் 80,000 டன் மாதம் கேட்கிறோம். இதைவிட இராஜஸ்தான் மாநிலம் இன்னும் அதிகமாகக் கேட்கிறது. மகாராட்டிரம் இன்னும் அதிகமாகக் கேட்கிறது. இந்த நிலைமையில் நாம் என்ன செய்திருக்கிறோம் என்றால், கொள்முதலை அதிகப்படுத்த வேண்டும் என்று முடிவெடுத்து செயல்படுகிறோம். அதாவது தஞ்சை மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்தின் ஓரத்திலும் இருப்பவர்கள் தங்களின் சொந்த உபயோகத்திற்குப் போக "மார்க்கெட்பிள் சர்ப்ளஸ்" என்று சந்தைக்குக் கொண்டு வருகிற நெல்லை வியாபாரிகள் வாங்கக் கூடாது, 100-க்கு 100 சதவீதம் அரசே கொள்முதல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறோம்.

(பிற்பகல் 1-20)

அவர்கள் 12½ சதவீதம் கொள்முதல் செய்யும்போது நாம் 100-க்கு 100 சதவீதம் கொள்முதல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர்கள் தொடர்ந்து தந்திருந்தால், தஞ்சாவூரில் 50 சதவீதம் லெவியை தொடர்ந்து வைத்திருப்போம், 100 சதவீதம் கொள்முதல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. நாம் 50 சதவீதம் நெல்லை விட்டிருந்தால், அதை தஞ்சை வியாபாரிகள் அல்லது சேலம், தர்மபுரி மாவட்ட வியாபாரிகள் வாங்கியிருப்பார்கள். வேறு பல மாவட்டங்களுக்கும் போய் வெளிச் சந்தையில் விற்கும் நிலை ஏற்பட்டிருக்கும். அப்படி இல்லாமல் ஆந்திராவிலிருந்து தனிப்பட்டவர்கள் வாங்கிக்கொண்டு வந்து விற்கிற அரிசியை நம்பி வாழ வேண்டியிருப்பதால் நாலு ரூபாய் நாலரை ரூபாய்க்கு விற்க வேண்டிய

நிலைமை இருக்கிறது. இல்லையென்றால் கிலோ ஒன்றுக்கு ரூ. 3.80 அல்லது ரூ. 3.60 என்ற நிலையில் நிறுத்தியிருக்கலாம். ஆகவே மீண்டும் மத்திய அரசு சிந்திக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம்.

Thiru A. R. DAMODARAN : Sir, I would like to inform the Hon. Minister that the Government of India are more concerned about protecting the interests of the wheat farmers of Punjab and Haryana. Perhaps the Tamil Nadu Government do not bother about farmers at all. This is very clear from the Hon. Minister's statement. They are anxious to see that the farmers increase production, while we are interested in distribution and not in production.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் கூறுவது போன்று, அதற்கான சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். அங்கே நெல் கமர்ஷியல் கிராப்தான். பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களில் அவர்கள் உபயோகப்படுத்துகிற பொருள் கோதுமை. நெல் எவ்வளவு விளைந்தாலும், அது பிற மாநிலங்களுக்கு விற்கிற பொருளாக இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையில் அவர்களிடத்திலே 75 சதவீதம் லெவியைப் போட்டாலும், அந்த மாநிலத்தவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். அதையும் வற்புறுத்தி வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறிய மாதிரி, இங்கேயுள்ளவர்களுக்கு ஊக்கம் தர வேண்டும் என்பதை ஒத்துக்கொள்ளுகிறோம். இங்கேயுள்ள விவசாயிகள் நிம்மதி பெறத்தக்க அளவிற்கு, மேலும் சிறப்பாகச் செயல்படத்தக்க அளவிற்கு சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டும். விவசாயிகளுடைய பொருளாதாரம் பாதிக்கப்பட்டால், மற்றவர்களுடைய பொருளாதாரமும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை வரும். விவசாயிகளிடத்திலே விவசாயச் செலவு போக, தங்கள் குடும்பத்தை நடத்துகிற செலவு போக, அவர்கள் கையில் 300 ரூபாய், 400 ரூபாய் மிஞ்சினால்தான், அதிலே அம்பத்தூர் சைக்கிளை வாங்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். தஞ்சாவூரில் உள்ள விவசாயிக்கு 300, 400 ரூபாய் மிஞ்சவில்லை என்றால், டிரான்சிஸ்டரை, சைக்கிளை வாங்கும் முயற்சி அவர்களுக்கு இருக்காது. அப்போது சைக்கிள் நகராது, டிரான்சிஸ்டர் நகராது. பிறகு அதனுடைய உற்பத்தி அப்படியே நிற்கும். உற்பத்தி நிற்பதால், 'லே ஆஃப்' விட வேண்டிய கட்டாயமும் தொழிற்சாலைக்கு ஏற்படும். ஆகவே இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் நாம் கவனித்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே ஒரு உயர் மட்டக் குழுவைப் போட்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் விவசாயிகளுக்கு உள்ள கடன் வசூலைத் தள்ளி வைக்க வேண்டும் என்றார்கள். அதற்கென்று இலக்கணம் இருக்கிறது. அந்த இலக்கணத்தின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில் பல மாவட்டங்களில் வரி தள்ளுபடி செய்யப்பட்டு வருகிறது. குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாகவும், மத்திய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாகவும் மாற்றுகிற முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இருக்கின்ற இலக்கணத்தின் அடிப்படையில் வேறு பல முயற்சிகளையும் கூட்டுறவுத் துறையினரும், வருவாய்த் துறையினரும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதிலே காலத்தாழ்வு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும், நீண்ட காலமாக ஆக்கி கொடுமைகளுக்கு உள்ளாக்கக் கூடாது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

வறட்சி நிவாரணப் பணிகளுக்காக கிட்டத்தட்ட 222 கோடியே 42 இலட்சம் ரூபாய் ஆகும் என்று மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். மத்திய அரசினர் 63 கோடியே 72 இலட்சம் ரூபாய்க்கு நமக்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். 63 கோடியே 72 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி அளித்திருக்கிறார்கள் என்றாலும் அந்தப் பணம் முழுவதும் மத்திய அரசிடமிருந்து வருகிறது என்று பொருள் அல்ல. இதை மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். மற்றவர்களும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். மாநில அரசின் சார்பாக வறட்சிப் பணிக்கு இரண்டாண்டுகளுக்கு, ஓராண்டுக்கு 8 கோடி என்ற அளவில் ரூபாய் 17 கோடியே 18 இலட்சம் நம்முடைய வறட்சிப் பணிக்கு ஒதுக்குகிற பணத்திலேயிருந்து செலவழிக்க வேண்டும். மீதித் தொகையான ரூபாய் 46 கோடியே 54 இலட்சத்திற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். இதிலே 30 சதவீதமான ரூபாய் 13 கோடியே 95 இலட்சம் ரூபாயை மத்திய அரசு நமக்கு மானியமாகத் தருகிறது. மற்ற 70 சதவீதத் தொகையை கடனாகத் தருகிறார்கள். அந்தக் கடனை ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு ஒதுக்கும் தொகையிலிருந்து கழித்துக் கொள்வார்கள். ஆக ரூபாய் 63 கோடியே 72 இலட்சத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்தாலும் மத்திய அரசு மானியமாகக் கொடுப்பது 13 கோடியே 95 இலட்சம் ரூபாய்தான். அவர்களுடைய அனுமதிக்காக நாம் காத்திராமல், இதுவரையில் 57 கோடி ரூபாய் அளவிற்கு, குடிநீர், வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நாம் ஆணையிட்டிருக்கிறோம். எப்படியும் வரும் என்று கருதி நாம் இந்தச் செலவுகளுக்கு அனுமதி அளித்

திருக்கிறோம். 63 கோடியே 72 இலட்சம் ரூபாய் வறட்சி நிவாரணப் பணிகளை முழுமையாக நிறைவேற்றுவதற்குப் போதுமானதாக இருக்காது, ஆகவே மேற்கொண்டு வழங்க வேண்டும் என்பதை வற்புறுத்தி வருகிறோம். மத்திய அரசு இருக்கின்ற நிலைமைகளைக் கண்டறிந்து தரும் என்று எதிர்பார்க்கிறோம். மத்திய அரசு இந்த ஆண்டு வெள்ள, வறட்சிப் பணிகளுக்காக மொத்தத்தில் 700 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. இதிலே நம்முடைய மாநிலத்திற்கு 13 கோடியே 95 இலட்சம் ரூபாய் மானியமாகக் கிடைத்திருக்கிறது. அதிலே அதிகமான பங்கு வேண்டும் என்று கேட்க நமக்கு உரிமை இருக்கிறது. ஆகவே இருக்கின்ற சூழ்நிலைகளைக் கண்டு அதிகமாகத் தாருங்கள் என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம் என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் வேறு பல துறைகளைப்பற்றி, கல்வித் துறையைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கல்வி அமைச்சர் அவர்கள் அதைக் கவனித்துக் கொள்வார்கள். அவரும் அவ்வப்போது பல விளக்கங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். நிதி சம்பந்தமான நிலைமைகள் வருகிறபோது, அவர்கள் என்னோடு கலக்கிறபோது, நியாயத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்படும் என்று எடுத்துச் சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய வேறுபல கருத்துக்களின் மீதும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அகவிலைப் படியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு இப்போது அறிவித்திருக்கிறது. வழக்கம்போல் மாநில அரசு எப்படித் தருவது என்பதற்கான சூழ்நிலைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. எப்படியும் கிடைக்கும் என்பதை எடுத்துச் சொல்லி, அதனுடைய காலம், நிலைமைகள் என்ன என்பதை பின்னால் அறிவிப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓய்வு பெற்றால் பத்தாயிரம் ரூபாய் கொடுப்பது பற்றி எடுத்துச் சொன்னார்கள். எல்லாம் சரியாக இருக்கிறது. ஒரு நாள் குறிப்பிட்ட பிறகு, அதிகாரிகள், மற்றவர்களை வைத்துப் பேச வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். நானும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறேன். இதுபற்றி விரைவிலே முடிவு எடுத்தால், நன்றாக இருக்கும் என்று நானும் வற்புறுத்தி வருகிறேன். நான் அதுபற்றிய புள்ளிவிவரங்களை வைத்திருக்கிறேன். இதைப் பார்த்து, சிந்தித்து, முடிவு சொல்ல வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். நான் மட்டும் முடிவு செய்வதாக இருக்காது. அனைவரையும் வைத்துச் சிந்தித்துச் செயல்பட

வேண்டும். வேறு பல உறுப்பினர்கள் கூறிய பல கருத்துக்களை அந்தந்தத் துறையினர் கவனித்துத் தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை மட்டும் கூறி, இந்த நிதி ஒதுக்க மசோதாவை ஆதரித்து நல்லாதரவு அளித்த உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் நன்றி தெரிவித்து முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குள்ள கடனை ஒத்திப் போடுவது, வரி வஜா செய்வது போன்றவைகளை அந்தந்த இலாக்காக்கள் பரிசீலிக்கும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இலாக்காக்கள் நிதானமாகப் பரிசீலிப்பதால், இடையிலே ஜப்தி போன்ற நடவடிக்கைகள் சேலம், வட ஆற்காடு போன்ற மாவட்டங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே வறட்சி இருக்கின்ற வரையில் தமிழ் நாடு முழுவதும் எங்கெங்கு வறட்சி இருக்கின்றதோ அந்தப் பகுதிகளில் எல்லாம் ஜப்தி போன்ற நடவடிக்கைகளில் எந்த இலாக்காவும் ஈடுபடக்கூடாது என்ற உத்திரவையாவது அரசாங்கம் உடனடியாகப் பிறப்பிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் தமிழகத்தில் உள்ள நிலைமை முழுமையாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குத் தெரியும். குடிக்கத் தண்ணீர் கூட பெற முடியாத நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் விவசாயிகள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலையில் ஜப்தி போன்ற நடவடிக்கைகளில் அரசு ஈடுபடுவது இந்த நாட்டுக்கு நல்லதல்ல. ஆகவே குறைந்தபட்சம் ஜப்தி போன்ற நடவடிக்கைகள் நடைபெறாது என்ற உத்தரவை உடனடியாக அரசாங்கம் அறிவிக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வருவாய்த் துறையைப் பொறுத்தும், கூட்டுறவுத் துறையைப் பொறுத்தும் என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்ற விவரக் குறிப்புகள் இல்லை. பொதுவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வறட்சிக் காலத்திலே ஏழை யெளிய சாதாரண மக்கள் வருமானம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நிலையில் ஜப்தி போன்ற நடவடிக்கைகள் மூலமாக கொடுமைப்படுத்தக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த அளவிற்கு அந்த உத்தரவு நிறைவேற்றப்படுகிறது என்ற விவரக் குறிப்பு இல்லை. இந்த உணர்வு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த உணர்வின் அடிப்படையில் என்ன நடவடிக்கையை எடுக்க வேண்டுமோ அதை அந்தத் துறை எடுக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1983) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1983) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1983) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, அவை மீண்டும் நாளை 23—4—1983 சனிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-30)

8. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

263. Notification issued with G.O. Ms. No. 811, Housing and Urban Development, dated the 13th August 1982 regarding variation to land use in Okkiamthuraipakkam Village. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

264. Notification issued with G.O. Ms. No. 333, Housing and Urban Development, dated the 12th May 1981 regarding certain amendments to the Tamil Nadu Slum Clearance Board Engineering Officers "Service Rules, 1972." [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance)) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971)].

B. Reports, Notifications and Other Papers.

*165. The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1983 (L.A. Bill No. 32 of 1983), as passed by the Assembly.

*166. The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1983 (L.A. Bill No. 33 of 1983), as passed by the Assembly.

* Circulated to all M.L.Cs. on 21st April 1983.

இணைப்பு I.

(12 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 312-க்கான விடையைக் காண்க.)

(அ) விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்கட்கு 1—4—1981 முதல் 31—3—1982 முடிய அரசு போக்குவரத்துக் கழகங்களினால் வழங்கப்பட்ட நட்ட ஈட்டுத் தொகை பின்வருமாறு :—

	ரூ. பை.
பல்லவன் (பெருநகர்)	31,05,529.62
பல்லவன் (புறநகர்)	9,42,346.83
சேரன்	9,43,264.71
சோழன்	11,11,748.34
பாண்டியன்	21,54,336.05
கட்டபொம்மன்	6,79,585.41
அண்ணா	7,74,390.21
தந்தை பெரியார்	14,01,246.25
திருவள்ளுவர்	17,73,832.50
	1,28,86,279.92

(இ) (1) விபத்துக்கள் ஏதுமின்றி பேருந்துகளை ஓட்டுகின்ற ஓட்டுநர்களுக்கு பரிசளித்து ஊக்குவிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகிறது ;

(2) பேருந்துகளில் வேகக்கட்டுபாடு கருவி பொருத்தப்படுகிறது ;

(3) அடிக்கடி பேருந்தை விபத்துக்குள்ளாக்கும் ஓட்டுநர்களுக்கு மேலும் பயிற்சி தரும் பொருட்டு (Refresher Course) நடத்தப்பட்டு வருகிறது ;

(4) பணியில் நியமனம் ஆகும் ஓட்டுநர்களுக்கு மோட்டார் வாகன விதிகள், ஓட்டும் முறை ஆகியவைபற்றி பயிற்சி அளிக்கப்படுகிறது ;

(5) விபத்துக்களை குறைக்கும் வழிவகைகள் பற்றி அவ்வப்போது சுற்றறிக்கைகள் மூலம், ஓட்டுநர்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது ;

(6) அதிவேகமாகவும், சாலை விதிகளை மீறியும் பேருந்தை ஓட்டும் ஓட்டுநர் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது ;

(7) பள்ளி இறுதி ஆண்டு தேர்ச்சி பெற்றவர்களை தேர்ந்தெடுத்து சாலை போக்குவரத்து நிறுவனத்தின் மூலம் ஓட்டுநர் மற்றும் சாதாரண இயந்திரப் பழுதுகளை சரி செய்தல் போன்ற பயிற்சிகள் அளித்து பின்னர் போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர்களாக அமர்த்த வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது ;

(8) ஓட்டுநர் ஆய்வாளர்களை நியமித்து, ஓட்டுநர்கள் பேருந்துகளைச் செலுத்தும் முறைகளைக் கண்காணித்து தவறுகளை அவ்வப்போது திருத்துகிறது.

இணைப்பு II.

[23 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், மைய அரசு வழங்கும் சலுகைவிலைத் தாளின்மூலம் குறிப்பேடுகள் தயாரித்து வழங்கும் பணியை 1979 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் செய்து வருகிறது. குறிப்பேடுகள் மைய அரசு நிர்ணயம் செய்யும் விலையின்படி விற்கப்படுகின்றன. சலுகைவிலைத் தாளின் விலை ஒரு டன்னுக்கு ரூ. 4,200 ஆக இருந்தது. சலுகைவிலைத் தாள் வழங்கி வந்த தாள் ஆலைகளில பெரும்பாலானவை கல்கத்தா, பெங்களூர் ஆகிய இடங்களில் உள்ள நீதிமன்றங்களின் மூலம் சலுகைவிலைத் தாளை டன் ரூ. 4,200 என்ற விலையில் வழங்குவதற்கு எதிராக இடைக்காலத் தடை கோரிப் பெற்றன. அவ்வாலைகள் ரூ. 5,250 முதல் ரூ. 6,331 வரையில் ஒரு டன்னுக்கு விலை நிர்ணயித்து தாள் வழங்க முடியும் எனவும் இதற்கான நீதிமன்றத்தின் ஆணை உள்ளதென்றும் பாடநூல் நிறுவனத்திற்குத் தெரிவித்தன. இந் நிலையிலும் டன் ரூ. 4,200 என்றிருந்தபோது குறிப்பேடுகளுக்கு நிர்ணயித்த விலையை மைய அரசு புதிய விலையின் அடிப்படையில் மாற்றியமைக்கவில்லை. எனவே, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் குறிப்பேடுகள் தயாரிக்கும் பணியை 1982 ஜூலை மாதம் முதல் நிறுத்தியுள்ளது. மேலும், மைய அரசு இப்பொருள் குறித்து நீதிமன்றங்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இப்பொருள் குறித்து முடிவு செய்ய நீதிமன்றங்களுக்குச் சிலகாலம் ஆகும் என்றும் தெரிவித்துள்ளது. இதுவரையில் நீதிமன்றங்களின் தடை உத்தர்வு நீக்கப்படவில்லை.

2. மைய அரசு குறிப்பேடுகள் தயாரிக்க டன் ரூ. 4,200 விலையில் வாங்கிய தாளையே பயன்படுத்த வேண்டும் என்றும், குறிப்பேடுகளின் விலையை மாற்றியமைக்க இயலாது என்றும் கருத்து தெரிவித்துள்ளது. மேலும், தாளுக்கு நிர்ணயித்த விலையானது ஆலைக்கு ஆலை மாறுபாடாக உள்ளது எனவும், ஓரே சீராக இல்லையென்றும், இவ்விலையை அடிப்படையாகக்கொண்டு குறிப்பேடுகள் விலையை நிர்ணயிக்க இயலாது என்றும், இது குறித்து மைய அரசு மேல்முறையீடு செய்துள்ளது என்றும் அம்முறையீட்டின் மீதான முடிவு தெரியும்வரையில் குறிப்பேடுளின் விலை நிர்ணயம் செய்ய இயலாது எனவும் மைய அரசு தெரிவித்துள்ளது.

3. மாணவர்களின் தேவையில் 60 சதவீதத்தை நிறைவு செய்வதற்கு தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்திற்கு ரூ. 5,000 டன்கள் தான் தேவைப்படுகிறது. தற்போது தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்திடம் 1,200 டன்கள் குறிப்பேடுகளும், கூட்டுறவுச் சங்கங்களிடம் 700 டன்கள் குறிப்பேடுகளும் இருப்பில் உள்ளன. வரும் கல்வியாண்டில் மேலும் 3,100 டன்கள் குறிப்பேடுகள் தேவைப்படும்.

4. நீதிமன்றங்கள் நிர்ணயித்த அதிக விலையில் தாளை வாங்கி, குறிப்பேடுகள் தயாரித்து அவற்றை மைய அரசு நிர்ணயித்துள்ள விலையிலேயே விற்குமானால் இச் செயல் ஏறத்தாழ ரூ. 17 இலட்சத்திற்கு நட்டத்தை ஏற்படுத்துவதாக அமைந்துவிடும். இருப்பினும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் தற்போது நீதிமன்றங்கள் நிர்ணயித்துள்ள டன் ரூ. 5,250 என்ற விலையில் 1,500 டன் தாள்களை வாங்கிக் குறிப்பேடுகள் தயாரிப்பதாக முடிவு செய்துள்ளது. மைய அரசு தாள்களின் விலையேற்றத்தைக் கருத்திற்கொண்டு குறிப்பேடுகளின் தற்போது உள்ள விலையை மாற்றியமைக்கும் என்று நம்பப்படுவதால், இக் குறிப்பேடுகள் வரும் கல்வியாண்டின் தொடக்கத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

5. மாணவர்களுக்கு குறிப்பேடுகள் பள்ளிகள் திறக்கப்படும் முன்பே கிடைக்க வேண்டுமாதலால், குறிப்பேடுகள் தயாரிக்கும் பணியை தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் ஏப்ரல், மே மாதங்களில் தொடங்க உள்ளது.

இணைப்பு III.

[25 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

1981-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி அரக்கோணம் நகராட்சியின் மக்கள் தொகை 59,503. அரக்கோணம் குடிநீர்த் திட்ட தலைப்பிடமான தக்கோலம் கிராமம் அருகே கல்லாறு வரதக்ஷா ஆறுகளில் வறட்சியின் காரணமாக நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து விட்டதால் தலைமையிடத்திலிருந்து பெறப்படும் நீர் அளவு குறைந்து வழக்கமாக வழங்கும் 4 இலட்சம் காலன்கள் குடிநீர் தற்போது சுமார் 1½ இலட்சம் காலன்களாக குறைந்து விட்டது. எனவே தற்போதய திட்டங்கள் மேம்படுத்தும் பொருட்டு அரசு ரூ. 5.56 இலட்சம் செலவில் வறட்சி நிவாரணப் பணியின்கீழ் தலைமை இடத்தை மேம்படுத்துவதற்காக ஒப்புதல் அளித்துள்ளது. அதன் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இன்னும் 15 நாட்களுக்குள் வேலைகள் யாவும் முடிக்கப்பட்டு நகருக்கு கூடுதலான குடிநீர் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இணைப்பு IV

[28 ஆம் பக்கத்தில் இனம் 6 (1)-க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 32 of 1983.

(As Passed by the Assembly.)

A Bill to Provide for the authorisation of appropriation of moneys out of the Consolidated Fund of the State to meet the amounts spent on certain services during the financial year ended on the 31st day of March 1975, in excess of the amounts authorised or granted for the said services.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 2) Act, 1983.

2. *Issue of Rs.* 6,27,69,807 *out of the Consolidated Fund of the State for the financial year ended on the 31st March* 1975.—The sums specified in column (5) of the Schedule amounting in the aggregate to the sum of Six crores, twenty-seven lakhs, sixty-nine thousand and eight hundred and seven rupees, shall be deemed to have been authorised to be paid and applied from and out of the Consolidated Fund of the State to meet the amounts spent for defraying the charges in respect of the services and purposes specified in column (2) of the Schedule during the financial year ended on the 31st day of March 1975, in excess of the amounts authorised or granted for those services and purposes for that year.

3. *Appropriation.*—The sums deemed to have been authorised to be paid and applied from and out of the Consolidated Fund of the State under this Act shall be appropriated and shall be deemed to have been appropriated for the services and purposes specified in the Schedule in relation to the financial year ended on the 31st day of March 1975.

THE SCHEDULE.

(*See* sections 2 and 3.)

Demand number.	Services and purposes.	Sums. Voted by the Legislative Assembly.	Charged on the Consolidated Fund of the State.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
1	Land Revenue Department ..	3,51,969	..	3,51,969
7	State Legislature	43,025	8,818	51,843
9	Head of State, Ministers and Head-quarters Staff	..	1,17,049	1,17,049
11	District Administration	1,10,364	..	1,10,364
13	Administration of Justice	..	37,405	37,405
18	Medical	1,54,82,432	..	1,54,82,432
19	Public Health	27,51,887	..	27,51,887
20	Agriculture	9,34,597	..	9,34,597
22	Animal Husbandry	65,57,197	..	65,57,197
35	Irrigation	1,19,17,937	..	1,19,17,937
36	Public Works (Buildings)	56,00,380	..	56,00,380
37	Public Works—Establishment and Tools and Plant	16,88,341	..	16,88,341
39	Road Transport Scheme	51,99,150	9,987	52,09,137
41	Pension and other Retirement Benefits	41,55,018	..	41,55,018
42	Miscellaneous	..	1,68,896	1,68,896
43	Stationery and Printing	51,57,736	..	51,57,736
44	Forest Department	7,32,092	39	7,32,131
46	Compensation to Zamindars ..	6,35,911	..	6,35,911
48	Capital Outlay on Agriculture ..	..	2,605	2,605
49	Capital Outlay on Industrial Development	10,96,651	10,321	11,06,972
	Grand Total ..	6,24,14,687	3,55,120	6,27,69,807

I certify that this is a Money Bill.

Fort St. George,
Madras.
21st April 1983.

K. RAJARAM,
Speaker.
Tamil Nadu Legislative Assembly.

இணைப்பு V

[29 ஆம் பக்கத்தில் இனம் 6(2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A BILL No. 33 OF 1983.

(As Passed by the Assembly)

A Bill to provide for the appropriation of moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year commencing on the 1st April 1983.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 3) Act, 1983.

2. *Appropriation out of the Consolidated Fund for the financial year commencing on the 1st April* 1983.—The State Government may appropriate out of the Consolidated Fund of the State for the financial year commencing on the 1st April 1983, a sum not exceeding two thousand four hundred and ninety-one crores forty lakhs and sixty-three thousand rupees [which shall be inclusive of the sum of four hundred and fifteen crores twenty-three lakhs and forty-five thousand rupees specified in section 2 of the Tamil Nadu Appropriation (Vote on Account) Act, 1983 (Tamil Nadu Act 15 of 1983)], being moneys required to meet—

(*a*) the grants made by the Tamil Nadu Legislative Assembly for that year, as set forth in column (3) of the Schedule; and

(*b*) the expenditure charged on the Consolidated Fund of the State for that year, as set forth in column (4) of the Schedule.

THE SCHEDULE.

(*See* section 2.)

Demand number.	*Services and purposes.*	*Sums not exceeding.* *Voted by the Legislative Assembly.*	*Charged on the Consolidated Fund of the State.*	*Total.*
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
1	Land Revenue Department ..	7,89,41,000	..	7,89,41,000
2	State Excise Department	2,61,00,000	..	2,61,00,000
3	Motor Vehicles Acts— Administration	2,33,41,000	..	2,33,41,000
4	General Sales Tax and other Taxes and Duties	10,38,57,000	*15,000*	10,38,72,000
	Administration			
5	Stamps—Administration	98,48,000	..	98,48,000
6	Registration	4,93,40,000	*1,000*	4,93,41,000
	Debt Charges ..	..	*1,36,51,74,000*	136,51,74,000
7	State Legislature	1,32,78,000	*3,70,000*	1,36,48,000
8	Elections	36,15,000	..	36,15,000
9	Head of State, Ministers and Headquarters Staff	22,14,91,000	*1,32,60,000*	23,47,51,000
10	Milk Supply Schemes	1,19,28,000	..	1,19,28,000
11	District Administration	28,40,79,000	*70,000*	28,41,49,000
12	Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959	2,78,77,000	*40,000*	2,79,17,000
13	Administration of Justice	11,12,31,000	*1,45,41,000*	12,57,72,000
14	Jails	7,11,13,000	*1,000*	7,11,14,000
15	Police	76,23,05,000	*60,000*	76,23,65,000
16	Fire Services	5,64,79,000	*5,000*	5,64,84,000
17	Education	3,55,76,40,000	*6,000*	3,55,76,46,000
18	Medical	91,03,90,000	..	91,03,90,000
19	Public Health	1,12,60,45,000	..	1,12,60,45,000
20	Agriculture	74,75,93,000	*6,000*	74,75,99,000
21	Fisheries	5,12,68,000	*10,000*	5,12,78,000
22	Animal Husbandry	21,16,16,000	*1,000*	21,16,17,000
23	Co-operation	10,03,14,000	..	10,03,14,000
24	Industries	2,37,73,000	*1,000*	2,37,74,000
25	Cinchona	2,75,76,000	..	2,75,76,000
26	Handlooms and Textiles	7,06,32,000	..	7,06,32,000
27	Khadi	2,18,93,000	..	2,18,93,000
28	Community Development Projects and Municipal Administration ..	1,40,21,14,000	*1,000*	1,40,21,15,000
29	Labour Including Factories ..	9,88,25,000	..	9,88,25,000
30	Social Welfare	59,38,83,000	..	59,38,83,000
31	Welfare of the Scheduled Tribes and Castes, etc.	44,45,68,000	*2,02,000*	44,47,70,000

Demand number.	Services and purposes.	Sums not exceeding. Voted by the Legislative Assembly.	Charged on the Consolidated Fund of the State.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
32	Welfare of the Backward Classes, etc.	10,22,26,000	*1,000*	10,22,27,000
33	Housing	16,34,47,000	..	16,34,47,000
34	Urban Development	27,47,99,000	..	27,47,99,000
35	Civil Supplies	80,80,55,000	*50,000*	80,81,05,000
36	Irrigation	41,15,74,000	*12,000*	41,15,86,000
37	Public Works—Buildings	5,15,38,000	*51,000*	5,15,89,000
38	Public Works—Establishment and Tools and Plant	15,14,04,000	..	15,14,04,00
39	Roads and Bridges	67,54,80,000	..	67,54,80,000
40	Road Transport Services and Shipping	4,17,27,000	*2,000*	4,17,29,000
41	Relief on account of Natural Calamities	17,20,000	*8,59,00,000*	8,76,20,000
42	Pensions and other Retirement Benefits	35,85,85,000	*1,46,99,000*	37,32,84 000
43	Miscellaneous	80,85,77,000	*13,73,000*	80,99,50 000
44	Stationery and Printing	11,22,92,000	*3,60,000*	11,26,52,000
45	Forest Department	10,19,57,000	*8,000*	10,19,65,000
46	Compensations and Assignments ..	22,38,03,000	*22,53,000*	22,60,56,000
47	Information, Tourism and Film Technology	2,48,86,000	..	2,48,86,000
48	Rural Industries	7,86,21,000	..	7,86,21,000
49	Capital Outlay on Agriculture ..	5,56,48,000	*1,000*	5,56,49,000
50	Capital Outlay on Industrial Development	19,92,11,000	*1,000*	19,92,12,000
51	Capital Outlay on Irrigation ..	63,99,71,000	..	63,99,71,000
52	Capital Outlay on Public Works—Buildings	40,46,39,000	*4,03,000*	40,50,42,000
53	Capital Outlay on Roads and Bridges	27,62,77,000	*1,000*	27,62,78,000
54	Capital Outlay on Road Transport Services and Shipping	1,59,24,000	..	1,59,24,000
55	Capital Outlay on Forests	16,04,24,000	..	16,04,24,000
56	Capital Outlay on Rural Industries	4,10,20,000	*2,000*	4,10,2? 00
57	Miscellaneous Capital Outlay ..	13,11,31,000	*6,000*	13,11,3 ,000
58	Loans and Advances by the State Government	2,96,54,73,000	..	2,96,54,73,000
	Public Debt—Repayment ..	..	*2,89,18,14,000*	2,89,18,14,000
	GRAND TOTAL	*20,52,33,62,000*	*4,39,07,01,000*	*24,91,40,63,000*

I certify that this is a Money Bill.

Fort St. George,
Madras.
1st April 1983.

K. RAJARAM,
Speaker,
Tamil Nadu Legislative Assembly.

[ISSUED 17—12—1

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

OFFICIAL REPORT

SATURDAY 23rd APRIL 1983

Volume CC (No. 2)

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

Legislative Council Department
Fort St. George, Madras-600 009.

Price Rs. 2.75 Paise]

பொருளடக்கம்

	பக்கங்கள்.
1 வினாக்கள்—விடைகள்	127—193
2. அறிவிப்பு—	
பேரவையிலிருந்து செய்தி	193
3. கவன ஈர்ப்பு—	
(1) விழுப்புரம் நகராட்சிப் பகுதியில் குடும்ப உணவு பங்கீட்டு அட்டை பெற்றவர்களுக்கு குறைத்து மண்ணெண்ணெய் வழங்குவது குறித்து	194—195
(2) குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் ஒதுக்கீடு பெற்றவர்கள் மற்றவர்களுக்கு விற்றுவிட்ட நிலையில் அங்கே குடியிருப்பவர்களிடம் அபராதம் பெற்றுக் கொண்டு, அவர்கள் குடியிருக்க அனுமதிக்க ஆணையிருந்தும் அவர்கள் வெளியேற்றப்படுவது குறித்து	196—199
4. அரசின் தீர்மானங்கள்—	
(1) தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை மேற்கொள்ளுதல்	200
(2) 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மைக் கெடுதலைத் தடுத்தல்—கட்டுப்படுத்தல்) சட்டத்தில் (மத்திய சட்டம் 6/1974) செய்த திருத்தங்களை தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்றவேண்டுமென்ற தீர்மானம்	200—202
5. அரசின் சட்டமுன்வடிவுகள்—	
(1) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1983)	203—218
(2) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1983)	219—224
(3) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1983)	224—225
(4) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச்சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1983)	225—231
6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்	231

அடிப்படையிலே பாராது நாம் இந்தியர்கள், தமிழர்கள் என்று நம்முடைய கலாசாரம், பண்பாடு என்பதற்கு ஏற்ப பாகுபாடுபடுத்தக்கூடிய யோசனை அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்துக்கள் சமுதாயத்திலேதான் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்ற அளவுக்கு சாதியின் தன்மைகள் வருகின்றன. கிருஸ்தவர்கள் ஆக மாறிவிடுகின்றபோது, இந்த வேறுபாடுகள் மற்றவைகள் மறைந்துவிடுகின்றன என்ற காரணத்தினாலே தான் மத்திய அரசும் சரி, மாநில அரசும் சரி, தொடர்ந்து ஒரு முறையைக் கையாளுகிறது. தாழ்த்தப்பட்டவர்களாக இருப்பவர்கள் மதம் மாறுவார்கள் என்றால், அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் என்றும் பிற்படுத்தப்பட்டவர்கள் நிலையிலே இருப்பவர்கள் மதம் மாறினால் அவர்கள் முற்படுத்தப்பட்டவர்கள் என்றும் கருதுகின்ற சூழ்நிலை இருக்கிறது. சில இடங்களிலே மட்டும் சலுகைகளைப் பெறுகின்றவர்கள் அரிஜன கிருஸ்தவர்கள் என்ற அளவுக்கு தரப்படுகின்ற அளவுக்கு இருக்கிறது. இதிலே தாழ்த்தப்பட்டவர்களுடைய நிலையைப் பொறுத்தவரையிலே, மத்திய அரசுதான் முடிவு செய்யவேண்டியதாக இருக்கிறது.

திரு. பா. ரா. தாமஸ் : கன்னியாகுமரியைப் பொறுத்த அளவிலே, சி.எஸ்.ஐ. கிருஸ்தவர்கள் என்றால், அந்தச் சமுதாயத்தை வழிபடும் அடிப்படை இல்லாமல், அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களாகக் கருதப்படுகிறார்கள். அதைக்கூட பரவலாக தமிழகத்திலே அமுல்படுத்தக்கூடிய ஒரு நிலையை உருவாக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நாகர்கோயில், கன்னியாகுமரி பகுதிகளில் உள்ள கிருஸ்தவர்கள் போலவே திருநெல்வேலி பகுதி மற்ற பல பகுதிகளிலும் இருப்பவர்கள் தங்களை பிற்படுத்தப்பட்டவர்களாகக் கருத வேண்டும் என்று விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள். அதைச் சார்ந்தும் திரு. அம்பாசங்கர் அவர்கள் குழுவை ஆராயும்படியாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : பிற்பட்டவர்கள் நலக் குழு ஓராண்டில் அறிக்கை தரவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். சில ஜாதியார்கள் அறிக்கை விட்டு, தங்கள் கோரிக்கைகளை எல்லாம் தெரிவிக்கின்ற அளவுக்கு, விளம்பரப்படுத்துகின்ற அளவுக்கு வசதி உள்ளவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் சேர்ந்து அறிக்கை

அனுப்பிவிடுகின்றார்கள். வசதியற்ற நிலையில் இருக்கின்றவர்கள் தங்களுடைய பிரச்சினைகளை எல்லாம் இந்தக் குழுவினரிடம் தாங்களாகவே நேரில் வந்து சொல்லுகிறபோது இந்தக் குழு அவற்றையும் கவனிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக இருக்கின்ற சூழ்நிலைகளையெல்லாம் அந்தக் குழு ஆராயும். சில பேர்கள் தங்களுடைய விண்ணப்பத்தைக் கொடுத்தும், தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தும் இருந்தால், பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். அதையும் பரிசீலிக்கும்.

விசைப் படகு கட்டும் தளம்

*314 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினத்தில் உள்ள விசைப்படகு கட்டும் தளம் மூடப்பட்டிருக்கின்றது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (இ) தமிழ் நாடு மின் வளர்ச்சிக் கழகத்தின் கீழ் சென்னையில் இரண்டும் நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரத்தில் ஒன்றுமாக நான்கு படகு கட்டும் தளங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நான்கு படகு கட்டும் தளங்களும் தொடர்ந்து நடத்தப்பட்டால் அவற்றில் நட்டமும் அதனால் அரசு பணவிரயமும் அதிகரித்துக் கொண்டு போகும் என்று காணப்பட்டது. எனவே நாகப்பட்டினம் உள்ளிட்ட நான்கு படகுகட்டும் தளங்களும் 20—10—1982 அன்று மூடப்பட்டன.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்த நான்கு படகு கட்டும் தளங்களும் மூடப்பட்டதாக அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் படகு கட்டும் தளங்களிலே பணியாற்றிக் கொண்டிருந்த, அதிலே பிழைப்பு நடத்திக்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இப்போது அல்லல் படுகின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. அவர்கள் பிழைக்க வழியின்றி இருக்கின்றார்கள். அப்படி அந்தத் தளங்களை மூடுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்த அரசு அதை லாபம் தரத்தக்க வகையிலே எப்படிச் செயல்படுத்தலாம் என்று ஆய்வுசெய்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து அவர்களுக்கு வாழ்வளிக்குமா என்று அறிய விரும்புகிறேன். இப்போது பணியிழந்த அந்தத் தொழிலாளர்களுக்கு மாற்று ஏற்பாடு ஏதேனும் செய்து அவர்கள் பிழைப்புக்கு வழி வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த படகு கட்டும் தளங்களை வேறு வழியிலே பயன்படுத்தி அவர்களுக்கு வேலை கொடுக்கலாம் என்று இரண்டு மூன்று ஆண்டுக் காலமாகவே சிந்தித்து அதற்கு என்று தனி வல்லுநர்கள் குழுவெல்லாம் போட்டு ஆராயப்பட்டது. இப்போது பைபர் கிளாஸ் போன்ற பொருட்களை உபயோகித்து படகு கட்டுவதன் காரணமாக இதிலே பணியாற்றிக்கொண்டிருந்தவர்கள் மரதச்சுத் தொழிலில் பழகி இருப்பவர்கள் என்றதன் காரணமாகவும், அவர்கள் மரப்படகு கட்டுகின்ற தன்மையிலே இருப்பதன் காரணமாகவும் இந்தப் பணியில்லாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. மொத்தத்திலே 200 படகுகள் ஆண்டு ஒன்றுக்குக் கட்டுகின்ற சூழ்நிலை இருந்தும்கூட, கடந்த மூன்று ஆண்டுகளாக 600 படகுகள் கட்டவேண்டியது இருக்க, உண்மையில் மொத்தமே 20 படகுகள் கட்டியும், அதுவும் விலைபோகாத நிலைமைகள் ஏற்பட்டன. தொடர்ந்து இதன்மூலமாக 30—9—1982 வரையில் ஏற்பட்ட நஷ்டம் இரண்டு கோடியே 74 லட்சம் ரூபாய். வேறு வழியில்லாத காரணத்தினாலே இவற்றை மூட வேண்டிய அவசியம் வந்தது. கேரளா போன்ற மாநிலத்திலே ஏற்கெனவே சில பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே இது கட்டுப்படியாகவில்லை என்று இந்தப் படகு கட்டும் தளங்களை மூடிவிட்டார்கள். ஆனாலும் இவர்கள் வேலை வாய்ப்பு இழக்கும்போது அவர்களுக்குச் சட்டப்படி என்னென்ன உரிமைகளை, என்னென்ன வசதிகளைச் செய்யவேண்டுமோ அதைச் செய்திருக்கின்றார்கள். அது மட்டுமல்ல, பணிக்கொடை மட்டும் அவர்களுக்கு ரூ. 27,06,000 ஆகியிருக்கிறது. ஆட்குறைப்பு காரணமாக மூடியதன் காரணமாக ஆட்குறைப்புக்கு இழப்பீட்டுத்தொகை என்ற வகையிலே இருபத்து ஏழு லட்சத்து ஆறாயிரம் ரூபாய், மிகை ஊதியம் என்று அந்த முறையிலே மூன்று லட்சத்து எண்பத்து ஆறாயிரம் ரூபாய், கதவடைப்பு அறிவிப்பு கொடுப்பதற்குப் பதிலாக ஒரு மாதம் நோட்டீஸ் கொடுத்து அவர்களிடம் வேலை வாங்காமல் ஒரு மாதச்சம்பளத்தை அவர்கள் கையிலே கொடுத்திருக்கின்ற சூழ்நிலையில் ரூபாய் நான்கு லட்சத்து இருபத்து ஏழாயிரம். 1—10—1982 முதல் 19—10—1982 வரையில் அவர்கள் மூடுகின்ற வரையிலே வேலை செய்ததற்காக ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்து ஏழாயிரம். விடுமுறைச் சம்பளம் என்று கணக்கிட்டு ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பத்து மூன்றாயிரம், ரூபாய் அறுபத்து எட்டு லட்சத்து ஐம்பத்தைந்து ஆயிரம் கூடுதலாகத் தரப்பட்டு மொத்தத்திலே அந்த மீன்பிடி கப்பல் கட்டும் கழகத்திற்கு ரூ. 3,42,55,000 நஷ்டம் ஏற்பட்டாலும்கூட, அவர்களுக்கு சட்டப்படி தரவேண்டிய சலுகைகள் எல்லாம் தரப்பட்டிருக்கின்றன என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அவர்களுடைய தகுதிக்கு, திறமைக்கு ஏற்ப அவர்களுக்கு மாற்று வேலை

தருவதில் முன் உரிமை தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். படகு கட்டும் தளங்களை மூடியதால் பணி இழந்த தொழிலாளர்களுக்கு, 566 பேர் களுக்கு அரசு சார்புள்ள போக்குவரத்துக் கழகம், வீட்டுவசதி வாரியம் மற்றும் குடிசை மாற்று வாரியம், சிறுதொழில்கள் கழகம், நகராட்சி மாநகராட்சி ஆகியவற்றில் முன் உரிமை தந்து, அங்கே காலியிடங்கள் ஏற்படும்போது, பணியில் அமர்த்த வேண்டும் என்ற ஆணைகள் வெளியிடப் பட்டுள்ளன. வெளிநாட்டு வேலை தேடித் தரும் அமைப்பிலே அவர்களுக்கு முன் உரிமை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அரசுத் துறைகளில் காலி இடம் ஏற்படும்போது, பணியிழந்த தொழிலாளர்களுக்கு முன் உரிமை அளித்து, பணியில் அமர்த்த ஆணையிடப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். ஆனால் உடனடியாக அவ்வளவையும் ஏற்படுத்துவதற்கு இல்லை. இதுவரையிலே 27 தொழிலாளர்களுக்கு மாற்று வேலை தரப்பட்டிருக்கிறது. பல்வேறு துறைகளிலே தரப்பட்டிருக்கின்றது. வேறு பல துறைகளிலே இவர்களுடைய கருத்துக்கு ஏற்ப நாம் வேலை அளிக்க முடியுமென்றால், முன் உரிமை தரும்படியாக தனி நிறுவனங்களுக்கும் அரசுத் துறைகளுக்கும் அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

திரு. கே. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுகளுக்கு பின்னாலேயும் நஷ்டம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது என்ற நிலைமையைக் கருத்தில் கொண்டு, அந்தப் படகு கட்டும் தளங்கள், கேரளாவிலே செய்யப் பட்டதுபோல, இங்கேயும் மூடப்பட்டன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கேரள மாநிலத்திலே அப்படி அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். அப்படி அந்தப் படகு கட்டும் தளங்களை மூடிவிட்டதனால் பணியிழப்பு ஏற்பட்டவர்களுக்கு உடனடியாகப் பணி மாற்றுத் துறைகளிலே தரப்பட்டதாகத்தான் தகவல் வந்திருப்பதாக அந்த பாதிக்கப்பட்ட ஊழியர்கள் கூறுகின்றார்கள். அது மட்டுமல்லாமல் ஒரு மாத ஊதியத்தைக் கையிலே கொடுத்து வீட்டிற்கு அனுப்பியதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்து யாதொரு முன் அறிவிப்பும் இல்லாமல் உடனடியாக வீட்டுக்கு அனுப்பக்கூடிய வேலை இழப்பு அவர்களுக்கு ஏற்படக்கூடிய சூழ்நிலை இருந்திருக்கின்றது என்பது தெளிவாகிறது. இன்றைக்குக்கூட 566 பேரிலே 27 பேர்களுக்குத்தான் மாற்று வேலை தரப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்கள் வேலை யில்லாமல் இருப்பதால், அவர்களுடைய தகுதிக்குக் குறைவான ஊதியம் கொடுத்தால்கூட பரவாயில்லை என்ற அளவிலே அவர்களுக்கு பிழைப்புக்கு வழிசெய்யக்கூடிய அளவிலே உடனடியாக அரசு வேலைகொடுக்க முன்வருமா?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1980 ஆம் ஆண்டிலேயே அவர்களை வீட்டுக்கு அனுப்பியிருந்தால் 1 கோடி ரூபாய் நஷ்டத்தோடு போயிருக்கும். அவர்களுக்குக் கருணை காட்டியதால்தான், வேலை வாங்காமலேயே சம்பளம் கொடுத்து, 3 கோடியே 40 லட்சம் ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டது. நாம் காட்டிய கருணையின் விளைவுதான் இது. அப்போதே மூடியிருந்தால், ஒரு கோடியே சில்லரையோடு போயிருக்கும். மூட வேண்டும், மூட வேண்டும் என்று சொல்லி, நோட்டீஸ் கொடுத்து, காம்பென்சேஷன் கொடுத்த பிறகு. கருணையின் அடிப்படையிலேதான் இப்போது வேலை கொடுக்கிறோம். அவர்கள் கோர்ட்டுக்குப் போனால்கூட வேலை வாங்க முடியாது. நாமாக ஒரு மாதச் சம்பளம் கொடுத்து அனுப்பலாமென்றுதான் நான் சொன்னேன். அவர்களை எப்படியும் வேலையிலிருந்து எடுக்கப் போகிறோம். அவர்களை வைத்திருந்தாலும் வேலையில்லாமல்தான் சம்பளம் கொடுக்க வேண்டும். முன்கூட்டியே அதைக் கொடுங்கள் என்று சொன்னேன். சட்டப்படி நோட்டீஸ் கொடுத்து, காம்பன்சேஷன் கொடுத்து, அவர்கள் வைத்திருந்த விடுப்பு நாட்களுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து, இப்போது கருணையின் அடிப்படையிலே வேலை வாய்ப்பு தரும் வகையில் முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் அத்தனை பேர்களுக்கும் அவரவர்களுக்குரிய தகுதிகளின் அடிப்படையில் வேலைக்கான பணியிடங்கள் ஏற்படுமென்று சொல்ல முடியாது. நாம் கேரளாவைப் பார்த்துச் செய்யவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே, முடியவில்லை என்று அவர்கள் மூடிவிட்டார்கள். அங்கே என்ன நிலைமை என்பது இந்த அரசுக்குத் தெரியவில்லை.

THIRU G. VASANTHA PAI : Sir, in view of the closure of the boat building yards in Nagapattinam and other places, are we not likely to suffer in competition with foreign vessels which are coming and fishing in our waters ? There are a lot of foreign fishing vessels poaching into our territory and fishing in the Bay of Bengal with the help of their mechanised boats. By closing the boat building yards, would it not make it less possible for us to have active interest in fishing in the Bay of Bengal ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் கூறுவது போன்று, அவற்றை எந்த வகையிலே பயன்படுத்தலாமென்றும் யோசித்துக் கொண்டிருக்கிறோம். மெகனைஸ்ட் போட்ஸ் கட்டுவது குறித்து ஜப்பான் நிறுவனத்தோடும் மற்றவர்களோடும் தொடர்பு கொண்டிருக்கிறோம். 'பே ஆஃப் பெங்கால்

ப்ராஜக்ட்' என்று ஆராய்ந்து, அவர்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். டென்மார்க்கைச் சேர்ந்த கூட்டுறவு ஸ்தாபனம் ஒன்று இந்தக் கடலுக்கு ஏற்ற வகையில் மெகனைஸ்ட் போட்ஸ் எப்படி உருவாக்கலாமென்று கருத்து தந்திருக்கிறார்கள். அதையும் ஆராய்ந்து, மூடப்பட்ட தளங்களைப் பயன்படுத்துகிற அளவுக்கு மாற்ற முடியுமா என்பதுபற்றி கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவரவர்களே, அதே பகுதியிலே இருக்கின்ற தனியார் ஸ்தாபனங்கள் படகுகளை உற்பத்தி செய்து, அந்தத் தொழிலை லாபகரமாக நடத்துவதாகச் சொல்லுகிறார்கள். நம்முடைய படகு கட்டும் தளங்களிலே படகுகளை வாங்காமல் அவர்களிடம் வாங்குவதால், அந்தப் படகுகள் நல்ல முறையிலே செயலாற்றுவதாகச் சொல்லப்படுகிறதே, அதற்குக் காரணம் என்ன? நாம் கட்டும் படகுகளை சகாயமாகக் கொடுத்து, கடனை மீனவர்களிடமிருந்து திரும்பப் பெற முடியவில்லையா? உற்பத்தி செய்யும் திறமை நம்மிடம் இல்லையா? அல்லது படகு உற்பத்தியில் தரம் இல்லையா? வெளி நாடுகளோடு கூட்டு சேர்ந்து, நவீனப் படகுகளை உற்பத்தி செய்தால் லாபம் கிடைக்கும். ஆயிரம் ஆண்டுகளாக கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்த பாரம்பரைக்கு இது தோல்வியாகாதா? இதுகுறித்து அமைச்சரவர்கள் என்ன கருதுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 15 ஆண்டுகளுக்கு முன்னால் மரத்தால் செய்யப்பட்ட படகுகளை, 30, 32 அடி நீட்டத்திற்குச் செய்தார்கள். அந்தப் படகுகள் இப்போது 'ஃபைபர் கிளாஸ்' என்று ஆகி, அதன் எடை குறைந்து, நீண்ட காலம் உழைக்கத்தக்க அளவுக்கு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று, தனியார்கள் யாரும் மரப் படகுகளைக் கட்டுவதில்லை. ஃபைபர் கிளாசில் படகுகளைக் கட்டுகிறார்கள். புதிய புதிய நவீன முறைகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் நாம் உற்பத்தி செய்யும் படகுகள் விலை போகவில்லை. கூட்டுறவு சொசைட்டிகளின் மூலமாக மீனவர்களுக்கு அந்தப் படகுகளைத் தர வேண்டும். நாம் கொடுக்கும் விலைக்கு அவற்றை வாங்கி தொழில் நடத்தும் அளவுக்கு அவர்கள் இல்லை. 1979-80-ல் 32 அடிப் படகு கட்ட ஆன செலவு 1 லட்சத்து 61 ஆயிரத்து 662 ரூபாய். ஆனால் அதனுடைய விற்பனை விலை 78 ஆயிரத்து 300 ரூபாய். ஒரு லட்சத்து 61 ஆயிரத்திற்கு விற்பனை ஆக வேண்டியதை 78 ஆயிரம் ரூபாய்க்கு விற்க வேண்டியிருந்ததால், பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. இதை நவீன மயமாக்க வேண்டும். காலத்திற்கு ஏற்ற வகையில் ஆக்கும் முயற்சிகளில் ஈடுபடுகிறோம். கொரியா, ஜப்பான், டென்மார்க் போன்ற நாடுகளோடு நாம் பேசிக்கொண்டு வருகிறோம்.

D 2 C 89—2

அவர்களோடு கூட்டு முயற்சி ஏற்பட்டால், அவர்களே தொழிற்கூடம் வைத்து, ஜாயின்ட் செக்டார் என்ற முறையில் இதைச் செய்ய முடியுமா என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு மத்திய அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

உணவு தானிய கையிருப்பு

* 315 வினா.—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் உணவு தானிய கையிருப்பு நிலைமை மிகவும் மோசமாக உள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இதுகுறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தற்போது தமிழ் நாட்டில் ஏறத்தாழ 1.50 இலட்சம் டன்கள் நெல்லும் 1.10 இலட்சம் டன்கள் அரிசியும் கையிருப்பில் உள்ளன.

(இ) மத்திய அரசிடம் மாதம் ஒன்றுக்கு 80,000 டன்கள் அரிசியும், 40,000 டன்கள் கோதுமையும் ஒதுக்கீடு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. சம்பா நெல் அதிகமாக விளைச்சல் உள்ள பகுதிகளான தஞ்சை மாவட்டத்திலும், தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார் கோயில் வட்டங்களிலும், திருச்சி மாவட்டத்தில் லால்குடி, குளித்தலை, முசிறி, திருச்சிராப்பள்ளி வட்டங்களிலும் மொத்த வியாபாரிகள் வாணிபம் செய்வது தடை செய்யப்பட்டு விற்பனைக்கு வரும் மொத்த நெல்லையும், அரசே தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் வாங்கி வருகிறது. மற்ற இடங்களில் 50 சதவிகிதம் வர்த்தகர் லெவி மூலம் கொள்முதல் செய்யப் படுகிறது. வெளிச்சந்தையிலும் அரிசி வாங்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, வருகின்ற மாதங்கள் மழையில்லாத மாதங்கள். மேலும் பல சோதனைகளை உருவாக்கும் மாதங்கள். இப்போதே நம்முடைய அரிசி கையிருப்பானது கவலை தரத்தக்கதாக இருக்கிறது. ஆகவே மத்திய அரசிடம் 80 ஆயிரம் டன் அரிசியும், 40 ஆயிரம் டன் கோதுமையும் கேட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதை மத்திய அரசு தர ஒப்புக்கொண்டதா? நாம் கேட்ட அளவை ஒதுக்காத

மத்திய அரசு கொடுத்து வருகிறதா? மேலும் பிற மாநிலங்களிலிருந்தும், பிற நாடுகளிலிருந்தும் அரிசியை இறக்குமதி செய்ய மத்திய அரசிடம் நாம் அனுமதி கேட்டிருக்கிறோமா? அதற்கு மத்திய அரசு அனுமதி தந்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது தஞ்சையிலும், மற்ற இடங்களிலும் அதிகமாகக் கொள்முதல் செய்ய வாய்ப்புகள் இல்லை. இந்த நிலைமையை மத்திய அரசுக்குச் சுட்டிக் காட்டி யிருக்கிறோம். 80 ஆயிரம் டன் அரிசியும், 40 ஆயிரம் டன் கோதுமையும் கொடுத்தால் சமாளிக்கலாமென்று மத்திய அரசிடத்திலே சொல்லியிருக்கிறோம். மத்திய அரசு ஏப்ரல் மாதத்தில் 15 ஆயிரம் டன் அரிசியும், 15 ஆயிரம் டன் கோதுமையும் தந்தது. மே மாதத்திற்கு 15 ஆயிரம் டன் அரிசியும், 20 ஆயிரம் டன் கோதுமையும் தர அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். பிற மாநிலங் களுக்குச் சென்று, வெளிச் சந்தையிலே அரிசி வாங்க நமக்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டோம். அந்த வகையிலே ஆந்திராவிலிருந்து 2 லட்சம் டன் அரிசியைக் கொள்முதல் செய்ய அனுமதி கேட்டோம். மத்திய அரசு 50 ஆயிரம் டன்னை அங்கே கொள்முதல் செய்யலாமென்றும், 20 ஆயிரம் டன்னை அரியானா, பஞ்சாப் ஆகிய இரு மாநிலங்களிலிருந்தும் கொள்முதல் செய்யலாமென்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவை உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். மத்திய இருப்பிலிருந்து தரும் அளவை அதிகமாக்கினால், வரும் மாதங்களில் ஓரளவுக்குச் சரிக் கட்டலாம். மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் கடுமையான நிலைமையைச் சந்திக்க வேண்டி வரும். இதை அவ்வப்போது மத்திய அரசுக்கு உணர்த்திக்கொண்டு வருகிறோம். இப்போது இருக்கும் கோட்டாவை உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, மத்திய அரசு அவ்வாறு அனுமதி கொடுத்த பிறகு, ஆந்திராவிலும் அரியானாவிலும் அரிசி கொள்முதல் செய்துவிட்டோமா? என்னுடைய முதல் துணைக் கேள்வியில் ஒன்றைக் கேட்டேன். பிற நாடுகளிலிருந்து, உபரியாக அரிசி இருக்கும் நாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்ய மத்திய அரசிடம் அனுமதி கோரலாமல்லவா? அப்படி அனுமதி கோரப்படாவிட்டால், இனியாவது மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு, அதற்காக அனுமதி பெற அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மத்திய அரசு அனுமதித்த அளவுக்கு ஆந்திரா, அரியானா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் கொள்முதல் செய்ய ஏற்பாடுகளை தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மேற்கொண்டிருக்கிறது. எவ்வளவு கொள்முதலாகி யிருக்கிறது. இன்னும் எவ்வளவு ஆக வேண்டியிருக்கிறது என்ற விவரங்கள்

இல்லை. வெளி நாடுகளிலிருந்து நாம் இறக்குமதி செய்ய இயலாது. மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டும். மத்திய உணவு அமைச்சர் அவர்கள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதிக்கு அனுமதிக்கப் போவதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். உள் நாட்டிலே அரிசி கையிருப்பு இல்லை என்றால், வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யலாம். சென்ற ஆண்டு கோதுமையை 25 இலட்சம் டன் அளவுக்கு இறக்குமதி செய்திருக்கிறார்கள். அதைப்போன்று இதையும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி தாருங்கள் என்று வற்புறுத்தி வருகிறோம்.

(முற்பகல் 9-50)

டாக்டர் இரா. சனார்த்தனம்: வருகிற மாதங்களில் ஏற்பட இருக்கிற சிரமங்களை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசு தராவிட்டாலும்கூட, இங்கே புட் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான கோடவுன்களில் இருக்கின்ற அரிசியை நாம் பயன்படுத்திக்கொள்ளலாமல்லவா? அதோடு கூட இப்போது நாம் சிமெண்ட்டை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதுபோல், தாய்லாந்து நாட்டில் நல்ல அரிசி இருப்பதால், அதை வாங்குவது குறித்து இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மத்திய அரசு கோடவுன்கள் இருக்கின்றன. அதுபோல் தூத்துக்குடி போன்ற இடங்களில் அவர்களுடைய கோடவுன்களில் கோதுமை போன்றவற்றை ஸ்டாக் செய்து வைக்கிறார்கள். அதை நாமே சென்று டிரான்ஸ்போர்ட் மூலம் எடுக்க முடியாது. எதுவாக இருந்தாலும், அவர்களிடத்திலிருந்து முறையாக அனுமதி பெற்றுத்தான் பெற வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அமைச்சர் அரசியல் போதனை செய்திருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆக, அதை நாமாகச் செய்ய முடியாது. ஆனால் பொதுவாக இந்தியாவில் இன்றைக்கு உணவுப் பற்றாக் குறை இருக்கிறது. அதோடு பல மாநிலங்கள் நம்மைப் போல் கேட்கின்றன என்கிற அடிப்படையில், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு அனுமதிக்க வேண்டுமென்ற கருத்தை அடிக்கடி வற்புறுத்தி வருகிறோம்.

Thiru A. R. DAMODARAN: Sir, may I know whether the Government will permit the Co-operatives to purchase rice in the open market from other States like Punjab, Andhra Pradesh or some other surplus States so that we may at least have rice to distribute at a higher price than the present subsidised price in

metropolitan and municipal areas because the Hon. Minister very well knows that he will not have enough rice available in the distribution system? Will he permit the Co-operatives at least to do this?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வெளிமாநிலங்களுக்குச் சென்று அந்த மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டிய லெவியைக் கொடுத்து விட்டு அப்படி வாங்கி வருவதற்கான வாய்ப்பு 'ஒன் லோன்' என்கிற முறையில் தனிப்பட்டவர்களுக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் எடுத்துச்சொன்னதைப்போல, கூட்டுறவுத் துறையும் அதுபோல் அங்கிருந்து வாங்கி வந்து அடக்க விலையை விட கூடுதலாக விற்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அதற்குப் போதிய அளவு நிதி வசதி கூட்டுறவுத் துறையிடம் இல்லை. தனியார் வாங்கி வருவது போல், இவர்களும் வாங்கி எடுத்து வருவதில் தவறில்லை. அவர்களிடம் அதற்குரிய நிதி வசதி இருந்தால், அவர்களையும் வாங்கச் சொல்கிறோம். ஆக, தனியாரும், அரசும் அதோடு கூட கூட்டுறவுத் துறையும் அப்படி வாங்கி எடுத்து வருவதற்கான முயற்சிகளைச் செய்யலாம்.

சுற்றுலாத் தலங்களை அபிவிருத்தி செய்ய சிறப்புத் திட்டம்

***316 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு செய்தி-அற நிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமேசுவரம், மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய சுற்றுலாத் தலங்களை அபிவிருத்தி செய்ய, சிறப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதா?

(உ) ஆம் எனில், இத்திட்டங்கள் எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: (அ) இராமேசுவரம், மாமல்லபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய சுற்றுலா இடங்களை மேம்படுத்த பெருந் திட்டங்கள் முறையே ரூபாய் 28 கோடி, ரூ. 6 கோடி, ரூ. 16 கோடி செலவிட தயாரிக்கப்பட்டுள்ளன.

(இ) மற்றும் (உ) இத்திட்டங்களுக்கு மத்திய அரசின் அனுமதி தேவையில்லை என்றாலும் இத்திட்டங்களை நிறைவேற்ற நிதி உதவி கோரப் பட்டுள்ளது. மத்திய அரசின் உதவி இன்னும் கிடைக்கப்பெறாத நிலையில் மாநில அரசின் பல்வேறு துறைகள் மூலம் இத்திட்டங்களின் பகுதிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

[1983 ஏப்ரல் 23

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : வட மாநிலங்களிலே காசி எவ்வளவு ஒரு முக்கியமான ஸ்தலமாக இருக்கிறதோ அதேபோல இராமேசுவரமும், கன்னியாகுமரியும் தமிழ் நாட்டிலே மிக மிக முக்கியமான ஸ்தலங்கள். ஆகவே இதுகுறித்து நாம் மத்திய அரசிடம் உதவி கேட்டிருக்கிறோமே, இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை ஏதாவது நடந்திருக்கிறதா? மத்திய அரசு உதவி செய்வதற்காக இதனைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறதா? இதுகுறித்து மேலும் அதிகமான விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இந்தத் திட்டத்தைப்பற்றி விவரமாகத் தெரிவிக்க ஆரம்பித்தால், ஒரு நீண்ட பட்டியலையே நான் அவைக்கு வைக்க வேண்டிய அவசியம் வரும். இராமேஸ்வரத்தைப் பொறுத்தவரையில், 28 கோடி ரூபாய் செலவில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இணைத்து திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

உதாரணமாக தங்கும் வசதிக்காக 793 இலட்சம் ரூபாய், உச்சிபுளியில் விமானக்கூடம் மேம்படுத்த 982.60 இலட்சம் ரூபாய், குடிநீர் மற்றும் வசதிகளை ஏற்படுத்துவதற்கு 205 இலட்சம் ரூபாய், படகுத் துறை, பூங்கா, உணவுக் கூடம் போன்ற வசதிகளை ஏற்படுத்த 435.05 இலட்சம் ரூபாய்.

இப்படி அடிப்படை மேம்பாட்டுத் திட்டங்களோடு இணைந்த ஒன்றாகத் தான் இந்த 'மாஸ்டர் பிளான்' தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி மத்திய அரசுக்கு நாம் பலமுறை கடிதங்கள் எழுதியும், நேரிலும் கேட்டிருக்கிறோம். இருந்தாலும் அவர்கள் இதற்கான உதவிகளை இன்னும் தருவதாகச் சொல்லவில்லை. இதற்கிடையே நம்முடைய நிதிவசதிக்கு ஏற்ப மாநில அரசு பல துறைகளின் மூலம், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, போக்குவரத்துத் துறை, மருத்துவத் துறை போன்ற துறைகளின் மூலம் அவரவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற திட்டங்களின் அடிப்படையில் நாமே ஆண்டுதோறும் 20 இலட்சம் ரூபாய், 25 இலட்சம் ரூபாய் என்கிற அளவில் ஒவ்வொரு துறைக்கும் நிதியை ஒதுக்கி திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். இந்தச் சூழ்நிலையில் நாம் மத்திய அரசை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இராமேசுவரம், மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களை அகில இந்திய ரீதியில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா இடங்களாக மத்திய அரசு அல்லது இந்திய சுற்றுலாத் துறை அபிவிருத்தி செய்வதாக ஏற்றுக்கொண்டிருக்கிறதா? அல்லது மாநில அரசு சுற்றுலா மையம் என்கிற அடிப்படையில் ஏற்றிருக்கிறதா?

1983 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மைய அரசாலே நியமிக்கப்பெற்ற உலக நிபுணர் குழு ஒன்று மாமல்லபுரத்தை உலக சுற்றுலா ஸ்தலங்களில் ஒன்றாக, மேம்படுத்துகின்ற சுற்றுலா ஸ்தலங்களிலே ஒன்றாக, ஏற்று 5, 6 ஆண்டுகளுக்கு முன்பே அறிக்கை ஒன்று கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில், கோவாவைப்போல, கேரளாவிலே யுள்ள கோவளத்தைப்போல, நம்முடைய கடற்கரைப் பகுதி குறித்தும் அதிகம் முதலீடு செய்ய அவர்கள் கவனத்தைச் செலுத்தவேண்டுமென நாம் அதைச் சுட்டிக்காட்டி கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக மாமல்லபுரத்தை மேம்படுத்துகின்ற திட்டத்திற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டோம். நீண்ட விவாதத்திற்குப் பிறகு, நெடுங்காலமாக அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்த ஒலி-ஒளி காட்சியை அமைப்பதற்கு ஒப்புதல் அளித்தார்கள். அது 48 இலட்சம் ரூபாய்க்கான திட்டம். அதற்கு 20 இலட்சம் ரூபாய் தருவதாகச் சொன்னார்கள். அதற்குப் பிறகு நாங்கள் 20 இலட்சம் ரூபாயையும், இங்குள்ள சுற்றுலா வளர்ச்சிக் கழகம் எழு இலட்சம் ரூபாயையும் போட்டு இதனை அமைக்கலாமென்கின்ற திட்டத்தை அவர்களுக்கு அனுப்பினோம். ஆனால் "சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்கமாட்டார்" என்பதுபோல், மத்திய சுற்றுலாத் துறை இத்தனை வருடங்களுக்குப் பிறகு, 20 இலட்சம் ரூபாய் கொடுக்க முன்வந்தாலும்கூட, தொல்பொருள் ஆய்வுத் துறை கடற்கரைக் கோவில் அருகிலே அதை அமைக்க அனுமதிக்காமல் மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அதைப்பற்றி விவாதித்துக்கொண்டிருக் கிறோம்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மதுரையிலே இப்போது சிறப்பாக நாம் ஒலி-ஒளி காட்சியை நடத்திக்கொண்டிருப்பதுபோல், மாமல்லபுரத்திலும் ஒலி-ஒளி காட்சியை நடத்துவதற்கு மீண்டும் மத்திய அரசிடம் இதுகுறித்து வற்புறுத்தப்படுமா? மகாபலிபுரத்திற்குச் சென்றால், ஊருக்குள்ளே புகுந்து மல்லுக்கட்டிக் கொண்டுதான் திரும்ப வந்துசேர வேண்டியிருக்கிறது. பாதை சரியில்லை. ஆகவே பாதையைச் சீரமைத்து எளிதில், விரைவில் மாமல்லபுரம் சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுமா? அத்துடன் மாமல்லபுரத்திற்கு எளிதில் வெளிநாட்டுக்காரர்கள் போகும் அளவுக்கு, இன்னும் மாமல்லபுரத்தைக் கவரும் அளவுக்கு ஆக்க ஹெலிகாப்டர் சர்வீஸை விடுகின்ற உத்தேசம் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இந்த ஒலி-ஒளி காட்சியைப் பொறுத்தவரை, நாம் ஏற்கெனவே இதைக் கேட்டுக்கொண்டு, கடுமையாக வாதாடிக் கொண்டிருக்கிறோம். ஆனால் எந்தவிதமான நியாயமான [illegible] [illegible] தொல்பொருள் ஆய்வுத் துறை இந்த

[1983 ஏப்ரல் 23

நிகழ்ச்சிக்கு அனுமதி மறுத்துக்கொண்டிருக்கிறது. அது கல்வி அமைச்சருடைய பொறுப்பிலே இருக்கிறது. நாம் விவாதித்துக்கொண்டு, மறுபடியும், மறுபடியும் மன்றாடியதற்குப் பிறகு எந்த மாதிரியான நிகழ்ச்சிகளை ஒலி-ஒளி காட்சியில் அமைக்கப் போகிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். நாம் அந்த நிகழ்ச்சியிலே எந்தக் கருத்தைச் சொல்லப் போகிறோம், எந்த வரலாற்றைச் சொல்லப் போகிறோம் என்பதைப் பற்றித் தயாரித்து அனுப்புகிறோம் என்று சொல்லியிருக்கிறோம். இதுபோன்ற தொன்மையான சுற்றுலா இடங்களைப் பார்க்க சுற்றுலா பயணிகள் பெருமளவில் வருகிறார்கள். இதைப் பயன்படுத்தி இப்போது டெல்லி செங்கோட்டையில் ஒலி-ஒளி காட்சியை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதுபோல் காஷ்மீரில் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட இந்தியாவில் வேறு எந்த ஒரு இடமும் மாமல்லபுரத்தைப்போல இயற்கையாகவே கடற்கரை, அதன் அருகில் அருமையான கோவில் போன்ற சிறப்புகள் கொண்டதாக அமையவில்லை. அந்த அடிப்படையில் கடற்கரைக்கு அருகில், கோவிலுக்கு அருகில் அமைக்கிறோம் என்றால், உடனே தொல்பொருள் ஆய்வுத் துறை பழங்கால நினைவுச் சின்னங்களுக்கு இதன்மூலம் அழிவு ஏற்பட்டு விடலாம் என்று வாதாடுகிறார்கள். அப்படி ஒன்றும் ஏற்படாது, அந்தக் கருத்து தவறு என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட சாலை வசதியை ஏற்படுத்துவது குறித்து ஏற்கெனவே நாம் உருவாக்கியிருக்கிற ரூ. ஆறு கோடி திட்டத்திலே அதுவும் ஒன்று என்பதைத் தெரிவித்துக்

(முற்பகல் 10-00)

கொள்கிறேன். இப்படி அமைக்கிற சுற்றுச் சாலையை (ரிங் ரோடு) ரூ. 108.74 லட்சத்தில் திட்டமிட்டு இந்த வசதிகளைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும்போது அந்த கிராமங்களுக்குள் போய் நெருக்கடியை ஏற்படுத்தக் கூடாது. அப்படி ஒரு திட்டம் இருக்கிறது. அதை நமது மாநிலப் போக்குவரத்துத் துறை, தன்னுடைய செலவில் செய்ய இயலுமா என்று பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI: Will the Hon. Minister kindly place before the House the plans which he has got so that the Members may know about them and make their suggestions also?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்களே, அந்தத் திட்டங்கள் என்பவை மிகப் பெரிய புத்தகங்களாக இருக்கின்றன. அப்படியே அவை வரைபடங்களாகத் தயாரித்து வைக்க வேண்டுமானாலும், அல்லது அந்த அந்தப் பகுதிகளை மட்டும் எடுத்து, அந்த விபரங்களை மட்டும்

1983 ஏப்ரல் 23]

வேண்டுமானாலும், அல்லது தனியாக விபர அறிக்கை வேண்டுமானாலும், அவைக்குத் தருகிறேன். மிகப் பெரிய பௌண்ட் புத்தகங்களாக அவைகள் இருப்பதால், மாண்புமிகு தலைவர் அவர்கள் அனுமதித்தால், அதைத்தர அரசு பரிசீலிக்கும்.

THIRU A. R. DAMODARAN: Sir, while accepting that the Hon. Minister has prepared full scale plans for the development of these three places into tourist centres, may I draw his attention to the fact that simple beautification could be done by our own Government in Rameswaram, Kanyakumari and Mamallapuram? If one visits these centres, one can see that they are crowded with pavement vendors and very many huts. While accepting that funds may be a problem, I think even a sum of Rs. 10 lakhs will be sufficient to clear these spots of huts which have been put up in all these centres spoiling the appearance of these towns. May I know whether the Government will do this?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்களே, இந்த அடிப்படையில்தான் இந்தத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை அந்தப் பொறுப்பை மேற்கொண்டிருக்கிறது. உதாரணமாக, ராமேஸ்வரத்தில் ரூ. 22.59 லட்சம் கடந்த ஆண்டில் அங்காடிகள் கட்ட, ஒளி விளக்குகள் போட என்று இப்படி ஒதுக்கியிருக்கிறோம். கடந்த ஆண்டு மாமல்லபுரத்திற்கும் ரூ. 17 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையினர் அந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் அதில் தலையிடுகிறபோது, நெடுங்காலமாக அங்கே உட்கார்ந்து வியாபாரம் செய்கிறவர்களை, அப்படி வசதிகளைப் பெற்றவர்களை சுலபத்தில் அகற்ற முடியவில்லை. என்க்ரோச்மெண்ட் என்ற ஆக்கிரமிப்பு என்பது எல்லா இடத்திலும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. குறிப்பாக இப்படிப்பட்ட சுற்றுலா தலங்களில் ஆக்கிரமிப்பு நடந்து, நாம் அங்கே போனால், மிகப் பெரிய எதிர்ப்புகள் பல முனைகளிலிருந்து வருகின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே சிபாரிசுகளைச் செய்யும் நிலைகள் இருக்கின்றன. அந்தச் சூழ்நிலையில் அரசாங்கத்திற்கு இக்கட்டான நிலை ஏற்படுகிறது, மிகப் பெரிய திட்டத்தை உருவாக்கி, வசதிகளையெல்லாம் செய்து, கட்டுப்பாடாக இந்த இடத்தில் கடைவீதி இருக்காது என்று சொன்னால் ஒழிய, இந்தச் சங்கடங்கள் இருக்கத்தான் செய்யும். இதை மனதில் வைத்துத்தான், முறையாக கடைகளைக் கட்டிக் கொடுத்து, இப்போதுள்ள இடங்களிலிருந்து அகற்றப்பட வேண்டும். உதாரணமாக கன்னியாகுமரியில் கடற்கரையில் மக்கள் போகிற பாதையில்

இடையூறு செய்து கொண்டிருக்கிறார்கள். அதை எடுத்து வேறு இடத்தில் முறையாக, ஒழுங்காகக் கடைகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டம் போட்டிருக்கிறோம். அந்தத் திட்டத்திற்காக அதைப் பார்க்க கன்னியாகுமரிக்கு போகிறோம் என்று ஆரம்பித்தாலே, அங்கே இருப்பவர்கள் சங்கம் வைத்து போராட ஆரம்பித்துவிடுகிறார்கள். பல பேர், அரசியல் கட்சிகள் சிபாரிசுகளைப் பிடித்து, கட்சிகளின் பிரதிநிதிகளை வைத்து அரசாங்கத்தோடு வாதிடுகிற முயற்சிகளிலும் ஈடுபடுகிறார்கள். ஆகவே இதை மிகுந்த கவனத்தோடு, எழுந்திருக்கும் சிக்கலை, அகற்றவேண்டிய நடைமுறைகளை அரசு கவனித்து வருகிறது. எப்படியும் இதை நீக்கி, அவர்களுக்குக் கொஞ்சம் கஷ்டம் இருந்தாலும், அவர்களுக்கு விளக்கிச் சொல்லி, முறையாக ஒழுங்குபடுத்தும் வேலையை அரசாங்கம் கவனித்துக் கொண்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN: Sir, most of these huts and encroachments that have come up have come up only with the approval and sanction of the Government Officers. For 8 years we have had no municipal council or panchayat and now the Hon. Minister says that at the time of steps for removal of these huts, the M.L.A's and M.L.C's. will come in their support. Why did the Government permit these people to put up these huts? I can assure the Hon. Minister one thing but I will have to put it in the form of a question. Is there any proposal to prevent such encroachments at least up to 3 km. radius around these centres? I can assure the Hon. Minister that he will not lose votes if he removes these encroachments.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்களே, அதிகாரிகள் அனுமதித்துத்தான் இவைகளெல்லாம் நிர்மாணிக்கப்படுகின்றன என்று சொல்வதில் வித்தியாசம் இருக்கிறது. அதனால் முழுவதும் இல்லை என்று சொல்லவில்லை. அதிகாரிகள் அனுமதிக்கிறார்கள் என்பது வேறு, அதிகாரிகள் பார்த்துக் கொண்டு விட்டுவிடுகிறார்கள் என்பது வேறு. சட்டப்படி அனுமதி யாருக்கும் கொடுப்பதில்லை. சட்டத்தை அவர்களே கையில் எடுத்துக்கொண்டு, அப்படி அனுமதி கொடுப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. அப்படி பார்த்துக் கொண்டிருப்பவர்கள் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தால், வேறு சில சூழ்நிலைக்குக் கொண்டு போய்விடுகிறது. ஏதோ நடந்தது நடந்துவிட்டது. முறையாக, ஒழுங்காக வைத்துக் கொள்ள வேண்டுமென்ற அவசியம் இன்று மக்களுக்கும் இருக்கிறது. ஓட்டுகள் கிடைக்காது என்ற பயத்தால் நடவடிக்கை எடுக்காமல் இல்லை. ஓட்டு இருக்கிறதா இல்லையா என்பது

அல்ல பிரச்சினை. ஓட்டுப் போடுபவர்கள் அரசாங்கம் நல்ல காரியங்களைச் செய்யும் என்றுதான் ஓட்டு போடுகிறார்கள். இந்த அரசு செய்யும் காரியங்கள் நல்ல காரியங்களாகத்தான் இருக்கும் என்றும் மக்கள் நம்புகிறார்கள். அதனால் இந்தக் காரியத்தைச் செய்தால், மக்கள் ஓட்டுப் போடமாட்டார்கள் என்ற பயம் எங்களுக்கு இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களும் அந்த எண்ணத்தில் இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, முன்பு ஒரு முறை சென்னையிலிருந்து மாமல்லபுரத்திற்குச் சிறிய கப்பல் அல்லது படகுப் போக்குவரத்து விடலாம் என்று அரசு யோசிப்பதாகச் செய்தி வந்தது. அத்தகைய கருத்து ஏதேனும் அரசுக்கு இருக்கிறதா? அப்படியானால் ராமேஸ்வரம், கன்னியாகுமரி போன்ற இடங்களுக்குக் கடற்கரையோரப் படகு, அல்லது சிறு கப்பல் போக்குவரத்து விடும் யோசனையை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து கடல் வழியாக சுற்றுலாப் பயணிகளை மாமல்லபுரத்திற்கு அழைத்துச் செல்லும் திட்டம் பற்றிப் பரிசீலிக்கப்பட்டது. ஆனால் அது உடனடியாகப் நிறைவேற்றப்படக்கூடிய அளவுக்கு முக்கியமானதாக இல்லை என்று சொல்லப்பட்டது. சமீபத்தில் நடைபெற்ற தென் மாநில சுற்றுலா அமைச்சர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். கோவாவில் உள்ள மேற்குக் கடற்கரை வழியாக, நம்முடைய கிழக்குக் கடற்கரையான சென்னைக்கு வந்து சேருகிற வகையில் கப்பல் வழியாகக் கொண்டு வருகிற ஒரு திட்டத்தை உருவாக்கலாம், அதற்காக ஒரு சுற்றுலாக் கழகத்தைக் துவக்கலாம் என்ற அளவில் விவாதிக்க அந்த மாநாட்டைக் கூட்டினார்கள். அப்படிப்பட்ட ஒரு கருத்துகூட பரிசீலனையில் இருக்கிறது.

இந்த அடிப்படையில் இராமேஸ்வரத்தில் உள்ள சிறிய துறைமுகத்தை அபிவிருத்தி செய்கிற ஒரு திட்டம் இருக்கிறது. இதற்காக 'கப்பல் துறைப் பாலம்' ஆர்.பி.சி. யில் போட வேண்டுமென்று ரூ. 107 லட்சத்தில் திட்டம் போட்டு, சிறிய துறைமுகம் என்ற அளவில் மாநில அரசுக்கு உட்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செய்ய நினைத்தோம். அவர்கள் எதை எடுத்தாலும், நீங்களே செய்து கொள்ளுங்கள் என்று சொல்கிறார்களே என்று நாம் இன்றைக்கு ஸ்ரீலங்காவிலிருந்து அதிக பயணிகள் ராமேஸ்வரத்திற்கு வருகிறார்கள் என்று கட்ட திட்டங்களைத் துவக்கினோம். ஒரு பக்கத்தில் தூத்துக்குடிக்கே பயணிகள் கப்பல் விடவேண்டுமென்று அவர்களிடத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் ராமேஸ்வரம் பகுதிக்கும் பயணிகள் வருவதை அதிகப்படுத்த வேண்டுமென்பதற்காக 107 லட்சம்

ரூபாயில் திட்டம் போட்டோம். ஆனால், உடனடியாக, எங்களுடைய அடுத்த ஆணை வருகிற வரை, அதை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று மத்திய அரசு நிறுத்திவிட்டது. அப்படித்தான் ராமேஸ்வரத்துக்குப் பக்கத்தில் உள்ள உச்சிபுள்ளி என்ற பழைய விமான தளம். "ஏற்கெனவே உபயோகித்து, இப்போது பயன்படுத்தாமல் இருக்கிற விமான தளம் இருக்கிறது. அதை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். அதைச் சீர் செய்ய வேண்டும்" என்று நம்முடைய மாஸ்டர் பிளானில் அதற்காக நிதி ஒதுக்கி, அதைச் செய்ய வேண்டுமென்று மத்திய அரசிடத்தில் கேட்டிருக்கிறோம். ஆகவே இப்படிப்பட்ட முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டிருக்கிறோம். இந்தியாவில் இப்போது கிட்டத்தட்ட ரூ. 1000 கோடி அந்நியச் செலாவணி சுற்றுலாத் துறை மூலம் வருகிறது என்ற புள்ளி விவரத்தைத் தருகிறார்கள். இப்படி எந்த முதலீடும் இல்லாமல் வருமானம் வருகிற இத்துறைக்கு மத்திய அரசு இன்னும் முன்னுரிமை தரவேண்டும். இதை பிரையாரிட்டி செக்டாரில் கொண்டு வரவேண்டும். அது மத்திய அரசு நிதி ஒதுக்கீட்டிலும் சரி, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டிலும் சரி, அதற்காகத் திட்டங்கள் வகுக்கிற பிளானிங் கமிஷன் என்று சொல்லப்படுகிற திட்டக் குழுவிற்கு, சுற்றுலா என்று போனாலே அதைக் கடைசியில் தள்ளி விடுகிறார்கள். சுற்றுலா என்றால், யாரோ வசதி படைத்த, பணக்காரர்களுக்கு என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எந்தவிதமான மூலப் பொருளும் இல்லாமல், உற்பத்தி செய்யப்பட்ட பொருளைத் தராமல், சுமார் 1,000 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் என்ற கருத்தையும் தெரிவிக்கிறார்கள். இது ஒரு தொழிலாகவும் வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே வளர்ந்து கொண்டிருக்கிற தொழிலை, இயற்கையே நமக்குச் செல்வத்தை அள்ளித் தருகிற ஒரு தொழிலை ஏன் இந்திய அரசு பாராமுகமாகவே வைத்துக் கொண்டிருக்கிறது என்றுதான் நம்மாலே புரிந்து கொள்ள முடியவில்லை.

Thiru G. VASANTHA PAI: Sir, referring to the hon. Member Thiru Damodaran's suggestion of having a 3 km. periphery, even if the Government cannot have it, the Government can consider having at least a periphery for one KM radius from the Centres as is done in several other countries, like Tulum in Mexico. If the Government can put those people outside the periphery, on the other side of the Centres, they can also have enough space and this problem can be solved without much expense. Will the Hon. Minister consider this?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்களே, அரசோ, துறையோ இதைப் பரிசீலிப்பதில் எந்தவிதமான ஆட்சேபணைகளும் இல்லை. இதைவிட தீவிரமாகப் பரிசீலித்து இதற்கு என்று ஒரு திட்டம் போட்டு, மகாபலிபுரம் நகருக்குள் வாகனங்கள் நுழையவே கூடாது என்றுதான் ஒரு "ரிங் ரோடு" போடுவதற்கான திட்டம் போட்டு செயல்படுத்த விரும்பினோம். அந்த மகாபலிபுரம் மிகவும் குறுகலாக இருக்கிற காரணத்தாலும், பழமையான நகரமாக இருக்கிற காரணத்தாலும், போகிறவர்கள் தொல்லையில்லாமல் இருக்க வேண்டும் என்று கருதினோம். ஆனால் நம் நாட்டு மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்றால், தாங்கள் இருக்கிற இடத்திலேயே எல்லாக் காரியங்களும் நடக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், தங்களுக்கு ஒரு முறையான கழிப்பிடம் இல்லையென்றால், பக்கத்தில் யாரும் பார்க்கவில்லை என்றால், அந்த இடத்தையே கழிப்பிடமாக ஆக்கிக் கொள்கிற நிலையில் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட மன நிலை உள்ள மக்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால்தான், அவர்கள் திடீர் திடீர் என்று எங்கே பார்த்தாலும் கடைகளை உருவாக்கிக் கொள்கிறார்கள். கேட்டால், "வருகிற சுற்றுலாப் பயணிகள் இங்கேதான் வருகிறார்கள். இங்கே கடை வைக்கவில்லை என்றால் எங்களுக்கு எப்படி வியாபாரம் ஆகும்?" என்கிறார்கள். அப்படி வைக்கப்படும் கடைகளை எடுக்க முயற்சித்தால், 10 பேரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வருகிறார்கள். கடுமையான முறையைப் பயன்படுத்தினால், வன்முறையில் ஈடுபடுகிறார்கள். காவல் துறையின் உதவியோடு வன்முறையில் ஈடுபடுகிறார்கள் என்று உடனே பத்திரிகைகளில் செய்தி வருகிறது. இன்றைக்குக் கூட ஒரு படத்தை எடுத்துப் போட்டிருக்கிறார்கள். சட்டத்தை மீறி ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அதைப் பிரித்தால், "போலீஸ் துணையோடு பிரித்துப் போடப்பட்டிருக்கிறது" என்று பத்திரிகையில் படம் போடுகிறார்கள். இதுதான் இன்றைக்கு இருக்கிற நிலைமை. உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்திற்கு இரண்டு பக்கம் இடி என்பார்கள். எங்கள் நிலைமை அப்படித்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வசந்த பை, திரு. தாமோதரன் போன்றவர்கள் மிக உயர்ந்த நிலையில் இருந்து கொண்டு, இவைகளெல்லாம் நன்றாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். அந்த எண்ணத்தைதான் இந்த அரசும் கொண்டிருக்கிறது. ஆனால் நாங்கள் சந்திக்கிற மக்களெல்லாம் ஏழை எளியவர்களாக, கஷ்டப்படுகிறவர்களாக, சூழ்நிலையைப் புரிந்து கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களிடத்தில்தான் நாங்கள் எங்கள் பிரச்சினை

களைத் தீர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் வருகிற கஷ்டம் தான் இது. ஒரு கிலோ மீட்டர் அல்ல, 3 கிலோ மீட்டருக்குக் கூட இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் அடிக்கடி மேலை நாடுகளுக்குச் சென்று வருவதால், அங்குள்ள நிலைமைகளைக் குறிப்பிட்டார்கள். நானும் சென்று வந்திருக்கிறேன். அங்குள்ள நிலைமைகளை நான் அறிவேன். நாம் செல்லுகிற காரை நிறுத்திவிட்டு, போகிற இடத்திற்கு 1 கிலோ மீட்டர் அல்லது 2 கிலோ மீட்டர் போக வேண்டிய நிலைமை அங்கெல்லாம் இருக்கிறது. காரை நிறுத்துவதற்கே ஒரு ½ மணி நேரம் சுற்றிவிட்டு இடம் பார்த்து நிறுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் இங்கே அப்படி இல்லை. எங்காவது குறுக்கே நிறுத்திவிட்டு இறங்கிப் போய்விட்டால், பிறகு வந்து பார்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறோம். இத்தகைய உணர்வுகளையெல்லாம் எடுத்துப் பேசுகிற நாமேகூட வெளியே போகிறபோது காரைக் கொஞ்சம் தள்ளி நிறுத்துங்கள் என்று போலீஸ்காரர் சொன்னால், அவரை ஏமாற்றி விட்டு; அந்தக் கடை வாசலில் நிறுத்திவிடுகிறோம். இப்படிப்பட்ட எண்ணம்தான் நம்மைப் போன்றவர்களுக்கே ஏற்படுகிறது. நாம் எல்லோரும் இப்படிப் பழகிப் போயிருப்பதால், கொஞ்சம் கொஞ்சமாகத் தான் மக்களைத் திருத்த வேண்டியிருக்கிறது. இப்படி மிகப் பெரிய சங்கடமான பொறுப்பைச் சந்தித்துக் கொண்டுதான், இந்தச் சுற்றுலாத் துறையை மேம்பாடு செய்ய வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினா சுற்றுலாவைப்பற்றி இருப்பதால், கேள்வியும் சுற்றிக்கொண்டே இருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் மெக்ஸிகோ பற்றியும் தாலும் பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். அவர் அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சென்று வருகிறவர். பல இடங்களைப் பார்த்ததன் அடிப்படையில் இங்கே பல கருத்துக்களைச் சொல்கிறார். சுற்றுலாவைப்பற்றி அவர் நிறைய தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார். நம்முடைய உறுப்பினர்களையெல்லாம் ஒரு குழுவாக அமைத்து, பல இடங்களுக்குச் சென்று பார்த்துவிட்டு வந்தால், நல்ல அரிய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பாக இருக்கும். எனவே மாண்புமிகு தலைவர் அவர்கள் தலைமையின்கீழ்—அவரால் பயணம் செய்ய இயலுமானால்—இப்படிச் சென்று வருவதற்கு ஒரு ஏற்பாடு செய்தால், இங்கே சுற்றுலாபற்றி பல நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஏதுவாக இருக்கும் என்பதால், இந்த யோசனை குறித்து அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: தலைவர் அவர்களே, முன்பே இப்படிப்பட்ட ஒரு கருத்து துறையின் பரிசீலனையில் இருந்து வருகிறது. சென்ற ஆண்டே இதை அமுல்படுத்தலாம் என்றுகூடக் கருதினோம். [illegible]ன்ற உறுப்பினர்களை அழைத்துச் சென்று, இப்போது நாம் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளைப்பற்றி அவர்கள் தெரிந்துகொள்கிற வகையிலும், மேலும் பல ஆலோசனைகளை அவர்களிடமிருந்து பெறுகிற வகையிலும் சுற்றுலாத் தலங்களுக்கெல்லாம், அவர்களை அழைத்துச் செல்ல வேண்டும் என்று சென்ற ஆண்டே திட்டமிட்டோம். ஆனால் பல்வேறு சூழ்நிலைகள் குறுக்கிட்டதால், அதை நிறைவேற்ற முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இந்த யோசனை ஏற்கெனவே துறையின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

Bathing Ghats

*317 Q.—Thiru E. S. VENKATESAN: Will the Hon. the [M]inister for Information and Religious Endowments be pleased [to] state—

(a) the number of bathing ghats in Kanyakumari;

(b) which one is mostly used by the pilgrims and tourists; [an]d

(c) the steps taken to ensure their safety, while taking [bat]h?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: (அ) ஒன்று.

(ஆ) வினா எழவில்லை.

(இ) இந்தக் குளிக்கும் இடம் வடபாதி தென்பாதி என இரண்டாகப் [பிரி]க்கப்பட்டுள்ளது. இரண்டுக்கும் நடுவே ஒரு பாதை உள்ளது. அதில் [இரு]ம்புக் கம்பிகள் நிறுவி இரும்புச் சங்கிலிகள் கோர்க்கப்பட்டும் வழிகளின் [இரண்]டு பாகங்களிலும் சிமெண்ட் கான்கிரீட் திண்ணைகள் அமைக்கப்பட்[டிரு]ந்தன. காலப் போக்கில் கடலின் உவர் நீரால் பழுதடைந்த இரும்புச் [சங்]கிலிகளும் கான்கிரீட் திண்ணைகளும் உடைந்து போய்விட்டன. இ[வற்றை] [illegible] செப்பனிட. கன்னியாகுமரி தேவஸ்தானம் போர்டு த[illegible] [illegible] எடுத்து வருகிறது.

[1983 ஏப்ரல் 23

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : தலைவர் அவர்களே, நீராடு துறையில் நிறைய சிறு சிறு பாறைகள் இருக்கின்றன. அதோடு அங்கே நிறைய பாசி பிடித்த இடங்களும் இருக்கின்றன. இதன் காரணமாக அங்கே செல்லுகிற பயணிகள் சௌகர்யமாகக் குளிக்க முடியவில்லை. எனவே இவைகளையெல்லாம் அகற்றினால், அங்கே குளிப்பவர்கள் மகிழ்ச்சியோடும் சௌகர்யமாகவும் குளிக்க முடியும் என்பதால், அரசு இதற்கு ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, ரூ. 38,000 செலவில் இப்போது ஒரு திட்டம் அனுமதிக்காக வந்து, ஆணையர் அவர்களின் அனுமதியைப் பெற்றிருக்கிறது. மிக விரைவில் இந்தக் குறைகள் போக்கப்படும் என்று நம்புகிறேன்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : தலைவர் அவர்களே, இந்த நீராடு துறையிலிருந்து விவேகானந்தர் பாறைக்குச் செல்வதற்காகப் பாலம் கட்டுவது குறித்து அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, மிகப் பெரிய சிக்கலான பிரச்சினைகளெல்லாம் இந்தக் கேள்விக்குள் அடங்கியிருக்கின்றன. ஆகவே, தனியாகக் கேள்வி போட்டால், தகுந்த தயாரிப்புகளோடு பதில் சொல்ல வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையம்

* 318 வினா.—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூர் வட்டம், ஆமூரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவாரூர் வட்டம், ஆமூர் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். கிழக்கே நாகூர் வரையிலும் மேற்கே திருவாரூர் வரையிலும் சென்றுதான் அந்தப் பகுதி மக்கள் மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை

1983 ஏப்ரல் 23]

இருக்கிறது. இதன் காரணமாக ஏழை எளிய மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே தற்போது அப்படிப்பட்ட செயற் குறிப்பு இல்லை என்றாலும், வருங்காலத்தில் அப்படிப்பட்ட செயற்குறிப்பை உருவாக்கி, அந்தப் பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, ஆமூர் உள்ளடங்கிய திருவாரூர் ஊராட்சி ஒன்றியத்தின் மொத்த ஜனத்தொகை 92,173. அதில் ஆமூரின் ஜனத்தொகை 709. ஏற்கெனவே அங்கே ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டர் ஒருவர் இருக்கிறார். அவரை வைத்து பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரி ஒன்று ஊராட்சி ஒன்றியத்திற்குள்ளேயே இப்போது செயல்பட்டு வருகிறது. அதோடு பக்கத்தில் 3 கிலோ மீட்டர் தொலைவில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. 6 கிலோ மீட்டர் தூரத்தில் கங்களாச்சேரியில் ஒரு சித்த மருத்துவ மனை செயல்பட்டு வருகிறது. 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திருவாதிரைமங்கலத்தில் ஒரு மகப்பேறு துணை நிலையம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட நிலைமையில் இந்த ஆரம்ப சுகாதார நிலையம் அங்கே தேவையா என்பதைப் பார்க்க வேண்டும். இப்படி ஒவ்வொன்றிற்கும் செலவு செய்தால், நிலைமை என்னவாகும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, ஆமூர் 709 மக்கள் தொகையைக் கொண்ட இடமாக இருந்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், அங்கே டாக்டர் எஸ். எஸ். பழனிவேல், எம்.பி.பி.எஸ்., என்ற டாக்டர் பல ஆண்டுகளாகவே புகழ்பெற்ற மருத்துவராக இருந்து வருகிறார். அவர் எல்லாத் துறைகளிலும் கெட்டிக்காரராக இருப்பதால், ஆமூர் ஆஸ்பத்திரிக்கு, நீண்ட தூரங்களிலிருந்தும் மக்கள் வைத்தியத்திற்கு வருகிற சூழ்நிலை ஏற்பட்டு, ஒரு பெரிய வைத்திய ஸ்தலமாகவே இருக்கிறது. அந்த அளவுக்கு விளம்பரமும் புகழும் பெற்ற இடமாக அது இருப்பதால், இன்றைக்கும் கிராம மக்கள் அதையே கருத்தில் கொண்டிருக்கிறார்கள். இப்போது அவர் சொந்தமாக ஒரு மருத்துவ மனையை வைத்துக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுவதைப்போல் திருவாதிரைமங்கலம், கங்களாச்சேரி போன்ற இடங்களுக்குச் செல்வதில்லை. இங்கேதான் அங்கிருந்தும் வருகிறார்கள். எனவே இதைக் கணக்கில் கொண்டு இந்தப் பிரச்சினையை மறுபரிசீலனை செய்து அந்தப் பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை உருவாக்க அரசு வருங்காலத்திலாவது முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 ஏப்ரல் 23

(முற்பகல் 10-30)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு, உண்மையிலேயே அங்கே ஒரு டாக்டர் சிறப்பாகப் பணியாற்றி, அந்த மருத்துவமனையை நடத்திக் கொண்டிருக்கிறார். பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த மருத்துவமனையை அரசாங்கம் எடுத்துக் கொண்டு, மற்ற டாக்டர்களை மாற்றிப் போடக்கூடிய நிலைமை இல்லாமல், ஒழுங்காக வேலையைச் செய்து கொண்டிருக்கிறார். அவரே அங்கு இருக்கட்டும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி

*319 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி ஒன்றைத் துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : திருச்சி மாவட்டத்திலே அத்தகைய மருத்துவக் கல்லூரியைத் துவக்க வேண்டும் என்ற கருத்து இப்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்றாலும், அங்கே மருத்துவக் கல்லூரியைத் துவக்குகிற கருத்துருவை வருகின்ற ஆண்டிலாவது அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா ? இதுபோன்ற மருத்துவக் கல்லூரி தென்னார்க்காடு மாவட்டத்திலே தனியார் துறையிலும் சரி, அரசுத் துறையிலும் சரி, கிடையாது. ஆகவே தென்னார்க்காடு மாவட்டத்திலே ஒரு மருத்துவக் கல்லூரியைத் துவக்கும் கருத்தை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதற்காகத்தானே திருச்சி மாவட்டத்தின் மீது அனுதாபம் வந்தது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : திருச்சியிலே மாவட்டத் தலைமை மருத்துவமனை நன்றாக நடந்து கொண்டிருக்கிறது. அந்த மாவட்டத்திலே மருத்துவக் கல்லூரி வேண்டும் என்று கேட்கிறார்கள்.

1983 ஏப்ரல் 23]

அதற்காக ஏ. எல். முதலியார் கமிட்டி ரிப்போர்ட் இருக்கிறது. அதை அவர்கள் ஆராய்ந்து பார்த்துக் கூறியிருக்கிறார்கள். அந்தப் பகுதியை மட்டும் படிக்கிறேன்.

As far as the number of medical colleges is concerned, the Bhore Committee has suggested one Medical College for 3 million population. We, however, feel that taking all aspects into consideration and more particularly the necessity for trained personnel to be available, it may not be possible to conform to this proportion which we agree may be desirable in course of time. For the present and for the next two plan periods, we feel that it would be more practical to lay down that there should be one medical college for every 5 million population.

அந்த அடிப்படையிலே தமிழகத்திலே இப்போது ஒன்பது கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : ஏ. எல். முதலியார் கமிட்டி ரிப்போர்ட் வந்து நீண்ட காலம் ஆகிவிட்டது. அதன் அடிப்படையில் மறுபரிசீலனை செய்து மீண்டும் ஏதாவது ஒரு ஏற்பாட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அந்தக் கமிட்டி ரிப்போர்ட்டில்

'For the present and for the next two plan periods we feel that it would be more practical to lay down that there should be one medical college for every 5 million population.'

என்று இருக்கிறது. இப்போது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் புதிதாக மருத்துவக் கல்லூரிகளைத் துவக்க வேண்டியதில்லை என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம். இப்போது பாரா-மெடிக்கல் பெர்சானல் ஏராளமாகத் தேவைப்படுகிறார்கள். The accent should be on para-medical personnel and not on the creation of more doctors. என்கிற அடிப்படையில் பாரா-மெடிக்கல் பெர்சானலை நிறைய உருவாக்க வேண்டும் என்று செயல்படுகிறோம். நர்ஸ்களைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே 390-ஆக இருந்ததை 690 பேர்களாக மாற்றியிருக்கிறோம். அப்படியே மருந்தாளர்கள் தேவைப்படுகிறார்கள் என்ற அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையினுடைய கருத்தைச் சொன்னார்கள். மக்கள் தொகையின் அடிப்படையில் கல்லூரிகளை ஆரம்பிக்க வேண்டும் என்று வந்தக் காலத்தில்

சொல்லப்பட்டது தற்காலத்திற்குப் பொருந்திவராது. இப்போதெல்லாம் காரணங்கள் கண்டுபிடிக்க முடியாத புதிய புதிய நோய்கள் பெருகிக் கொண்டிருக்கின்றன. சுற்றுப்புற சூழ்நிலைகள் பாதிக்கப்பட்டு, அதன் காரணமாக இந்தக் காலத்திலே பல்வேறு நோய்கள் பரவி வருகின்றன. அது மட்டுமல்லாமல், கிராமப்புறங்களில்கூட போதுமான அளவிற்கு டாக்டர்கள் இல்லையென்ற கருத்து இருக்கிறது. நகரங்களில் உள்ள மருத்துவ மனைகளில்கூட டாக்டர்கள் வந்து சேருவதற்குக் காலதாமதம் ஆவதால், பல இடங்கள் காலியாக இருக்கின்றன என்ற விவரம் இருக்கிறது. நமக்கு போதுமான அளவிற்குக் கல்லூரிகள் இல்லாமல் இருப்பதால்தான், இந்த இடையூறுகள் இருக்கின்றன என்ற கருத்தின் அடிப்படையில், இதுகுறித்து அரசு மறுபரிசீலனை செய்து, மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற கொள்கை முடிவை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இரண்டு, மூன்று கருத்துக்களை இணைத்துக் கேள்வி கேட்டிருக்கிறார்கள். கிராமங்களில் மருத்துவர்கள் இல்லையென்றால் கல்லூரிகளைத் திறப்பதால், அந்தப் பிரச்சினை தீர்ந்துவிடாது. அதற்காக ஏராளமான வேலை இல்லாத மருத்துவர்களை நியமிக்க வேண்டும். சர்வீஸ் கமிஷன் மூலம் இந்த ஆண்டு ஆயிரம் பேரை எடுத்திருக்கிறோம். அதிலே சில பேர் வந்து சேரவில்லை என்பதால், ஏற்படும் காலியிடங்களுக்கு நியமிக்க வேண்டும் என்று சர்வீஸ் கமிஷனுக்குத் தெரிவிக்கிறோம், பிறகு அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்கள் அனைவரும் உடனடியாகச் சேரவில்லை என்பதால் 200, 150 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே இந்த ஆண்டு ஆயிரம் பேர்களைத் தேர்ந்தெடுங்கள், மேலும் 500 பேரை வெயிட்டிங் லிஸ்டில் வையுங்கள், அப்போதுதான் இந்தப் பிரச்சினை தீரும் என்று சொல்லி, ஒரு புதிய முறையைக் கையாண்டு கொண்டிருக்கிறோம்.

THIRU A. R. DAMODARAN: Sir, if my memory is correct, the A. L. Mudaliar Committee Report was published in 1967 or 1968 and three plan periods are over. It was the recommendation of A. L. Mudaliar Committee that the maximum admission to a Medical College should only be 100 students. In case we are now having 1,500 students, we should have 15 Medical Colleges. Will the Hon. Minister consider that recommendation also and decide to locate Colleges in the District Headquarters Hospitals where 500 beds are there which is the minimum requirement for starting Medical Colleges and will he also bear

in mind that Karnataka has 27 Medical Colleges and Andhra Pradesh has something more, private, etc.? Only Tamil Nadu has 9 Colleges. If he will compare the Medical Colleges in other States, he would be able to do so.

The Hon. Dr. H. V. HANDE: Mr. Chairman, I would like to clarify the position. I do not think there are so many Medical Colleges in Karnataka or in Andhra Pradesh. There are only 3 or 4 more Colleges than here and some of them are Colleges with capitation fees. That is not our policy.

As far as filling up of vacancies is concerned, Karnataka has a bigger problem, Andhra has a bigger problem, because I have met my counterparts there and they have said that they are having a bigger head-ache than we. We have solved the problem to a certain extent and we will solve the problem in full.

The other point is this. The position obtaining at the time the A. L. Mudaliar Committee Report was published was entirely different. Now the necessity for doctors is less and the thrust all over the world is more for para-medical personnel. Instead of curative medicine, we lay stress on preventive and promotive medicine. So, we need less number of doctors as compared to the position a couple of decades ago. That is a different thing.

We are also taking up another measure, namely, we are introducing and we are trying to introduce N.M.A.M.S. Course in District Headquarters Hospital so that we may give more opportunities for P.Gs. We have taken up the policy of dispersal of the House Surgeons. We are now locating Salem District Headquarters Hospital and Tiruchirappalli District Headquarters Hospital which are fit enough to take the House Surgeons. This also will help us in reducing the rush in the hospitals. We have now 1050 students and 9 Colleges. It will not be very much more than 100 and it will be only 110 or 120.

டாக்டர் இரா. சனார்த்தனம்: திருச்சி, தென்னாற்காடு மாவட்டங்களுக்கு முன்பு, முதன் முதலாக சேலத்திலே ஒரு மருத்துவக் கல்லூரியைத் துவக்க வேண்டும் என்று கேட்கப்பட்டது. சேலத்து மாப்பிள்ளையான நிதியமைச்சர் அவர்கள் உள்ள இந்தக் காலக் கட்டத்திலாவது. . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஏற்கனவே வினாக்களுக்கான நேரம் யும் தருவாயில் இருக்கிறது. இதற்கிடையில் மாப்பிள்ளைகள்— பந்திகள் வந்தால், நேரம் கிடையாது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : செங்கற்பட்டில் உள்ள மருத்துவக் கல்லூரியை அங்கே மாணவர்களுக்கும் டாக்டர்களுக்கும் இடையே பிரச்சினைகள் இருப்பதால், சேலத்திற்கு மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அதைச் செய்துவிட்டு செங்கற்பட்டில் பிரச்சினையை உருவாக்க வேண்டிய தேவையில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : மருத்துவக் கல்லூரியை புதிதாக ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்து உருவாகும்போது, மிக மிகப் பின்தங்கிய மாவட்டமாகக் கருதப்படுகிற கிழக்கு முகவை மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, அங்கே மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : திருச்சிக்குக் கொடுத்த பதில்தான் இதற்கும் சொல்ல வேண்டும்.

சித்த மருத்துவ முறை

* 320 வினா.—**திரு. ஓ. எஸ். துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவத்தைப் பூர்த்தி பெற்ற தனி மருத்துவமாக முறைப்படி மத்திய அரசு அங்கீகரித்துள்ளதா?

(இ) ஆம் எனில், மத்திய அரசு அமைத்துள்ள இந்திய மருத்துவ ஆய்வுக் குழுவில் சித்த மருத்துவம் ஏன் தனியாகக் குறிப்பிடப்படவில்லை?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(இ) சித்த மருத்துவம் அகில இந்திய ரீதியாகச் செயல்படவில்லை என்றும், தமிழ் நாட்டில் மட்டும் நடைமுறையில் இருந்து வருகிறதென்றும், சித்த மருத்துவ முறை ஆயுர்வேத முறையுடன் மிகுந்த அளவில் ஒத்ததாக அமைந்துள்ளதென்றும், பயிற்சிபெற்ற மருத்துவர்கள், ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி பிரிவுகளில் இருப்பதைவிட, சித்த மருத்துவத்தில் குறைவாக இருக்கிறார்கள் என்றும் சில காரணங்களைச் சுட்டிக்காட்டி, அக்காரணங்

களை முன்விட்டுதான் ஆயுர்வேதாவுக்கும் சித்தா பிரிவுக்கும் தனித்தனியாக மத்திய ஆராய்ச்சிக் கழகங்கள் ஏற்படுத்தாமல், இந்த இரண்டு பிரிவுகளையும் ஒன்றாகச் சேர்த்து "ஆயுர்வேதா மற்றும் சித்தா மத்திய ஆராய்ச்சிக் கழகம்" என்று பெயர்கொண்ட ஒரே ஆராய்ச்சிக் கழகமாக அமைத்துள்ளதாக மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.

(முற்பகல் 10-30)

திரு. ஓ. எஸ். துரைசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசு அமைத்துள்ள இந்திய மருத்துவத் துறையில் சித்த மருத்துவம் தனியாக இருக்கச் செய்கின்ற அளவுக்கு நம் மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்த முன் வருமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வி நேரம் நீடிக்கப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் கைதூக்க வேண்டியதில்லை. அதற்காகத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்திற்கு ஒரு தனியான அந்தஸ்தைக் கொடுக்க வேண்டும் என்று பல முயற்சிகளை மாநில சர்க்கார் எடுத்துக்கொண்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இது கொண்டுவரப்பட்டது. அதன்பிறகு நாம் அதைப்பற்றி உடனடியாக மத்திய அரசுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்குங்கூட கடிதம் எழுதியிருக்கிறோம். அவர்கள் பாராளுமன்றத்திலே இதைப்பற்றி மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சில பேர்கள் நிச்சயமாக ஒத்துழைப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அனைத்துக் கட்சியிலே இருப்பவர்களும் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இப்படி சில முயற்சிகளை நாம் எடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, மத்திய அரசு இதிலே தெரிவிக்கின்ற கருத்து அவ்வளவு மகிழ்ச்சி தருவதாக இல்லை. நம்முடைய சித்த வைத்தியத்தின் பெருமையை மத்திய அரசு உணருவதற்கு, டெல்லியிலே ஒரு முகாமாவது வைத்து அதன் சிறப்புகளை பரிசோதனைகள் மூலமாக அவர்களுக்கு விளக்கும் முயற்சியை மேற்கொள்வார்களா? சித்தம் தெளிய மருந்து ஒன்று உண்டு என்பார்கள். எல்லா நோய்களுக்கும் சித்த வைத்தியத்திலே மருந்து இருக்கிறது என்பதை மத்திய அரசுக்கு மாநில அரசு எந்தவகையிலே உணர்த்தப்போகிறது என்று கேட்டுக்கொள்கிறேன்.

(இ) வேலை வாய்ப்பின்றி இருந்தவர்களுக்கு முறையான ஆசிரியர் பதவிகள் தருவதற்கு முன் ஓரளவு ஊதியம் தர வகை செய்வதற்குத்தான் தொழில் பழகு ஆசிரியர் திட்டம் 1970-73 ஆண்டுகளின் செயல்படுத்தப்பட்டதே தவிர அவர்களை முறையான ஆசிரியர்களாகக் கருதும் நோக்கம் அத்திட்டத்தில் கிடையாது. எனவே தொழில் பழகு ஆசிரியர்களாகப் பணியாற்றிய காலத்துக்கு கற்பித ஊதிய உயர்வு notional increments தரும் பிரச்சினைக்கு இடமில்லை.

Part-time Craft Instructors.

12. *Q.*—Thiru P. R. THOMAS : Will the Hon. the Miniser for Education be pleased to state :

(a) whether it is a fact that the Government have decided to convert all the part-time posts of Craft Instructors into full-time posts ; and

(b) if so, the number of Instructors to be benefited by such conversion ?

விடை—

(அ) மற்றும் (இ) நடுநிலைப் பள்ளிகளிலுள்ள தகுதிபெற்ற பகுதிநேர ஆசிரியர்களின் பணியிடங்கள் படிப்படியாக முழுநேரக் கைத்தொழில் ஆசிரியர்கள் பணியிடங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. இவ்வகையில் கடந்த ஆறு ஆண்டுகளில் (1977-78 முதல் 1982-83 முடிய) தகுதிபெற்ற பகுதிநேரக் கைத்தொழில் ஆசிரியர்கள் 950 பேர் பயன்பெற்றுள்ளனர்.

Selection Grade to Secondary Assistants.

13. *Q.*—Thiru P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that, as per G.O. Ms. No. 992, Education, dated 1st June 1978, Selection Grade has not been awarded to Secondary Assistants, taking into account, their services both in the Panchayat Union Schools and Government High Schools in Madurai and Ramanathapuram districts;

(*b*) if so, the number so affected; and

(*c*) the action proposed to be taken thereon ?

விடை—

(அ) இல்லை. மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பணிபுரியும் அனைத்து இடைநிலை ஆசிரியர்களுக்கும் அவர்கள் பஞ்சாயத்து ஒன்றியப் பள்ளிகளிலும் பணியாற்றிய பணிக்காலங்களை கணக்கில் கொண்டு தேர்வுநிலை வழங்கப்பட்டுள்ளது.

(இ) மற்றும் (உ) இக்கேள்விக்கு இடமில்லை.

Craft Instructors.

14. *Q.*—Thiru P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Craft Teachers, who had passed S.S.L.C. Examination, have been making a request for the past one year, that they be permitted to appear for T.S.L.C. Examination; and

(*b*) if so, the action taken thereon ?

விடை—

(அ) இத்தகைய கோரிக்கை மனு ஏதும் பெறப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Delay in sanctioning annual increments.

15. *Q.*—Thiru P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that there is undue delay in sanctioning annual increments and payment of arrears to teachers in the High Schools in Madurai and Ramanathapuram districts ;

(b) if so, the number of teachers affected ; and

(*c*) the reasons therefor ?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

Pay of the Teching and Non-Teaching staff of Pasumpon M.T.M. Government High School, Kamuthi.

16. *Q.*—Thiru P. R. THOMAS : Will the Hon. Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the scales of pay recommended by the Third Tamil Nadu Pay Commission, have not been implemented in the case of the Teachers and Non-Teaching Staff of Pasumpon M.T.M. Government High School, Kamuthi, Ramanathapuram district; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

விடை—

(அ) மற்றும் (இ) கமுதி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவு உயர்நிலைப் பள்ளியின் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு மூன்றாவது ஊதிய குழுவின் பரிந்துரையின்படி இப்போது ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு விட்டது.

Inducted B.T. Assistants in Higher Secondary Schools.

17. *Q.*—Thiru P. R. THOMAS and Thiru D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that B.T. Assistants, who have been inducted into Higher Secondary Schools, are being replaced by Post-Graduate Degree Teachers, contrary to an assurance by the Director of School Education in this regard; and

(*b*) if so, the reasons therefor?

விடை—

(அ) மற்றும் (இ) உட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் தங்களை முழுத் தகுதி படைத்தவர்களாக ஆக்கிக் கொள்ளாவிட்டால், முழுத்தகுதிபெற்ற முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் கிடைக்கும் வரையில்தான், அவர்களைப் பணியில் நீடிக்க இயலும் என்றுதான் பள்ளிக் கல்வி இயக்குநர் உறுதிமொழி அளித்தார். அரசாணை 1091, கல்வி, நாள் 15—6—1978-ல் பத்தி 2 (b)ல் உள்ள ஆணையின்படி முழுத்தகுதி பெற்ற ஆசிரியர்கள் கிடைக்கப்பெற்றால் உட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் மேல்நிலை வகுப்புகளை நடத்த தகுதியற்றவர்களாக ஆகிவிடுவர். எனவே, சில தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலைப்பட்டம் பெற்ற பி.டி. ஆசிரியர்கள் தங்களை மேல்நிலைப்பள்ளி ஆசிரியராக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க ஐந்து தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் உட்படுத்தப்பட்ட inducted teachers ஐந்து ஆசிரியர் பணியிடங்கள், முதுகலைப் பட்டம் பெற்றவர்களைக் கொண்டு நிரப்பப்பட்டது.

T.T.C. Course for Agricultural and Wood-work Instructors.

18. *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that, for undergoing Teaching Training Certificate Course for Agricultural and Wood-work Instructors, the general educational qualification prescribed is S.S.L.C. from 1975 onwards; and

(*b*) if so, whether the Government will permit those, trained before 1975, also to be appointed as Instructors in schools?

விடை—

(அ) ஆம்.

(இ) 1975 ஆம் ஆண்டிற்கு முன்னரே இப்பயிற்சி பெற்றவர்கள், குறைந்தபட்ச கல்வித் தகுதியான பள்ளி இறுதித்தேர்வை முடித்திருந்தால் அவர்களும் இவ்வாறு நியமனம் செய்யப்படுவதற்கு தகுதி பெற்றவர்களாவார்கள்.

Certificate Courses for Headmasters and Teachers.

19 *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Association of State Non-Post-Graduate Headmasters of Government 'B' Wing High Schools, has sent a representation for the revival of the Certificate Courses conducted by the Universities, so as to enable the Headmasters and teachers to equip themselves better for their work in Higher Secondary Schools; and

(*b*) if so, the action taken thereon?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Headmasters of Municipals High Schools.

20. *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact, some Assistants promoted as Headmasters of Municipal High Schools, taken over by the Government, have not been paid the Headmasters's Scale of Pay;

(b) if so, the reasons therefor?

விடை—

(அ) மற்றும் (இ) அரசு தன்பொறுப்பில் எடுத்துக்கொண்ட 17 நகராவை உயர்நிலைப் பள்ளிகளில் 4 உயர்நிலைப்பள்ளிகளில் மட்டும் அந்த பள்ளியின் மூத்த பள்ளி உதவியாசிரியர்கள் தலைமையாசிரியர் பொறுப்பில் தற்காலிகமாக பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள், தலைமையாசிரியர் ஊதிய விகிதத்தில் அடிப்படை ஊதியமோ, அல்லது பள்ளி உதவியாசிரியர் பணியில் அவர்கள் பெற்று வந்த ஊதியமோ இதில் எது அதிகமாக உள்ளதோ அதனை பெற்று வருகின்றனர்.

B.T. Headmasters in Middle Schools.

21 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Secondary Grade Teachers with B.T. or Tamil Pandit qualification, were to be promoted to the posts of B.T. Headmasters sanctioned in Middle Schools on the basis of seniority ; and

(*b*) if so, whether Tamil Pandits without Secondary Grade qualification, will be considered for such promotion ?

விடை—

(அ) நடுநிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர் பதவிகள் நிரந்தரமாக காலி விழும்போது, அப்பள்ளியில் செகண்டரி கிரேடு ஆசிரியர் அல்லது இதர ஆசிரியராக பணிபுரிவோருள் பி.எட். அல்லது தமிழ் பண்டிதர் தகுதி பெற்றவர்களில் அதிக பணி மூப்புடையவர் தலைமையாசிரியராக நியமனம் செய்யப்பட வேண்டும்.

(இ) ஆம்.

Pensionary Benefits.

22. *Q.*—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that, Non-teaching Staff in Aided Schools, who have retired on any date prior to 1st April 1972 are not eligible for pensionary benefits; and

(*b*) if so, the action proposed to be taken on their representation, to extend the same to those, who retired prior to 1st April 1972 ?

விடை

(அ) மற்றும் (இ) 1—4—1972-க்கு முன்னர் நிதி உதவிப் பள்ளிகளில் ஆசிரியரல்லாத பணியாளர்களாகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர்களுக்கும், ஓய்வூதிய பயன்கள் 5—6—1981 முதல் வழங்க 5—6—1981 நாளிட்ட அரசு ஆணை எண் எம். எஸ். 1015 (கல்வித்துறை)-யில் உத்தரவிட்டுள்ளது.

Revision of pension of teachers who retired prior to 1970.

23. *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that, the Teacher Pensioners' Association has made an appeal to the Government, to revise the rate of Pension of those Teachers, who have retired prior to 1970 ; and

(*b*) if so, the action propossd to be taken thereon ?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Special Pay for erstwhile Bifurcated Courses Staff.

24. *Q.*—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that, as per G.O. Ms. No. 166, Education, dated 30th January 1980, erstwhile bifurcated courses staff are not eligible for special pay ;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the action proposed to be taken on their appeal for sanction of the same ?

விடை—

(அ) மற்றும் (இ) மேல்நிலைப் பள்ளிகளில் முழுநேரத் தொழிற்கல்வி ஆசிரியர்களாக இணைத்துக் கொள்ளப்பட்ட முன்னாள் இருமுனைப்பாடத் திட்ட ஆசிரியர்களாக வாரம் ஒன்றுக்கு பொதுப்பாடம் மற்றும் தொழிற் கல்விக்காக 24 பாடவேளைகளுக்குக் குறையாமல் வகுப்புகள் எடுத்தால், அரசாணை எண் 166, கல்வி, நாள் 30—1—1980-இன்படி ரூபாய் 25 சிறப் பூதியம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. 24 பாடவேளைகளுக்கு குறைந்து எடுத்தால், மேற்கண்ட சிறப்பூதியம் அளிக்காமல் அவர்களுடைய பதவிக்குரிய ஊதியம் மட்டும் அளிக்கப்படுகிறது.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

Physical Training Instructors in College.

25 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that, in Physical Education Department in Colleges, persons with higher qualifications are appointed as Physical Training Instructors and are paid the lowest salary ;

(*b*) if so, whether there is any proposal to upgrade their posts as 'Physical Directors' ?

விடை—

(அ) ஆம்.

(இ) இல்லை.

ஓரியண்டல் கல்லூரிகள்

26 வினா.—திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் உள்ள தமிழ்மொழிக் கல்லூரிகளுக்கு 'ஓரியண்டல் கல்லூரிகள்' என்று இருக்கும் பெயரை, 'மொழித்துறைக் கலைக் கல்லூரிகள்' என்று மாற்றம் செய்யவேண்டுமென்ற வேண்டுகோள் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை—

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழ இடமில்லை.

Incentive increments to Secondary Grade Teachers.

27. *Q.*—THIRU G. SWAMINATHAN and THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that, Secondary Grade Teachers, who have qualified themselves in Bachelor of Physical Education, are denied incentive increments, as per the Director of School Education's Proceedings D. Dis. No. 186474/P.D. I/67, dated 23rd January 1969; and

(*b*) if so, whether the Government will consider payment of incentive increments to them in view of their additional qualifications ?

விடை—

(அ) குறிப்பிட்ட பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் 10—1—1969 ஆம் நாளிட்ட 42 (பல்வகை) என்னுள்ள அரசாணையினை எல்லா சார்நிலை அலுவலர்கட்கும் தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆணையின்படி இடைநிலை ஆசிரியர்கள் பி.பி.எட். பட்டம் பெற்றால் ஊக்க ஊதியம் அளிக்கப்படுவதில்லை.

(இ) இடைநிலை ஆசிரியர் பி.பி.எட். தேறினால் அவர்களுக்கு இரண்டு ஊக்க ஊதியம் வழங்குவதற்கு பள்ளிக் கல்வி இயக்குநர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

முதனிலைத் தமிழாசிரியர்கள்

28 வினா.—திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ரூபாய் 60-4-120 மற்றும் ரூபாய் 125-5-175 ஆகிய ஊதிய விகிதங்களில் முதனிலைத் தமிழாசிரியர்கள் பணியாற்றிய ஊழியக் காலங்களையும், ஆனைத் தலைமையாசிரியர்கள் நியமனங்களுக்கு, கணக்கில் எடுத்துக் கொள்ளும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

விடை—

(அ) மற்றும் (இ) 1—6—1960-க்கு முன் ரூபாய் 60-4-120 மற்றும் 2—10—1970-க்கு முன் ரூபாய் 125-5-175 ஆகிய ஊதிய விகிதங்களில் முதல் நிலை தமிழாசிரியர்களாக பணியாற்றிய ஊழியக் காலங்களையும் ஆனைத் தலைமையாசிரியர்கள் நியமனங்களுக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

Gratuity and Family Benefit Scheme for Teaching and Non-Teaching Staff of Aided Polytechnics.

29 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Teaching and Non-Teaching Staff in Aided Polytechnics, are not eligible for gratuity and Family Benefit Scheme; and

(*b*) if so, the reasons for the same ?

விடை—

(அ) அரசு உதவி பெறும் தனியார் தொழில் நுட்பக்கல்வி நிலையங்களில் பணியாற்றிவரும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளருக்கு பணிக்கால நன்கொடை மற்றும் குடும்பநலத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1983 ஏப்ரல் 23

Craft Instructors.

* 30. *Q.*—THIRU P. R. THOMAS and THIRU K. MEENAKSHISUNDARAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Craft Instructors are eligible to write T.S.L.C. Examination, only after eight years of service; and

(*b*) if so, the reasons therefor ?

விடை—

(அ) மற்றும் (இ) 27—9—1979 நாளிட்ட அரசாணை எண் 1843-ன் படி மரவேலை (லோயர்) நெசவு, தையல், விவசாயம், சித்திரம் மற்றும் சங்கீதம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் கைத்தொழில் ஆசிரியர்கள் எட்டு ஆண்டுகள் கற்பிப்பு அனுபவம் பெற்றிருந்தால் அவர்கள் டி.எஸ்.எல்.சி. தேர்வு (தற்போது ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா தேர்வு) எழுதலாம்.

தனியார் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு சலுகைகள்

31 வினா.—திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தனியார் உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்கு, அரசின் நிலை ஆணை எண் 1877, கல்வி, நாள் 29—9—1979-ல் கொடுக்கப்பட்டுள்ள சலுகைகள் கடந்த ஓராண்டு காலமாக அளிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

(உ) அவ்வாசிரியர்களுக்கு இச்சலுகைகள் எப்போது முதல் கொடுக்கப்படும் ?

விடை—

(அ) இது உண்மையல்ல. அரசு ஆணை எண் 1877, கல்வி, நாள் 29—9—1979-ல் கொடுக்கப்பட்டுள்ள சலுகைகள், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள எல்லா உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கட்கும் அளிக்கப்பட்டு வருகிறது.

(இ) மற்றும் (உ) இக்கேள்விகட்கு இடமில்லை.

1983 ஏப்ரல் 23]

Loss of pay on interchange of posts.

32 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that teachers, who serve as Secondary Grade Teachers and Craft Instructors, when they interchange their posts, are subjected to heavy loss, as their salary is being fixed at the basic pay of the latter ; and

(*b*) if so, whether there is any proposal to rectify this anomaly ?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Teacher Training Institutes.

33 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that students are admitted into Teacher Training Institutes, on alternate years ;

(*b*) the number of such Institutes run by private agencies and the Government ; and

(*c*) the percentage of students coming out successful at the end of the course ?

விடை—

(அ) ஆம்.

(இ) தனியாரால் நடத்தப்படும் ஆசிரியர் பயிற்சி நிலையம்	49
அரசினர் ஆசிரியர் பயிற்சி நிலையங்கள்	29
மொத்தம்	78

(உ) 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் விழுக்காடு 46 சதவிகிதம் 10

Senior and Junior Mechanics.

34 Q.—THIRU P. R. THOMAS and THIRU K. MEENAKSHI-SUNDARAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that, Senior and Junior Mechanics handling vocational subjects in Higher Secondary Schools, are not eligible for the special pay of Rs. 25; and

(b) if so, the reasons for the same?

விடை—

(அ) ஆம்.

(இ) பொறியியல் ஆசிரியர்களுக்கு (Engineering Instructors) பயிற்றுவிக்கும் வேலைகளில் உதவி செய்வதற்காக மட்டுமே மெக்கானிக்குகள் நியமிக்கப்பட்டுள்ளனர். முழுநேர தொழிற்கல்வி பொறியியல் ஆசிரியருக்கான தகுதியும் இவர்களிடம் கிடையாது. மெக்கானிக்குகள் பொறியியல் ஆசிரியர்களைப்போல் பாடம் பயிற்றுவிக்க நியமிக்கப்படாததால் அவர்களுக்கு ரூபாய் 25 சிறப்பூதியம் அளிக்கப்படுவதில்லை.

Appeals of terminated teachers.

35 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that some managements in Ramanathapuram district, have got interim injunction restraining Educational Department Officers from taking action on the appeals made by the terminated teachers;

(b) if so, the number of such managements; and

(c) the number of teachers affected?

விடை—

(அ) தற்பொழுது ஒன்றும் இல்லை.

(இ) மற்றும் (உ) இக்கேள்விகட்கு இடமில்லை.

Age of retirement for Non-Teaching Staff in Aided Schools.

36. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that, in G.O. Ms. No. 1741, Education, dated 13th September 1979, orders have been issued, raising the age of retirement for non-teaching staff in the aided schools from 55 to 58, with effect from 25th April 1979; and

(b) if so, the action proposed to be taken in the case of those, who retired between 25th April 1979 and 13th September 1979?

விடை—

(அ) ஆம்.

(இ) 25—4—1979 முதல் 13—9—1979 வரை தனியார் பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியல்லாத பணியாளர்கள். 12 பேர் ஓய்வு பெற்றனர். அவர்கள் அனைவரும் அரசாணையின்படி மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

Drawing Masters' Posts.

37. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that Drawing Master posts have not been sanctioned to Government High Schools, started after 1973-74; and

(b) if so, the reason for the same?.

விடை

(அ) மற்றும் (இ) 1973-74 ஆம் ஆண்டு முதல் 1982-83 ஆம் ஆண்டு வரை திறக்கப்பட்ட அனைத்து அரசு உயர்நிலைப்பள்ளிகளிலும் ஓவிய ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு விட்டன.

Erstwhile Engineering Instructors under Bifurcated Courses.

38. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that, erstwhile Engineering Instructors under bifurcated courses, were given special training during the last summer vacation, to enable them to handle Higher Secondary Vocational Classes;

Senior and Junior Mechanics.

34 Q.—THIRU P. R. THOMAS and THIRU K. MEENAKSHI-SUNDARAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that, Senior and Junior Mechanics handling vocational subjects in Higher Secondary Schools, are not eligible for the special pay of Rs. 25 ; and

(b) if so, the reasons for the same ?

விடை—

(அ) ஆம்.

(இ) பொறியியல் ஆசிரியர்களுக்கு (Engineering Instructors) பயிற்றுவிக்கும் வேலைகளில் உதவி செய்வதற்காக மட்டுமே மெக்கானிக்குகள் நியமிக்கப்பட்டுள்ளனர். முழுநேர தொழிற்கல்வி பொறியியல் ஆசிரியருக்கான தகுதியும் இவர்களிடம் கிடையாது. மெக்கானிக்குகள் பொறியியல் ஆசிரியர்களைப்போல் பாடம் பயிற்றுவிக்க நியமிக்கப்படாததால் அவர்களுக்கு ரூபாய் 25 சிறப்பூதியம் அளிக்கப்படுவதில்லை.

Appeals of terminated teachers.

35 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that some managements in Ramanathapuram district, have got interim injunction restraining Educational Department Officers from taking action on the appeals made by the terminated teachers ;

(b) if so, the number of such managements ; and

(c) the number of teachers affected ?

விடை.—

(அ) தற்பொழுது ஒன்றும் இல்லை.

(இ) மற்றும் (உ) இக்கேள்விகட்கு இடமில்லை.

Age of retirement for Non-Teaching Staff in Aided Schools.

36. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that, in G.O. Ms. No. 1741, Education, dated 13th September 1979, orders have been issued, raising the age of retirement for non-teaching staff in the aided schools from 55 to 58, with effect from 25th April 1979; and

(b) if so, the action proposed to be taken in the case of those, who retired between 25th April 1979 and 13th September 1979 ?

விடை—

(அ) ஆம்.

(இ) 25—4—1979 முதல் 13—9—1979 வரை தனியார் பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியரல்லாத பணியாளர்கள் 12 பேர் ஓய்வு பெற்றனர். அவர்கள் அனைவரும் அரசாணையின்படி மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

Drawing Masters' Posts.

37. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that Drawing Master posts have not been sanctioned to Government High Schools, started after 1973-74; and

(b) if so, the reason for the same ?.

விடை

(அ) மற்றும் (இ) 1973-74 ஆம் ஆண்டு முதல் 1982-83 ஆம் ஆண்டு வரை திறக்கப்பட்ட அனைத்து அரசு உயர்நிலைப்பள்ளிகளிலும் ஓவிய ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு விட்டன.

Erstwhile Engineering Instructors under Bifurcated Courses.

38. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that, erstwhile Engineering Instructors under bifurcated courses, were given special training during the last summer vacation, to enable them to handle Higher Secondary Vocational Classes;

(b) if so, whether there is any proposal to give similar training to the Mechanics; and

(c) the stage at which the matter now stands?

விடை—

(அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

Apprentice Teachers.

39. *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that, Secondary Grade Teachers, who were appointed as Apprentice Teachers, have made an appeal to treat the period of their Apprentice Service as Secondary Grade Service, so that it could be taken into consideration for awarding Selection Grade on the basis of ten years of service; and

(b) if so, the action taken thereon,

விடை—

(அ) மற்றும் (இ) வேலை வாய்ப்பின்றி இருந்தவர்களுக்கு முறையான ஆசிரியர் பதவிகள் தருவதற்கு முன் ஓரளவு ஊதியம் தர வகை செய்வதற்குத் தான் தொழில் பழகு ஆசிரியர் திட்டம் 1970-73 ஆண்டுகளில் செயல்படுத்தப் பட்டதே தவிர அவர்களை முறையான ஆசிரியர்களாகக் கருதும் நோக்கம் அத்திட்டத்தில் கிடையாது. தொழில் பழகு ஆசிரியராக பணி செய்த காலத்தை 10 ஆண்டு அடிப்படையில் தேர்வுநிலை வழங்கும்பொழுது கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அவ்வப்போது கோரிக்கை வந்துள்ள போதிலும் தொழில் பழகு ஆசிரியர்கள் திட்டத்தின் அடிப்படையில், அக் கோரிக்கைகளை ஏற்பதற்கு இல்லை.

Advance Increment for 'B' Wing Ministerial Staff.

40. *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that, 'B' Wing Ministerial Staff, who have passed the Account Test for Subordinate Officers, Part-I, from 1st April 1966 to 1st April 1970 are eligible to draw one advance increment;

(b) if so, whether there is any proposal to extend this benefit to the teaching staff, and

(c) the stage at which the matter now stands?

விடை—

(அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

கே. ஆர். அரசினர் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு வீட்டுவாடகைப்படி

41. வினா—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை நகர எல்லையை ஒட்டிய ரெட்டியார்பட்டியிலுள்ள கே. ஆர். அரசினர் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு, வீட்டுவாடகைப்படி அளிக்கப்படவேண்டுமென 1979 டிசம்பர் மாதத்தில் முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அது பற்றி அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்.

(இ) அப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்குவதற்காக அரசு ஆணையிட்டுள்ளது?

Agricultural Instructors.

42 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that, as per G.O. Ms. No. 887, Education, dated 5th June 1979, Agricultural Instructors getting B.T. scale of pay, possessing B.A. (Agri.) or B.Sc. (Agri.) with B.Ed., Qualifications, are not eligible to be designated as Assistant Headmasters; and

(b) if so, the reasons for the same?

விடை—

(அ) மற்றும் (இ) முன்னாள் இருமுனைப் பாடத்திட்டத்தின் கீழ் பணியாற்றிய பி.டி., ஊதிய விகிதம் பெறும் முழுநேர தொழில் பிரிவு ஆசிரியர்களில் பி.டி., அல்லது பி.எட்., பட்டம் பெற்றிருப்பின் அவர்களை உயர்நிலை/மேல்

நிலைப் பள்ளிகளில் உதவித் தலைமையாசிரியர்களாக நியமனம் பெற தகுதியுடையவர்களாக கருதலாம் என்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

Kasthuri Bai Gandhi Primary School, Tirumangalam.

43. *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that, teachers have been put to hardship due to the mis-management of the Kasthuri Bai Gandhi Primary School, Tirumangalam, Madurai District;

(*b*) if so, the number of teachers affected; and

(*c*) the steps proposed to be taken to provide job security to the affected teachers?

விடை—

(அ) இப்பள்ளியில் பணிபுரியும் தற்போதைய ஆசிரியர்கள் எவரும் பள்ளி நிர்வாகியினால் கஷ்டத்துக்குள்ளாக்கப்பட்டதாக கல்வித்துறைக்கு புகார் ஏதும் இல்லை

(இ) மற்றும் (உ) இக்கேள்விக்கு இடமில்லை.

Job Opportunities for Higher Grade Trained Teachers.

44 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that, a large number of Higher Grade Trained Teachers, are without job opportunities in Madurai district; in as much as these posts are filled up by Secondary Grade Teachers; and

(*b*) if so, the number of such unemployed Teachers as per the list in the Employment Exchanges in that District as on 1st October 1980?

விடை—

(அ) இல்லை.

(இ) 1—10—1980 அன்றைய நிலவரப்படி மதுரை மாவட்டத்திலுள்ள வேலை வாய்ப்பகங்களில் தங்களை வேலை வாய்ப்பற்ற இளநிலை ஆசிரியர்களாக பதிவு செய்து கொண்டிருந்தவர்கள் எண்ணிக்கை 128 ஆகும். அவர்களுள் பெரும்பாலானவர்கள் ஏற்கெனவே தனியார் பள்ளிகளில் பணியாற்றிக் கொண்டு வந்து அதே நேரத்தில் அரசு அல்லது உள்ளாட்சி மன்றப் பள்ளிகளில் பணி தேடுபவர்களாக இருக்கிறார்களென்று வேலை வாய்ப்புத்துறை தெரிவித்துள்ளது.

Selection Grade for Headmasters.

45. *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that, Headmasters who have completed ten years of service after 2nd November 1978, have not yet been awarded Selection Grade in Madurai and Ramanathapuram Districts;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the action proposed to be taken thereon?

விடை—

(அ), (இ) மற்றும் (உ) மதுரை மாவட்டத்தில் 2—11—1978 முதல் 30—11—1980 வரை தகுதியுடைய மூன்று தலைமையாசிரியர்களுக்கும், இராமநாதபுரம் மாவட்டத்தில் மேற்கூறிய காலத்தில் தகுதியுடைய ஏழு தலைமையாசிரியர்களுக்கும், தேர்வுநிலை வழங்கப்பட்டு விட்டது.

Payment of Salaries of Teachers on First of Every Month.

46 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that, Teachers serving in Government High Schools, Ramanathapuram District, are not being paid their pay on the First of every month;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the steps proposed to be taken thereon?

விடை—

(அ) ஒரு மாதத்தின் சம்பளம் அந்த மாதத்தின் கடைசி நாள் அல்லது அடுத்த மாதத்தின் முதல் நாளில் ஒழுங்காக வழங்கப்பட்டுள்ளது.

(இ) மற்றும் (உ) கேள்விக்கு இடமில்லை.

Selection Grade for B.T. Assistants in Technical Higher Secondary Schools.

47 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that B.T. Assistants serving in Technical Higher Secondary Schools are not awarded Selection Grade, as per G.O. Ms. No. 333, Education, dated 14th February 1977;

(b) if so, the number of eligible teachers, who have not been awarded Selection Grade; and

(c) the action proposed to be taken thereon.

விடை—

(அ) அரசாணை நிலை எண் 333, கல்வி, நாள் 14—2—1977 வாயிலாக அளிக்கப்பட்ட "தேர்வுநிலை" பள்ளிக்கல்வி School Education Department 'பி.டி.', ஆசிரியர்களுக்கு மட்டும் பொருந்தும். தொழில் நுட்ப உயர்நிலைப்பள்ளி "பி.டி." ஆசிரியர்களுக்குப் பொருந்தாது.

(இ) மற்றும் (உ) கேள்விக்கு இடமில்லை.

House Rent Allowance to the Staff of S.C.G.R. High School, Amaravathipudur.

48 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether there is any proposal with the Government to extend the payment of House Rent Allowance to the staff of S.C.G.R. High School, Amaravathipudur, provided they reside within the Karaikudi Municipal limits, as has been sanctioned to the staff working in Somanathapuram T.B. Sanatorium at Amaravathipudur in G.O. Ms. No 898, Finance (Allowance-II), dated 23rd September 1980;

(b) if so, the stage at which the matter now stands; and

(c) if not, whether the Government will consider such a proposal?

விடை—

(அ), (இ) மற்றும் (2) அமராவதி புதூரில் உள்ள எஸ்.சி.ஜி.ஆர் உயர் நிலைப் பள்ளியில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 19—3—1982-லிருந்து வீட்டு வாடகைப்படி வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

Promotion for Associate Lecturers in Polytechnics.

49. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that, as per G.O. Ms. No. 1138, Education, dated 2nd July 1975, Associate Lecturers in Polytechnics were eligible to be promoted as Lecturers;

(b) if so, whether there is any proposal to extend this proviso, beyond 4th March 1979; and

(c) if so, the stage at which the matter now stand?

விடை—

(அ) பல்தொழிற் பயிற்சி கூடத்தில் பணிபுரியும் டிப்ளமோ படிப்பு உள்ள உதவி விரிவுரையாளர்களுக்கு பி.இ., பட்டப்படிப்பைக் கல்வித் தகுதியாகக் கொண்ட விரிவுரையாளர் பதவிக்கு பதவி உயர்வு கொடுக்கும் சலுகை 2—7—1975 ஆம் தேதி ஆணை எண் 1138-ல் வழங்கப்பட்டு, இந்த சலுகை 5—3—1974 முதல் 4—3—1979 வரை ஐந்து வருடங்களுக்கு இருந்தது.

(இ) தொழில் நுட்ப கல்வி இயக்குநர் இந்த சலுகையை மேலும் ஐந்து வருடங்களுக்கு நீட்டிக்க அனுப்பிய கருத்தரு விரிவாக பரிசீலிக்கப்பட்டு அரசு மேலும் ஐந்தாண்டுகளுக்கு அதாவது 5—3—1979 முதல் 4—3—1984 வரை இந்த சலுகையை நீட்டிக்க 30—1—1982 நாளிட்ட ஆணை எண் (நிலை) 164-ல் ஆணையிட்டுள்ளது.

Special Pay For Vocational Course Teachers.

50. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that, the Vocational Course teachers working in aided higher secondary schools in Kumbakonam, Thanjavur district, have not been paid Special Pay so far;

(b) if so, the reason therefor; and

(c) the action proposed to be taken in the matter?

விடை.—

(அ), (இ) மற்றும் (உ) கும்பகோணத்தில் 6 தனியார் மேல் நிலைப் பள்ளிகள் உள்ளன. இரண்டு பள்ளிகளில் தகுதியுள்ள எல்லா உட்படுத்தப்பட்ட முழுநேர தொழிலாசிரியர்களுக்கும் சிறப்பூதியம் அளிக்கப்படுகிறது. மீதமுள்ள நான்கு மேல்நிலைப் பள்ளிகளில் பகுதிநேர ஆசிரியர்கள் பணி புரிந்து வருகிறார்கள். இவர்கள் சிறப்பூதியம் பெற தகுதி உடையவர்கள் அல்ல.

Selection Grade for Language Pandits.

51. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether there is any proposal with the Government to grant Selection Grade to the Language Pandits working in Higher Grade posts in High Schools; and

(b) if not, the reasons therefor?

விடை—

(அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Family Pension Applications.

52. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) the number of applications for family pension from beneficiaries of Teachers of Government and non-Government Institutions, who had retired prior to 1st April 1964 pending disposal by the District Educational Officers of Thanjavur District, as on 15th December 1980; and

(*b*) the action proposed to be taken by the Government for the expenditure sanctioning of the family pension to them?

விடை—

(அ) 19 மனுக்கள்.

(இ) இவைகள் எல்லாவற்றிலும் ஒப்பளிப்புகள் வழங்கப்பட்டு விட்டன.

Regularisation of services of the contingent staff.

53 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the services of all the contingent staff serving in Government High Schools, have been regularised and brought under time-scale of pay, as per G.O. Ms. No. 52, Finance (F.R. II), dated 14th January 1977; and

(*b*) if not, the reasons therefor?

விடை—

(அ) மற்றும் (இ) சில்லரை செலவின் பணிகளில் ஐந்து ஆண்டு பணிக் காலம் 1—1—1981-ல் அல்லது அதற்கு முன்பு முடிவடைந்த 239 ஊழியர்கள் முறையான பணியிடங்களில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

Salaries to Teachers of Chandra Middle School, Madurai.

54 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that teachers of Chandra Middle School, Madurai have not been paid their salaries from August, 1980; and

(*b*) if so, the action proposed to be taken thereon?

விடை—

(அ) போதுமான மாணவர் வருகை இல்லாததால், இப்பள்ளியைச் சார்ந்த மூன்று இடைநிலை ஆசிரியர்களுக்கும், ஐந்து இளநிலை ஆசிரியர்களுக்கும், 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் அக்டோபர் மாதம் முடிய போதனா மான்யம் வழங்கப்படவில்லை.

(இ) பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் பணியிடத்துடன் வேறு பள்ளிக்கு மாற்றப்பட்டு 1980 ஆம் ஆண்டு நவம்பர் முதல் பணிபுரிந்து வருகிறார்கள்.

Selection Grade Scale of pay for B.T. Assistants.

55 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that B.T. Assistants, who are eligible for Selection Grade between 1st April 1979 and 1st April 1980, have not been sanctioned Selection Grade Scale of Pay in Tirunelveli district; and

(*b*) if so, the action proposed to be taken thereon?

விடை—

அ) மற்றும் (இ) பதினைந்து பி.டி. ஆசிரியர்களுக்கு மட்டும் அவர்கள் பணி சம்பந்தமான விவரங்கள் சம்பந்தப்பட்ட பள்ளிகளிலிருந்து கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதால், தேர்வுநிலை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. இப்போது 1—4—1979-க்கும் 1—4—1980-க்கும் இடையில் தேர்வுநிலை பெற வேண்டியவர்கள் அனைவருக்கும் தேர்வுநிலை வழங்கப்பட்டு விட்டது.

Music Teachers.

56 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that, Music Teachers possessing "Sangeetha Siromani" and "Sangeetha Booshanam" qualifications, have made representation, to give them, the pay scale of Graduate Teachers; and

(*b*) if so, the action taken thereon?

விடை—

(அ) இதுவரை அம்மாதிரியான கோரிக்கை எதுவும் பெறப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Appointment of Principals for Law Colleges.

57 Q.—THIRU D. SANTHOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether Principals have been appointed for the Law Colleges in Tiruchirappalli and Coimbatore;

(b) whether the three Members of the staff appointed for handling the first year B.G.L., are made to handle the second year classes also in these Colleges; and

(c) if so, the action taken to appoint the needed additional staff?

விடை—

(அ) 30—5—1981 அன்று திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் சட்டக் கல்லூரிகளுக்கு முதல்வர்கள் நியமிக்கப்பட்டு விட்டனர்.

(இ) ஆம்.

(உ) இக்கல்லூரிகளில் காலியாக இருந்த ஆசிரியர் பணி இடங்கள் யாவும் நிரப்பப்பட்டு விட்டன

Madurai Law College.

58 Q.—THIRU D. SANTHOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that six vacancies of Assistant Professors are remaining unfilled for several months in the Madurai Law College, with the result that students are deprived of their classes;

(b) the reasons therefor; and

(c) the action proposed to be taken thereon?

விடை—

(அ) தற்போது மதுரை சட்டக் கல்லூரியில் காலியாக இருந்த ஆசிரியர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டு விட்டன.

(இ) மற்றும் (உ) இக்கேள்விக்கு இடமில்லை.

Pension benefits for Non-Teaching staff of Aided Schools.

59 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that pension benefits have been extended to the teaching staff of aided schools, who retired prior to 1st April 1955;

(b) if so, whether there is any proposal to extend this to the non-teaching staff of such schools who retired prior to 1955; and

(c) the stage at which the matter now stands?

விடை—

(அ) ஆம்.

(இ) மற்றும் (உ) 1—4—1972-க்கு முன்னர் நிதி உதவிப் பள்ளிகளில் ஆசிரியல்லாத பணியாளர்களாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கும் ஓய்வூதிய பயன்கள் 5—6—1981 முதல் வழங்க 5—6—1981 நாளிட்ட அரசு ஆணை எண் எம். எஸ். 1015 (கல்வித்துறை) ல் உத்தரவிட்டுள்ளது.

எஸ். கே. வி. மேல்நிலைப்பள்ளி, குறிஞ்சிப்பாடி

60 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், குறிஞ்சிப்பாடி, எஸ். கே. வி. மேல் நிலைப்பள்ளி நிர்வாகம், அரசு ஆணைகள் மீறியதால் அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென, பட்டதாரி ஆசிரியர் சங்கத்திடமிருந்து, 1980 அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் அரசுக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அவைகளின்மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

விடை—

(அ) ஆம்.

(இ) அப்பள்ளிக்கு, அளித்துள்ள தற்காலிக அங்கீகாரத்தை திரும்பப் பெற வேண்டுமென்றும் அப்பள்ளியை அரசே எடுத்து நடத்த வேண்டும் என்றும் பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம் கோரியுள்ளது.

(உ) கடந்த 5—8—1982-ல், மேற்படி பள்ளியை 2 ஆண்டுகளுக்கு அரசு ஏற்று நடத்த தகுந்த ஆணை வெளியிட்டுள்ளது.

பட்டதாரி ஆசிரியர் கழகம்

61. வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகம், 1980 நவம்பரில் மாநிலம் முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

விடை—

(அ) ஆம்.

(இ) பட்டதாரி ஆசிரியர் கழகம் தங்களின் ஒன்பது அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சி நிலையம்

62. வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளியில், பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சி நிலையம் துவக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

பாரத சாரண சாரணியர்

63. வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பாரத சாரண சாரணியர் தமிழ்நாடு மாநில தலைமையக அலுவலகம் சென்னையில் இயங்குகிறதா ?

(இ) 1975 முதல் 1980 வரை அதற்கான பராமரிப்புச் செலவு எவ்வளவு ?

(உ) இந்த அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(எ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(இ) 1975 ல் ரூபாய் 1.67 லட்சம்.
1976 ல் ரூபாய் 2.12 லட்சம்.
1977 ல் ரூபாய் 2.61 லட்சம்.
1978 ல் ரூபாய் 3.03 லட்சம்.
1979 ல் ரூபாய் 3.08 லட்சம்.
1980 ல் ரூபாய் 3.90 லட்சம்.

(உ) அம்மாதிரி ஆலோசனை ஒன்று இருந்தது. ஆனால் அது இப்போது கைவிடப்பட்டு விட்டது.

(எ) இவ்வினாவிற்கு இடமில்லை.

தனியார் பள்ளி நிர்வாகங்களினால் வேலை நீக்கப்பட்ட ஆசிரியர் மற்றும் ஊழியர்கள்

64. வினா.—செல்வி அ. லீலாவதி மற்றும் திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) 1977-78 முதல் 1979-80 வரை, தனியார் பள்ளி நிர்வாகங்களினால் வேலை நீக்கப்பட்ட ஆசிரியர் மற்றும் ஊழியர்களிடமிருந்து அரசுக்கு வந்துள்ள முறையீடுகள் எத்தனை ?

(இ) அவற்றில், ஆசிரியர்களுக்கு சாதகமாக பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணைகள் எத்தனை ?

(உ) அவற்றை நடைமுறைப்படுத்திய நிர்வாகங்கள் எத்தனை ?

(எ) அரசு ஆணைகளை நிறைவேற்றாத நிர்வாகங்களின்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) முறையீட்டதிகாரியால் பெறப்பட்ட முறையீடுகள் 151.

(இ) 115.

(உ) 16

(எ) முறையீட்டதிகாரிகளின் ஆணைகளை எதிர்த்து சில மேலாண்மைகள் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுத்து அவை நிலுவையில் உள்ளன. இதர தனியார் பள்ளி நிர்வாகங்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அப்பள்ளிகளுக்குரிய பணியாளர் மானியத்தை நேரிடையாக பள்ளிக் கல்வித்துறை

ஆய்வு அலுவலர்கள் மூலம் ஆசிரியர்களுக்கு வழங்க வழி செய்யப்பட்டுள்ளது. நிர்வாக மான்யமும் திருத்தப் பெற்றுள்ளது. பாதிக்கப்பட்ட ஆசிரியர்களும் வேறு பள்ளிகளில் பணியில் அமர்த்தப்பட்டனர்.

Transfer of Teachers of Aided Management.

65 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact, that representations have been made to the Government for the provision of transfer of teachers from one aided management to another; and

(b) if so, the action taken thereon?

விடை—

(அ) ஆம்.

(இ) 18—6—1982 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி ஒரு தனியார் உதவிபெறும் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர் மற்றொரு தனியார் உதவிபெறும் பள்ளிக்கு இரு நிர்வாகங்களும் ஒப்புதலளிப்பின் மாறுதல் பெறலாம்.

Part-time Instructors.

66 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that representations have been made by (i) Commercial Teachers Association and (ii) Part-time Instructors with D.Com. qualification, serving in Higher Secondary Schools and handling typewriting classes, to permit them to appear for B.Com. Degree Examination; and

(b) if so, the action taken thereon?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாவட்ட சாரண ஆணையர்கள்

67. வினா.—திரு. பி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில், எத்தனை மாவட்ட சாரண ஆணையர் பதவிகளுக்கு, ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளனர்?

(இ) எத்தனை பதவிகளுக்கு ஆணையர் நியமிக்கப்படவில்லை.

(உ) ஆணையர் நியமிக்கப்படாததற்குக் காரணங்கள் யாவை?

(எ) நியமிக்கப்பட் ணையர்களில் (i) அதிகாரிகள், (ii) மற்றவர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) தற்போதுள் சாரண மாவட்டங்கள் அனைத்திலும் மாவட்ட சாரண ஆணையர்கள் நப்பட்டுள்ளனர்.

(இ) இவ்வினாவி டமில்லை.

(உ) இவ்வினாவி டமில்லை.

(எ) அதிகாரிகள்

மற்றவர்கள்

Travellin wance for invigilation work.

68 Q.—THIRU P HOMAS: Will the Hon. the Minister for Education be p to state—

(a) whether it fact that, the teachers who have done invigilation work du he Secondary School-Leaving Certificate Public Examinations 980, have not been paid the Travelling Allowance so far, i amanathapuram Central Educational district;

(b) if so, the s therefor; and

(c) if so, the proposed to be taken thereon?

விடை—

(அ) இல்லை.

(இ) மற்றும் (உ) கள்விக்கு இடமில்லை.

Selection Grade of Pay to Gazetted Headmasters.

69 Q.—THIRU P. HOMAS: Will the Hon. the Minister for Education be p to state—

(a) whether it is a fact that, the Association of Heads of High and Higher Secondary Schools of Tamil Nadu, have made a representation, to sanction Selection Grade Scale of Pay to the Gazetted Headmasters, taking into account their total service as Headmasters; and

(b) if so, the action to be taken thereon?

டை

(அ) மற்றும் (இ) தலைமை ஆசிரியர்களாக பணியாற்றிய முழு பணிக் காலத்தையும் கணக்கில் எடுத்து முன்பு அரசிதழ்பெற்ற தலைமை ஆசிரியர் என்று அமைக்கப்பட்ட பதவியில் உள்ளவர்களுக்கு தேர்வு நிலை வழங்கத் தக்க ஆணைகள் 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் இடப்பட்டு அதன்படி தலைமை ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை வழங்கப்பட்டு வருகிறது.

Qualifying service for full pension.

70 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister or Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Association of Heads of High and Higher Secondary Schools of Tamil Nadu, has made representation that the qualifying service for full pension may be reduced to 25 years, in the case of all categories of teachers, especially for voluntary retirement; and

(*b*) if so, the action taken thereon?

விடை.

(அ) ஆம்.

(இ) இக்கோரிக்கையை ஏற்பதற்கில்லை.

முதுநிலை மற்றும் இளநிலை இயந்திரக் கம்மியர்கள்

71. வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள முதுநிலை மற்றும் இளநிலை இயந்திரக் கம்மியர்களுக்கு 1—3—1981 வரை, ஊதியம் நிர்ணயம் செய்யப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அவர்கட்கு எப்போது ஊதிய நிர்ணயம் செய்யப்படும்?

விடை

(அ) மற்றும் (இ) இருமுறைப் பாடத்திட்டத்தின் கீழ் பொறியியல் பாடபோதனைக்கு 1965-66 ஆம் ஆண்டு முதல் பல்வேறு கல்வித் தகுதி பெற்றவர்கள் நிர்ணயிக்கப்பட்டிருந்த தகுதி வரம்புகளுடன் நியமனம் செய்ய பணியாளர்கள் கிடைக்காததால் இவர்கள் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டனர். இவர்களுடைய தற்காலிக பணியினை வரன்முறை செய்யவேண்டி 1976-ல் மாற்று கல்வித் தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டன. இதனால் கல்வித் தகுதி கூடுதலாக நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே 1976-இல் வெளியிடப்பட்ட ஆணையைத் தொடர்ந்து தனியாக ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை. மேலும் ஊதிய நிர்ணயம் செய்யப்படவில்லையென புகார்களோ அல்லது கோரிக்கைகளோ பெறப்படவில்லை.

முதுநிலை, இளநிலை இயந்திரக் கம்மியர்களின் ஊதிய முரண்பாடுகள்

72. வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பொதுக்கல்வி, தொழிற் கல்வி ஆகிய தகுதிகளில் ஒத்திருக்கின்ற, முதுநிலை மற்றும் இளநிலை இயந்திரக் கம்மியர்கள், மேல்நிலைப்பள்ளிகளில் பணியாற்றினால் குறைந்த ஊதியமும், பல்தொழில் நுட்பப் பயிலகங்கள், தொழில் பயிற்சி நிலையங்கள் போன்றவற்றில் பணியாற்றினால் கூடுதல் ஊதியமும், வழங்கப்படுவதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், முன்னவர்களின் ஊதியம் உயர்த்தப்படுமா?

விடை

(அ) மற்றும் (இ) ஏற்கனவே, இருமுறைப் பாடத்திட்டத்தின் கீழ் அமர்த்தப்பட்டவர்கள், தகுதி பெற்றவர்கள் மட்டும், 11, 12ம் வகுப்புகளில் தொழிற்பாடப் பிரிவுகளை நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனவே, இவர்களது ஊதியத்தை பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் ஊழியர்களின் ஊதியத்துடன், ஒப்பிட்டுப் பார்க்கும் தேவை இல்லை. மேலும், தொழில்நுட்பப் பயிலகங்களில் உள்ளவர்கள் முழு நேர, அரசு ஊழியர்கள் ஆனால் மேல்நிலைப் பள்ளிகளில் 1—4—1978 முதல் பகுதிநேர ஆசிரியர்களே நியமிக்கப்படுகிறார்கள்.

முதுநிலை மற்றும் இளநிலை இயந்திரக் கம்மியர்களுக்கு பயணப்படி-தினப்படி

73. வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேல்நிலைப்பள்ளி மாணவர்களை, செய்முறைப் பயிற்சியளிக்க பல்தொழில் நுட்பப் பயிலகங்களுக்கு அழைத்துச் சென்றுவரும், முதுநிலை மற்றும் இளநிலை இயந்திரக் கம்மியர்களுக்கு, பயணப்படி-தினப்படி அளிக்கும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அளிக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

கோமதீஸ்வரர் செந்தமிழ் வித்தியாசாலை, காளியப்பநல்லூர்

74. வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், செம்பனார் கோயில் சரகம், காளியப்ப நல்லூரிலுள்ள கோமதீஸ்வரர் செந்தமிழ் வித்தியாசாலையின் பழுதடைந்த சிற்றுக்கொட்டகை, 18-2-1981 அன்று தரை மட்டமாக்கப்பட்டதால், மரத்தடியிலும், தெருவிலும் வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், புதிதாகக் கட்டிடம் கட்ட அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

(உ) அப்பள்ளியை அரசே மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

(அ) ஆம்.

(இ) பள்ளிக்குப் புதிதாக கூரை போடப்பட்டுள்ளது.

(உ) பள்ளியை அரசே மேற்கொள்ளும் நடவடிக்கை எதும் தற்பொழுது இல்லை.

திண்டிவனம் தேசிய மேல்நிலைப்பள்ளி நிர்வாகம்

75. வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் ஆர்க்காடு மாவட்டம், திண்டிவனம் தேசிய மேல்நிலைப்பள்ளி நிர்வாகத்தின் முறைகேடுகள் குறித்து, 1981, பிப்ரவரி மாதத்தில் அரசுக்கு புகார் எதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

விடை—

(அ) ஆம்.

(இ) அவற்றில் உண்மை எதும் இல்லை என்று விசாரணை செய்த பின்னர் நிருபணமாகியுள்ளது.

Full-time Librarian for Higher Secondary School.

76 Q.—THIRU P. R. THOMAS and THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any representation has been made, for the appointment of full-time Librarian for every Higher Secondary School in the State; and

(b) if so, the action taken thereon?

விடை—

(அ) ஆம்.

(இ) மேல்நிலைக் கல்வி திட்டம் உயர்நிலைப் பள்ளிகளிலேயே செயல் படுத்தப்பட்டுள்ளதால் உயர்நிலைப்பள்ளிகளிலுள்ள நூலகமே மேல்நிலைப் பள்ளிக்கான நூலகமாகவும் பயன்படுத்தப்படுகிறது. அவை தற்போது மேல் நிலைக்கல்வி கற்பிக்கத் தேவைப்படும் நூல்களை இணைத்து விரிவுபடுத்தப் பட்டு வருகின்றன. மேற்படி நூலகங்கள் முழுநேர நூலகர்களால் பராமரிக்கப் பட வேண்டிய அவசியம் தற்போதைக்கு இல்லை. எனவே, பகுதிநேர நூலகர்களையே நியமித்துக் கொள்ள ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தொழிற்பிரிவில் பணியாற்றும் பகுதிநேர ஆசிரியர்கள்

77. வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் (மற்றும் திரு. சி. ரா. லெட்சுமி காந்தன்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக் குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பிரிவில் பகுதிநேர ஆசிரியர் களாகப் பணியாற்றுபவர்களில், முழுத்தகுதி பெற்றவர்களை, முழுநேர ஆசிரியர்களாக மாற்றி, அவர்களை பணியில் நிரந்தரம் செய்ய அரசு முன் வருமா?

(இ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை, ஏனெனில் முழுநேரத் தொழிலாசிரியர்களை நியமிப்பதை விட தொழிலைச் சார்ந்தவர்கள் பகுதிநேர ஆசிரியராக இருப்பது மிகுந்த பயனைக் கொடுக்கிறது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Physics Lecturers in aided Polytechnics.

78 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact, that representation have been made to the Government, to place Physics Lecturers holding B.Sc. Degree with Physics as major, in aided Polytechnics in the scale of pay of Rs. 700-40-1,100-50-1,300-EB-50-1,600 with effect from 1st January 1974 with monetary benefit from 1st January 1977; and

(b) if so, the action taken thereon?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Regularisation of service of School Assistants with retrospective effect.

79 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that a number of School Assistants have appealed for retrospective regularisation of their services from the date of first appointment, as in the case of those appointed in Government (Board) High Schools between 1st April 1970 and 3rd August 1973, condoning the break of service due to ousting by the Joint Director of School Education (Personnel), Madras-6, at the end of each academic year;

(b) if so, the number of School Assistants affected; and

(c) the action proposed to be taken thereon?

விடை—

(அ) ஆம்.

(இ) சுமார் 175.

(உ) அரசு 'பி' பிரிவு பள்ளி உதவியாளர்களைப் போல் அரசு 'ஏ' பிரிவு பள்ளிகளில் 1-4-1970 முதல் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட பள்ளி உதவியாளர்களின் பணியினையும், அவர்கள் கோடை கால விடுப்பினால் பணி நீக்கம் செய்யப்பட்டிருப்பின், அத்தகைய பணித்தொடர்பை பொறுத்து (condone) அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்யும் வகையில் தக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தக் குழு.

80. வினா—திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் எழுத்துச் சீர்த்திருத்தத்திற்கு அரசு ஏதேனும் குழு அமைத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அந்தக்குழு சரிவர இயங்கவில்லை என்று அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், குழுவை மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

(அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) 1982 டிசம்பரில் குழு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

University for Defence studies.

81 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that, a University exclusively for Defence Studies is to be set up according to a reference made by the Vice-Chairman of the University Grants Commission; and

(b) if so, the place of its location and other details?

விடை—

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

பள்ளி ஆசிரியர்களின் பணிவரன்முறைக்கான சிறப்புத் தேர்வு

82. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித்துறையில் பணியாற்றும் அரசுப் பள்ளி ஆசிரியர்களின் பணி வரன்முறைக்காக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு மூலம் சிறப்புத் தேர்வு நடத்தும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை

பொதுத் தேர்வுகளுக்கு தினப்படி

83. வினா.—திரு ம. சங்கரலிங்கம் (மற்றும் திரு. பா. ரா. தாமஸ்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) பத்தாவது வகுப்பு மற்றும் மேல்நிலை இறுதி வகுப்பு பொதுத் தேர்வுகளுக்கு (i) தலைமை மேற்பார்வையாளர், (ii) வினாத்தாள் பாதுகாவலர், (iii) இலாகா அதிகாரி ஆகியோருக்கு கொடுக்கப்படும் நாள் படியில் வேறுபாடு இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அவர்களுக்கு கொடுக்கப்படும் நாள் படியின் விபரங்கள் யாவை ?

(உ) அவர்கள் அனைவருக்கும் ஒரே விதமான நாள்படி கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(எ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(இ) அவர்களுக்கு கொடுக்கப்படும் நாள்படியின் விபரங்கள் பின் வருமாறு ?

	எஸ்.எஸ்.எல்.சி. (பத்தாவது வகுப்பு)	மேல்நிலை இறுதி வகுப்புத் தேர்வு
	1982—83 ஆம்கல்வி ஆண்டு முதல்	
	ரூ. பை.	ரூ. பை.
தலைமை மேற்பார்வையாளர்	6.00	10 00
வினாத்தாள் பாதுகாவலர்	6.00	8.00
இலாகா அதிகாரி	6.00	8,00

Annual inspection scheme.

84 Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether it is a fact that, the South India Teachers Union (Teachers' Guild) has made a representation, requesting the Government to do away with the Annual Inspection Scheme; and

(b) if so, the action taken thereon ?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஓவிய ஆசிரியர் பதவி

85. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாட்டில் சுமார் 500-க்கு மேற்பட்ட உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் ஓவிய ஆசிரியர் பதவி நிரப்பப்படாமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அப்பதவிகளை நிரப்ப அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

விடை—

(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Autonomous Status to Madras Law College.

86. Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is a proposal to give autonomous status to Madras Law College from the academic year 1981–82 ; and

(b) if not, the reasons therefor ?

விடை—

(அ) இல்லை.

(இ) மாணவர்களின் ஒழுங்குமுறையற்ற தன்மையினால் தன்னாட்சி முறை (Autonomous status) நிராகரிக்கப்பட்டுள்ளது.

Middle Schools Headmasters in Kodaikanal Panchayat Union.

87 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that G.O. Ms. No. 1297, Education, dated 21st July 1979 has not been followed, while promoting Headmasters of Middle Schools in Kodaikanal Panchayat Union; and

(b) if so, the reasons therefor?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஆவணக்காப்பகங்கள்.

88. வினா—திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) தமிழகத்தில் மாவட்டம் தோறும் ஆவணக் காப்பகங்கள் அமைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

விடை—

(அ) மற்றும் (இ) மாவட்டம் தோறும் ஒரு கிளை ஆவணக் காப்பகம் அமைக்கக்கோரி, கருத்துரு ஒன்றை ஆவணக்காப்பக இயக்குநர் அரசுக்கு அனுப்பினார். பின்னர் அரசின் ஆணைப்படி 1981-82 ஆம் ஆண்டிக்கான இரண்டாம் பகுதித் திட்டமாக மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சிதம்பரம் ஆகிய இடங்களில் வட்டார; ஆவணக் காப்பக மையங்கள் ஏற்படுத்தக் கருத்துரு அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேற்கூறியுள்ள 3 வட்டார ஆவணக் காப்பக மையங்களும் 1982 மார்ச்சு மாதம் முதல் செயல்பட்டு வருகின்றன.

Study of Home Science.

89. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that some parents living in T.V.S. Nagar, Madurai, demanded the introduction of the study of Home Science in High Schools for Girls, during 1980; and

(b) if so, the decision taken on this demand?

விடை—

(அ) அப்படி கோரிக்கை ஏதும் வரப்பெற்றதாக தெரியவில்லை.
(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத்* தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச்சட்டமுன்வடிவு என பேரவைத் தலைவரால் நிர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிடப்பட்ட கீழ்க்கண்ட சட்டமுன் வடிவுகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :

1. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/83.)

2. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/83).

3. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/83).

4. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/83).

3. கவன ஈர்ப்பு.

(1) விழுப்புரம் நகராட்சிப் பகுதியில் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டை பெற்றவர்களுக்கு குறைத்து மண்ணெண்ணெய் வழங்குவது குறித்து.

Thiru A. R. DAMODARAN: Sir, I wish to call the attention of the Hon. the Minister for Finance to a matter of urgent public importance, namely, the hardship caused to family card-holders in Villupuram Municipality where the monthly quota of kerosene has been fixed at 5 litres instead of 6 litres as per the Government instructions and the absence of directions to the District authorities in Tamil Nadu, particularly in South Arcot district, when the dual pricing policy for kerosene was implemented in Tamil Nadu.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவைமுன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

THIRU A. R. DAMODARAN: Sir, it has been mentioned in the detailed Note that, if we take into consideration Madras City, its belt areas and the districts, 100 litres of kerosene are given to a hand-cartman in Madras City and 50 litres are given to a hand-cartman in the districts. According to the margins of profit fixed, it amounts to Rs. 7.50 per day for a hand-cartman in Madras City and Rs. 3.75 per day for a hand-cartman in the districts. This has resulted in black-marketing by these hand-cartmen. There is no question about it. They are selling at 25 paise or 30 paise above the authorised rate. They have represented that, if 200 litres per day could be given to these hand cartmen, the rate at which they would sell would be the controlled rate that has been fixed by the Government. I would request the Hon. Minister to consider whether the quota for hand-cartmen could be increased to 200 litres per day to ensure public distribution of kerosene and to bring down the prices in the open market.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நமக்குக் கிடைக்கின்ற மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டினுடைய அளவைப் பொறுத்து இப்போது பகிர்ந்து கொடுப்பது இந்த அளவுக்கு வருகிறது. கூடுதலாக நமக்கு வருமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

@ 232-234 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

குறிப்பிடுவதுபோன்று, கைவண்டிக்காரர்களுக்கு உயர்த்திக்கூட கொடுக்கலாம். நிலைமைகளை ஆராய்ந்து பார்த்து, அப்படி கொடுப்பதற்கான வாய்ப்பு இருந்தால் செய்யலாம். நாம் கேட்கிறோம். ஆனால் நாம் கேட்கிற அளவுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு இல்லாத காரணத்தினால், இருப்பதை நாம் பகிர்ந்து கொடுக்கவேண்டியிருக்கிறது. அவர்கள் கூடுதலாகக் கொடுத்தால், நாமும் கூடுதலாகக் கொடுக்க இயலுமா என்பதைப் பார்த்து ஒதுக்கீடு இடம் தருமானால் அதைப்பற்றி ஆராயலாம்.

Thiru A. R. DAMODARAN: Sir, 75 per cent of the kerosene in Tamil Nadu today is theoretically distributed on family cards and practically distributed without family cards. These people are distributing without family cards. So, unlike the Department's Note, I would request the Hon. Minister, when he has this meeting, to consider whether it will improve the distribution of kerosene, if larger quotas are given because people in the Madras metropolitan area prefer to buy from hand-cartmen rather than to go and stand in the queue.

Secondly, I would like to mention about the non-subsidised kerosene which has been discontinued. There are many kerosene wholesalers who have got stocks of non-subsidised kerosene on hand. They do not know what to do about it because they cannot sell it at Rs. 3.20 per litre. May I request the Hon. Minister to consider how these people are to sell this kerosene and to whom? Unless the Government give directions, these people will not be able to sell this non-subsidised kerosene. Since they cannot sell the non-subsidised kerosene only because of the Governmet of India's policy and the Tamil Nadu Government's policy, may I request the Hon. Minister to find out how this kerosene is to be disposed of ?.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் இந்த மண்ணெண்ணெய் விநியோகத்திலே ஏற்பட்டிருக்கின்ற சில நெருக்கடி நிலைமைகளைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். அந்தத் தன்மையிலே உணவுத் துறையினர் ஆராய்ந்து பார்த்து, எந்த அளவுக்கு அதிலே இருக்கின்ற சங்கடங்களை நீக்க முடியுமோ அந்த அளவுக்கு நீக்குவார்கள். அதனுடைய முழு விவரமும் இல்லாத காரணத்தினால், அவர்கள் சொல்கின்ற அடிப்படையிலே அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றால், அதைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை துறையினர் மேற்கொள்வார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

(2) குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் ஒதுக்கீடு பெற்றவர்கள் மற்றவர்களுக்கு விற்றுவிட்ட நிலையில், அங்கே குடியிருப்பவர்களிடம் அபராதம் பெற்றுக்கொண்டு, அவர்கள் குடியிருக்க அனுமதிக்க ஆணையிருந்தும் அவர்கள் வெளியேற்றப்படுவது குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் ஒதுக்கீடு பெற்றவர்கள் பலர் வேறு நபர்களுக்கு விற்றுவிட்ட நிலையில் அத்தவறுகளைக் கண்டறிந்து தற்போது அங்கே குடியிருப்பவர்களிடம் ரூபாய் 500 அபராதம் பெற்றுக் கொண்டு அவர்களையே தொடர்ந்து குடியிருக்க அனுமதிப்பதென் ஆணை இருந்தும் அவ்வாணை புறக்கணிக்கப்பட்டு அவர்கள் வெளியேற்றப்படுவதால் அவர்கள் படும் அல்லல் குறித்து."

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவையின் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் உண்மையான ஒதுக்கீடுதாரர் விலாசம் தெரியாத நிலையில், அங்கே இப்போது குடியிருந்து வருபவர்கள் மிகவும் ஏழைகளாக இருந்தால், ரூ. 500 அபராதம் பெற்றுக் கொண்டு அவர்களுக்கே அந்தக் குடிசைப் பகுதியை உரிமையாக்க வேண்டுமென்பதற்கு திட்டமிட்டு வாரியத் தலைவர் முயற்சிப்பதாக இதிலே சொல்லப்பட்டிருக்கின்றது. உண்மையான ஒதுக்கீடுதாரர் விலாசம் தெரியாததற்குக் காரணமே, ஒதுக்கீடு பெற்றவர்கள் வேறு சில குடிசைவாசிகளிடமே அதை விற்றுவிட்டு அவர்கள் வெளியேறி விட்டார்கள். அப்படி வெளியேறிவிட்ட காரணத்தினாலே 1982 ஜூன், ஜூலையிலே வாடகை கட்டியவர்கள் யார் என்று இவர்கள் துறையிலே கேட்கின்றபோது, அந்த ரசீது காட்டினாலும் கூட அல்லது பணம் கட்டினாலும் கூட அந்த வாடகை பழைய ஒதுக்கீட்டுதாரர் பெயரிலேயே ரசீது கட்டக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இவர்களாலே முன்பிருந்தவர்களைப்பற்றிய விவரம் தெரிவிக்க முடியவில்லை. தற்போது குடியிருப்பவர்களாலேயும் அங்கே இருக்க முடியவில்லை. உண்மை நிலை ஒதுக்கீடுதாரர்கள் விற்றுவிட்டார்கள். சிரமப்பட்டு, சிறுக சிறுகப் பணம் சேர்த்து வேறு குடிசைவாசிகள் அதைப் பெற்றிருக்கின்றார்கள். 1983 மார்ச் மாதம் வரையிலேகூட அவ்வாறு பெற்றிருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு

@ 234-235-ஆம் பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அங்கே இருப்பவர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் வெளியேற்றினால், அந்தக் குடிசைவாசிகள் மிகமிகக் கஷ்டப்படுவார்கள். இந்த 500 ரூபாய் வாங்கிக் கொள்வதை இப்போது மாற்றி 1983 வரையிலே யார் யார் இருக்கின்றார்களோ அவர்களுடைய பெயரிலே அதை மாற்றிக் கொடுக்கலாம். ஏனென்றால் ஒதுக்கீடுதாரர்கள் யார் யார் என்று கண்டுபிடிக்க முடியாத நிலை இருப்பதாக அரசே சொல்கின்றது. ஆகவே இருக்கின்றவர்களிடத்தில், குடிசைவாசிகளாக தகுதி பெற்று இருப்பவர்கள் யார் என்பதை மட்டும் பார்த்து, அபராதத் தொகையைப் பெற்றுக்கொண்டு அவர்களையே அங்கே குடியிருக்க வைத்தால், மனிதாபிமானத்தோடும் கருணையுள்ளத்தோடும் இதைச் செய்தால், அந்தக் குடிசைவாசிகள் வாழ்த்துவார்கள். அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மிக விளக்கமாக எடுத்துச் சொல்லியும், அவர் கருத்து வெற்றி பெறவில்லையே என்பதைக் காண நான் மிகவும் வருத்தப்படுகிறேன். குடிசை மாற்று வாரியத்தால், முதலிலே அந்தக் குடியிருப்புகள் ஏழைகளுக்கு, குடிசைகளிலே இருப்பவர்களுக்குத் தரப்படுகின்றன. என்யூமரேட் செய்து கொடுக்கப்படுகிறது. அப்படி அந்த வீடுகளைப் பெற்றவர்கள் மற்றவர்களுக்கு விற்று விடுகிறார்கள். அது எவ்வளவு பெரிய தவறு என்பதை உணர வேண்டும். அதை விற்றது மாத்திரம் தவறில்லை; வாங்கியதும் தவறு. 'அக்காம்ப்ளிஸ்' அதற்கு உடந்தையாக இருந்திருக்கிறார்கள். அப்படி வாங்கியவர்களிடம் 500 ரூபாய் அபராதம் பெற்றுக் கொண்டு, அவர்களுக்கே அந்த வீடுகளைக் கொடுத்துவிட வேண்டுமென்று சட்டம் இருக்கிறதென்று சொன்னார்கள். அப்படிச் சட்டமில்லை. இருக்கவும் முடியாது. நியாயமாக என்ன செய்ய வேண்டுமென்றால் — விற்றுவிட்டுப் போனவர்களின் முகவரி கிடைப்பதில்லை. வாங்கியவர்களுக்கு உரிமை கொடுக்காததால், விற்றவர்களின் பெயரிலேயே பணத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் செய்தி குடிசை மாற்று வாரியத் தலைவருக்குத் தெரிகிறபோது, அனுதாபத்தோடு ஒன்றைக் கவனிக்கிறார்கள். வாங்கியவர்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்களா, அவர்கள் மிக மிக ஏழைகளா, குடிசைகளில் இதற்கு முன்னால் இருந்தார்களா என்று பரிசீலனை செய்து, அங்கேயிருந்து அவர்களை வெளியேற்றினால் வருந்துவார்கள், தெரியாமல் வாங்கிவிட்டார்கள் என்று கருதினால், அப்படிப்பட்டவர்

களிடத்தில் மட்டும் 500 ரூபாய் பெற்று, அந்த விடுகளை அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கக் கூடியவர்கள், கம்பெனிகளில் வேலை செய்யக் கூடியவர்கள் எல்லாம்கூட வாங்கியிருக்கிறார்கள். விற்றவர்களிலும் அப்படியிருக்கிறார்கள். ஏழைகளாகவும் இருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குபவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை வெளியேற்றித்தான் ஆக வேண்டும். செய்தி-அறநிலையத் துறை அமைச்சரவர்கள் சொன்ன மாதிரி, உங்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் நல்ல காரியங்களை எப்படிச் செய்ய முடியும்? அவர்களிடத்திலே இருந்து பணம் வாங்கும்போது, ஏழைகளிடத்திலிருந்து வாங்குகிறார்கள். எனவே வசதியுள்ளவர்களை வெளியேற்றுங்கள் என்று சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதுபோல சட்டமில்லை. குடிசை மாற்று வாரியத் தலைவர் அவர்கள் அனுதாபத்தின் அடிப்படையில் 500 ரூபாய் வாங்கிக்கொண்டு, ஏழைகளாக இருந்தால், அந்த வீடுகளிலேயே இருக்கச் சொல்லுகிறார். நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், ஒருகால் வெளியேற்றித்தான் ஆக வேண்டுமென்று சொல்லியிருக்கக்கூடும். குடிசை மாற்று வாரியத் தலைவர் நல்ல எண்ணத்தோடு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, மனிதாபிமான அடிப்படையில் வாரியத்தின் தலைவர், ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து குடியிருப்புகளை வாங்கியவர்களுக்குச் சலுகைகள் கொடுத்து, அவர்களுக்கு உதவி செய்வதை நான் வரவேற்கிறேன். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் குடிசை மாற்று வாரியம் ஒரு அரசினுடைய பொது நிறுவனமாகும். அப்படிப்பட்ட பொது நிறுவனத்தில் எந்தவிதமான கொள்கை முடிவோ, ஆணையோ இல்லாமல், எப்படி அந்த வாரியத்தின் தலைவர் மனிதாபிமான அடிப்படையில் இப்படிச் செய்வதற்கு அதிகாரம் வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வாரியம் கொடுத்திருக்கும் சலுகையை, ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து அபராதத் தொகை பெற்று அவர்களுக்கே அந்தக் குடியிருப்புகளை ஒதுக்குவது என்ற சலுகையை 1983 மார்ச் வரை விரிவுபடுத்த, வாரியத்திற்கு அரசு அறிவுரை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன், வசதியுள்ளவர்களுக்காக அனுதாபப்படவில்லை, இருந்தாலும் இப்படிப்பட்ட காரியங்

களைச் செய்யும்போது, அதிகாரிகள் கெடுபிடி காட்டாமல், மிரட்டாமல் செய்ய வேண்டும். எப்படி அமைச்சரவர்கள் மக்களைச் சந்தித்துப் பேசும்போது பேசுகிறார்களோ, அதைப்போல அவர்கள் அனுதாபத்துடன் பேச, தக்க அறிவுரைகளை அமைச்சரவர்கள் வழங்குவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியத் தலைவர் அவர்கள் எல்லோரையும் பார்த்து மிகவும் அனுதாபத்தோடு பேசி, நன்றாகச் செயல்படுகிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. அனுதாபத்தோடு நடக்கக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதிகாரம் இல்லாதபோது எப்படி இது நடந்தது, அனுதாபத்தோடு நடக்கக்கூடாது, 500 ரூபாய் பெற்றுக்கொண்டு அவர்களைக் குடிவைக்கக்கூடாது, தவறாக வாங்கியிருக்கிறார்கள், நீங்கள் வெளியே போய்த்தான் ஆக வேண்டுமென்று, அனைவரையும் வெளியேற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் விரும்பினால், அரசு ஆணையிடத் தயாராக இருக்கிறது. யார் யார் தவறாக, ஒதுக்கீடு செய்தவர்களிடமிருந்து வாங்கியிருக்கிறார்களோ, அவர்களிடமிருந்து 500 ரூபாயை வாங்கிக் கொண்டு, அவர்களுக்கே சொந்தமாக்காமல், 'அன்ஆதரைஸ்டு பர்ச்சேஸ்' என்று சொல்லி, எல்லோரையும் வெளியேற்றித்தான் ஆக வேண்டும் ; குடிசையில் வாழும் மக்களைப் பார்த்து, என்யூமரேட் செய்து, அவர்களை அங்கே குடியமர்த்த அரசு ஆணையிடத் தயாராக இருக்கிறது. ஆனால் குடிசை மாற்று வாரியத் தலைவர் அவர்கள் பிராக்டிகல் எக்ஸ்பீரியன்சைக் கொண்டு, அவர்களே இந்தப் பிரச்சினையை அணுகுவதால், விலைக்கு வாங்கியிருப்பவர்களைக் கூப்பிட்டு, மிக மிக ஏழைகள் என்று தெரிந்தால், அவர்களுக்கு 500 ரூபாய் ஃபைன் என்று போட்டு, அந்த வீடுகளை அவர்களுக்கே கொடுக்கும் ஏற்பாட்டைச் செய்கிறார்கள். இதிலே அரசு தலையிடாமல் இருக்கிறதென்று தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் மாற்றுக் கருத்து சொல்லி, அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று சொன்னால், அதற்கு அரசு ஆணையிடத் தயாராக இருக்கிறது. இந்தியன் எக்ஸ்பிரஸ், உடனே அந்தச் செய்தியைப் போட்டு, குடிசையில் இருந்தவர்கள் எல்லாம் ரோடிலே இருக்கிறார்கள் என்று 'நான்-கோவாபரேஷன்' செய்யும். நல்லது செய்ய ஒத்துழைப்பைக் காணோம். அந்த மாதிரி வந்துவிடக் கூடாது. நல்ல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லும்போது, அவற்றை அரசு பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறதென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அரசின் தீர்மானம்

(1) தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை மேற்கொள்ளுதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 23(1)-வது விதி நிறுத்தப்பட்டு, இந்த அவை 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தப்பட்டு, இந்த அவை 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்—கட்டுப்படுத்தல்) சட்டத்தில் (மத்திய சட்டம் 6/1974) செய்த திருத்தங்களை, தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்ற வேண்டுமென்ற தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"நீர் தூய்மை கெடுதலைத் தடுத்தல், கட்டுப்படுத்தல், நீர் பயன்படுத்தத் தக்கதாயிருத்தலைப் பராமரித்தல், தூய்மைகெட்ட நீரை மீண்டும் பயனுக்குக் கொண்டு வருதல் ஆகியவை தொடர்பான விவகாரங்கள் நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டுவரப்படுவதன் மூலம், அஸ்ஸாம், பீஹார், குஜராத், ஹரியானா, ஹிமாச்சலப்பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், கர்நாடகா, கேரளா, மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான், திரிபுரா, மேற்கு வங்காளம் முதலிய மாநிலங்களில் முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு, இந்த மாநிலங்களின் சட்ட மன்றங்கள் அனைத்திலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் (1) பகுதியின்படி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளபடியால், 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்—கட்டுப்படுத்தல்) சட்டத்தை (மத்திய சட்டம் 6/1974) நாடாளுமன்றம் இயற்றியுள்ளதாலும் தமிழ்நாடு சட்டமன்றத்தின் இரு அவைகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் (1) பகுதியின்படி, தீர்மானம் நிறைவேற்றி மேற்சொன்ன 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்—கட்டுப்படுத்தல்) சட்டம் (மத்திய

சட்டம் 6/1974) தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு 31 ஆம் நாளிலிருந்து இம் மாநிலத்தில் செயலுக்கு வந்துள்ளபடியாலும், மேற்சொன்ன சட்டம் சில நோக்கங்களுக்காக நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட வேண்டும் என்கிற வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் (1) பகுதியின்படியும் அதன் (2) பகுதியின்படியும், அஸ்ஸாம், ஹரியானா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலச் சட்டமன்றப் பேரவைகள் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளபடியாலும்,

மேற்சொன்ன தீர்மானங்களை ஒட்டி, 1978 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்) திருத்தச் சட்டத்தை (மத்திய சட்டம் 44/1978) நாடாளுமன்றம் இயற்றியுள்ளபடியாலும்,

1978 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்—கட்டுப்படுத்தல்) திருத்தச் சட்டத்தின் வாயிலாக 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்—கட்டுப்படுத்தல்) சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களைத் தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்றுவது அவசியம் எனக் கருதப்பட்டுள்ளபடியாலும்,

அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) (2) பகுதிகளில் வழங்கியுள்ள அதிகாரங்களால், 1978 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்—கட்டுப்படுத்தல்) திருத்தச் சட்டத்தின் வாயிலாக (மத்திய சட்டம் 44/1978), 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்) சட்டத்தில் (மத்திய சட்டம் 6/1974) செய்த திருத்தங்களை தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்ற வேண்டும் என்று இச்சட்டமன்ற மேலவை இப்போது இதனால் தீர்மானிக்கிறது" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"நீர் தூய்மை கெடுதலைத் தடுத்தல், கட்டுப்படுத்தல், நீர் பயன்படுத்தத் தக்கதாயிருத்தலைப் பராமரித்தல் தூய்மைகெட்ட நீரை மீண்டும் பயனுக்குக் கொண்டு வருதல் ஆகியவை தொடர்பான விவகாரங்கள் நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டு வரப்படுவதன் மூலம், அஸ்ஸாம், பீஹார், குஜராத், ஹரியானா, ஹிமாச்சலப்பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், கர்நாடகா, கேரளா, மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான், திரிபுரா, மேற்கு வங்காளம் முதலிய மாநிலங்களில் முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு, இந்த மாநிலங்களின் சட்ட

202. 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்—கட்டுப்படுத்தல்) சட்டத்தில் (மத்திய சட்டம் 6/1974) செய்த திருத்தங்களை தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்ற வேண்டுமென்ற தீர்மானம்

மன்றங்கள் அனைத்திலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252ஆம் பிரிவின் (1) பகுதியின்படி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளபடியால், 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்) சட்டத்தை (மத்திய சட்டம் 6/1974) நாடாளுமன்றம் இயற்றியுள்ளதாலும் தமிழ்நாடு சட்டமன்றத்தின் இரு அவைகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் (1) பகுதியின்படி, தீர்மானம் நிறைவேற்றி மேற்சொன்ன 1974ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்) சட்டம் (மத்திய சட்டம் 6/1974) தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு 1981-ஆம் ஆண்டு ஆகஸ்டு 31 ஆம் நாளிலிருந்து இம் மாநிலத்தில் செயலுக்கு வந்துள்ளபடியாலும், மேற்சொன்ன சட்டம் சில நோக்கங்களுக்காக நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட வேண்டும் என்கிற வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252ஆம் பிரிவின் (1) பகுதியின்படியும் அதன் (2) பகுதியின்படியும், அஸ்ஸாம், ஹரியானா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலச் சட்டமன்றப் பேரவைகள் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளபடியாலும்,

மேற்சொன்ன தீர்மானங்களை ஒட்டி, 1978 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்) திருத்தச் சட்டத்தை (மத்திய சட்டம் 44/1978) நாடாளுமன்றம் இயற்றியுள்ளபடியாலும்,

1978 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்) திருத்தச் சட்டத்தின் வாயிலாக 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்) சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களைத் தமிழ்நாடு மாநிலத்திலும் பின்பற்றுவது அவசியம் எனக் கருதப்பட்டுள்ளபடியாலும்,

அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) (2) பகுதிகளில் வழங்கியுள்ள அதிகாரங்களால், 1978ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்) திருத்தச் சட்டத்தின் வாயிலாக (மத்திய சட்டம் 4/1978), 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்) சட்டத்தில் (மத்திய சட்டம் 6/1974) செய்த திருத்தங்களை தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்ற வேண்டும் என்று இச்சட்டமன்ற மேலவை இப்போது இதனால் தீர்மானிக்கிறது.”

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. அரசின் சட்ட முன்வடிவுகள்

(1) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1983).

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

“சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1983)@ பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்”
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

“சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1983) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்”

THIRU A. R. DAMODARAN: Hon. Chairman, Sir, I have no serious objection to the raising of taxes on various classes of vehicles, excepting to point out the fact that the Hon. Minister has chosen also to increase the quarterly tax on vehicles with 3½ H.P., which applies to scooters, etc., and also to smaller vehicles which are now used predominantly by the lower middle class. I think the Hon. Minister, being young, will appreciate the fact that these vehicles are invariably used by persons like bank employees and other middle-class employees who are earning anywhere between Rs. 700 and Rs. 900 per month.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை.)

Why he should have forgotten his youth and decided to tax these young people who invariably use these vehicles to take their young wives and children to places of entertainment is a matter for deep concern and I wish that he had not levied this increase in tax. I read from his reply in the Assembly the classic reply that all Ministers give when raising taxes: it is to reduce it to paise and to say that his increase in tax amounts

@ 235–238 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[Thiru A. R. Damodaran] [1983 ஏப்ரல் 23

to only five paise per day. The Hon. Minister forgets that many of these people are already paying a tax of Rs. 4 per litre on the petrol that they buy to use in these vehicles and that sales tax on petrol is also being paid. Therefore, I would request that, while I have no objection to his raising by Rs. 40 or Rs. 50 the vehicle tax on goods vehicles, at least in so far as these scooters and bicycles with propellants are concerned, he may continue to show the concern and mercy which all Ministers should show to this particular class. The revenue that he will get from this particular class of vehicles is not sizable. I would request him to bear this in mind because they are a vulnerable section and belong to the salaried classes. Any small increase in their expenses also cannot be recovered by them by way of their emoluments, etc.

(முற்பகல் 10-50)

I now come to the second point and I have made this request to numerous Ministers of Transport, but, unfortunately, I have not met with any success. Tamil Nadu is singularly conservative in allowing the maximum laden weight of goods vehicles. I am not referring to passenger vehicles. I am referring to goods vehicles. This is the only State in the Southern region and in the Western region also, where the maximum laden weight restrictions are 15 tonnes. That is, a lorry cannot carry more than 12 tonnes of cargo and the maximum laden weight cannot exceed 15 tonnes. In the case of vehicles which have National Permits, they are permitted to carry up to 18 tonnes and they cannot be prevented from using Tamil Nadu roads.

I would make an earnest plea to the Hon. Minister that he can get another 3 to 4 crores of rupees if he allows the maximum laden weight restriction to be relaxed from 15 tonnes to 18 tonnes and he can charge Rs. 100 or Rs. 150 per tonne extra per vehicle per quarter. This will fetch him additional revenue which is at present going into sources other than Government sources. I do not have to explain what I mean. Many of these people who carry this cargo are invariably tinning the persons who are entirely unconnected with the tax collection. I would request the Government to permit the vehicles to carry more than 12 tonnes because modern vehicles

1983 ஏப்ரல் 23] [Thiru A. R. Damodaran]

are now built to carry heavier loads. At least in the National and the State Highways this may be permitted. I would like to add that in many other States this has been done. But our Highways Department is extremely conservative in such matters. Tamil Nadu Officials, as I have pointed out, are always extremely fond of referring to blue books and red books of rules and regulations. I am not saying that the rules and regulations should be violated. But it requires the dynamism of a Minister to throw away some of the rules from the book or alter the rules. I would request the Hon. the Minister for Transport to call for a meeting of the Highways Department officials and ask them this question. When Gujarat, Maharashtra, Karnataka and Andhra Pradesh States are allowing higher laden weights, why should Tamil Nadu not adopt this principle ? We have adopted the principle of strengthening our bridges and culverts on the National Highways. There is no reason at all for not allowing the higher laden weight and I hope that this will be done.

Regarding the new provision in the Motor Vehicles Act, namely, the affixing of photograph to driving licences, I would like to say that I welcome this move because in every other country in the world we have an identity card and the photo of the person is affixed to the driving licence and there is also entry therein about the full address. This will be very necessary and useful in case any students, etc. are involved in any accident because this will help immediate communication with the parents and giving of medical assistance to the injured. I only want the Hon. Minister to give them three months' time. He has announced it yesterday. This should be rigorously enforced because in Madras City 70 per cent of the auto-rickshaw are driven by persons without licence and by persons who have not attained the age of 18. They are a menace on Anna Salai at 11 P.M. when we try to go out of one of the cinema theatres after witnessing the late night show. The entire Anna Salai is full with auto rickshaws. They defy the law, they defy the police, they defy all authority and they also take us to task when we ask them to move out of the road. I request that this rule of affixing photograph to driving licence should be enforced strictly. Sufficient time may be given to the persons concerned. Even if these persons are not able to do it them-

selves, we have got some modern cameras—110 cameras—where immediately after one minute, we can get the photo. The Government may ask the Mobile squad to have this camera and take the photo and affix it to the driving licence and they may charge the persons concerned the cost of the photo. This can be done because it is a new measure that the Hon. Minister is trying to introduce and some sort of assistance may be required. We can have this policy of having mobile photo squad to take photo and get the copy within a minute and affix it to the licence and then have it signed by the authorised Transport people so that the people need not have to rush to photo studios and then go to Transport Offices for affixing it.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

I would like to say that, unlike the popular impression that we are opposed to all taxes, I am certainly not opposed to this very genuine increase of Rs. 40 or Rs. 50. The only point is that better roads should be maintained for the sake of these vehicles. In this task, I hope the Hon. Minister will be able to divert a sizable portion of the revenue from road and vehicular taxes—not to drought relief, as he mentioned, because that is the responsibility of other Ministers—to roads and bridges with which he should be intimately connected, especially as he is the owner of 5,500 vehicles as Minister for Transport in charge of the Transport Corporations.

Thank you, Sir.

திரு. ஆ. நல்லசிவன் : மாற்றுத் தலைவர் அவர்களே, மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு திருத்தச் சட்டமுன்வடிவிலே கொண்டு வந்திருக்கக் கூடிய வரிகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே எதிர்க்கிறேன். எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசியதைப்போல, ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் போன்றவைகள் மீது போட்டிருக்கிற வரிகள் மத்திய வகுப்பினரைத்தான் பெரும்பாலும் பாதிக்கும். சென்ற ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்காக நடத்தப்பட்ட ஸ்போட்ஸ்-ல் நான் நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் டீமிலிருந்து விளையாடி நானும் அவரோடு சேர்ந்து பரிசு வாங்கினேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வாலிபர். நான் வயோதிகன். பெரும்பாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப்போல

உள்ள வாலிபர்கள் தான் ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் போன்றவைகளை உபயோகப்படுத்துகிறார்கள். இளைஞர்களை இந்த வரி பாதிக்கிறது. இதிலே சொற்ப வருமானம்தான் வருகிறது. இந்த வருமானம், அரசைப் பொறுத்த வரையில் பெரிய வருமானமல்ல. ஆனால் மத்திய வகுப்பினருக்கு இது ஒரு பெரிய பாதிப்பாக இருக்கும். இப்போது விதித்திருக்கும் வரி வருங்காலத்தில் பஸ் கட்டணத்தை உயர்த்துவதற்கான அறிகுறியாக இருக்குமோ என்றுகூட நான் நினைக்கிறேன். பஸ் கட்டணத்தை உயர்த்துகின்ற உத்தேசம் இப்போதைக்கு சர்க்காருக்கு இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவையில் அறிவித்திருக்கிறார்கள். ஒருவேளை இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றியதற்குப் பிறகு, அதற்கான உத்தேசம் அரசுக்கு உண்டோ, அதற்கான ஏற்பாடுதான் இதுவோ என்றுகூட நான் நினைக்கிறேன். அந்த வகையில் இதை உயர்த்த அனுமதிப்பது என்பது பஸ் கட்டணத்தைப் பின்னால் உயர்த்துவதற்கு நாம் அனுமதி அளிப்பதுபோல் ஆகிவிடும்.

ஆறாவது அமென்ட்மென்டில், மூன்றாவது சப்-கிளாசில் மதுரை கார்ப்பரேஷன் லிமிட்டுக்குள் மற்றும் வேறு முனிசிப்பாலிட்டிகளின் எல்லைக்குள் ஓடக்கூடிய பேசஞ்சர் வண்டிகளுக்கு எல்லாம் 35 ரூபாய் அளவிற்கு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அதாவது 150 ரூபாய் என்று ஆக்கியிருக்கிறார்கள். இப்படி கார்ப்பரேஷனில் ஓடுகிற வண்டிகளுக்கு எல்லாம் வரியை உயர்த்தியிருப்பதன் மூலம் தொழிலாளர்களின் வருவாயில் மறைமுகமாக இந்த அரசு கை வைக்கிறதோ என்று நான் நினைக்கிறேன். காரணம் முன்பு அவர்கள் போனசாக இவ்வளவு வேண்டுமென்று கேட்டார்கள். அதை அரசு முதலில் கொடுக்கவில்லை. ஆனால் இரண்டாவது போனஸ் கொடுத்திருக்கிறார்கள். அது வேறு பிரச்சினை. ஆனால் முதலில் அவர்கள் காரணம் சொல்லும்போது, தொழிலாளர்கள் கேட்ட அளவுக்கு போனஸ் கொடுக்க வருமானம் அதிகமில்லை என்று சொன்னார்கள். இப்போது அரசு ஒரு சீட்டுக்கு 35 ரூபாய் வீதம் உயர்த்தியிருப்பதால், கார்ப்பரேஷனுடைய வருமானம் குறையும் என்பதோடு மாத்திரமல்லாமல், தொழிலாளர்களின் போனசையும் அது நிச்சயம் பாதிக்கும். மேக்சிமம் போனசைத் தர மாட்டார்கள். இப்படி அரசு மாற்றுகிறபோது, தொழிலாளர்களுக்கு 20 பெர்சன்ட் போனஸ் தருவது குறையாது என்கிற உத்தரவாதத்தைத் தந்துவிட்டால், எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. இப்படி ஒரு சீட்டுக்கு 35 ரூபாய் வீதம் வரியை உயர்த்துகிற நிலையில் இந்த கார்ப்பரேஷன்கள் நிச்சயம் தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டிய சலுகைகளைக் கொடுக்காமல் போய்விடும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டுகிறேன்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 ஏப்ரல் 23

(முற்பகல் 11-00)

அடுத்ததாக அரசு பொருள் போக்குவரத்துக் கழகத்தின் சிரமங்கள்பற்றி கேள்விப்படுகிறேன். அது இலாபகரமாக இயங்கவில்லை என்று நம்புகிறேன். தமிழ் நாட்டில் பிரயாணிகள் போக்குவரத்தில் அரசு பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பதுபோல், பொருள் போக்குவரத்திலும் அரசு 'டாமினென்ட்' பொசிஷனுக்கு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி சீரமைக்கிறபோது அங்குள்ள தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல், அவர்களை வேலையை விட்டு நீக்கிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தக் காலத்தில் வேலை கிடைப்பதே கஷ்டமாக இருக்கிறது. கிடைத்த வேலையையும் பறித்துவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இருக்க வேண்டும்.

இப்போது அரசாங்கம் பல இடங்களில் மினி பஸ் விடுகிறது. இன்னும் பஸ்களே போகாத கிராமங்களுக்கும் அதை விஸ்தரிக்க வேண்டும் என்ற எண்ணம் ஜனங்களிடம் இருக்கிறது. அந்த மினி பஸ் விடுவதைத் தொடர்ந்து செய்ய வேண்டும். அது இப்போது விடப்படுவதில் உள்ள அனுபவங்களைக் கொண்டு அதை விஸ்தரிக்க வேண்டுமென்று சொல்லி, இந்தப் புதிய வரிகளை வாபஸ் பெறவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1983ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு திருத்த சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட இங்கே வைக்கப்பட்ட இந்த சட்டமுன்வடிவில் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டிய வரிகளை இங்கே விதிப்பதற்கான சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல், இந்த வரிகள் இன்றுள்ள சூழ்நிலையில் இன்றியமையாதவை என்ற அடிப்படையில் இதை நான் வரவேற்கிற அதே நேரத்தில், ஏழைகள் நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில்—மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தாமோதரன், திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், சட்டமன்றத்தில் இந்தச் சட்டமுன்வடிவு அங்கீகாரம் பெற்றிருந்தாலும், இங்கேயும் விவாதித்து அங்கீகாரம் பெற வேண்டும் என்று இருப்பதால், அதைமேலும் பரிசீலனை செய்து, சிறிய மோட்டார்கள் 1.5 சி.சி.

983 ஏப்ரல் 23] [திரு. ஆற்காடு நா. வீராசாமி].

பொறுத்தப்பட்ட மோட்டார்கள், ஸ்கூட்டர்களைப் பொறுத்தவரையில், ாலாண்டுக்கு ரூ. 15 என்று இருப்பதை, சலுகை என்ற அடிப்படையில், ப்படியாவது விட்டுவிட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நமக்கு வருவாய் அதிகரிக்க வேண்டுமென்று நினைக்கிற நேரத்தில், ஒரு பக்கத்தில் புதிய வண்டி சேசிஸ்கள் எல்லாம் வேறு மாநிலங்களில் ரிஜிஸ்டராகி வருவதைக் காண்கிறோம். நாம் வருவாய்ப் பற்றாக்குறையால் புதிய வரிகளைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். இன்னொரு பக்கத்தில் நமக்கு வரவேண்டிய வரிகள் வராமல், உதாரணமாக, பாண்டிச்சேரியில் ரிஜிஸ்ட்ரேஷன் கட்டணம் குறைவாக இருப்பதால் அசோக் லேலண்ட், டாடா போன்றவர்கள், அங்கே ஒரு கிளை அலுவலகம் வைத்துக்கொண்டு, தினந்தோறும் 50, 60 வண்டிகள் ரிஜிஸ்ட்டராகிற சூழ்நிலை இருக்கிறது. எனவே அதைத் தவிர்க்கக்கூடிய வகையில் நமது மாநிலத்தில் வரி விதிப்பு கொண்டு வரக்கூடிய நிலை இருக்குமானால், பாண்டிச்சேரியில் பதிவாகி மறுபடியும் இங்கே பதிவுக்கு வருகிறபோது, அதையும் சேர்த்து வசூலிக்கக்கூடிய நிலையில் இருக்க வேண்டும்.

THIRU A. R. DAMODARAN: Sir, in Pondicherry, the vehicles are not being registered. They are being purchased because the sales tax is Rs. 17,000. Since the Motor Vehicles Act is an All-India Act, those vehicles are brought to Tamil Nadu and registered. I hope the hon. Member Thiru Veerasami is not opposing that because the consumers are getting the benefit.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: கன்சூமருக்கு பெனிபிட் வருவதில் கருத்து வேறுபாடு இல்லை. தமிழ் நாட்டில் இருந்துகொண்டு, தமிழ் நாட்டில் தொழில் செய்துகொண்டு அங்கே வரி குறைவாக இருக்கிறது என்று சொல்லி, அங்கே போய் வாங்குவது என்பதால், உள்ளபடியே, தமிழ் நாட்டு அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமானம் போய் விடுகிறது. அப்படிப் போவதைக் குறைக்க வேண்டும் அல்லது வேறு வழிவகை இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

அடுத்து, நான் ஒரு கருத்தைத் தெரிவிப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். பொதுவாக தமிழ் நாட்டில் எந்த மாடல் வண்டிகள் ஓடுவது என்று முடிவு செய்ய வேண்டும். 1947-ல் ரிஜிஸ்டிரேஷன் செய்யப்பட்ட வண்டிகளும் ஓடுகின்றன. 1983-ல் ரிஜிஸ்டிரேஷன் செய்யப்பட்ட வண்டிகளும் ஓடுகின்றன. இதில் பழைய வண்டிகள் சரியாகப் பராமரிக்கப்படாத காரணத்தாலோ என்னவோ, அல்லது பிரேக் இன்ஸ்பெக்டர்கள் சரியாகப் பார்க்காத

காரணத்தால், நிறைய விபத்துக்கள் பழைய வண்டிகளால் ஏற்படுகின்றன. பத்து நாளைக்கு முன்பு தாசப்பிரகாஷ் அருகில் புதிய அம்பாசிடர் கார் போய்க் கொண்டிருந்தபோது, ஒரு பழைய வண்டி பிரேக் இல்லாததால் புது வண்டி மீது மோதி, விபத்து ஏற்பட்டு, அந்த வண்டி வீணாகிவிட்டது. புது வண்டியை வாங்கியவர், தலையில் கையை வைத்துக்கொண்டு, நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இதைச் சொல்வதற்குக் காரணம், இதைத் தவிர்ப்பதற்கு வரி விதிப்பு முறையில் ஒரு சில மாற்றங்கள் செய்யலாம். அதாவது புதிய வண்டிகளுக்குக் குறைந்த வரி. பத்து ஆண்டுக்கு அதிகமான வண்டிக்கு அந்த வரியில் கொஞ்சம் அதிகரிக்கலாம். இருபது ஆண்டு வண்டிக்கு இன்னும் கொஞ்சம் அதிகரிக்கலாம். இப்படிச் செய்தால், ஒன்று அந்த வண்டிகளைச் சரியாக வைத்திருக்க முடியும். அல்லது 'டிஸ்போஸ்' செய்துவிட முடியும். இதனால் 20 ஆண்டுக்குள் இருக்கிற வண்டிகளை ஓட்ட முடியும். எல்லா வண்டிகளையும் ரோட்டில் விட்டால், அதிலிருந்து வரும் புகை ரொம்ப மோசமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. பழைய லாரிகளிலிருந்து வரும் புகை. நாம் அருகில் காரில் போகும்போது, நமது வெள்ளைச் சட்டையைக் கருப்பாக்கி விடுகிறது. பிறகு வீட்டுக்குப் போய் வேறு சட்டை மாற்ற நேரிடுகிறது. இந்தச் சூழ்நிலையில் ஒரு புதிய வரிவிதிப்புக் கொள்கையைக் கொண்டுவர வேண்டும். இந்தியாவில் அப்படிப் பட்ட கொள்கை இல்லை. ஆனால் சிங்கப்பூரில் அந்த முறை இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு முறையைப் புகுத்துவதன் மூலம் இந்தத் துறையை புதுமையான முறையில் சிறப்பாகச் செயல்படுத்த முடியும் என்று சொல்லி, இந்த அரசுக்கு ஏற்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறையைப் போக்க, இந்த வரி விதிப்பை வரவேற்று, எனது கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் உண்மையான உணர்வுகளை வெளிக்காட்டியதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசுகிறபோது, வறட்சிக்காக இந்த வரி விதிப்பு என்று சட்டமன்றப் பேரவையில் நான் பேசியதாகப் பத்திரிகையில் வந்த செய்தியைக் குறிப்பிட்டுப் பேசினார்கள். அந்த நோக்கத்தோடு நான் சொல்லவில்லை. அங்கே பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் "வறட்சியின் காரணமாக ஏற்கெனவே மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், இப்போது இந்த வரி விதிப்பு தேவையா?" என்று கேள்வியைக் கேட்ட

போது, "வறட்சியின் காரணமாக அரசாங்கத்திற்குச் செலவு ஏற்படுகிறது. அப்போது இந்தத் துறையில் ஆகிற செலவுக்கு அரசாங்கம் ஒதுக்க வேண்டிய பணத்தை ஒதுக்க முடியாத நிலை ஏற்படும். எனவே இந்தத் துறையிலேயே நமக்கு வேறு கூடுதலாக வரி விதிக்கப்படுகிறது" என்ற கருத்தில்தான் சொன்னேன். அதிலே முழு விளக்கம் சொல்லாததால் இந்தமாதிரி குழப்பம் ஏற்பட்டது என்று நினைக்கிறேன். என்னுடைய கருத்து வறட்சிக்காக இதிலிருந்து எடுத்து அங்கே செலவு செய்ய வேண்டுமென்பது அல்ல. அதை முதலில் விளக்கிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, "குறைந்த வயதினராக இருக்கிறீர்களே, குறைந்த வயதுள்ளவர்கள் ஓட்டுகிற வண்டிகளுக்கு வரியைப் போடுகிறீர்களே?" என்று கேட்டார்கள். எனக்குள்ள அச்சம் குறைந்த வயதுள்ள நான், குறைந்த வயதுள்ளவர்கள் ஓட்டுகிற வண்டிகளுக்கு வரி போடாமல் விட்டுவிட்டேனே என்று அதற்கும் குற்றம் சொல்வார்களோ என்பதுதான். அமைச்சராக இருக்கிற காரணத்தால், எந்தவித பாகுபாட்டு உணர்ச்சியோடு நடக்க முடியவில்லை என்ற வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்றும் சொன்னார்கள். அதிகமான அளவில் அதிலே பொருள்களை ஏற்ற அனுமதி கொடுக்க வேண்டுமென்ற கருத்தைச் சுட்டிக் காட்டினார்கள். அதைப்பற்றி ஏற்கெனவே ஒரு முறை சம்பந்தப்பட்ட துறையான நெடுஞ்சாலைத் துறையோடு பேசினோம். சில வழித்தடங்களில் பாலங்கள் வலுவற்றதாக இருப்பதால், அப்படி அனுமதிப்பது என்பது ஆபத்தாக முடியும் என்ற அச்சத்தைத் தெரிவித்தார்கள். அதன் காரணமாக அப்படியே அது வைக்கப்பட்டிருக்கிறது. வேறு நோக்கம் இல்லை. இருந்தாலும் கூட, எந்தெந்த வழித் தடங்களில் அப்படி அனுமதிக்கலாம் என்பதைப்பற்றி ஆய்வை நடத்துகின்ற ஏற்பாட்டை நான் செய்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல "பெட்ரோல் விலை ஏறிவிட்ட இந்த சமயத்தில் நீங்களும் அப்படிச் செய்யலாமா?" என்று கேட்டார்கள். பெட்ரோல் விலை ஏற்றப்பட்டபோது கடுமையாக இங்கே யாராவது பேசியிருந்தால், எனக்குக் கொஞ்சம் திருப்தியாக இருந்திருக்கும். பெட்ரோல் விலை ஏற்றத்தால் போக்குவரத்துக் கழகங்களுக்கும் மக்களுக்கும் என்பது கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இதற்கு முன்பு மத்திய அரசு விலையை உயர்த்தினார்கள். நான் பொறுப்புக்கு வந்த பிறகு ரூ. 1.64-க்கு விற்ற டீசல் இப்போது 3.60 ரூபாய்க்கு வந்துவிட்டது. ஆனால் பயணத்தில் 5 பைசா வீதம் உயர்த்தப்பட்டது. இப்படிப்பட்ட உயர்வின் காரணமாக போக்குவரத்துக் கழகங்களும் பாதிக்கப்படுகின்றன. தனியார் துறை

ஆம், பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற உணர்வைச் சொல்ல முடியும் என்றாலும்கூட, இந்தச் சங்கடங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி டீசல் விலை உயர்ந்தாலும் பஸ் கட்டண உயர்வை உயர்த்த முடியாது முடியாது என்று சொல்வதைவிட உயர்த்த மனம் இல்லை, உயர்த்தக் கூடாது என்று உணர்ந்த சூழ்நிலையில் இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

இந்த விலை உயர்வின் காரணமாக தமிழகத்தில் உள்ள நம் போக்குவரத்துக் கழகங்களுக்குக் கூடுதலாக சுமார் ரூ. 9 கோடி அளவுக்குச் செலவாகிறது. அப்போதெல்லாம் இவ்வளவு கடுமையாக யாராவது பேசியிருந்தால், எனக்கே கொஞ்சம் நிம்மதியும் மகிழ்ச்சியும் ஏற்பட்டிருக்கும். இதன் காரணமாக பெரிய மாற்றம் ஏற்படும் என்றுகூட நான் நம்பவில்லை. தமிழகத்தில் சட்டமன்றப் பேரவையிலோ, மேலவையிலோ மத்திய அரசின் டீசல் விலையேற்றத்தைக் கண்டித்திருக்கிறார்கள், ஆகவே நாம் அதைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்திற்கு அவர்கள் வருவார்கள் என்றுகூட நான் இதைச் சொல்லவில்லை. ஆனால் அப்போது நம் மாண்புமிகு உறுப்பினர்கள் அதை வேகமாக எதிர்த்துப் பேசினார்களே என்ற மனநிறைவாவது எங்களுக்கு ஏற்பட்டிருக்கும். மத்திய அரசில் உயர்த்தினாலும், மாநில அரசில் உயர்த்தினாலும், எதிர்க்கிறார்கள் என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் என்பதால்தான் இதை வேதனையோடு இங்கே குறிப்பிடுகிறேன்.

இதைத்தான் நான் பேரவையில் பேசும்போதும் சொன்னேன். எனவே, இப்படிக் கட்டணத்தை உயர்த்தாமலேயே போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படுகிற நட்டத்தை மட்டும் ஈடு கட்ட முடியுமா என்பதை மிகத் தீவிரமாக ஆய்ந்து கொண்டிருக்கிறோம். எந்தெந்த வழித்தடங்கள் இலாபகரமாக இல்லை என்று பார்த்து, ஆய்வு நடத்தி, அவற்றை இலாபகரமாகக் கொண்டு வரவும், சில பல மாற்றங்களைச் செய்வதன் மூலம் இலாபகரமாகக் கொண்டுவர இயலுமா என்பதைப் பார்க்கவும் ஆய்வுகள் இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இப்போது புதிய வழித்தடங்கள் பலவற்றைக் கேட்கிறார்கள். அங்கெல்லாம் ஏற்கெனவே ஓடிக் கொண்டிருக்கிற பேருந்துகளையே கூடுதலாக இயக்கலாமா அல்லது அதில் ஏதேனும் மாற்றம் செய்யலாமா என்றெல்லாம் ஆய்வுகள் நடைபெறுகின்றன. நேற்றையதினம்கூட ஒரு போக்குவரத்துக் கழகத்தின் இயக்குநரை அழைத்துப் பேசினோம். ஒவ்வொரு கழகத்தைப் பற்றியும் ஆய்வு நடத்த இருக்கிறோம். ஒட்டுமொத்தமாகப் பேசுகிறபோது,

பல பிரச்சினைகளைப்பற்றிப் பேச முடியவில்லை. அந்த வகையில் இனி ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்தின் இயக்குநரையும் அழைத்துப் பேச இருக்கிறோம்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, இந்த வரி விதிப்பைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர் குறிப்பிட்டபடி மக்களைத் துன்புறுத்தும் உணர்வு எங்களுக்கு நிச்சயமாக இல்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த வரி உயர்வைப் பார்த்தாலேகூட இது புரியும். ஒரு நாளைக்கு 5½ காசு என்ற அளவுக்குத்தான் இந்த வரி உயர்வு இருக்கிறது. இதைக்கூட தான் மிகச் சாதாரணமானது என்று சொல்ல வரவில்லை. காரணம் 5½ காசுகூட கிடைக்காமல் சங்கடப்படுகிற நலிந்த பிரிவினர் இங்கே இல்லாமல் இல்லை. ஆனால் ஸ்கூட்டர் வைத்திருப்பவர்கள் அப்படிப்பட்டவர்களா என்பதைப் பார்க்க வேண்டும். இது அவர்களுக்கு ஒரு கூடுதலான சிரமம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனாலும் அவர்களெல்லாம் வருத்தப்படுகிற அளவுக்கு அவர்கள்மீது பாரத்தைச் சுமத்த வில்லை என்பதுதான் எங்களுக்கு இருக்கிற நிம்மதி என்பதை மட்டும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மத்திய அரசு டீசல் விலையை உயர்த்திக்கொண்டே போகிற காரணத்தால், நம்மைப் பார்த்தும் பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்றுதான் சொல்கிறார்கள். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், நாம் உலக வங்கியிடமிருந்து கடன் வாங்கியிருக்கிறோம். அதாவது பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்காகப் பேருந்துகளை வாங்குவதற்காக நாம் அவர்களிடம் கடன் வாங்கியிருப்பதால், "நீங்கள் வாங்குகிற கடனைத் திருப்பிக் கட்டுகிற அளவுக்கு பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டும்" என்று நம்மிடம் சொல்கிறார்கள். ஆனால் மக்கள் நம்மை நம்பி இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக, எப்படிப்பட்ட சங்கடங்கள் உருவானாலும் சரி, கடைசி வரையில் உயர்த்தாமல் போராடுவது என்ற உணர்வோடுதான் நாங்கள் இருக்கிறோம், வேறு எந்த உணர்விலும் இல்லை என்பதை நான் இங்கே வெளிப்படையாகவே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த வரியேகூட முன்பு 1974 ஆம் ஆண்டுதான் உயர்த்தப்பட்டது. அதற்குப் பிறகு முதன் முறையாக இப்போதுதான் நாம் உயர்த்தியிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், இந்த வரி உயர்வைச் செய்வதன் மூலமாக நாங்கள் ஏதோ மகிழ்ச்சியாக இருப்பதாக யாரும் நினைத்துவிட வேண்டாம். இதைச் சொல்வதற்கு நாங்கள் எவ்வளவு வருத்தப்படுகிறோம் என்பது எங்களின் உள்ளத்திற்குத்தான் தெரியும். ஆனால் நாட்டில் இருக்கிற பல்வேறு பிரச்சினைகளையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இருக்கிற

வருவாயை வைத்துக்கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத நிர்ப்பந்தம் ஏற்படுகிறபோதுதான், இப்படிப்பட்ட வழிகளையும் தேட வேண்டிய அவல நிலைக்கு ஆளாக்கப்படுகிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் டிரைவிங் லைசென்ஸ் பற்றிக் குறிப்பிட்டார்கள். மத்திய அரசு போட்டோ ஒட்ட வேண்டும் என்று சொல்லி புதிய முறையைக் கொண்டு வந்திருக்கிறது. 1—1—1983 அன்றோடு அதற்குக் காலக் கெடு முடிந்துவிட்டது என்றாலும், பலர் இதைச் செய்யாமல் இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக, மத்திய அரசுக்கு ஒரு டெலக்ஸ் கொடுத்துவிட்டு, இங்கே இருக்கிற அதிகாரிகளிடம் சொல்லி, அந்தத் தேதிக்குப் பிறகும் வருகிற லைசென்ஸ்களைப் புதுப்பித்து அனுமதிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். எனவே இந்த அடிப்படையில் தேவையான கால அவகாசம் கொடுக்கப்படும் என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, ஆட்டோ, டாக்சிகள்பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். சில நேரங்களில் வழியில் நின்று விடுகிறார்கள் என்றும் சொன்னார்கள். இந்தச் சங்கடங்களையெல்லாம் உணர்ந்துதான் சென்னைக்கு மட்டும் 12 வாகன ஆய்வாளர்களை நியமித்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். இதையும் மீறி காவல் துறையினரிடம் சொல்லி, சட்டப்படி கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவு போட்டதன் காரணமாக, அவர்களும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சங்கடங்களிலிருந்து ஒரு மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான். வருகிற 26 ஆம் தேதி தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், காவல் துறை அதிகாரிகளையும் உள் துறை செயலாளர் அவர்களையும், போக்குவரத்துத் துறை அதிகாரிகளையும் கூட்டி வைத்து, ஒரு கூட்டம் நடத்த இருக்கிறார்கள். அதில் சில முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு அதன் மூலம் இதைக் கட்டுப்படுத்துவது என்று முடிவு செய்திருக்கிறோம். எப்படி மாற்றத்தைச் செய்வது, மக்களை பாதிக்காத வகையில் பிரச்சினைகள் இல்லாத வகையில் எப்படிச் செய்வது என்பதையெல்லாம் முதல்வர் அவர்கள் நடத்தும் கூட்டத்தில் பரிசீலிக்க இருக்கிறோம். காரணம் இந்தப் பிரச்சினை சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் பல்வேறு நேரங்களில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே இங்கே குறிப்பிட்டதைப்போல் இப்படிப்பட்ட சங்கடங்களைத் தீர்க்க கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு அவர்கள் நடவடிக்கை எடுத்தால் அப்படிப்பட்ட நேரங்களில் தொழிற் சங்கங்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டும்

என்று கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக ஒத்துழைப்பு கிடைக்கும் என்றுதான் நம்புகிறேன். காரணம் நீங்கள்தான் குறைகளை இங்கே வந்து எடுத்துச் சொல்கிறீர்கள். அதை நீக்குவதற்காக நடவடிக்கை எடுக்கும்போது அதே கட்சியைச் சார்ந்த தொழிற் சங்கத்தைச் சார்ந்துள்ளவர்கள் ஒரு ஆயிரம் பேர் ஊர்வலமாக வந்து மனு கொடுக்கிறார்கள். எனவே தயவுசெய்து தொழிற் சங்கங்களுக்குச் சொல்லி, "உங்களுடைய நடவடிக்கைகள் இப்படித்தான் இருக்க வேண்டும்" என்று அறிவுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு கட்சியிலும் கட்டுப்பாடு இருக்கிறது. கட்சிக் கட்டுப்பாட்டை மீறி, யாரும் எங்கேயும் தொழிற் சங்கத்தை நடத்த முடியாது. எனவே தொழிற் சங்கத்தைப் பார்த்து, "இது முறையல்ல, இதற்காகப் போராடுவது சரியல்ல" என்று சொன்னால், அரசாங்கம் முறையான வகையில் இவற்றையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைச் செய்யாத காரணத்தால்தான், கடுமையான சட்ட திட்டங்களைப் பயன்படுத்தி, மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு நாங்கள் ஆளாகிறோம். அப்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும், அரசாங்கத்தின்மீது தப்பு சொல்கிறார்கள்.

அடுத்து, கூட்ஸ் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்பற்றி எடுத்துச் சொன்னார்கள். இப்போதுதான் அது லாபகரமாக ஓடத் தொடங்கியிருக்கிறது. அதிலிருந்து சில லாரிகளை நிறுத்திவிட்டு, வேறு பொருள்களை ஏற்றிச் செல்வதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். இந்த வருஷம் லாபம் வரும் என்றுதான் நான் நம்புகிறேன். அதில் இருக்கிற தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், எந்த வகையிலும் வேலை இழப்பு ஏற்படாது என்று உத்தரவாதம் கொடுக்க விரும்புகிறேன். எப்படியும் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் கொடுத்திருக்கிற வேலையை எடுத்துக்கொள்வோம் என்று யாரும் தப்புக் கணக்குப் போட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படியே அந்தக் கார்ப்பரேஷனில் வேலை கொடுக்க முடியவில்லை என்றாலும், வேறு வேலை கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போனஸ்பற்றிக் குறிப்பிட்டார்கள். அது சட்டப்படி கொடுக்கப்படும். இருபது சதவீதமா அல்லது பத்து சதவீதமா என்று சொல்லத் தயாராக இல்லை. இங்கே சொல்வதின்

மூலம் சட்டப்படி அதிகமாகக் கொடுக்கும் நிலை இருந்தும், குறைந்து விடக் கூடாது என்றுதான் விரும்புகிறேன். கடந்த முறை கொடுத்தது குறித்து தற்போது கோர்ட்டில் இருக்கிறது. ஆனால் எதிர்காலத்தைப்பற்றித்தான் கேட்கிறார்கள். ஆனாலும் அதைப்பற்றித் திட்டவட்டமாக எதையும் சொல்ல முடியாது. போக்குவரத்துக் கழகங்களின் நிலைமையைப் பார்த்துத்தான் சொல்ல முடியும்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். டீசல் விலை உயர்ந்து கொண்டே போகிறது. அது நம் கையில் இல்லை. அதைப்போலவே டயர் விலை உயர்ந்துகொண்டே போகிறது, அதுவும் நம் கையில் இல்லை. ஸ்பேர் பார்ட்ஸ் விலையும் உயர்ந்து கொண்டே போகிறது. இந்த நிலைமையில் கட்டணத்தையும் உயர்த்தக்கூடாது, போனஸ் மட்டும் அதிகமாகக் கொடுக்கப்

(முற்பகல் 11-20)

பட வேண்டும் என்று கேட்கிறார்கள். மூன்றாண்டுக்கு ஒரு முறை ஒப்பந்தம் வருகிறபோது, சம்பளம் அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டும். இதைச் செய்வதற்குரிய வழி வகைகளைச் சொன்னால், அது எங்களுக்கு உதவியாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கட்டணத்தை உயர்த்துங்கள், அதன் மூலம் லாபம் வரும், அதைக்கொண்டு சம்பளத்தை உயர்த்துங்கள், போனசை உயர்த்துங்கள் என்று சொல்லலாம்.

திரு ஆ. நல்லசிவன்: மாற்றுத் தலைவர் அவர்களே, அரசு முதலீடு செய்கிறது, நாங்கள் உழைத்துச் சம்பாதிக்கிறோம். அந்தப் பணத்திலிருந்து சீட்டுக்கு 35 ரூபாய் தர வேண்டும் என்றால், இந்தக் கையால் கொடுத்து அந்தக் கையால் எடுக்கிறார்கள் என்பது போல இருக்கிறது அங்குள்ள அரசு நிறுவனம் அந்தப் பணத்தில் வரி என்று எடுக்கும்போது லாபம் இல்லாமல் போகிறது. அதற்கு என்ன பதில் என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தமிழகத்திலுள்ள அத்தனை பேருந்து களும் அரசாங்கத்திற்குச் சொந்தம் என்று இருக்கும்போது, அப்படிச் சொல்லுவது பொருத்தமாக இருக்கும். ஐயாயிரம் பேருந்துகள் தனியாரிடம் இருக்கின்றன. இதற்காக அவர்கள் கொடுக்கிற வரியை விட்டுவிடலாமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இப்படிப்பட்ட சங்கடமான சூழ்நிலையில் அவர்களிடத்திலே வரியை விட்டுவிடுவது பொருத்தமாக இருக்காது. எனவேதான் போக்குவரத்துக் கழகம் இந்த நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்படுகிறதே தவிர, வேறு எந்த உள்நோக்கமும் இல்லை. முழுக்க

முழுக்க பேருந்துகள் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருந்தால், இந்த வாதத்தை ஏற்றுக்கொண்டு வரியே தேவையில்லை என்று ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பேன். அந்த நிலைமை இப்போது தமிழகத்திலே இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

போனஸ் சம்பந்தமாக, தொழிலாளர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அவர்கள் நிம்மதியாக இருக்கும் அளவிற்கு நடவடிக்கை எடுக்கப் படும் என்பதை மட்டும் குறிப்பிடுகிறேன். கட்டணத்தை உயர்த்தினாலும், உயர்த்தாவிட்டாலும், லாபம் ஏற்பட்டாலும். நஷ்டம் ஏற்பட்டாலும், தொழிலாளிகளை எந்தவிதத்திலும் கைவிட்டுவிடத் தயாராக இல்லை. தொழிலாளர்களுடைய உணர்வுகளுக்கு நல்ல முறையில் மதிப்பு தரவும், அவர் களுடைய தேவையைப் பூர்த்தி செய்யவும் நாங்கள் தயாராக இருக்கிறோம். அதன் காரணமாகத்தான் கடந்த மூன்று ஆண்டுக் காலமாக போக்குவரத்துத் துறையில் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நடந்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள், வேறு மாநிலத்தில் வண்டிகளை வாங்கிக் கொண்டு வந்து இங்கே ரிஜிஸ்டர் செய்கிறார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். அதிலே நாம் தலையிட முடியாத நிலைமையில் இருக்கிறோம். அங்கே செல்பவர்களைத் தடுக்க வேண்டும் என்றால், இங்கே வரியைக் குறைக்க வேண்டுமே தவிர, வேறு வழியில்லை. இதைப்பற்றி யோசனை செய்து பார்த்துவிட்டு, பின்பு வருவாய்த் துறைக்குப் பரிந்துரை செய்திருக்கிறோம். அவர்கள் ஆய்ந்து கொண்டிருக்கிறார்கள். புதிய வண்டி களுக்கு ஒரு வரியும் பழைய வண்டிகளுக்கு ஒரு வரியும், பழைய வண்டி களுக்கு அதிகமான வரியும் போடலாம் என்று சொன்னார்கள். இது நடைமுறையில் சிக்கலை ஏற்படுத்தும் சூழ்நிலை இருக்கிறது. சட்டப்படி அப்படிச் செய்வதற்கான வாய்ப்பு இருக்குமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இருந்தாலும்கூட யோசனை வைத்திருந்தோம். இத்தனை ஆண்டு களுக்கு மேல் ஒரு வண்டியை உபயோகப்படுத்தக் கூடாது என்று சொல்லலாமா என்று ஆராய்ந்து பார்த்தோம். அதனால் ஏற்படும் லாபத்தை விட சங்கடம் அதிகமாக இருப்பதால், அதையும் விட்டுவிட்டோம். இப்போது பழைய வண்டிகளை வைத்துக்கொண்டு மணல் மற்றும் கற்களைக் கொண்டு வருகிறார்கள். இப்போதே கட்டிடம் கட்ட சதுர அடிக்கு 150 ரூபாய்க்குப் பக்கமாக ஆகிறது என்று சொல்லுகிறார்கள். இத்தனை ஆண்டுகளுக்கு மேலே ஒரு வண்டி இருக்கக் கூடாது என்று வைத்தால், அது 250, 300 ரூபாய் என்று

உயருமோ என்ற அச்சம் இருக்கிறது. ஆகவே இதை எண்ணிப் பார்த்து அதிலே வேகமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். இருந்தாலும்கூட இந்த உணர்வுகளைப் புரிந்துகொண்டு வேறு வழியில் நடவடிக்கை எடுக்க இயலுமா என்பதைப்பற்றி அரசு ஆராயத் தயாராக இருக்கிறது என்பதைச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் இதை மன நிறைவோடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, இதை விட்டுவிட வேண்டும் என்று கேட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கூட இதை ஏற்றுக்கொள்ளுவார் என்று கருதி என்னுடைய கருத்துக்களை முடித்துக்கொள்ளுகிறேன். நன்றி.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1983) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதும் இல்லை.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1983) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1983) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1983).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1983) @ பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1983) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பல பொருள்களுக்கு நோட்டிபிகேஷன் மூலம் விதிக்கப்பட்டுள்ள வரியை சட்டபூர்வமாக ஆக்குவதற்கும், மற்றும் சில பொருள்களின்மீது புதிய வரியை விதிப்பதற்கும் இந்தப் பொது விற்பனை வரி திருத்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பாக கழிவுப் பஞ்சு மீது நான்கு சதவீத புதிய வரியைப் போடுகிறார்கள் என்று நினைக்கிறேன். மாவு அரைக்கும் இயந்திரத்திற்கு 12 சதவீத வரியைப் போட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் பல இடங்களில் மாவு அரைக்கும் இயந்திரத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய மாவு அரைக்கும் இயந்திரங்களின்மீது 12 சதவீத வரியைப் போட முயற்சி செய்கிறார்கள். சாதாரண மக்கள் வாங்கும் கண்ணாடி, அரிக்கேன் விளக்கு இவைகளுக்கு ஏற்கெனவே போடப்பட்ட வரியை இதன்மூலம் ஊர்ஜிதப்படுத்துகிறார்கள். ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் சாமான்களுக்கு ஏற்கெனவே போட்டிருக்கிற வரியை இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாக ஊர்ஜிதப்படுத்துகிறார்கள். இப்படி சாதாரண மக்கள் பயன்படுத்தக் கூடிய பொருள்கள்மீது வரியைப் போடுவதால், சாதாரண போது மக்கள் பாதிக்கப்படுவதால் அரசு இந்த வரிகளை வற்புறுத்தக்கூடாது, கைவிட வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவை நான் ஆதரிக்கவில்லை என்று கூறி அமர்கிறேன்.

@ 239-240 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 ஏப்ரல் 23

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கிற பொது விற்பனை வரி திருத்தச் சட்ட முன்வடிவின்மீது சில கருத்துக்களை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக விற்பனை வரியை ஆண்டுக்காண்டு புதிய பொருள்களின்மீது விதிப்பது என்பதும், சில பொருள்களின்மீது ஏற்கெனவே விதிக்கப்பட்ட வரியை உயர்த்துவது என்பதும் வாடிக்கையாக ஆகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, கழிவுப் பஞ்சு, கண்ணாடி சாமான்கள், மாவு அரைக்கும் இயந்திரங்கள் போன்றவற்றிற்கு புதிய வரியாகவும், சில பொருள்களுக்கு வரி உயர்வாகவும் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டிருப்பது உள்ளபடியே ஏழையெளியவர்களை பாதிக்கும் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது தமிழ் நாட்டிலுள்ள கழிவுப் பஞ்சை வைத்து ஆங்காங்கே சிறு தொழில்கள் பெருகி வரும் நேரத்தில் இப்படிப்பட்ட வரி விதிப்பு தொழில்கள் வளருவதை பாதித்துவிடுமோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. எனவே அதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாவு அரைக்கும் இயந்திரம்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். சென்னை நகரத்திலே முன்பெல்லாம் சாதாரண ஏழையெளிய மக்கள், கூலி வேலை செய்கிறவர்கள் வீட்டிலேயே மாவை அரைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் இப்போது 1,500 ரூபாய் மூலதனம் போட்டு தெருவுக்குத் தெரு மாவு அரைக்கும் இயந்திரத்தை வைத்துத் தொழிலை நடத்தும் சாதாரண ஏழையெளிய மக்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள். கொஞ்சம் வரிதான் போடுகிறோம் என்றாலும், அவர்கள் கிட்டருக்கு பத்துப் பன்னிரெண்டு பைசா கூடுதலாக வாங்குவார்கள் என்பதால், மக்கள் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுவார்கள் என்பதைப் பார்க்கிறபோது இதைத் தவிர்த்திருக்கலாம் என்று தோன்றுகிறது. இப்போது இல்லாவிட்டாலும், ஆண்டுக்காண்டு வரிச் சலுகையை அளிப்பதைப் போல, வருங்காலத்திலாவது இந்த வரிகளை ரத்து செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, இப்போது கொண்டுவந்திருக்கிற சட்ட முன்வடிவை வரவேற்று, அமர்கிறேன்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த வரியைப்பற்றிப் பேசுகின்றபோது இது புதிய வரி என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னார்கள். சில வரிகள்

1983 ஏப்ரல் 23] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

புதிய வரிகள், சில புதிய வரிகள் இல்லை என்றும் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்கின்றபோது, அது புதிய வரியாக இருந்தாலும் சரி பழைய வரியாக இருந்தாலும் சரி, அதனால் பாதிக்கப் படுவது ஏழைகளாக இருப்பவர்கள்தான் என்றார்கள். ஆகவே எதிர்காலத்திலே அதை எடுத்துவிடுங்கள் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் ஆளுங் கட்சியிலே பழகியவர் என்பதாலே, உடனே அமைச்சர் இந்த வரியை நீக்குகிறேன் என்று சொல்ல முடியாது என்று தெரிந்ததனால், எதை எப்படிச் செய்ய வேண்டும் என்ற முறையிலே சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லியிருக்கின்றபோது, "அமைச்சர் அவர்கள் இப்போது கொண்டு வந்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன்" என்று சொல்லி, "எதிர்காலத் திலேயாவது அதை நீக்கிவிடுங்கள்" என்று சொன்னார்கள். நான் பொதுவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வரியின் மூலமாக ஏழையெளியவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றால், அதைப்பற்றி எந்த அளவுக்கு எதிர்காலத்திலே அரசு கவனிக்க வேண்டும் என்று கருதுகிறதோ அந்த அளவுக்கு ஆராய்ந்து உதவி செய்யும். உறுப்பினர் அவர்கள் வேண்டுகோளை நாம் மனம் உவந்து பரிசீலிக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வரியைப் பொறுத்த வரையில், புதிதாக எந்த வரியும் போடவில்லை. இருக்கின்ற வரிகளில் இருக்கின்ற சிக்கல்களை நீக்கத்தான் இதைச் செய்கிறோம். சில நேரங்களில் வரிவிதிப்பில் வருகிறதா இல்லையா என்ற சங்கடங்கள் வருகின்றன. நீதி மன்றங்களில்கூட சில நேரங்களில் அதைப்பற்றித் தவறான கருத்து வருகிறது. அதற்கு ஏற்ப நீதிமன்றங்களிலிருந்து தவறான தீர்ப்பும் வந்துவிடுகின்றது. இதையெல்லாம் முறைப்படுத்துவதற்குத்தான் இது வருகிறதே தவிர, இங்கே புதிய வரி இல்லை.

இங்கே கழிவுப் பஞ்சு பற்றிச் சொன்னார்கள். அதிலே ஒன்று பஞ்சு நூலாக வருகின்றபோது, கழிவுப் பஞ்சு வருகிறது. அதுபோலவே கொட்டை நீக்குகின்றபோது கழிவுப் பஞ்சு வருகிறது. அது எப்படி கழிவுப் பஞ்சாக வந்தாலும், நான்கு பெர்சென்ட்தான் வரி என்று விளக்கமாகச் சொல்லப் படுகிறது. வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோலவே பருத்தி நூலாகவும் இருக்கும். கலப்பு நூலாகவும் இருக்கும். அதுமாதிரி கலப்பு நூலாக இருந்தால் எவ்வளவு என்று இருந்தது. இதிலே கலப்பு நூல் எது என்று கண்டுபிடிப்பது கஷ்டமாக இருந்தது. ஆகவே எந்த நூலாக இருந்தாலும் அவ்வளவுதான் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 ஏப்ரல் 23

மாவு அரைக்கும் இயந்திரம்பற்றிச் சொன்னார்கள். அந்த இயந்திரத்தைப் பொறுத்து, புதிதாக வரி போடவில்லை. மாவு அரைக்கும் இயந்திரத்திற்கு 12 சதவிகிதம் முன்பும் இருந்ததுதான். அதிலே பார்ட்ஸ் பார்ட்ஸ் ஆக வாங்கினாலும் வரி என்று வருகிறது. அப்படி தெளிவாக இல்லாததால் சில இடங்களிலே வரி வாங்குவதற்குச் சங்கடமாக இருக்கிறது. அது மட்டுமல்ல. அதற்கு விளக்கம் கொடுத்திருக்கிறார்களே அல்லாமல் வேறு அல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னதுபோல, மாவு அரைக்கும் இயந்திரம் எல்லா வீடுகளிலும் வந்துவிட்டது. காரணம் என்னவென்றால், வீட்டிலே இரண்டு பேர்கள் இருப்பார்கள். இருவரும் வேலைக்குப் போவார்கள். அவர்களுக்கு மில்லுக்குப் போய் மாவு அரைக்க முடியவில்லை. ஆகவே அவர்கள் மாவு அரைக்க வேண்டும் என்பதற்காக கடனாகவாவது ஒரு ஆயிரம் ரூபாய் அல்லது ஆயிரத்து ஐநூறு ரூபாய் செலவு செய்து, மாவு அரைக்கும் இயந்திரம் வாங்கிக்கொள்கின்றார்கள். எல்லா வீடுகளிலும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் ஏழைகள்தான், சாதாரண நடுத்தர மக்கள்தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வீட்டிலே மாவரைத்துக் கொள்ளலாம் என்று வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். அந்த இயந்திரங்களைப் பயன்படுத்துவது உண்மைதான். அதற்கு இன்றைக்கு 10 சதம், 12 சதம் வரி என்று இருந்தாலும். அதிலே இதற்கு முன்பு போடப்பட்ட விதியில் சிக்கல்கள் இருந்ததால், பகுதி பகுதியாக வாங்கினாலும் சரி ஒன்றாக வாங்கினாலும் சரி அதற்கு 12 சதவிகிதம் என்று இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

அதைப்போலவே கண்ணாடி. கண்ணாடி என்று சொல்லிவிட்டு அதிலே என்னென்ன என்று விளக்கம் கொடுத்திருக்கிறோம். கண்ணாடிப் பாத்திரங்கள் என்னென்ன என்று விளக்கமாகச் சொல்லியிருக்கிறோமே தவிர, வேறல்ல.

அதைப்போலவே எவர்-சில்வர் என்பதில் சாதாரண பாத்திரங்கள் மாத்திரம் என்று இருந்தது. இன்றைக்கு எவர்-சில்வர் என்றால் ஏகப்பட்ட பொருள்கள் வந்திருக்கின்றன. ஹீட்டர் வந்திருக்கிறது. எக்ஸ்ரே அப்பாரட்டஸ் வந்திருக்கிறது. எலெக்ட்ரிகல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் வந்திருக்கின்றன. எவர்-சில்வர் என்று வருகிறபோது எது எல்லாம் எவர்-சில்வரிலே வருகிறது என்ற சந்தேகம் வருகிறது. அப்படிச் சந்தேகம் வருகின்றபோது அதற்கெல்லாம் தனித்தனியாக ஐடம்ஸ் இருக்கின்றன. எக்ஸ்ரே அப்பாரட்டஸ் என்றால், ஐந்து சதவிகிதம். எவர்-சில்வர்க்கு பத்து சதவிகிதம் என்று போடுகின்றபோது இந்த எக்ஸ்ரே அப்பாரட்டஸ்க்கும் பத்து சதவிகிதம் என்று வாங்கிவிட வேண்டியிருக்கும். ஏற்கெனவே அந்த அட்டவணையில் எக்ஸ்ரே

1983 ஏப்ரல் 23] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அப்பாரட்டஸ்க்கு ஐந்து சதவிகிதம் என்றுதான் இருக்கிறது. அப்படி இருக்கின்றபோது, அந்தச் சலுகையை அனுபவிக்க முடியாமல் போகிறது என்பதால்தான் இப்படி விளக்கமாகச் சொல்கிறோம். ஆகவே இதை ஒரு சலுகையாகவே ஏற்றுக்கொள்ளலாம். 'அதர் மெசினரிஸ்' இருக்கிறது. அதற்கு எட்டு சதவிகிதம். எவர்-சில்வர் 12 சதவிகிதம். 'அதர் மெசினரி' என்று சொல்லும்போது எட்டு சதவிகிதம். இப்படி சிலவகைகளிலே சலுகைகள் வருகின்றன. சில இடங்களிலே கொஞ்சம் மாறியிருக்கிறது. இதையெல்லாம் விளக்கியிருக்கின்றதே தவிர, புதிதாக ஒன்றும் சேர்க்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே விளையாட்டுச் சாமான்கள் வருகிறபோது, விளையாட்டுச் சாமான்கள் என்று 'இன்டோர் கேம்ஸ்' சாமான்கள் வருகின்றன, வெளியிலே விளையாடும் சாமான்கள் என்று வருகின்றன. அதில் பொம்மையும் சேர்ந்துவந்துவிடுகிறது என்றதால், அதற்கு விலக்குக்கொடுத்து சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படியெல்லாம் பார்க்கின்றபோது, இதையெல்லாம் சலுகையாகக் கொள்ளவேண்டுமே தவிர, வேறு ஒன்றுமில்லை. எக்ஸ்ரே அப்பாரட்டஸ் என்னும்போது அது எவர்-சில்வரிலே செய்யப்பட்டு விற்பனைக்கு வரும்போது அதற்கு 10 சதவிகிதம் என்று வரி வந்துவிடுகிறது. ஆனால் இப்போது எக்ஸ்ரே அப்பாரட்டஸ்க்கு ஐந்து சதவிகிதம் என்று மாற்றப்பட்ட பிறகும் அந்த வகையில் 10 சதவிகிதம் என்றே வந்துவிடுகிறது. மற்ற மெசினரிகளுக்கு எட்டு சதவிகிதம் என்று வருகிறது. ஆக புதிதாக வரி எதுவும் போடவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். பல்வேறு வரிகளையும் விளக்கமாகச் சொல்லியிருக்கிறோம். எங்கேயும் சந்தேகம் வராமல், நீதிமன்றங்களிலேயும் சந்தேகம் வராமல் இருக்கின்ற அளவிற்கு இதில் செய்யப்பட்டிருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1983) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

[1983 ஏப்ரல் 23

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1983) திருப்பி அனுப்பப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1983) திருப்பி அனுப்பப்படவேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1983).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1983) @ பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1983) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

@ 240—243 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1983 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1983) திருப்பி அனுப்பப்படவேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1983) திருப்பி அனுப்பப்படவேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1983).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, விளம்பர வரிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1983) @ பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, விளம்பர வரிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1983) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்";

@ 243-246 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1983 ஏப்ரல் 23

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு முனிசிபாலிட்டிகளிலும் கார்ப்பரேஷன்களிலும் தியேட்டர்களிலே விளம்பரத்திற்கு உபயோகப்படுத்துகின்ற ஸ்லைடுகளுக்கும், தொழில் ஸ்லைடுகளுக்கும் புதிதாக வரி விதிப்பதற்கு வழி செய்கிறது. ஸ்லைடுகளுக்கு 60 பைசா என்ற அளவிலும் பிலிம் ஷோக்களுக்கு, ரூ. 1½ விதமும் வரி விதிக்கப்படுகிறது. இந்த வரியை நான் ஆட்சேபிக்கிறேன். ஸ்லைட்ஸ் பொறுத்தமட்டில், சாதாரண வியாபாரிகள்தான் விளம்பரத்திற்காக அவைகளை அதிகமாக உபயோகப்படுத்துகின்றார்கள். பிலிம்ஸ் எடுத்து தியேட்டரில் போடுகின்றார்கள், ஒரு பிலிம் எடுத்து போடுகின்ற வசதி உள்ளவர்கள் இருக்கின்றார்கள் என்றாலும்கூட, இந்த ஸ்லைட்ஸ்க்கு வரி போடுவது சரியானதாக இருக்காது. அது அவர்கள் வியாபாரத்தைப் பாதிக்கும் என்று சொல்கிறேன். அதை நான் ஆட்சேபிக்கிறேன்.

இதிலே ஸ்லைட்ஸ், பிளாக்குகள் செய்கின்ற தொழிலாளர்களுக்கும், அந்த ஸ்லைட்கள் செய்வதற்கு வியாபாரிகள் கொடுக்கும் ஆர்டர்கள் எண்ணிக்கை குறைவதனால், பிழைப்பு, வருமானம் எல்லாம் குறைகிறது. அதனால் அவர்கள் வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வரிவிதிக்கும்போது. அதன் ஆர்டர்கள் எண்ணிக்கை குறைகிறது. அந்த ஆபத்தும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் சிறு சினிமாத் தியேட்டர்களின் வருமானம் பாதிக்கும்

(முற்பகல் 11-40)

நிலைமை ஏற்படும். சினிமா தியேட்டர்கள், சிறு வியாபாரிகள், ஸ்லைட், பிளாக்குகள் செய்து பிழைக்கக்கூடிய தொழிலாளர்கள் பாதிக்கப்படும் நிலைமை இருப்பதால், குறைந்தபட்சம் ஸ்லைடுக்குப் போட்டுள்ள வரியை வாபஸ் பெற வேண்டுமென்று வற்புறுத்தி, அமைச்சரவர்கள் அந்த வரியை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்ட முன்வடிவின்மீது சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னதற்கு மாறாக நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விளம்பர வரி அவசியம் போட வேண்டுமென்பதற்கு முக்கிய காரணம் இருக்கிறது. ஏதாவது ஒரு நாள் சினிமாவுக்குப் போக வேண்டுமென்று நினைத்துப் போனால்,

1983 ஏப்ரல் 23] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அங்கே அரை மணி நேரத்திற்கு ஸ்லைடுகளைப் பார்ப்பதால், தலைவலி வருகிறது. குறைந்தபட்சம் இந்த வரிவிதிப்பால் ஸ்லைடுகள் குறைய வேண்டும். ஸ்லைடுகளின் மூலம் செய்யப்படும் விளம்பரங்களைப் பார்த்து ஏழை மக்கள் அந்தப் பொருள்களை வாங்கும்போது, அந்தப் பொருள்கள் தரமுள்ள பொருள்களாக இருக்கிறதா என்றால் இல்லை. பவுடர், அந்தக் கிரீம், இந்தக் கிரீம் என்று விளம்பரங்கள் இருக்கின்றன. தலைவலி போக நான்கு விளம்பரங்கள் போடுகிறார்கள். இப்படி விளம்பரங்களைப் போடுவதாலேயே தலைவலி வருகிறது. அந்தத் தலைவலிக்கு ஒரு விளம்பரம் போடுகிறார்கள். எனவே ஸ்லைடுக்கு 60 பைசா என்று போட்டிருப்பதை ஒரு ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாம் ஏது எதற்கோ வரி போடுகிறோம். மக்கள் பொழுது போக்கலாமென்று நினைத்து சினிமாவிற்குப் போகும்போது, தலைவலியை உண்டாக்கும் ஸ்லைடுகளுக்கு ஒரு ரூபாய் என்று வரியை உயர்த்தினால்கூட நல்லதுதான். திரைப்படச் சுருள்களுக்கு 1½ ரூபாய் வரி போட்டிருக்கிறார்கள். ஆயிரக் கணக்கில் செலவு செய்து, படம் எடுக்கிறார்கள், விளம்பரத்திற்காக. மக்களிடம் அதை விளம்பரம் செய்து, விற்பனை செய்ய வேண்டுமென்று, அப்படிச் செய்கிறார்கள். அதற்கு மூன்று ரூபாய் போடலாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. சினிமாவிலே மட்டுமல்ல, டி.வி.-யிலேகூட விளம்பரங்கள் வரும் நிலை இருக்கிறது. அங்கேயும் வரி போட முடியுமா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டி.வி.-யில் விளம்பரம் செய்வதால், டி.வி.-க்கு வருமானம் வருகிறது. அதனால் நமது அரசாங்கத்திற்கு வருமானம் இல்லை. இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் நான் கேட்டுக்கொள்கிறேன். எல்லாத் திரை அரங்குகளிலும், அனைத்து வணிக விளம்பரங்களுக்கும் வரி என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலிருந்து 'பேப்பர்களுக்கு' எக்ஸம்ஷன் கொடுக்க வேண்டும். தினத்தந்தி, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, முரசொலி, எதிரொலி, அண்ணா படியுங்கள் என்றால், இது பத்திரிகை. ஜனநாயகத்தில் தவிர்க்க முடியாதது. மக்களுடைய பொது அறிவை வளர்க்கக்கூடியவை. எனவே பத்திரிகைகளுக்கு எக்ஸம்ப்ஷன் கொடுத்து, வணிகப் பொருள் எதுவாக இருந்தாலும் வரி போடலாம். தியேட்டர்காரர்களுக்கு ஒரு காம்ப்ளிமென்டரி காப்பி அனுப்புவோம். அதை விளம்பரமாகப் போடுவார்கள். அதற்குக் காசுகூட கொடுப்பது கிடையாது. வருவாய்த் துறை அமைச்சரவர்களுக்கு இது தெரியும். எனவே பத்திரிகைகளுக்கு எக்ஸம்ப்ஷன் கொடுத்து, மற்றவைகளுக்கு இந்த வரியை அதிகமாக

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1983 ஏப்ரல் 23

உயர்த்தி, நாட்டு மக்கள் சினிமாவிற்குப் போனால் தலைவலி வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, வரி விதிப்பை முழு மனதோடு ஆதரித்து, அமைகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாற்றுத் தலைவர் அவர்களே, வரி விதிப்பை வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு அரசு மக்களுக்குப் பல நன்மைகள் செய்யும்போது, அதற்கு நிதி ஆதாரங்களை எப்படித் தேடுவது என்பது ஒரு பிரச்சினையாகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி போன்று எதிர்க் கட்சி வரிசையில் உள்ளவர்கள்கூட வரவேற்கும் வகையிலே யாரையும் பாதிக்காத ஒன்று என்றும், போடப் பட்டிருக்கும் வரி மிகவும் குறைவு என்றும் கருதும் அளவுக்கு இருக்கிறதென்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படி மக்களுக்குத் துன்பம் தராத வகையில், அதே நேரத்தில் அரசின் வருவாயைப் பெருக்கக்கூடிய அளவிலே உள்ள வரி விதிப்பு முறைகள் வரவேற்கத்தக்கதாகும்.

வணிகத் துறையிலே விளம்பரத்திற்கு என்று ஒரு தொகையை ஒதுக்குகிறார்கள். ஸ்லைடைக் குறைந்த செலவில் தயாரித்து, சினிமாக் கொட்டகைகளில் அவற்றைப் போட்டு, விளம்பரம் செய்வதால், பல ஆயிரக் கணக்கான மக்கள் அதைத் திரும்பத் திரும்பப் பார்த்து, அதன்மூலம் விற்பனை பெருகும் என்று எண்ணி, தொழில் நிறுவனங்கள் அதற்கு அதிகத் தொகை ஒதுக்குவது நல்லது என்றும், அந்த முறையில் இந்த வரி விதிப்பு எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் அரசுக்கு வருவாய் வருவதால், இதை நான் வரவேற்கிறேன்.

அரசு வருவாயைப் பெற வேண்டுமென்று சொல்லும்போது, 'கட்சியைக் கூட கலைக்கத் தயார்' என்று சொல்லுமளவுக்கு, ஒரு அரசை நடத்த சில வரி விதிப்பு முறைகள் தேவைப்படுகின்றன. அந்த முறையில் இராஜாஜி அவர்கள்கூட வரி விதித்தார்கள். விற்பனை வரி முறையை அவர்கள் கொண்டு வந்தார்கள். அது இன்றைய தினம் பெரிய அளவில் பெருகிவிட்டது என்றாலும், அதிலே அடிப்படை என்னவென்றால், மத்திய அரசுதான் இந்த முறைகளைக் கையாள வேண்டுமென்பதல்ல, மாநில அரசுகளுக்கும் அப்படிச் செய்ய உரிமை இருக்கிறதென்று முதல் முழக்கம் இராஜாஜி அவர்களால் எழுப்பப்பட்டதென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாநில அரசுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது என்பதை—மாநில சுயாட்சி, மாநில உரிமை என்பதை—முதன் முதலில் இந்த வரி விதிப்பின்மூலம் அவர் ஏற்படுத்தினார் என்பதைச் சொல்ல முடியும்.

1983 ஏப்ரல் 23] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

எனவே இப்போது விதித்துள்ள வரி விதிப்பு யாரையும் பாதிக்காது என்பதாலும், அரசுக்கு ஓரளவுக்கு நிதியை ஈட்டித் தரும் என்பதாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல தேவைப்பட்டால் இன்னும் அதிகப்படுத்தலாமென்றும் கூறி, இதை ஆதரித்து, அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தச் சட்ட முன்வடிவின்மீது பேசுகிற போது பொதுவாக எல்லோரும் ஆதரித்துப் பேசினாலும், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இதை எதிர்த்துப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் எதிர்த்துப் பேசியதற்குக் காரணம், ஸ்லைடுகளுக்கு வரி போடுவதால், சாதாரண சிறிய வியாபாரிகளுக்குக் கஷ்டமாக இருக்கும் என்பதுதான். அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்வேன். ஸ்லைடுகள் மூலமாக விளம்பரம் செய்யும்போது, எந்த அளவிற்கு அதற்கு வரியைக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்கு வரியைக் குறைத்து. அவர்களுக்கு நன்மை செய்ய இந்த அரசு யோசிக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இரண்டு வரிகளையும் வரவேற்றிருக்கிறார்கள். அதற்காக அவருக்குப் பாராட்டு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவருக்கு இருக்கிற சில சங்கடங்களைச் சொல்லியிருக்கிறார்கள். வரி குறைவாக இருப்பதால், ஸ்லைடுகளை அதிகமாகப் போடுகிறார்கள், வரியை அதிகமாகப் போட்டால் அத்தியாவசியமானவற்றை மட்டும் போடுவார்கள், இதனால் படம் பார்க்கிறவர்களுக்குத் தலைவலி குறையும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை எண்ணிப் பார்க்கும்போது, உடனே அதிக வரி போட வேண்டுமென்று தோன்றும். அதிகமாக வரி போடுவதா, குறைத்துப் போடுவதா அல்லது இருப்பதை அப்படியே வைத்துக் கொள்வதா என்றெல்லாம் பார்க்கும்போது, இந்த அளவுக்கு மேல் வரி போடக் கூடாது என்று முடிவெடுத்து, படச் சுருளுக்கு 1½ ரூபாயும் ஸ்லைடுக்கு 60 காசும் வரி போட அரசு அதிகாரம் பெற்றுள்ளது. எந்த அளவிற்கு நன்மை செய்ய முடியுமோ அந்த அளவிற்கு நன்மை செய்யத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் டி.வி.-யில் விளம்பரம் வருகிறது, அதனால் கிடைக்கும் பணம் மத்திய அரசுக்குத்தானே போகிறது என்று எண்ணுகிறார்கள். அதுவும் நமது அரசுதானே, அங்கே போனால் என்ன, தருவார்கள் என்று எண்ணாததற்குக் காரணம் அவர்கள் நமக்குக் கொடுக்காததை உணர்ந்திருக்கிறார்கள் என்பதுதான். அப்படி அவர்களுக்குப் பணம் போவது உண்மைதான். இன்றைக்கு அரசியல் அமைப்புச் சட்டப்படி அதற்கு வரி போட நமக்கு உரிமை இல்லை. எது எதற்கு உரிமை என்று

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1983 ஏப்ரல் 23

வரையறுத்து, அதற்குள் போடுங்கள் என்று சொல்லும்போது, உரிமை போய் விடுகிறது. நாம் அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று கேட்கலாம். இன்றைக்கு அதற்குக் குரல் கொடுத்தால், இன்றைக்கு இல்லா விட்டாலும் நாளை கேட்கலாம், நாளைக்கு இல்லாவிட்டாலும் நாளை மறுநாள் கேட்கலாம். அவர்கள் காதில் விழும். எறும்பு ஊற கல்லும் தேயும் என்பதுபோல அந்தக் கல் மனதில் படும்.

(முற்பகல் 11-50)

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது வரி போடுகிறபோது செய்தித் தாள் விளம்பரங்களுக்கு வரி போட வேண்டாமென்று சொல்லி யிருக்கிறார்கள். வியாபார நோக்கங்களுக்காக என்று சொன்னால், அப்படி பெரும்பாலும் விளம்பரங்கள் வராது. அவற்றை சப்ளிமென்டரியாகத்தான் போடுவார்கள். ஆனால் பொதுவாக செய்தித்தாள்களை எடுத்துக்கொண்டால், அவை நஷ்டத்தில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எப்படி வேண்டு மானாலும் பத்திரிகைகளை நடத்தலாமென்கின்ற நோக்கில் பத்திரிகைகளை நடத்தினால் ஒருவேளை இலாபம் வரலாம். ஆனால் பெரும்பாலும் கட்சி சார்பாக நடத்தப்படுகிற பத்திரிகைகளைப் பொறுத்தவரையிலும்கூட, அவற்றுக்கு நஷ்டம்தான். வந்துகொண்டிருக்கின்றது. காரணம் கட்சி சார்புடையவர்கள்தான் குறிப்பிட்ட அந்தப் பத்திரிகைகளை வாங்குவார்கள். ஆனால் அதேநேரத்தில் "To educate the people" என்கிற அடிப்படையிலும் சில செய்தித்தாள்கள் வந்துகொண்டிருக்கின்றன. அப்படி வருகின்றபோது, இப்போது இருக்கிற சட்டத்தில் அதற்கு இடமில்லை யென்றாலும்கூட, இப்படிப்பட்ட செய்தித்தாள்களுக்கு விதி விலக்கு தருவது பற்றிக்கூட இந்த அரசு யோசிக்கும் என்பதைச் சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, விளம்பர வரிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1983) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

1983 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, விளம்பர வரிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1983) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, விளம்பர வரிச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1983) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, அவை மீண்டும் 26—4—1983, செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(முற்பகல் 11-51)

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders—Nil.

B. Reports, Notifications and Other Papers.

* 167. The Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1983 (L.A. Bill No. 30 of 1983), as passed by the Assembly.

* 168. The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1983 (L.A. Bill No. 2 of 1983), as passed by the Assembly.

* 169. The Tamil Nadu Entertainments Tax (Second Amendment) Bill, 1983 (L.A. Bill No. 6 of 1983), as passed by the Assembly.

* 170. The Tamil Nadu Advertisements Tax Bill, 1983 (L.A. Bill No. 28 of 1983), as passed by the Assembly.

* 171. Answers to Unstarred Question Nos. 9 to 89.

---

* Circulated to all M.L.Cs. on 22nd April 1983.

இணைப்பு I

]194 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

அரசு அங்கீகரித்துள்ள விநியோக அளவுபடி, மாவட்டத் தலைமையிட நகராட்சி நீங்கலாக ஏனைய நகராட்சி பகுதிகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதமொன்றுக்கு ஆறு லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. தென் ஆற்காடு நுகர்பொருள் வழங்கு மாவட்ட அதிகாரி விழுப்புரம் நகரில் விசாரணை செய்ததாகவும் குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகள் மூலம் இரு விலை திட்டம் அமல் இருந்தபோது மண்ணெண்ணெய் மலிவு விலை விதத்தில் நான்கு லிட்டரும் அதிக விலையில் இரண்டு லிட்டரும் வழங்கப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். மாதமொன்றுக்கு ஆறு லிட்டர் மண்ணெண்ணெய்தான் வழங்கப்பட்டதேயன்றி ஐந்து லிட்டர் மண்ணெண்ணெய் அல்ல. மண்ணெண்ணெய் வழங்கப்படுவதை நுகர்பொருள் வழங்கு மாவட்ட அதிகாரி மிக கவனமாக கண்காணித்து வருகிறார்.

2. மண்ணெண்ணெய் வழங்குவது குறித்து மத்திய அரசு இரட்டை விலை முறை 15—2—1983-லிருந்து செயலுக்கு கொண்டு வந்தது. மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த அளவு மண்ணெண்ணெயில் 70 சதவீதம் அப்போதைய மலிவு விலையிலும், மீதம் 30 சதவீதம் அதிக விலையிலும் விநியோகிக்கப் பட்டது. சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு அவர்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவு மலிவு விலையில் தரப்பட்டது. அதிக விலை விதத்தில் வழங்கப்படும் மண்ணெண்ணெய்யை நலிந்த பிரிவினரல்லாத மற்றவர்களுக்கு விட்டுப் பயனுக்காக மலிவு விலையில் வழங்குவதை குறைத்து வழங்கப்பட்டதை நிறைவு செய்வதற்காக இவர்களுக்கும் மண்ணெண்ணெய்யை அதிக அளவு பயன்படுத்துவோருக்கும், தொழில் பயனீட்டினர்களுக்கும், உணவுப் பொருள் வழங்குநுறை வழங்கப்பட்டுள்ள அனுமதிகளின் அடிப்படையில் அதிக விலையில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.

3. மலிவு விலையிலான மண்ணெண்ணெயின் டிப்போ விலை இந்திய எண்ணெய் கழகத்தினால் அறிவிக்கப்பட்டது. அதுபற்றி மாவட்ட ஆட்சியர்களுக்கு டெலக்ஸ் மூலம் 17—2—1983 ஆம் நாளன்று தெரிவிக்கப்பட்டது. மொத்த விற்பனையாளர் விலை சில்லறை விற்பனையாளர் விலை ஆகியவற்றை மீண்டும் நிர்ணயித்து அறிவிக்குமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். அதிக விலையிலான மண்ணெண்ணெயின் டிப்போ விலையை இந்திய எண்ணெய் கழகம் தெரிவித்தது. அதுபற்றி மாவட்ட ஆட்சியர்களுக்கு டெலக்ஸ் மூலம் 21—2—1983 ஆம் நாளன்று தெரிவிக்கப்பட்டது. இந்த அதிக விலை மண்ணெண்ணெய் குறித்து மொத்த

விற்பனையாளர் விலை, சில்லறை விற்பனையாளர் விலை ஆகியவற்றை மீண்டும் நிர்ணயித்து அறிவிக்குமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். அதற்கேற்ப தென் ஆற்காடு மாவட்ட ஆட்சியர் விலைகளை அறிவித்துள்ளார். 1983 பிப்ரவரி மாதத்திற்குரிய 28—2—1983 ஆம் நாளுக்கு முன்னர் எடுக்கப்படாத மண்ணெண்ணெய்யை 15—3—1983 வரை எடுத்துக்கொள்ளலாம் என்றும், மண்ணெண்ணெய்யை அதிக அளவு பயன்படுத்துவோருக்கும் தொழிற்சாலை பயனீட்டாளர்களுக்கும் அதிக விலையிலான மண்ணெண்ணெய்யை மட்டும்தான் வழங்க வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. பிப்ரவரி 1983 ஆம் மாதத்திற்கு ஒதுக்கப்பட்ட மண்ணெண்ணெய்யில் 4,708 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய்யை குறிக்கப்பட்ட கால அளவிற்குள் எடுக்கப்பட முடியவில்லை. ஆகவே இந்த மண்ணெண்ணெய்யை எடுக்கும் கால அளவை நீடிக்கும்படி மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

4. சென்னை மாநகர், அதை ஒட்டியுள்ள பகுதிகள் ஆகியவற்றில் அதிக விலையிலான மண்ணெண்ணெய்யின் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ. 3.15 என்று நிர்ணயிக்கப்பட்டது. சென்னையை பொறுத்தவரையில் மலிவு விலை மண்ணெண்ணெய்யின் விலையில் மாறுதல் இல்லை. இருவிலைக் கொள்கை அமுலில் இருந்தபோது மண்ணெண்ணெய் விநியோகத்தில் ஏற்பட்ட சிறு குழப்பங்கள், இவ்விருவிலைக் கொள்கை விலக்கப்பட்ட. பின்னர், பொது மக்களிடமிருந்து புகார் வராமல் பொதுவான ரீதியில் தற்போது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

5. மத்திய அரசின் மண்ணெண்ணெய் வழங்க புதிய கொள்கையை செயல் படுத்துவதற்குரிய விரிவான கட்டளைகள் பிறப்பிக்கப்படுவதற்கு முன்னர் இடைக்கால ஏற்பாடாக குடும்ப அட்டைதாரர்களுக்கு கீழ்க்காணும் விதத்தில் மாதம்தோறும் வழங்கப்படும் மண்ணெண்ணெய் குறித்து முறைப்படுத்துவதற்காக கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன.

	14-2-82 ஆம் நாளன்று இருந்தவாறு பல்வேறு அளவுகள்.	இரட்டை விலைக் கொள்கை செயலுக்கு வந்தபின்னர் பின்பற்றப்படும் அளவு	
		மலிவு விலையில்.	அதிக விலையில்.
(1)	(2)	(3) (லிட்டரில்)	(4)
1. சென்னை மாநகர் தலையிட நகராட்சிகள்	10	7	3
2. ஏனைய நகராட்சிகள்	6	4	2
3. நகரியங்கள்	5	3½	1½
4. கிராமப்பகுதிகள்	3	2	1

6. இடைக்கால ஏற்பாடாக கைவண்டிக்காரர்களுக்கு கீழ்க்காணும் அளவில் அதிக விலையிலான மண்ணெண்ணெய் வழங்குமாறு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன :—

சென்னை மாநகர், அதை ஒட்டியுள்ள **பகுதிகள்.**	விடுமுறை நாட்கள் நீங்கலாக நாளொன்றுக்கு 100 லிட்டர்.
மாவட்டங்கள்	விடுமுறை நாட்கள் நீங்கலாக நாளொன்றுக்கு 50 லிட்டர்.

7. மத்திய அரசு இருவிலை கொள்கையை 1983 மார்ச்சு மாதம் மூன்றாம் வாரத்தில் விலக்கிவிட்டு, மண்ணெண்ணெய் பயன்படுத்துவோர் யாவருக்கும் ஒரு விலை கொள்கையின் அடிப்படையில் மண்ணெண்ணெய் விநியோகிக்கும் முறையை அமுலில் கொண்டுவந்துள்ளது. அதன்படி சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மண்ணெண்ணெய் விலை 21—3—1983 முதல் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.89 என நிர்ணயிக்கப்பட்டது. 4—4—1983 முதல் மண்ணெண்ணெய்யின் விலை லிட்டருக்கு ரூ. 1.88 ஆக சென்னையிலும் புறநகர் பகுதிகளிலும் குறைக்கப்பட்டுள்ளது.

8. இரயில் போக்குவரத்து, இதர செலவுகள் மாற்றியமைக்கப்பட்டதால், எல்லா முக்கிய நிலையங்களில் உள்ள உச்ச வரம்பு விலை மற்றும் பம்பாய் தலைமை நிலையத்தின் விலை ஒரு சீராக அமைத்து, இந்திய எண்ணெய் கழகம், தன்னுடைய எல்லா கிடங்குகளில் நிலையங்களின் மண்ணெண்ணெய் விலையை தெரிவித்தது. இந்திய மண்ணெண்ணெய் கழகம் குறித்த விலைக்கு ஏற்ப மொத்த விற்பனையாளரின் மற்றும் சில்லரை விற்பனையாளர்களின் விலையை நிர்ணயித்து வெளியிடும்படி எல்லா மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். இருவிலைக் கொள்கை அமுலில் இருந்தபோது மண்ணெண்ணெய் விநியோகத்தில் ஏற்பட்ட சிறு குழப்பங்கள், இவ்விரு விலைக் கொள்கை விலக்கப்பட்ட பின்னர், பொதுமக்களிடமிருந்து புகார் வராமல் பொதுவான ரீதியில் தற்போது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

இணைப்பு II

[196 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் சென்னையில் உள்ள குடிசைப் பகுதி வாசிகளுக்கு பல அடுக்கு மாடி கட்டிடங்கள் கட்டி குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்து வருகிறது. அக்குடியிருப்புகளில் ஒதுக்கீடு பெறாத குடிசைவாசிகள், குடியிருந்தால் அவர்களை வாரியம் வெளியேற்றி உண்மையான ஒதுக்கீடுதாரர்களுக்கு அக்குடியிருப்பை ஒப்படைத்து

வருகின்றது. ஆனால் சில குடியிருப்புகளில் உண்மையான ஒதுக்கீடுதாரர்களின் விலாசம் தெரியாத நிலையில், அங்கு அப்போது குடியிருந்து வருபவரும், மிகவும் ஏழையாகவும், குடிசைவாசியாகவும் இருந்தால் ரூ. 500 அபராதமாக பெற்றுக்கொண்டு அக்குடியிருப்பை அவருக்கே வாரியத் தலைவர் வரன்முறை செய்து தருகிறார். இதற்கு அரசின் ஆணையோ வரியத்தின் ஆணையோ ஏதும் இல்லை. இதனை வாரியத் தலைவர் மனிதாபிமான நோக்கோடு குடியிருப்போரின் ஏழ்மை நிலை அறிந்து செய்து வரும் தனிச் சலுகையே யாகும். இவ்வாறு செய்ய வேண்டும் என்ற கட்டாயமோ ஆணையோ கிடையாது. எனவே மேற்கண்ட நிலையில் நடைமுறையில் உள்ள எவ்வித ஆணையும் மீறப்படவில்லை. ஆயினும், இக்குறைபாடுகளை நீக்கும்பொருட்டு இக்குடியிருப்புகளை தவணை முறை திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்து அவரவர்க்கே குடியிருப்பை சொந்தமாக்கி விடும் திட்டம் அமைச்சுகூட்டத்தில் வைக்கப்பட்டு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

இணைப்பு III

[203 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 30 OF 1983.

(As passed by the Assembly)

A Bill further to amend the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Act, 1983.

(2) It shall be deemed to have come into force on the 1st April 1983.

2. *Amendment of section 3, Tamil Nadu Act 13 of 1974.*—In section 3 of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974) (hereinafter referred to as the principal Act), in sub-section (1), for the expression, "kept or used", the expression "used or kept for use" shall be substituted.

3. *Amendment of section 4, Tamil Nadu Act 13 of 1974.*—In section 4 of the principal Act,—

(*a*) in sub-section (1), for the expression "shall be paid", the expression "shall, subject to the provisions of sub-section (1-A), be paid" shall be substituted ;

(*b*) after sub-section (1), the following sub-section shall be inserted, namely :—

"(1-A) Notwithstanding anything contained in sub-section (1), the tax levied under this Act, in respect of motor vehicles specified in clause 1, clause 2 and items (*a*), (*b*), (*c*) and (*d*) and sub-item (i) of item (*e*) of clause 7 of the Schedule shall be paid either half-yearly or annually, on a licence to be taken out for that half-year or year as the case may be." ;

(*c*) in sub-section (2), for the expression "kept or used", the expression "used or kept for use" shall be substituted.

4. *Amendment of section 10—B, Tamil Nadu Act 13 of 1974.*—In section 10–B of the principal Act,—

(*a*) in the marginal heading, for the expression "kept or used", the expression "used or kept for use" shall be substituted ;

(*b*) in sub-section (1), for the expression "kept or used" occurring in both the places, the expression "used or kept for use" shall be substituted.

5. *Insertion of new section 20-A in Tamil Nadu Act 13 of 1974.*—After section 20 of the principal Act, the following section shall be inserted, namely :—

"20-A. *Remissions.*—The Government may, in such circumstances and subject to such conditions as may be prescribed, by noification,—

(1) remit, whether prospectively or retrospectively, the whole or any part of the tax or penalty or both, payable under this Act, or the rules made thereunder—

(*a*) by any person or class of persons, or

(*b*) in respect of any motor vehicle or class of motor vehicles or motor vehicles running in any particular area; and

(2) cancel or vary such notification."

6. *Amendment of the Schedule, Tamil Nadu Act 13 of 1974.*—In the Schedule to the principal Act,—

(1) In clause 1, for items (*a*) and (*b*) and the entries relating thereto, the following items and entries shall be substituted, namely :—

"(*a*) Bi-cycle below 3½ horse-power if not used for drawing a trailer or side car	15 00
(*b*) Bi-cycle below 3½ horse power if used for and above 3½ horse power whether used for drawing a trailer or side car or not	20 00

(2) In clause 3 in paragraph I, for items (*d*), (*e*), (*f*) and (*g*) and the entries relating thereto, the following items and entries shall be substituted, namely :—

"(*d*) Vehicles exceeding 9 000 kgs. but not exceeding 12,000 kgs. in weight laden	1,100 00
(*e*) Vehicles exceeding 12,000 kgs, but not exceediug 13,000 kgs. in weight laden	1,100 00
(*f*) Vehicles exceeding 13,000 kgs. but not exceeding 15,000 kgs. in weight laden	1,300 00
(*g*) Vehicles exceeding 15,000 kgs. in weight laden	1,300 00 (plus Rs. 25 for every 250 kgs or part thereof in excess of 15,000 kgst in weigh. laden)."

(3) in clause 4,—

(i) in paragraph 1, for item (*b*) and the entries relating thereto, the following items and entries shall be substitnted, namely:—

"(*b*) more than three persons but not more than four persons including the driver	60 00

(c) More than four persons not more than six persons including the driver,—

(i) in respect of which tourist motor cab permit has been issued	.. ..	120 00
(ii) in other cases	.. .. ..	90 00
(d) More than six persons but not more than seven persons including the driver in respect of which tourist motor cab permit has been issued		150 00

(ii) in paragraph III, for item (b) and the entries relating thereto, the following item and entries shall be substituted namely:—

"(b) Plying exclusively within the limits of the city of Madurai or within the limits of one or more contigious municipalities or on other town service routes —

For every passenger (other than the driver and the conductor) which the vehicle is permitted to carry .. ..

(4) in clause 7, for items (a), (b), (c) (d) and (e) and the entries relating thereto, the follwing items and entries shall be substituted, namely :—

"(a) Weighing not more than 700 kgs. unladen	50 00
(b) Weighing more than 700 kgs. but not more than 1 500 kgs. unladen	60 00
(c) Weighing more than 1,500 kgs, but not more than 2,030 kgs. unladen	75 00
(d) Weighing more than 2 000 kgs. but not more than 3,000 kgs. unladen	80 00
(e) Weighing more than 3,000 kgs. unladen,—	
(i) in respect of which private transport vehicle permit is not required under the Motor Vehicles Act.	100 00
(ii) in respect of which private transport vehicle permit is required under the Motor Vehicles Act. —	
(a) when owned by any educational institution	100 00
(b) in other cases	150 00

I certify that this is a Money Bill.

Fort St. George,
Madras.
22nd April 1983.

K. RAJARAM,
Speaker,
Tamil Nadu Legislative Assembly.

இணைப்பு IV

[219 ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 2 OF 1983

(As passed by the Assembly)

A Bill further to amend the Tamil Nadu General Sales Tax Act, 1959.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu General Sales Tax (Amendment) Act, 1983.

(2) (i) Clauses (a) (c), (d), (e) and (f) of section 2 shall be deemed to have come into force on the 1st January 1983.

(ii) Clause (b) of section 2 shall be deemed to have come into force on the 1st October 1982.

2. *Amendment of the First Schedule to Tamil Nadu Act 1 of 1959.*—In the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959),—

(a) in item 16, for the entry in column (2), the following entry shall be substituted, namely :—

"Cotton waste of all kinds, whether obtained from ginning, spinning or otherwise.";

(b) in item 18-A, for the entry in column (2), the following entry shall be substituted, namely :—

"Blended cotton yarn, namely, yarn containing cotton and man-made fibres whether cellulosic or non-cellulosic, other than those falling under item 18-B.";

(c) after item 41-D and the entries relating thereto, the following item and entries shall be inserted namely :—

"41-E. Wet grain grinders designed for use with electricity or other form of power (whether or not sold as a composite unit, with or without motors) and the parts and accessories of such grinders.	At the point of first sale in the State.	12"

(*d*) in item 102, for the entry in column (2), the following entry shall be substituted, namely :—

"Glass and Glassware, all sorts including,—

(i) Flat glass.

(ii) Mirros.

(iii) Laboratory glassware.

(iv) Glass shells, glass globes and chimneys for lamps and lanterns.

(v) Table ware and other glassware.

Explanation.—Flat glass includes sheet glass, wired glass and rolled glass whether in the form of plate glass, figured glass or in any other form.";

(*e*) in item 109, for the entry in column (2), the following entry shall be substituted, namely :—

"Articles made of stainless steel other than those specified elsewhere in this Schedule."; and

(*f*) in item 116-A, in the entry in column (2), the words "toys" shall be omitted.

I certify that this is a Money Bill.

Fort St. George, Madras, 22nd April 1983.

K. RAJARAM, *Speaker, Tamil Nadu Legislative Assembly.*

இணைப்பு V

224 ஆம் பக்கத்தில் இனம் 5 (3) க்கான அடிக்குறிப்பைக் காண்க].

L.A. BILL No. 6 OF 1983.

(As passed by the Assembly)

A Bill further to amend the Tamil Nadu Entertainments Tax Act, 1939.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Entertainments Tax (Second Amendment) Act, 1983.

(2) It shall be deemed to have come into force on the 25th October, 1982.

2. *Amendment of Schedule II, Tamil Nadu Act X of 1939.*—In Schedule II to the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939),—

(*a*) under the heading "*North Arcot district*", after item 4, the following items shall be added, namely :—

"5. Chengam.
6. Jolarpet.
7. Sholingur.
8. Gandhi Nagar.
9. Tharapadiveedu.
10. Melvisharam.
11. Allapuram.
12. Kaveripakkam.
13. Chetput. ";

(*b*) under the heading "*South Arcot district*", after item 6, the following items shall be added, namely :—

"7. Kurinjipadi.
8. Vadalur.
9. Thiagadurgam.
10. Ulundurpet.
11. Gingee.";

(*c*) under the heading "*Chengalpattu district*", after item 9, the following items shall be added, namely :—

"10. Porur.
11. Nandambakkam.
12. Minjur.
13. Ponneri.
14. Naravarikkuppam.
15. Perungalathur.
16. Pammal.
17. Walajabad.
18. Chitlapakkam.";

(d) under the heading "*Periyar district*", after item 9, the following items shall be added, namely :—

"10. B. P. Agraharam.

11. Kurunandichellipalayam.

12. Perundurai.

13. Vellakoil.

14. Chennimalai.";

(e) after the heading "*Periyar district*" and the entries relating thereto, the following headings and entries shall be inserted, namely :—

"*Pudukkottai district*—

1. Ponnamaravathi.
2. Alangudi.

Ramanathapuram district—

1. Keelakarai.
2. Manamadurai.
3. Thiruppathur.
4. Singampuneri.
5. Thiruthangal.";

(f) under the heading "*Salem district*", after item 1, the following items shall be added, namely :—

"2. Jalagandapuram.

3. Omalur.

4. Pallipalayam.

5. Sankari.

6. Tharamangalam.

7. Thammapatti.

8. Veerakkal Pudur.

9. Alampalayam.";

(g) under the heading "*Thanjavur district*", after item 14, the following items shall be added, namely :—

"15. Nannilam.

16. Tharangampadi.

17. Kuthalam.";

(h) under the heading "*Tiruchirappalli district*", after item 10, the following items shall be added, namely :—

"11. Perambalur.

12. Jeyankondam.

13. Inamkarur.

14. Puliyur.

15. Kattuputhur.".

I certify that this is a Money Bill.

Fort St. George, Madras,
22nd April 1983.

K. RAJARAM,
Speaker, Tamil Nadu Legislative Assembly.

இணைப்பு IV

[225 ஆம் விதிக்கிணங்க இனம் 6 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க].

L.A. BILL No. 28 OF 1983.

(As passed by the Assembly)

A Bill to provide for the levy of a tax on advertisements exhibited by cinematograph at places of entertainment in the State of Tamil Nadu.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Advertisements Tax Act, 1983.

(2) It shall come into force in such areas and on such dates as the Government may, by notification, appoint in this behalf; and different dates may be appointed for different areas in the State.

2. *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(a) "advertisement tax" means the tax payable under section 3 of this Act;

(b) "business" in relation to a proprietor means so much of his business as a proprietor as is concerned with the exhibition of advertisements at his place of entertainment;

(c) "cinematograph" includes any apparatus for the epresentation of moving pictures or series of pictures;

(d) "Entertainments Tax Act" means the Tamil Nadu Interainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939);

(e) "film" means a cinematograph film;

(f) "Government" means the State Government;

(g) "place of entertainment" means a place licensed nder the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil adu Act IX of 1955);

(h) "Proprietor" in relation to a place of entertainment eans a licensee of cinematograph exhibition under the Tamil adu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 55) and includes the Government, any local authority or any rson responsible for the management thereof;

(i) words and expressions used but not defined in this t, shall have the meanings assigned to them in the Entertain-nts Tax Act.

3. *Tax on advertisements.*—(1) On every advertisement ibited for payment at any place of entertainment by means of a ematograph through slides or films, there shall be levied and ected an advertisement tax at such rate not exceeding sixty paise slide per show and not exceeding one rupee and fifty paise per per show as the Government may, by notification, specify in behalf.

(2) The Government may specify different rates of advertise-t tax for different areas while issuing the notification under sub-on (1).

(3) The advertisement tax shall be charged, on and paid by, proprietor.

(4) The tax shall assessed and collected in such manner as be prescribed. For this purpose, the proprietor shall submit ie assessing authority such returns containing such particulars lay be prescribed and in such manner and within such period lay be prescribed.

(5) Subject to the other provisions of this Act and the rules thereunder, the authorities for the time being empowered to s, reassess collected and enforce payment of any tax under Entertainments Tax Act shall assess, reassess, collect and enforce ayment of advertisement tax, including any interest or penalty,

payable by a proprietor under this Act as if the advertisement tax, interest or penalty payable by such proprietor is a tax, interest or penalty payable under the Entertainments Tax Act; and for this purpose, they may exercise all or any of the powers they have under the Entertainments Tax Act and the rules made thereunder; and the provisions of the Entertainments Tax Act, and the rules made thereunder including provisions relating to returns, imposition of the tax liability of a person carrying on business on the transferee of, or successor to such business, transfer of liability of any firm or Hindu undivided family to pay tax in the event of dissolution of such firm or partition of such family, recovery of tax from third parties, appeals, reviews, revisions, refunds, penalties, charging or payment of interest and compounding of offences shall apply accordingly.

(6) All the provisions relating to offences and penalties (including provisions relating to penalities in lieu of prosecutions for an offence or in addition to the penalties or punishment for an offence) of the Entertainments Tax Act and the rules made there-under shall, with necessary modifications, apply in relation to the assessment, reassessment, collection and the enforcement of pay-ment of advertisement tax required to be collected under this Act, or in relation to any process connected with such assessment, reassessment, collection or enforcement of payment as if the advertisement tax under this Act were a tax under the Entertain-ments Tax Act.

4. *Proprietor to keep books of accounts, etc.*—A proprietor shall keep such books, records and accounts in relation to the advertisement as may be prescribed.

5. *Exemption from payment of advertisement tax.*—(1) The Government may, by notification, issued whether prospectively or retrospectively, make an exemption or reduction in rate in respect of any advertisement tax payable under this Act —

(i) on any advertisement or class of advertisements; or

(ii) by a person or class of persons.

(2) Any exemption from advertisement tax or reduction in the rate of advertisement tax, notified under sub-section (1) may be subject to such terms and conditions as may be specified in the notification.

6. *Bar of proceedings.*—(1) No suit shall lie in any Civil Court to set aside or modify an assessment made or order passed under this Act.

(2) No suit, prosecution or other legal proceeding shall lie against the Government for anything which is in good faith done or intended to be done in pursuance of this Act or any rules made thereunder.

7. *Power to make rules.*—(1) The Government may make rules for securing the payment of the advertisement tax and generally for carrying into effect the provisions of this Act.

(2) (*a*) All rules made under this Act shall be published in the *Tamil Nadu Government Gazette* and, unless they are expressed to come into force on a particular day, shall come into force on the day on which they are so published.

(*b*) All notifications issued under this Act shall, unless they are expressed to come into force on a particular day, come into force on the day on which they are published.

(3) Every rule made or notification issued under this Act shall, as soon as possible, after it is made or issued be placed on the table of both Houses of the Legislature and if before the expiry of the session in which it is so placed or the next session both Houses agree in making any modification in any such rule or notification or both Houses agree that the rule or notification should not be made or issued the rule or notification shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be; so however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule or notification.

I certify that this is a Money Bill.

Fort St. George,
Madras,
22nd April 1983.

K. RAJARAM,
Speaker,
Tamil Nadu Legislative Assembly.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008.
143186.
Y211,32'N83

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhantha Works Publishing Society (Tirunelveli), Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

IN MOFASSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavur District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Thanjavur District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11. S. M. Jagannathan Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mari Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No 46-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District)
19 Baby Stores Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-17.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, TAMIL NADU ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE COUNCIL.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

D

தவணைத்தாள்.

சே எண் : 143186   ப. எண் : [illegible]

வழங்கிய நாள். (1)	திரும்பிய நாள். (2)	வழங்கிய நாள். (1)	திரும்பிய நாள். (2)
1916			

S.F. 259A-6—1,00,000—30-1-84.